2863

T.N.L.A Debates

OFFICIAL REPORT

VOL: VI NO: 2 and 3

JUNE. 4th and 5

1985

V211, 31 N85
N85.6.243
136397

37/86

2843

வெளியீடு 19-10-1985

Issued 19—10—1985

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஜூன் 4, 1985 - தொகுதி VI எண் 2

Tuesday the 4th June 1985 - Volume VI No 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George.

Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்

Price Rs. 3-50 paise

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1985, ஜுன் 4 செவ்வாய்க்கிழமை

வைகாசி 22, குரோதன—திருவள்ளுவர் ஆண்டு 2016

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

உழவு செய்து அதனால் கிடைத்ததை உண்டு வாழ்கின்றவரே உரிமையோடு வாழ்கின்றவர். மற்றவர் எல்லோரும் பிறரைத் தொழுது உண்டு பின் செல்கின்றவரே.

## (1) வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### புதிய அனல் மின் திட்டங்கள்

94—*வினா எண். 2—திரு. என். எஸ். வி. சித்தன் : திரு. வே. இரா. ஜேயராமன் : திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு, மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழகத்தில் 1,000 கோடி ரூபாய் செலவில் இரண்டு புதிய அனல்மின் திட்டங்கள் தொடங்கப்பட உள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அவற்றின் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) : எண்ணூருக்கு அருகில் புதிதாக ஒவ்வொன்றும் 210 மெ. வா. திறனுடன் 3 யூனிட்டுகள் கொண்ட வடசென்னை மின்நிலையம் ரூ. 547.79 கோடி செலவிலும், தூத்துக்குடி அனல் மின் நிலை யத்தில் ஒவ்வொன்றும் 210 மெ.வா. திறனுடன் கூடிய 2 புது யூனிட்டுகள் கொண்ட விரிவுத் திட்டம் ஒன்று ரூ. 356.38 கோடி செலவிலும் ஆக மொத்தம் ரூ. 904.17 கோடி செலவில் அமைக் கப்பட உள்ளன.

[1985 ஜூன் 4

திரு. என். எஸ. வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத்
தலைவர் அவர்களே, 210 மெகாவாட் திறனுடன் 3 யூனிட்டு
கள் கொண்ட மின் நிலையம் வட சென்னையிலும், 210 மெகா
வாட் திறனுடன் கூடிய 2 புது யூனிட்டுகள் கொண்ட விரிவுத்
திட்டம் தூத்துக்குடியிலும் அமைக்கப்பட உள்ளதாக மாண்புமிகு
அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டங்கள் எப்
பொழுது செயல்படுத்தி முடிக்கப்படும்? அவைகள் எப்பொழுது
உற்பத்தியைத் துவங்கும் என அறிய விரும்புகிறேன். மேலும்,
ஏற்கெனவே நம்மிடத்தில் நிலக்கரித் தட்டுப்பாடு இருப்பதால்,
இந்தப் புதிய மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரி
கிடைப்பதற்கும் என்ன ஏற்பாடுகளை அரசு செய்திருக்கிறது
என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே,
திட்டக் குழுவின் ஒப்புதல் இன்னும் எதிர்பார்க்கப்படுகிறது.
ஒப்புதல் விரைவில் கிடைத்து, திட்டம் துவக்கப்பட்டால் அநேக
மாக ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே ஒரு யூனிட் அல்லது
இரண்டு யூனிட்டுகளில் உற்பத்தியைக் கொண்டு வர இயலும்.
நிலக்கரியை எங்கிருந்து தருவது என்பதையும் இந்திய அரசு
முடிவு செய்ய உள்ளது.

திருமதி. பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அதிகப்படியான மின் திட்டங்களை அமைப்பதற்கு
தமிழக அரசு மத்திய அரசிடம் நிதி உதவி கோரியுள்ளதா
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்
களே, ஒவ்வொரு திட்டக் காலத்திலும் ஐந்தாண்டுகளுக்கு ஒரு
முறை மாநில அரசு எத்தகைய திட்டங்களை மேற்கொள்வது
என்று திட்டமிடுவதும், அதற்கு மத்திய அரசு ஒரு குறிப்பிட்ட
முறையின் அடிப்படையில் அத்தகைய மாநில அரசின் மொத்த
திட்டங்களுக்கு நிதி ஒதுக்குவதும்தான் வாடிக்கை.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறிய பதி
லில் இருந்து, இந்த மின் உற்பத்தி நிலையங்கள் ஒப்புக்கொள்ளப்
பட்டு மின்சார உற்பத்தியைத் துவங்குவது என்றால் இன்னும்
பல ஆண்டுகள் ஆகும் எனத் தெரிகிறது. எந்த ஆண்டும் இல்லாத
அளவிற்கு இந்த ஆண்டு கடுமையான மின்சாரப் பற்றாக்குறை
இருப்பதை உணர்கிறோம். இந்த மின்சாரப் பற்றாக்குறை எப்
பொழுது நீங்கும்? தற்பொழுது எவ்வளவு உற்பத்தி ஆகிறது?
இந்தப் பற்றாக்குறையைப் போக்குவதற்கும், புதிதாக மின்சார
உற்பத்தியை அதிகரிப்பதற்கும் என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டு
இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.



1985 ஜூன் 4]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்
களே, இந்தத் திட்டங்களுக்கான ஒப்புதல் கிடைத்துவிட்டால்,
இந்த ஆண்டேகூட இந்தத் திட்டங்களைத் துவச்கலாம். ஆகவே,
நிறைய ஆண்டுகள் ஆகும் என்று நினைப்பது சரி இல்லை.
எல்லா ஆண்டுகளையும் விட இந்த ஆண்டு மின்வெட்டு அதிகம்
என்று சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே
தெரியும். பழைய ஆண்டுகளில் இதைவிட மோசமான நிலை
யில், வீடுகளுக்கே கூட மின்சாரம் இல்லாத நிலைமை இருந்தது
என்பதெல்லாம் தெரியும். இருந்தாலும், நம்முடைய தேவை
அதிகரித்துக் கொண்டே வருகிறது. மின் உற்பத்தித் திட்டங்
களையும் அதைப் போல அதிகரித்துக்கொண்டே போவதன் மூலம்
தான் இந்தத் தேவைகளை நிறைவு செய்ய முடியுமே தவிர,
அதன் மூலம்தான் மின் வெட்டிலிருந்து தப்பிக்க வழிவகை உள்
ளதே தவிர வேறு வழி இல்லை.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, புதிய மின் நிலையங்களை ஏற்படுத்துவதற்கு முயற்
சிப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லுகிறார்கள். அது
குறித்து மகிழ்ச்சி. நிலக்கரி பற்றாக்குறை இருக்கிறது அல்லது
அவைகளை வரவழைக்க வேகன்கள், கப்பல்கள் கிடைப்பது,
போன்ற சிரமங்கள் இருப்பதால் அணு மின் நிலையங்களை
ஏற்படுத்துவதற்கு அரசுக்கு உத்தேசம் உள்ளதா? அப்படியென்
றால் இதற்கும் அதற்கும் அதிக வித்தியாசம ஏற்படுமா? அத
னுடைய எரெக்ஷன் சார்ஜ் அதிகமாகுமா? அத்தகைய அணு
மின் நிலையங்களை ஏற்படுத்தினால் தமிழ்நாட்டிற்கு அது சிறப்
பான பயனை அளிக்காதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; தலைவர் அவர்
களே, நிலக்கரி சுரங்கங்களிலிருந்து தொலை தூரத்தில் உள்ள
மாநிலங்களுக்கு அணு மின் நிலையங்கள்தான் முழுவதும்
பொருத்தமானவை. ஆகவே, அணு மின் நிலையங்களை நிறுவு
கிறபொழுது நிலக்கரி சுரங்கங்களுக்கு அருகிலுள்ள மாநிலங்களுச்
தருவதற்குப் பதிலாக தமிழகம், கேரளம் போன்ற தொலை
தூர மாநிலங்களுக்குத் தர வேண்டுமென்ற அடிப்படையில்
இரண்டாவது அணு மின் நிலையத்தை திருநெல்வேலியிலே கூடங்
குளத்தில் அமைக்க வேண்டுமென்று இந்திய அரசைக் கேட்டு
வருகிறோம். அவர்களும் ஆவன செய்வார்கள் என்ற நம்பிக்கை
உண்டு.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :
(பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, புதிய மின் திட்டங்களை அமுல் நடத்துவதற்கு
நிதிப் பற்றாக்குறை ஒரு காரணமாக இருக்கிறது ; நிதி உதவி
மத்திய அரசிடமிருந்து கோரப்படுகிறது என்று மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்படி மின் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு உலக வங்கியிடம் கடன் கோர மின் சார வாரியம் ஏதாவது முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறதா என்கிற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, புதிய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிதிப் பற்றாக் குறைதான் காரணம். நிதிப் பற்றாக்குறை மாநில அரசுக்கு மட்டுமல்ல, மத்திய அரசுக்கும் சொந்தமானதுதான். ஆகையினாலே, அவர்களிடத்திலே நிதி கேட்பதன் மூலம் நிதியைப் பெறுவது என்பது இயலாத காரியம். உலக வங்கி போன்ற நிறுவனங்கள் மின் உற்பத்தித் திட்டங்களுக்கு உதவி செய்யும். எப்பொழுது என்றால், மின் வாரியம் இலாபமாக நடக்கிறது பொழுது. நட்டமாக நடக்கிறபொழுது உதவி செய்ய மாட்டார்கள். மின் உற்பத்தித் திட்டங்களுக்கென்று தனி நிறுவனங்கள் அமைந்து, அத்தகைய நிறுவனங்களை இலாபமாக நடத்துவதற்கு, உதாரணமாக வட சென்னை இருக்கிறது. அதை நாம் ஒரு கம்பெனியாக, தனியாக அமைக்கலாம். அந்தக் கம்பெனியைப் பொறுத்தவரையிலே அது உற்பத்தி செய்து மின் சார வாரியத்திற்குத் தரலாம். அந்தக் கம்பெனி இலாபம் ஈட்டு கின்ற வகையிலே இயங்குகிறது என்றால் உலக வங்கி போன்ற நிதி நிறுவனங்களிலிருந்து நாம் நிதியைப் பெறுவதற்கு ஒரு வழி உண்டு. அதைப்பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது.

திரு. மா. கதிர்வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு சிப்காட் தொழில் பேட்டைகளில் துணை மின் நிலையங்கள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ? ஆம் எனில், இராணிப்பேட்டை சிப்காட் மின் உற்பத்தித் திட்டம் எப்பொழுது தொடங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனிக் கேள்வியை தொழில் அமைச்சரிடம் போடவும்.

### மேட்டூர் மின் உற்பத்தி நிலையம்.

95—*வினா எண். 48—திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் மின்சார உற்பத்தியை மேலும் விரிவுபடுத்த செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.



திரு. ந. சிவஞானம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேட்டூர் மின்சார உற்பத்தியை மேலும் அதிகப்படுத்துவதற்கான திட்டம் ஏதாவது உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மேட்டூரில் ஏற்கவே 210 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட இரண்டு யூனிட்டுகள் செயல்பட்டு வருகின்றன. மேலும் இரண்டு யூனிட்டுகள் அமைத்து அவை இரண்டும் செயல்முறையிலே இருக்கின்றன. ஆகையினாலேதான் விரிவாக்கத் திட்டம் அதற்கு மேல் இல்லை என்றேன். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேதான் இந்த வேலைகள் எல்லாம் முடியும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, மேட்டூரிலே மின்சாரத் திட்டம் விரிவுபடுத்துவதற்கான பிரச்னையே எழவில்லை என்று சொன்னார்கள். நீர் மின் உற்பத்தியிலே விரிவுபடுத்த முடியாது. ஆனால் அங்கே ஒரு அனல் மின்சார திட்டம் இப்பொழுது கட்டப்பட்டு வருகிறதே அது எப்பொழுது முடிவடையும்? அதனுடைய கப்பாசிட்டி என்ன? எவ்வளவு செலவாகும்? அந்த வேலை எந்த அளவிலே இருக்கிறது என்பதை இப்பொழுது அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, டிசம்பர் 1986-ல் முதல் பிரிவும் ஜூன் 1987-ல் இரண்டாவது பிரிவும் டிசம்பர் 1988-ல் மூன்றாவது பிரிவும் டிசம்பர் 1989-ல் நான்காவது பிரிவும் உற்பத்தியைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. ந. சிவஞானம் : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்களுக்கு மின்சார உற்பத்தி செய்வதற்கு அரசு கொள்கை அளவில் ஒப்புக் கொண்டுள்ளதா என்பதை அறிய விரும்புறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்புக் கொண்டுள்ளது.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கிற மின் கட்டுப்பாட்டை தீர்க்கின்ற முறையில் சிறு திட்டங்கள் என்ற முறையிலே கீழ் பவானி, அமராவதி அணைக்கட்டுகளிலே மின் உற்பத்திக்கான செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா? இதுபற்றி ஏதேனும் நடவடிக்கை எடுக்கபட்டு வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சிறு சிறு மின் உற்பத்தித் திட்டங்களைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல 200 திட்டங்களுக்கு நாம் கருத்துருக்களை உருவாக்கி வருகிறோம். ஒவ்வொன்றாக நிறைவேற்றுகின்ற வகையில் மின்வாரியம் திட்டமிட்டு வருகிறது.

(முற்பகல் 9–10)

திரு. கு. சுப்பராயன் : தலைவரவர்களே, வளர்ந்து வரு கிற நம்முடைய மாநிலத்தில் மின்சாரத் தேவையை மதிப்பீடு செய்து, தேவையான திட்டங்களை 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேற்றுவதற்குரிய கால வரையறைக்கு உட்பட்ட திட்டங்கள் ஏதாவது அரசின் பரிசீலனையில் இருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, திட்டம் தீட்டுவதில் குறையில்லை. காலவரையறைக்கு உட் பட்டு நிறைவேற்ற வேண்டும் என்ற ஆசை இருகிறது. ஆனாலும் போதிய நிதி வசதி இல்லை என்பதுதான் குறை.

திரு, தி. அன்பழகன் : தலைவரவர்களே, கீழ் மேட்டூர் புனல் மின் திட்டத்திற்கு மத்திய அரசின் அனுமதி எதிர் பார்க்கப்பட்டிருந்தது. அந்த அனுமதி கிடைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கீழ் மேட்டூர் புனல் மின் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. கு. அ. செங்கோட்டையன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியாருக்கு மின் உற்பத்தி செய்ய அனுமதி வழங்க இருக்கிறோம் என்று சொன்னார்கள். எந்த விதிமுறையின் கீழ் அனுமதி வழங்க இருக்கிறீர்கள்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரர்களே. அனுமதி வழங்குவதற்கு விதிமுறை ஒன்றும் தேவையில்லை, அவர்களுடைய சொந்தத் தேவைக்கு மின் உற்பத்தி செய்து. கொள்ள உரிமை இருக்கிறது. இருந்தாலும் இந்திய அரசுதான் கொள்கையளவில் அனுமதி வழங்க வேண்டும். ஏனென்றால் நிலக்கரி, அந்நியச் செலாவணி எல்லாம் தர வேண்டும். நம்முடைய சர்க்கார் பரிந்துரை செய்து இந்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது. இந்திய அரசு இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை.



தேனியில் சாலையோர சுற்றுலா விடுதி.

96 (*வினா எண் 57)—திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனியில் நெடுஞ்சாலை சுற்றுலா விடுதி (Motel) ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) தகுந்த இடம் கையகப்படுத்தப்பட்டவுடன் வேலை தொடங்கப்படும்.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவரவர்களே, இதைப் போன்ற ஒட்டல்கள் தமிழ்நாட்டில் எந்த எந்த இடங்களில் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினுடைய 1985–86-ஆம் ஆண்டுத் திட்டத்தில் காரைக்குடியில் இப்படி ஒரு 'மோட்டல்' தொடங்குவதற்கான திட்டம் பரிசீலைனயில் இருக்கிறது.

திரு. ။. ந. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம் பேராவூரணிப் பகுதியில் சுற்றுலா முககியத்துவம் வாய்ந்த மனோராவை மேம்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனை யில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர் களே, தஞ்சை மாவட்டத்திலுள்ள சிறப்புமிக்க சுற்றுலாப் பகுதியாகிய மனோரா பகுதியை ஒரு சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகக் கருதி, சில திட்டங்களை நிறைவேற்று வது அரசின் கருத்தில் இருக்கிறது. தனியாகக் கேள்வி போட்டால் விரிவான பதில் தரப்படும்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : தலைவரவர்களே, இந்த மாதிரியான அரசாங்க சுற்றுலா விடுதிகளில் எம். எல். ஏ.-க்கள் தங்குவதற்கு 'கன்சஷன் ரேட்டில்' குறைந்த வாடகை வாங்க வழிவகை செய்யப்படுமா?

[1985 ஜூன் 4

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, பெரிய அளவில் முதலீடு செய்து. அந்த முதலைப் பாதுகாக்கின்ற அளவில் நடத்தப்படுகின்ற நிறுவனங்கள் இவை. ஆகவே, கன்செஷன் முறையில் வாடகை வாங்குவது என்பது அந்த நிறுவனங்களுக்கு நன்மை தராது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

## கொல்லிமலையில் சுற்றுலா விடுதி.

97 (*வினா எண் 228)—திரு. சீ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், கொல்லிமலையில் சுற்றுலா வாரியத்தின் மூலம் தங்கும் விடுதி மற்றும் சிறப்பு வசதிகள் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : சுமார் 53.20 இலட்சத்தில் சாலை, இளைஞர் விடுதி, பூங்கா, பழத்தோட்டம், தொலைநோக்கி நிலையங்கள் போன்றவை அமைப்பதற்கு பல அரசுத் துறை நிறுவனங்கள் சார்பில் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. சீ. சிவப்பிரகாசம் : தலைவரவர்களே, கொல்லிமலைப் பகுதியை சுற்றுலா மையமாக உருவாக்குவதற்கும் பல்வேறு திட்டப் பணிகளை உருவாக்கி வருவதற்கும் நன்றி கூறி, இன்னும் அங்கு சுற்றுலா வாரியம் இளைஞர்கள் தங்கும் விடுதியைத்தான் கட்டுவதற்கு திட்டமிட்டுள்ளது; பல்வேறு வசதி படைத்தவர்களும் தங்குகின்ற வகையில், மகாபலிபுரத்தில் கட்டப்பட்டுள்ளது போல் தனித்தனியாக குடில்கள் கட்ட அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இந்த கொல்லிமலைப் பகுதி என்பது எதிர்காலத்திலே மிகச் சிறந்த மலைவாசஸ்தலமாகி, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாக வளர இருக்கிற ஒரு பகுதி. இப்போதுதான் அங்கே திட்டங்களைத் தொடங்கியிருக்கிறோம். முதலிலே இளைஞர் விடுதி கட்ட அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. அதன் பிறகு எதிர்காலத்தின் தேவையை ஒட்டி பல்வேறு பிரிவினரும் விரும்பி தங்குகிற வகையில் விடுதி கட்டுவதை அரசு பரிசீலிக்கும்.



1985 ஜூன் 4]

திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை சுற்றுலா மையமாக ஆக்கப்படுமா ? வால்பாறையில் இத்தகைய தங்கும் விடுதிகள் கட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, தற்போது அரசினிடத்தில் அப்படிப்பட்ட கருத்து இல்லை.

## செய்திப் படங்கள் திரையிடுதல்.

98—(*வினா எண் 413) திரு. சா. துரைசாமி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக அரசின் செய்திப் படங்களை திரையிடாத திரையரங்குகள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தமிழக அரசு தயாரித்து வெளியிடும் செய்தி விளக்கப் படங்களை திரையிடாத திரையரங்குகள்மீது 1955 ஆம் ஆண்டின் தமிழ்நாடு திரையரங்குகள் (முறைப்படுத்தல்) சட்டத்தின்கீழ் உள்ள பிரிவு 9 (2) (பி)-ன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதா என்பதை எங்களால் உணர முடியவில்லை. காரணம் தியேட்டர்களிலே திரைப்படங்களை நாங்கள் பார்க்கின்ற நேரத்திலே இப்படிப்பட்ட செய்திப் படங்களைப் பார்க்க இயலவில்லை. எனவே ஒவ்வொரு காட்சியிலும் தமிழக அரசினுடைய செய்தி விளக்கப் படத்தைத் திரையிடுகின்ற வகையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா ? அதே போல் ஏ. சி. தியேட்டர் என்று சொல்லப்படுகின்ற தியேட்டர்களில் போதிய ஏ.சி. போடாமலே மக்களிடத்திலே அதற்கான காசை மட்டும் வசூலிக்கிறார்கள். தியேட்டர்களில் உள்ள இருக்கைகள் சரியாக அமருகின்ற வகையில் இல்லை. கழிப்பிடங்கள் துர்நாற்றம் வீசுகின்ற நிலைமையில் இருக்கின்றன. இப்படிப்பட்ட குறைபாடுகளைப்பற்றி அங்கே படம் பார்க்க வருகின்ற பொதுமக்கள் எழுதி வைத்து அந்தக் குறைகளின்மீது நடவடிக்கை எடுக்கின்ற வகையில் புகார் புத்தகம் வைக்கின்ற நடவடிக்கை எடுக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர் எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதா என்பதை நடைமுறையில் மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை என்று தெரிவித்தார்கள். இந்த நட

வடிக்கை என்பது எல்லா தியேட்டர்களிலும் ஏக காலத்தில் எடுக்கப்படுவதில்லை. ஆங்காங்கே கண்டுபிடிக்கப்பட்டு குற்றச்சாட்டுகள், குறைகள் கூறப்படுகிறபோதுதான் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இப்போது செங்கை மாவட்டத்தில் தளவாய்பேட்டை கிராமத்தில் உள்ள தியேட்டரில் விளக்கம் கேட்டு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் சாந்தான்குளத்தில் நாராயணசாமி தியேட்டர் 15 நாட்களுக்கு சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கின்றது. வெளியகரம் கிராமத்தில் தேவி தியேட்டர்மீது விளக்கம் கேட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலிலுள்ள ராஜேஷ் தியேட்டர் மீது 500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டிருக்கின்றது. இராஜபாளையத்தில் உள்ள ஜெயசக்தி தியேட்டரைப் பொறுத்தவரையில் தற்காலிகமாக ஒரு மாதத்திற்கு லைசன்ஸ் ரத்து செய்யப்பட்டிருக்கின்றது. இராஜபாளையத்தில் உள்ள பத்மாவதி திரையரங்கத்தைப் பொறுத்த வரையிலும் தற்காலிகமாக லைசன்ஸ் ஆறு மாதங்களுக்கு ரத்து செய்யப்பட்டிருக்கின்றது.

இதைப் போன்று கடுமையாகக் கண்காணித்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும், தண்டனைகள் வழங்கப்பட வேண்டுமென்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திரையரங்குகளினுடைய மொத்த சூழ்நிலை பற்றிக் குறிப்பிட்டார்கள். அவைகளும் கண்காணிக்கப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, தேவையானால் தண்டனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் படம் பார்க்க வருகின்றவர்கள் காணுகின்ற குறைகளை எழுதி வைத்து அவற்றின்மீது நடவடிக்கை எடுக்கின்ற வகையில் புகார் புத்தகம் வைக்கின்ற ஒரு முறையை அரசு விரைவிலே அமல்படுத்துவதற்குரிய நடவடிக்கையை எடுக்கும்.

**திரு. சா. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சியில் வாரம் ஒரு முறை திரைப்படம் திரையிடுகிறார்கள். அந்தத் திரைப் படத்தினூடே தமிழக அரசினுடைய செய்தி விளக்கப் படத்தையும் திரையிட மைய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சியிலே திரைப் படங்களை அவர்கள் திரையிடுகிறபோது நம்முடைய செய்திப் படத்தைக் காட்ட வேண்டும் என்று வற்புறுத்த முடியாது. ஆனால் மாநில அரசு தயாரிக்கிற செய்திப் படங்களையும் கருத்து விளக்கப் படங்களையும் தொலைக்காட்சி நிலையங்கள் அங்கே ஒளி பரப்ப வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதை வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம்.



**திரு. வே. கு. சின்னசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் இருக்கின்ற சினிமா தியேட்டர்களில் தைப் பொங்கல், தீபாவளி போன்ற விசேஷ நாட்களில் 5 காட்சிகள், 6 காட்சிகள் என்று ஓட்டுகிறார்கள். கிராமப்புற மக்களைப் பொறுத்தவரையில் இந்த இரண்டு திருவிழாக்களும்தான் அவர்களுடைய வாழ்க்கையில் கொண்டாடுகின்ற முக்கியமான விழாக்களாகும். அப்படிப்பட்ட சமயங்களில் ஒரு காட்சியிலே கூட இப்படிப்பட்ட அரசின் செய்திப் படங்களைத் திரையிடுவதில்லை என்பதைக் கண்டிக்கின்ற வகையில் தனியாக அப்படிப்பட்ட நாட்களில் அரசு அதிகாரிகளை நியமித்து கண்டிப்பாக அரசின் செய்திப் படங்களை வெளியிடுவதற்கு உரிய வகையில் ஏதேனும் தனியான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, சில விசேட நாட்களில் அல்லது விடுமுறை காலங்களில் அதிகக் காட்சிகளை, திரைப் படங்களை திரையிடுகிற போதுதான், இப்படி நம்முடைய செய்திப் படங்களை திரையிட முடியாத சூழ்நிலையைக் கையாளுகிறார்கள் என்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. அதைப் பற்றி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டிலே அபிராமி என்ற பெயரில் ஒரு திரையரங்கு கட்டப்பட்டு, அதிக வசதிகளுடன் கூடிய அந்தத் தியேட்டரின் மூலமாக அதிகமான வருவாய் அரசாங்கத்திற்கு வந்து கொண்டிருக்கிறது. ஆனால் அதேநேரத்தில், அதே தியேட்டரிலேயே ஒரு மினி தியேட்டரைக் கட்டி அரசாங்கம் கொடுத்துள்ள அத்தனை நிபந்தனைகளையும் அவர்கள் பூர்த்தி செய்து கொடுத்திருக்கிற தருணத்திலும் கூட, அந்த மினி அரங்கிற்கு உரிய அனுமதியை அதிகாரிகள் வழங்க மறுக்கிறார்கள். அதன் மூலம் அரசாங்கத்திற்கு வர வேண்டிய அதிக வருவாயைத் தடுக்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு அந்த மினி தியேட்டருக்கு விரைவிலே அனுமதி வழங்குவதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்த திரை அரங்கத்தைப் பொறுத்தவரையில் என்னிடத்திலே தகவல்கள் எதுவும் இல்லை. அரசாங்கத்திற்கும் அப்படி ஒரு தகவல் வந்திருக்கிறதா என்பதும் தெரியவில்லை. ஆனால் பொதுவாக மாநிலத்திலே பல இடங்களிலே இப்படி சிறந்த முறையிலே திரை அரங்குகள் அமைத்ததற்குப் பிறகும் கூட, தேவையான அந்த அனுமதியை உரிய காலத்திலே வழங்காமல்

தாமதப்படுத்துகிறார்கள் என்ற புகார்கள் அரசின் கவனத்திற்கு வந்திருக்கின்றன. தேவையான அறிவுரைகளை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. இந்த அரங்கத்தைப் பொறுத்தவரை ஏதாவது தகவல்கள் அரசினிடத்திலே தரப்படுமானால் தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

**திரு. கு. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் மத்தியில் பகுத்தறிவு மற்றும் விஞ்ஞான அறிவைப் பரப்புகின்ற வகையில் செய்திப் படங்களை அரசு எடுத்து அவற்றை அனைத்து திரையரங்குகளிலும் கட்டாயமாக திரையிட வேண்டும் என்ற நடவடிக்கையையும் மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, திரையரங்குகளை அவர்களுடைய தொழிலாக அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒரு குறிப்பிட்ட அளவு, சுமார் 2 ஆயிரம் அடி நீளம் உள்ள படங்களைத்தான் செய்திப் படங்களாக, விளக்கப் படங்களாக திரையிடுவது என்ற முறையில், அதை சட்டத்தின் விதிகளிலே சேர்த்து அமல்படுத்திக் கொண்டு வருகிறோம். கூர்மையான விஞ்ஞான அறிவுள்ள அல்லது பகுத்தறிவுள்ள படங்கள் என்று சொல்ல ஆரம்பித்தால், எது பகுத்தறிவு என்பதே விவாதத்திற்குள்ளாகிவிடும். ஆகவே அப்படிப்பட்ட ஆராய்ச்சியில் அரசு தலையிடுவது என்பது அவ்வளவு உகந்ததாக இராது.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள திரைப்படங்களில் மத்திய அரசின் மூலமாக வெளியிடப்படும் செய்திப் படங்களை கரெக்டாகப் போடுகிறார்கள். ஆனால், மாநில அரசினுடைய செய்திப் படங்களை அவர்கள் அப்படிப் போடுவது கிடையாது. அது மட்டும் அல்லாது மத்திய அரசின் செய்திப் படங்களில் தமிழக அரசின் சாதனைகளைப் பற்றியோ செய்திகளைப் பற்றியோ விவரங்கள் அதிகமாக இடம் பெறுவது கிடையாது. ஆகவே, அவைகளை அதிக அளவு இடம் பெறச் செய்வதற்கும், கண்டிப்பாக அவைகள் திரையிடப்பட வேண்டும் என்ற விதிகளை கடுமைப்படுத்துவதற்கும்—3 மாதங்கள், 6 மாதங்கள் தண்டனையோ அல்லது அபராதம் அதிகமாகப் போடுவதோ மட்டும் போதாது—லைசன்சையே ரத்து செய்கிற அளவுக்கு கடுமையான உத்தரவுகளை அரசு அறிவிக்குமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மத்திய அரசினுடைய செய்தி விளக்கப் படங்கள் மத்திய அரசினுடைய சாதனைகளையோ அல்லது இந்தியா முழுவதும் நடைபெறுகிற சாதனைகளையோ விளக்குகிற படங்களாகத்தான் இருக்க முடியும். அதிலே மாநில அரசினுடைய செய்தி என்பது குறைந்த அளவிலேதான் இடம் பெறும்; அல்லது சில நேரங்களிலே இடம்



பெறாமலேயே கூட இருக்கும். அதற்காகத்தான் தனியாக தமிழக அரசின் சார்பில் செய்தி விளக்கப் படங்களை நாம் எடுக்கின்றோம். ஆனால் மத்திய அரசின் செய்தி விளக்கப் படங்களை திரையிட்டால், அங்கே மாநில அரசின் செய்திப் படங்கள் இடம் பெறாது. ஏதாவது ஒரு படத்தைத்தான் திரையிட முடியும். அது மாறி மாறித்தான் வருகிறது.

அதேபோல தண்டனையை அளிப்பது என்பதில் ஒரு ஆண்டு தண்டனை அல்லது நிரந்தரமாக லைசன்ஸை ரத்து செய்வதற்கும்கூட சட்டத்திலே வகையிருக்கிறது. அந்தக் குற்றத்தினுடைய கடுமையை பொறுத்த வரைதான் அந்தத் தண்டனைகள் கொடுக்கப்படுகின்றன.

### கோவை மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கு நகர ஈட்டுப்படி.

99—(*வினா எண் 12) **திரு. கு. ரமணி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகராட்சியின் கீழ் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மாநகராட்சிப் பகுதிகளுக்குரிய நகர ஈட்டுப்படி கொடுக்கப்படாமலிருந்து வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

(இ) அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மாநகராட்சிப் பகுதிக்குரிய ஈட்டுப்படி, தற்போது நடைமுறையில் உள்ள அரசாணைப்படி வழங்கப்படுகிறது.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியின் கீழ் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு நகர ஈட்டுப்படி வழங்கி வருவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். என்னுடைய கேள்வி, கோவை மாநகராட்சியானதற்குப் பிறகு முன்னமேயிருந்த நகராட்சியில் கொடுக்கப்பட்டு வந்ததை விட மாநகராட்சிக்கு உரித்தான அளவிற்கு பெர்சென்டேஜ் அவர்களுக்கு உயர்த்தப்பட வேண்டும், அந்த முறையில் உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியில் மதுரை மாநகராட்சியில் எந்தளவிற்கு உயர்த்தப்பட்டிருக்கிறதோ அதே அடிப்படையில் உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1985 ஜூன் 4

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியிலும் மதுரை மாநகராட்சியிலும் அவை எந்த கிரேடில் இருக்கின்றனவோ அந்த கிரேடுக்குரிய நகர ஈட்டுப்படி இப்போது கிடைக்கவில்லை என்பது அங்கு பணிபுரியும் ஆசிரியர்களிடமிருந்து வந்திருக்கும்படியான குறைபாடாகும். என்னிடத்திலேயே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன தொகை அல்லது எவ்வளவு பெர்செண்ட்டேஜ் இப்போது நகர ஈட்டுப்படியாகக் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சியில் எந்தளவிற்குக் கொடுக்கப்படுகிறதோ அதே அளவிற்குத்தான் கோவை மாநகராட்சியில் உள்ள ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்படுகிறது என்பதுதான் இலாகாவிலிருந்து எனக்கு வந்திருக்கிற தகவலாகும். அடிப்படைச் சம்பளம் ரூ. 700 முதல் 999 வரை இருந்தால் நகர ஈட்டுப்படி ரூ. 40 அளிக்கப்படுகிறது. இப்படி மதுரை மாநகராட்சியில் கொடுக்கப்படும். அதே நகர ஈட்டுப்படி கோவை மாநகராட்சியில் உள்ள ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதாக என்னிடத்தில் குறிப்பு இருக்கிறது.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்.

100 —(*வினா எண் 54.) திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1984–85 ஆம் ஆண்டில் டிசம்பர் முடிய மத்திய அரசினரிடமிருந்து தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் (NREP) மான்யமாக வந்த தொகை எவ்வளவு ?

(ஆ) மாநில அரசு பங்குத் தொகையாக செலவிட்ட தொகை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ரூ. 1,864.38 இலட்சம்.

(ஆ) 1984–85-ஆம் ஆண்டில் 31–12–1984 முடிய மாநில அரசு பங்குத் தொகையாக செலவிட்ட தொகை ரூ. 2,127.50 இலட்சம் ஆகும்.



1985 ஜூன் 4]

திரு. ந. சிவஞானம் : தலைவர் அவர்களே, மத்திய அரசிடமிருந்து தேசிய ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய ஊரக ஒருங்கிணைந்த திட்டம், என்.ஆர்.இ.பி. இவற்றின் மூலம் 1985–86க்கு வந்த தொகை உத்தேசமாக எவ்வளவு என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, 1985–86க்கான புள்ளி விவரம் என்னிடம் இப்போது இல்லை. 1984–85 ஆம் ஆண்டில் வந்த தொகை எவ்வளவு என்று கேட்டார்கள், நான் அதைத்தான் படித்தேன்.

திரு. ந. சிவஞானம் : தலைவர் அவர்களே, ஆர்.எல்.இ.ஜி.பி. என்ற மத்திய அரசு திட்டத்தில் இப்போது நெடுஞ்சாலைத் துறை பொறியாளர்களை குறைப்பதாகச் சொல்லப்படுகிறது, அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, கேள்வி, தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் பற்றியது. ஆர்.எல்.இ.ஜி.பி. தனித் திட்டம். அதுபற்றி தனியாக கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தர முடியும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, என். ஆர். இ. பி., ஆர். எல். இ. ஜி. பி. போன்ற திட்டங்கள் மூலம் மத்திய மாநில அரசுகள் நிறையப் பணம் ஒதுக்கி ரோடுகள் போடுகிறார்கள். போட்ட ரோடுகளை மீண்டும் பராமரிப்பு செய்யாததால் ஆங்காங்கே போட்ட ரோடுகள் அழியக்கூடிய சூழ்நிலையில் உள்ளன. ஆகவே, போட்ட ரோடுகளைச் செப்பனிடுவதற்கு தனியாகப் பணம் ஒதுக்கி பழுதுபார்க்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு ஏற்கெனவே போடப்பட்டிருக்கிற பாதைகளைச் செப்பனிடுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, என்.ஆர்.இ.பி. திட்டம் கிராமங்களுக்கு ரோடுகள் போடுவது. ஆனால், நெடுஞ்சாலைகளில் எல்லாம் வண்டிகள், வாகனங்கள் போக முடியாத சூழ்நிலை இருக்கிறது. அப்படியிருக்கும்போது கிராமங்களில் மட்டும் ரோடுகள் போட்டு வைப்பது— அந்தப் பாதை வழி சென்றால் தான் இந்தப் பாதைக்கு வரும் சூழ்நிலை இருக்கிறது. அது பற்றி டி.இ. யிடம் கேட்டால் சாங்க்ஷன் ஆகி வரவில்லை என்று சொல்கிறார்கள். எனவே, நெடுஞ்சாலைகளைச் செப்பனிடாமல் கிராமச் சாலைகள் மட்டும் போட்டு என்ன பிரயோஜனம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இது போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களிடம் போட வேண்டிய கேள்வியாகும்.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, ஏழை மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கிறோம். ஆனால், அதே போல் விழாக்கள் நடத்த இடம் கிடையாது. எனவே விழாக் கள் நடத்துவதற்கு ஒரு மண்டபம் என்று இந்தத் திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–30)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இது மத்திய அரசு, மாநில அரசு இணைந்து செயல்படுகின்ற திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் பள்ளிக் கட்டிடங்கள், சமு தாயக் கூடங்கள், ஆதி திராவிட விடுதி கட்டுதல் போன்ற பணி களுக்காக இதுவரை செலவழிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதேனும் விழாக்கள் நடத்துவதற்கு அரங்கம் கட்டுவதற்கு முடியுமா என்று கேட்டார்கள். இந்தத் திட்டத்தின் கீழ் அப்படி அமைப்பதற்கான வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர் களே, என்.ஆர்.இ.பி. திட்டத்தின் கீழ் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு இடம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். ஆனால், சில மாவட்டங்களில் ஆட்சித் தலை வர்கள் என்.ஆர்.இ.பி. திட்டத்தின் கீழ் பள்ளிக் கட்டிடங்கள் கட்டக் கூடாது என்று இப்போது தடங்கல் விதித்திருப்பது, அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படி, யென்றால், அதை மாற்றி கிராமங்களில் ரெகுலர் பள்ளிக் கட்டி டங்கள் கட்டக் கூடிய நிலைமை இருப்பதால், இந்தத் திட்டத்தின் கீழ் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, 31–3–1985 வரையில் இத்திட்டத்தின் கீழ் 2,000 பள்ளிக் கட்டி டங்கள் கட்டுவது என்று முடிவெடுக்கப்பட்டு, 2,000 பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. எந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அப்படி ஆணை பிறப்பித்துள்ளார் என்ற தகவலைத் தெரிவித்தால், அதைப்பற்றி விசாரிக்கலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என். ஆர். இ. பி. என்று அழைக்கப்படுகின்ற தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கிராமங்களில் சாலை கள் போடுதல், பாலங்கள் கட்டுதல், கட்டிடங்கள் கட்டுதல்



போன்ற பணிகளுக்கு இப்போதுள்ள விதிமுறைகளின் அடிப் படையில் ஊர்நல அதிகாரிகள், கிராம சேவக்குகள் மூலம் இந்தப் பணம் பட்டுவாடா செய்யப்பட வேண்டும், அரிசி வழங் கப்பட வேண்டும் என்று விதி இருக்கிறது. ஆனால், ஊர்நல அதிகாரிகள் தங்களுக்கு இருக்கின்ற பணிச் சுமையின் காரணமாக ஒப்பந்தக்காரரிடம் அந்தப் பணிகளை ஒப்படைத்து விடுகிறார் கள். அதனால், இந்தத் திட்டம் எந்த நோக்கத்திற்காக தீட்டப் பட்டதோ, அந்த நோக்கத்தை செயல்படுத்த முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, அந்தந்த ஊர்களிலே இந்தப் பணிகளைச் செய்வதற்கு பொதுமக்கள் குழு ஒன்றை அமைத்து, நேரடியான முறையிலே இந்தப் பணிகளைச் செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஊர்நல அதிகாரிகள் இந்தப் பணிகளைச் செய்யாமல் இனிமேல் அந்தந்த கிராமங்களிலுள்ள படித்த வாலிபர்கள், ஆயக் கட்டுதாரர்கள் செய்யவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித் தாகி விட்டது.

ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பேருந்து நிலையங்கள்.

101 —*வினா எண் 188 — திரு. செ. செம்மலை : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) சேலம் மாவட்டம் மேச்சேரி பேரூராட்சியில் ஐ.யு.டி. பி. (I. U. D. P.) திட்டத்தின் மூலம் பேருந்து நிலையம் கட்ட கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்காக நிதி ஒதுக்கீடு செய்யும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கோரிக்கைகள் எழுத்து மூலம் வர வில்லை என்று சொன்னாலும், மேச்சேரி பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்டுவதற்கு முறையாக முன்மொழிவு அந்தப் பேரூ ராட்சியின் மூலம் அனுப்பப்பட்டு, இன்றைக்கு 'இட் இஸ் பெள பெண்டிங் வித் தி டைரக்டோரேட் ஆப் கன்ட்ரி அண்டு டவுன் பிளானிங்' முறையாக புரபோசல் அனுப்பப்பட்டிருப்பதால், நடப்பு ஆண்டில் இந்த முன்மொழிவின்மீது நடவடிக்கை எடுத்து, மேச்சேரி பேரூராட்சியில் இந்த ஆண்டு பேருந்து நிலையம் கட்டு வதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சியை மேற்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இது வரை வரவில்லை என்று சொன்னேன். 1985–86லே இது குறித்து வருமேயானால், அரசு அதைப்பற்றி பரிசீலித்து முடிவெடுக்கும்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொந்த நிதியில்லாத காரணத்தால், இப்படி பல பேரூராட்சிகள் தங்கள் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள, இப்படிப்பட்ட பேருந்து நிலையங்களைக் கட்டுவதற்கான திட்டங் களைப் போட்டு, பணம் கேட்டு அனுப்பப்பட்டு அவைகள் அரசாங்கத்தின் பரிசிலனையில் தற்போது இருந்து, வருகின்றன என்று அறிகிறேன். அதற்குக் காரணம் ஐ.யு.டி.பி. திட்டத்தின் கீழ் அதிக நிதி ஒதுக்காத நிலை இருப்பதாகவும் அறிகிறேன். எனவே, ஐ.யு.டி.பி. மூலம் இப்படிப்பட்ட திட்டங்களை நிறை வேற்றுவதற்கு மைய அரசிடமிருந்து அதிக நிதி உதவி பெறு வதற்கு நமது அரசு முயற்சி மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அப்படி அதிக நிதி மைய அரசிடம் பெறுவதற்கான முயற்சி மேற் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் கிடைத்ததை வைத்துக் கொண்டுதான் காரியங்கள் ஆற்ற முடியும். 1985–86-க்கான திட்ட வரைவில் எதை எதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இதுவரை அரசு முடிவு எடுக்கவில்லை. இப்படி ஒரு திட்டம் வருமானால், அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு தலைவர் அவர் களே, தமிழகத்திலே உள்ள பெரும்பாலான பேரூராட்சிகள் வருமானம் குன்றிபோய் இருக்கிற சூழ்நிலையில் அரசின் திட்டங் கள் கிராமப் பஞ்சாயத்துகளுக்கு செய்யப்படும்போது, பேரு ராட்சிகளுக்கு செய்வதற்கு வழியில்லாமல் இருக்கிறது. ஆகவே வருமானம் குறைவாக இருக்கிற பேரூராட்சிகளை எல்லாம் விலக்கிவிட்டு அவைகளை கிராமப் பஞ்சாயத்துக்கள் என்று அறிவிப்பதற்கான முயற்சியை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மூலக்கேள்வி ஐ.யூ.டி.பி. திட்டத்தைப் பற்றிய தாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது பேரூராட்சி களை வெறும் ஊராட்சிகளாக மாற்றுவதைப் பற்றியதாகும். ஆகவே தனியாகக் கேள்வி கேட்டால் விரிவான பதில் அளிக்க இயலும்.

திரு. ஏ. தங்கராசு : தலைவர் அவர்களே, பேருந்து நிலை யம் கட்டுவதற்கு பேரூராட்சிக்கு ஐ.யூ.டி.பி. மூலம் லோன் கொடுத்து வருகிறார்கள். ஆனால் அப்படி லோன் கொடுக்கிற





போது வசதி, வாய்ப்பு இருக்கிற இடத்தில் முதல் மாடி கட்டு வதற்கு அனுமதியில்லை என்று சொல்கிறார்கள். முதல் மாடி கட்டுவதால் அந்தப் பேரூராட்சிக்கு வருமானம் வருகிற வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இப்போது இருக்கிற நிலைமையை மாற்றி முதல் மாடி கட்டுவதற்கும் அனுமதி வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த ஊர் என்று குறிப்பிட்டுக் கேட்டால் பதில் கொடுக்க இயலும்.

102 (*வினா எண் 229) — திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா —

சேந்தமங்கலம் நகரத்தில் (I.U.D.P.). திட்டத்தின் நிதி உதவியுடன் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. சி. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, 1984–85 ஆம் ஆண்டு சேலம் மாவட்டம் வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் இதற் கான முன் மொழிவுகள் அரசிற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அரசும் அதனை பரிசீலனை செய்து பதில் அனுப்பியிருக்கிறது. இதற்காக நிலம் ஒதுக்கீடு இருந்தால் இந்தத் திட்டத்தில் சேர்த்து கொள்ளலாம் என்று அரசு பதில் அனுப்பி இருக்கிறது. ஆகவே வருகிற ஆண்டிலே திட்டத்திலே சேர்த்துக்கொள்ள அரசு முயற் சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, 1985–86 ஆம் நிதி ஆண்டில் முன்மொழிவுகள் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கிடைக்கப்பெறுமானால் இதுபற்றி பரிசீலிக் கப்படும்.

## கிராமங்களில் மேல்நிலை நீர்த்தொட்டிகள்

103 (*வினா எண் 9) — திரு. எஸ். எஸ். வி. சித்தன்: மாண்பு மிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராமங்களிலும் ( O. H. T. ) குடிநீர் மேல்நிலைத் தொட்டி மூலம் ஏதும் அரசின் பரிசீலனையில் வழங்கும் சிறப்புத் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1985 ஜூன் 4

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) தமிழகத்தின் குடியிருப்புகளில் உள்ள மக்கட் தொகைக்கேற்ப கையிறைப்பான்கள் அல்லது மேல்நிலைத் தொட்டியுடன் விசையிறைப்பான் மூலம் குடிநீர் வழங்கப் படுகிறது. தற்போதுள்ள நடைமுறை விதிகளின்படி ஒரு குடியிருப்பில் மக்கள்தொகை 750-க்கு மேல் இருந்தால் மேல்நிலை தொட்டி கட்டி விசையிறைப்பான் மூலம் குடிநீர் வழங்கப்படும். மக்கட்தொகை 750-க்கு குறைவாக உள்ள குடியிருப்புகளில் நீர் ஆதாரம் குடியிருப்பின் எல்லைக்கு வெளியே இருந்தாலும் மேல்நிலைத்தொட்டி விசையிறைப்பான் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே குடியிருப்பின் மக்கட்தொகை 750-க்கு கீழ் இருந்து நீர் ஆதாரம் குடி யிருப்புக்குள்ளேயே இருந்தால் மட்டுமே, மக்கட்தொகை 300-க்கு ஓர் கையிறைப்பான் வீதம் போடப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிக்க அமைச்சர் அவர்கள் மக்கள் தொகை அடிப்படையில் இந்த மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டப்படுகின்றன என்ற விவரத்தைச் சொன்னார்கள். எந்த ஆண்டு எடுத்த மக்கள் தொகை அடிப்படையில் இந்தக் கணக்கு எடுக்கப்படுகிறது? எனக்கு கிடைத்த தகவல்படி 1971 ஆம் ஆண்டு அல்லது 1977 ஆம் ஆண்டு என்று கணக்கைச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது அண்மையில் எடுத்த கணக்கை—மக்கள் தொகை கணக்கை—எடுத்துக் கொண்டால் இன்னும் நிறைய கிராமங்கள் பயன்பெறுகிற வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே இந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி முடிக்கிற பணி எந்த ஆண்டில் நிறைவுபெறுமென்று அமைச்சர் அவர்கள் எதிர்பார்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, 1976—77-ஆம் ஆண்டிலிருந்து நாம் இதை ஆய்வு செய்து, வகைப்படுத்தி, இந்த மேல்நிலை நிர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுகிற முயற்சியை மேற்கொண்டு இருக் கிறோம். அதன்படி மொத்தம் 47,075 குடியிருப்புகளில் 18,167 குடியிருப்புகளுக்கு தகுந்த நீர் ஆதாரம் இல்லையென்று தெரிய வந்துள்ளது. நாம் 17,173 குடியிருப்புகளுக்கு இந்தத் திட்டத்தை முடித்திருக்கிறோம். ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத் தில் ரூ. 222.82 கோடி இந்த முயற்சிக்காக ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த தைப் போல முன்பு எடுத்த வகைகளின் அடிப்படையில் பார்த்தால் இதிலே சில சிக்கல்கள் இருக்கக்கூடுமென்று தெரிகிறது. ஆகவே இதை மறு ஆய்வு செய்ய அரசு விரும்புகிறது.



1985 ஜூன் 4]

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க தலைவர் அவர்களே, மாண்புமிக்க அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது மக்கள் தொகை குறைவாக இருக்கிற ஊர்களில் கை இறைப்பான்கள் மூலமாக குடிதண்ணீர் வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். இந்த கை இறைப்பான்கள், ''ஹேண்ட் பம்ப்ஸ்'', அடிக்கடி பழுதுபடுகிற நிலைமையில் இருக்கின்றன. பொது வாழ்க்கையில் இருக்கிற எங்களைப் போன்றவர்கள் கிராமங்களுக்குச் செல்கிறபோது மக்கள் நிறைய குறைகளை சொல்கிறார்கள். ஆகவே ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிகமான ஆட்களை அளித்தாவது, ஒன்றிரண்டு நாட்களில் ஏற்படுகின்ற பழுதை சரிசெய்வதற்கு அரசு ஏதாவது ஒரு முயற்சியை எடுத்துக்கொண்டு, குடிதண்ணீர் வழங்குவதற்கான முயற்சியை துரிதப்படுத்துவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர் களே, உள்ளாட்சித் துறையோடு கலந்து பேசி தகுந்த முடிவு கள் எடுக்கப்படும்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீருக்காக மேல்நிலைத் தொட்டிகள் கட்டுகிற போது, அதைக் கட்டுவதற்கு முன்னாலே, அங்கே தண்ணீர் வசதி இருக்கிறதா, என்பதைப் பார்க்காமலேயே பெரும்பா லான இடங்களில் அப்படிப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு, அவைகள் மக்களுக்குத் தேவைப் படாமல் இருக்கின்றன, கட்டப்பட்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளுக்கு தண்ணீர் சப்ளை இல்லாமல், 4, 5 ஆண்டுகள் அப்படியே கிடக்கின்றன. எனவே இப்படிப்பட்ட நிலையைப் போக்கவும், குடிநீரை உடனடியாக மக்களுக்கு வழங்கவும், அமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை எடுப்பார் களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பணிகள் எல்லாம் ஒரே நேரத்திலே செய்து முடிக்கவேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாக அப்படிப்பட்ட மேல் நிலைத் தொட்டிகள் கட்டப்படுகின்றன. ஆனால் சில இடங்களில் மேல்நிலை தொட்டிகள் கட்டி முடிக்கப் பட்டதற்கு பிறகு, தண்ணீர் எடுக்கக்கூடிய நீர் ஆதாரங்கள் உள்ள கிராமங்களிலே அப்படிப்பட்ட சிக்கல்கள் அல்லது வேறு சில சிக்கல்கள் காரணமாக இது தாமதப்படுகிறது என்பதை அரசு அறிகிறது. அத்தகைய முயற்சிகளை எண்ணிப் பார்த்து, எதிர்காலத்திலே முறையான முயற்சி களை எடுக்கக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்கும்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்திலே குடிநீர் பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அதுவும் குறிப்பாக வறட்சிக் காலத்தில், குடிநீர் பற்றாக்குறை தமிழகம் முழுவதும் இருக்கிறது. குறிப்பாக நம்முடைய தர்மபுரி மாவட்டத்தில் என்னுடைய தொகுதியிலே பருவ மழை தவறியதன் காரணமாக குடிநீர் பிரச்சினை பெரிய பிரச்சினையாக இருக்கிறது. ஆங்காங்கே இருக்கக்கூடிய குடிநீர்த் தொட்டிகள், கிணறுகள் எல்லாம் வறண்டு போய் தண்ணீர் இல்லாமல் பொதுமக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள்.

எனவே, ஆங்காங்கே ''போர் வெல்'' போடுவதற்கு அரசாங்கத்திலே நடவடிக்கை எடுத்து, இப்படி குடிநீர் தொட்டிகள், கிணறுகள் வறண்டு போய் இருக்கும் இடங்களை ஆழப்படுத்தி, குடிநீர் வசதியை செய்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ? மேலும் இப்படி கட்டப்பட்ட இடங்களில் மேல்நிலைத் தொட்டிகள் சரியாக பராமரிப்புச் செய்யப்படாமலும், ஆங்காங்கு உள்ள இயந்திரங்கள் பழுதடைந்தும் இருக்கின்ற காரணத்தாலும், அவைகள் எல்லாம் பல மாதங்கள் ஆகியும் ரிப்பேர் செய்யப்படாமல் இருப்பதாலும், மக்கள் தண்ணீருக்காக மிகவும் அவதிப்படுகிறார்கள்.

எனவே, பழுதடைந்த அந்த இயந்திரங்களை ரிப்பேர் செய்து, குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்கு போர் வெல்கள் போட்டு, நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா ? மேலும் அமைச்சர் அவர்கள் தீவிரமாக நடவடிக்கை எடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். என்னுடைய தர்மபுரி மாவட்டம் மிகவும் பாதிக்கப்பட்டு இருப்பதால்—அமைச்சர் அவர்கள் அளித்துள்ள அறிக்கையில் கூட இதைப்பற்றி எதுவும் கொடுக்கப்படவில்லை—இந்தப் பிரச்சினையைப் போக்க தீவிரமான நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஏற்பட்டு இருக்கக்கூடிய வறட்சியை முன்னிட்டு, தமிழகத்திலே மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிற வட்டங்களில், 25 வட்டங்களை தெரிவு செய்து அதிலே 620 ஆழ் குழாய் கிணறுகள் போடப்பட இருக்கின்றன. இதிலே பாதிக்கு மேல் முடிந்து விட்டன. இருந்தாலும், ஏற்கனவே போடப்பட்டு இருக்கிற ஆழ் குழாய் கிணறுகள்—ஏறத்தாழ 68 ஆயிரம் போடப்பட்டு இருக்கின்றன—அவைகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர்படுத்துவதுதான் நாம் பிரச்சினையை சமாளிப்பதற்கு உதவும் என்று அரசு கருதுகிறது.



திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆழ் குழாய் கிணறுகள் மூலமாக வழங்கப்படுகிற குடி தண்ணீர், அதிலே ஏற்படுகிற சிறு குறைபாடுகள், இடத்திற்கு ஏற்றவாறு அந்தத் தன்மையைப் பொறுத்து இருக்கிறது என்று சொன்னார்கள். ஆங்காங்கே மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு, ஆழ் குழாய்க் கிணறுகள் இறக்கப்பட்டு, அரசினுடைய பணங்கள் லட்சக்கணக்கான அளவில் செலவழித்து, அந்த தண்ணீரை மேலே எடுத்து தொட்டிக்கு செலுத்தவேண்டிய மின்சார மோட்டார்கள் சக்திவாய்ந்ததாக இல்லாத காரணத்தினால், 20, 25 அடிக்குள்ளே இருக்கிற தண்ணீரை எடுத்து மேலே தொட்டிக்கு செலுத்த முடியாத அளவிற்கு இருக்கிறது.

எனவே, அப்படிப்பட்ட சக்தியில்லாத அந்த மோட்டார்களை நீக்கிவிட்டு, சப்மெர்சன் போன்ற பம்புகளை இறக்கி, இந்த வாட்டர்போர்டு மூலமாக முதலிலே ஒப்படைக்கிற போது, இதையும் சேர்த்து வைத்தால்தான் ஆங்காங்கு இருக்கிற தண்ணீரை மேலே கொண்டு வந்து நீர்த்தேக்கத் தொட்டிகளில் செலுத்த முடியும். எனவே இதை பரிசீலனை செய்து, வாட்டர் போர்டு மூலமாக ஊராட்சி ஒன்றியத்திலே ஒப்படைக்கிறபோது, குறைகளாக ஒப்படைக்கப்படுகிறது, எனவே இந்த குறைகளை நிரந்தரமாக நீக்கவும், 100, 150 அடிக்குக் கீழே இருக்கிற தண்ணீரை எடுக்கக்கூடிய அளவிற்கு உள்ள சப்மெர்சன் பம்புகளை பொருத்தி மக்களுக்கு தண்ணீர் கொடுப்பதற்கு துரிதமான நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தெரிவித்து இருக்கின்ற கருத்துக்களை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம்.

### கோவை மாவட்டத்தில் குடிநீர் வழங்கு திட்டங்கள்

*104* (*வினா எண் 196)—திரு. மா. சின்னராசு : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்திற்கு பயனளிக்கும் உலக வங்கி திட்டமான அத்திக்கடவு குடிநீர்த் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) இத் திட்டம் எப்போது முடிவுறும் ?

டி 2 A 126—4

(இ) இத் திட்டத்தில் காரமடை பேரூராட்சி சேர்க்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) இத் திட்டம் 1985–86 ஆம் ஆண்டின் மத்தியில் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

(ஆ) செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நாளில் இருந்து 5 ஆண்டுகளில் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) இத் திட்டத்தில் காரமடை பேரூராட்சி சேர்க்கப்படவில்லை.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் சுமார் 700-க்கும் மேற்பட்ட பல்வேறு கிராமங்கள் இந்தத் திட்டத்தினால் பயன் பெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் இந்த குழாய்களை பதித்து வேலைகளைத் துவங்குகிற இடமே காரமடை ஒன்றியம் தான். காரமடை ஒன்றியத்தில் இருக்கிற வேறு நீர் ஆதார வசதிகள் இல்லாத அந்த கிராமங்களை இதில் சேர்ப்பதற்கு—காரமடை பேரூராட்சிக்கு மிக கடுமையான குடிநீர் தட்டுப்பாடு இருந்து வருகிறது. ஆகவே, அந்த காரமடை பேரூராட்சியோடு காரமடை ஒன்றியத்தில் இருக்கிற கிராமங்களும் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்று நான் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளிடமும், அமைச்சர் அவர்களிடமும் மனு கொடுத்து இருக்கிறேன். ஆகவே பரிசீலித்து காரமடை ஒன்றியத்தில் உள்ள கிராமங்களை இந்தத் திட்டத்தில் இணைத்துக் கொள்ள அமைச்சர் அவர்கள் அனுமதி வழங்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிடைக்கின்ற நீர் ஆதாரங்களை ஒட்டி தான் எந்த அளவுக்கு இவர்களுக்கு கொடுக்கமுடியும் என்பதைக் கணக்கில் கொண்டு நாம் இந்தத் திட்டத்தை வகுக்க முடியும். நமக்கு இருக்கின்ற விருப்பம், ஆர்வம் இவைகளை அனைத்தையும் உள்ளடக்கி திட்டத்தில் இணைப்பது என்பது மிக கடுமையானது. என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்து இருக்கின்ற அந்த கருத்தின் அடிப்படையில் இந்த குழாய்கள் பதித்ததற்குப் பிறகு 1.712 மில்லியன் லிட்டர் தண்ணீர் காரமடைக்கு எடுத்து கொண்டு வருவதற்கு வகை செய்யப்பட்டு இருக்கிறது.

திரு. மு. ஜான் வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உலக வங்கித் திட்டத்தின் கீழ் நகர பஞ்சாயத்துக்கள், கிராமப் பஞ்சாயத்துக்களில் கொடுக்கப்படுகின்ற



அடிப்படைத் திட்டத்தில் 1960 ஆம் ஆண்டு டின் ஷீட் தகரத்தில் கட்டப்பட்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளை நீக்கி மீண்டும் சிமெண்ட்டால் கட்ட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆயும்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு உலக வங்கிக் கொடுக்கிற கடனில் நம்முடைய அரசின் பங்கு எவ்வளவு என்பதையும் உலக வங்கி கொடுக்கிற கடன் தொகையின் வட்டி விகிதங்கள் என்ன என்பதையும் மத்திய அரசுக்கு நாம் திருப்பிக் கொடுக்கிற கடன் வட்டி விகிதம் என்ன என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றித் தகவல் இல்லை.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியின் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்கும் நகரத்தில் திருவண்ணாமலை நகரமும் இணைக்கப்பட்டுள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆழ் துளை கிணறுகள் வெட்டப்பட்டு வருகின்றன என்று கூறியிருக்கிறார்கள். கடுமையான வரட்சி நிலவுகின்ற இந்த நேரத்தில் குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் சொந்தமான அந்த ஆழ் துளைக் கிணறுகள் போடும் இயந்திரங்கள் மூலம்தான் வேலைகள் முடிக்கப்படும் என்று ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள் சொல்கிறார்கள். இதை போர்க்கால அடிப்படையில் இந்தக் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காண்கின்ற வகையில் தனியார்களிடமிருந்து வாடகைக்கு ஆழ் துளை கிணறுகள் போடும் இயந்திரங்களை எடுக்க அரசு அனுமதிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் இடத்தில் போதுமான அளவுக்கு அந்தக் கருவிகள் இருக்கின்றன. தேவைப்பட்டால் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

[1985 ஜூன் 4

105 (*வினா எண் 486)—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு
வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் சிறுவாணி குடிநீர்த் திட்டத்
தால் பயன்படும் கிராமங்கள் எத்தனை ?

(ஆ) இத் திட்டத்திற்கான மொத்த செலவு எவ்வளவு ?

(இ) வீடுகளுக்கு இணைப்புக் கொடுக்க கட்டணம் வசூலிக்
கப்படுகிறதா ?

(ஈ) ஆம் எனில், எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) 19 பேரூராட்சி
கள் மற்றும் 8 ஊராட்சிகள் சிறுவாணி குடிநீர்த் திட்டத்தால்
பயன்பெறுகின்றன.

(ஆ) இத் திட்டத்திற்கான மொத்த செலவு ரூ. 3,088.46
இலட்சம்.

(இ) ஆம்.

(ஈ) கோவை மாநகராட்சி பகுதிகளுக்கு வீட்டிணைப்புக்
கட்டணமாக ஒரு இணைப்பிற்கு ரூ. 600 வசூலிக்கப்படுகிறது.
மேலும் வீட்டு உபயோகத்திற்குப் பயன்படும் தண்ணீருக்கு,
ஒவ்வொரு 4,500 லிட்டருக்கும் ரூ. 5.00 ஆக மீட்டர் கட்டணம்
உள்ளது. இதர உபயோகத்திற்குப் பயன்படும் தண்ணீருக்கு
ஒவ்வொரு 4,500 லிட்டருக்கும் ரூ. 10.00 ஆக மீட்டர் கட்டணம்
உள்ளது. குறைந்த கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 20 ஆக
இருக்கின்றது. மேலும், ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளின்
மீட்டர் கட்டணமாக ஒவ்வொரு 1,000 லிட்டருக்கும் சில இடங்
களுக்கு ரூ. 1.00 என்றும் சில இடங்களுக்கு ரூ. 1.35 என்றும்
முதலீட்டுக்குத் தக்கவாறு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, வீடுகளுக்குக் கொடுக்கப்படுகின்ற இணைப்புகளுக்கு
ஒவ்வொரு இணைப்புக்கும் சுமார் 1,000 ரூபாய் முதல் 1,500
ரூபாய் வரை வாங்கப்படுகிறது. இதை அரசு அறியுமா ? அப்படி
வாங்கப்படுகின்ற தொகைக்கு எந்தவிதமான ரசீதும் கொடுக்
காமல் குறிப்பிட்ட பிளம்பர்களே அந்த வேலைகளை எடுக்கின்ற
வகையில் குறிச்சி, குனியமுத்தூர் பேரூராட்சியில் நடைமுறை
யில் இருந்து வருவதை அரசு அறியுமா ? அதை மாற்றுவதற்கு
நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவல் எதுவும்
இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்து இருக்கின்ற கருத்
தின் அடிப்படையில் விவரங்களை கேட்டு அது பற்றி உரிய நட
வடிக்கையை அரசு எடுக்கும்.



1985 ஜூன் 4]

(முற்பகல் 9–50)

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கோவை மாநகராட்சி வீடுகளுக்கு இணைப்புக்
கொடுத்து இருப்பதிலே, அமைச்சர் அவர்கள், அங்கே 4,500
லிட்டருக்கு சுமார் 7½ லிருந்து 10 ரூபாய் வரைக்கும் கட்டணம்
விகிதம் விதிக்கப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். அமைச்சர்
அவர்களிடத்திலே தனியாகப் பேசும் போதும், ஏற்கெனவே,
அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்ற நிலையிலே
யும், இந்த மீட்டர் சிஸ்டத்திலே இருக்கின்ற குழப்பமான சில
நிலைமைகளை நான் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன்.
சாதாரணமாக மீட்டர் 1,001 என்று வைத்துக் கொண்டாலும்
அதை 2,000 என்று கணக்கெடுத்துக் கொள்ளக்கூடிய நிலை
இருக்கிறது. அந்த மீட்டர் சிஸ்டத்திலே இருக்கக்கூடிய குழப்ப
மான நிலையைப் போக்குகின்ற முறையில், காம்பவுண்டிங்
முறையிலே ஒரு ரேட்டை நிர்ணயம் செய்வது முறையாக இருக்
கும் என்று இந்த மன்றத்திலேயும் எடுத்துச் சொல்லி இருக்கிறேன்.
இது போன்ற சிக்கலை, தமிழ்நாடு வாட்டர் டிரெயினேஜ் போர்டு
என்று இருக்கிற ட்வாட் அதிகாரிகளையும், மாநகராட்சி அதி
காரிகளையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் கொண்டு ஒரு
கூட்டுக் கூட்டத்தை அமைச்சர் அவர்கள் கூட்டி, சாதாரணமாக
கோவை மாநகராட்சியின் எல்லைக்குள்ளே இருக்கிற மக்கள்
600 ரூபாய், 1,000 ரூபாய் வரைக்கும் ஒரு வீட்டு இணைப்புக்குக்
கட்டணம் செலுத்தக் கூடிய நிலையிலிருந்து மக்களுக்குப் பாது
காப்புத் தரத் தக்க ஒரு ஏற்பாட்டை அரசு செய்யுமா ? இதில்
இருக்கிற சிக்கலை உணருமா ? காம்பவுண்டிங் முறையை கடைப்
பிடிக்குமா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்
களே, கட்டணம் வசூலிப்பதைப் பற்றிக் குறை சொல்லவில்லை.
அது வகைப்படுத்தப்பட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தண்ணீர் திட்டத்திற்கு
வாங்கியிருக்கிற கடனைத் திருப்பிக் கட்ட வேண்டிய காரணத்
தால்தான் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. வேறு காரணம்
அல்ல. அதை எந்த வகையிலே வகைப்படுத்துவது என்று அரசு
ஆராயும்.

திரு. எஸ். நாராயணன் : பேரவைத் தலைவர் அவர்களே,
திருநெல்வேலி, பாளையங்கோட்டை போன்ற நகரங்களில் ரிசர்
வாயர் பெரிதாக இருந்தும், தாமிரபரணி நதியிலே தண்ணீர்
நிறைய இருந்தும், அதில் பம்ப் பண்ணி மக்களுக்கு சப்ளை
செய்வதற்கான கரண்ட் ரிசர்வாயர் பம்ப்பிங் ஸ்டேஷனில் இல்லை
என்று சொல்கிறார்கள். 16 மணி நேரம் தான் கரண்ட் கிடைக்
கிறது. 22 மணி நேரம் கரண்ட் கிடைத்தது என்றால், நன்
றாக சப்ளை பண்ணலாம் என்று சொல்கிறார்கள். இந்த ரிசர்
வாயர் போன்ற பகுதிகளில் பம்ப்பிங் ஸ்டேஷன் பகுதிகளுக்குக்

கரண்ட் வழங்குவதற்கு, தனி பீடர் எலக்டிரிசிடி போஸ்டிலே யிருந்து அமைத்துக் கொடுக்க திட்டம் உள்ளதா? தண்ணீர் வாங்கிக் கொடுக்கும் திட்டம் உள்ளதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர் களே, மின் துறையிடம் இது பற்றி குடிநீர் வடிகால் வாரியம் கேட்கும்.

திரு. ரு. மணி: தலைவர் அவர்களே, சிறுவாணி அணைக் கட்டு உயர்த்தப்பட்டு, அதனுடைய கொள்ளளவு அதிகப்படுத் தப்பட்டதற்குப் பிறகு, அங்கே தண்ணீர் ஸ்டாக் இன்றைக்கு, கோவை மாநகராட்சிக்கும் அதனுடைய வழித் தடங்களிலே இருக்கும் கிராமங்களுக்கும் கொடுப்பதற்கு தேவையான அளவுக்கு மேலே இருக்கிறது. இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அப்படியிருக்கும்போது, பல இடங்களில் இணைப்புக் கொடுப் பதற்கு இன்னமும் மறுத்துக் கொண்டிருப்பதும் அதிகமான மீட் டர் இணைப்புக்களை கொடுக்காமல் இருப்பதும், வழித் தடங் களில் இருக்கும் கிராமங்களுக்கு பல இடங்களுக்கு தேவையான அளவுக்கு, குறைந்த பட்ச தண்ணீர் கொடுக்காமல் இருப்பதையும் கவனித்து, நிறைவேற்ற உடனே அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர் களே, அரசு பரிசீலிக்கும்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, சிறுவாணி குடிநீர்த் திட்டத்தினால் பயன் பெறும் தொண்டா முத்தூர், ஆலாந்துறை, கூலாம்பட்டி பேரூராட்சிகள், திட்டச் செலவை அரசுக்குத் திருப்பிச் செலுத்த முடியாமல் இருக்கின்றன. எனவே, திட்டச் செலவை அரசே ஏற்றுக் கொள்கிற வகையில் பேரூராட்சி மன்றங்களுக்கு உதவி வழங்கப்படுமா? சலுகை காட்ட அரசு பரிசீலிக்குமா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து தலைவர் அவர்களே, இயலாது.

திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம்: தலைவர் அவர்களே, அதிகாரிகள் அரசினுடைய உத்தரவை ஏற்காமல், தங்களுக்கு வசதி இருந்தும், குடிதண்ணீரை நல்ல முறையில் பொதுமக்க ளுக்கு விநியோகிக்காமல் தாமதப்படுத்தி வருகிறார்கள். இது பற்றி அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தால் அரசு அதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர் களே, பொதுவாகவே, இப்படி ஒரு தாமதம் இருப்பதாகத் தெரிய வந்திருக்கிறது. ஆகவே, அதைச் சரிப்படுத்துகின்ற வகையிலே அரசு முயற்சிகளை மேற்கொள்ள இருக்கின்றது.



106 (*வினா எண் 197)—திரு. மா. சின்னராசு: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் குடிநீர்த் திட்டத்தை மேம்படுத்த அந்நகராட்சி அரசிடம் கடன் கேட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) மேட்டுப்பாளையம் நகராட்சி அதன் குடிநீர் மேம் பாட்டுத் திட்டத்திற்காக, ரூ. 7.48 இலட்சத்திற்கு, அரசிடம் கடன் கேட்டுள்ளது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் நகராட்சி குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப் பட்டு 20 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்ட காரணத்தினால் அந்த பம்புகள் எல்லாம் திறனை இழந்து அதன் காரணத்தினால் மக் களுக்குத் தேவையான குடிநீரை வழங்க முடியாமல் வறட்சிக் காலத்திலே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற நிலை இருக்கிறது. வறட்சித் திட்டத்தின் அடிப்படையில் Adverse Seasonal Condition அடிப்படையில் அரசாங்கம் இயன்ற அளவுக்கு மானியமாகக் கொடுக்க முன்வருமா? அது கொடுக்கப்பட்டால்தான் குடிநீர்ப் பிரச்சினையை அங்கே உடனடியாகத் தீர்க்க முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு அரசு அதை விரைவாக வழங்குவதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர் களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த அந்தக் கருத்தின் அடிப்படையில் அரசு நிச்சயமாக அதைப் பரிசீலிக்கும்.

ஆண்டிப்பட்டி தொகுதியில் காற்றுத் தடுப்பு நடவடிக்கைகள்.

107 (*வினா எண் 370)—திரு. இரா. முத்தையா: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டித் தொகுதியில், ஆடிக்காற்றுக் காலத்தில் விளை நிலங்கள் பலத்த மணற்காற் றினால் பாதிக்கப்படாது தடுக்க காற்றுத் தடுப்பு நடவடிக்கை யாக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

(ஆ) இதன் காரணமாக ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) மதுரை மாவட்டத்தில் வேளாண்மை பொறியியல் துறையில் காற்று அரிப்பு தடுப்புப் பணிகளை செயல்படுத்த போடியில் ஒரு உபகோட்டம் 1959 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. ஆண்டிப்பட்டி பகுதியில் 1984–85 ஆம் ஆண்டு முடிய 322, 366 ஹெக்டேர் விளை நிலங்கள் இத் திட்டத்தினால் பாதுகாக்கப்பட்டு பயன் அடைந்துள்ளன.

(ஆ) காற்று அரிப்பு தடுப்புத் திட்டத்தின் கீழ் இப்பகுதியில் காற்று அரிப்பு தடுப்புச்சாலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்தடுப்புச் சாலைகளில் நடப்பட்டுள்ள பல்வகை மரங்கள், விளை நிலங்களை பாதுகாப்பதுடன் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானமும் கிடைக்கவும், கிணறுகள் மண்படிந்து தூர்ந்து போகாமல் தடுக்கவும் உதவுவதுடன் உட்சுவாசிக்கும் காற்றிலுள்ள தூசுத்தன்மையையும் குறைக்கிறது. இத்திட்டத்தால் இப்பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்புகளும் கிடைக்கின்றன.

திரு இரா. முத்தையா : தலைவர் அவர்களே, இந்த மணற்காற்றினால் பாதிக்கப்பட்டுள்ள விளை நிலங்கள் சீர்செய்யப்பட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால், ஆண்டிப்பட்டியிலிருந்து கண்டமனூர் வரையிலும் 10 மைல் சுற்றுவட்டாரத்தில் உள்ள கிராமங்களிலே உள்ள நிலங்கள் எல்லாம் இன்னும் மணல் மூடிய நிலையில் தான் இருக்கின்றன. அதை அகற்றுவதற்கு இந்தத் துறை விவசாயிகளுக்கு ஏதாவது உதவி செய்யுமா ? அதோடு இந்தக் காற்றுத் தடுப்பிற்காக மரங்களை நடுகிறபோது ஆங்காங்கே உள்ள விளை நிலங்களையொட்டியே நடுவதால் அந்த விளை நிலச் சொந்தக்காரர்கள் அந்த மரங்கள் பெரிதானவுடன் அவைகளை வெட்டி விடுகிறார்கள். எனவே, அதைத் தடுக்கிற முறையிலே வைகை ஆற்றின் ஓரத்திலே அதிகமான அளவில் மரங்களை நடுவதற்கு துறை முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி, மரிக்குண்டு, உசிலம்பட்டி, சிம்மராசநாயக்கனூர் ஆகிய கிராமங்கள் பயன் அடைந்திருக்கின்றன என்று துறை குறிப்பு தந்துள்ளது. மாண்புமிகு உறுப்பினர் எந்த எந்தக் கிராமங்களிலே அந்தப் பணிகள் செய்யப்படவேண்டுமென்பதை விரிவாக எடுத்துச் சொன்னால் அரசு உரிய நடவடிக்கையை எடுக்கும். விளை நிலங்களுக்கு அருகாமையிலே மரங்களை நடாமல் ஆற்றின் ஓரத்திலே நடவேண்டுமென்று சொல்கிறார்கள், விளை நிலங்கள் பாதிக்கப்படக்கூடாது என்ற காரணத்திற்காகத்தான் இந்தத் திட்டமே செயல்படுத்தப்படுகிறது. ஆகவே, அங்கேயே நடுவதுதான் பொருத்தமாக இருக்கும்.



## முந்திரி பயிர் அபிவிருத்தி

(108—*வினா எண் 735)—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முந்திரிப் பயிரை அபிவிருத்தி செய்ய உலக வங்கி உதவியுடன் சுமார் ரூபாய் 3,950.46 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) 1982–83 ஆம் ஆண்டில் உலக வங்கி உதவியுடன் 20,000 ஹெக்டேர் பரப்பளவில் புதியதாக முந்திரி பயிர் சாகுபடி செய்யவும், ஏற்கனவே 23,500 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரி பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளதை மேம்படுத்தவும் ரூ. 39.50 கோடி செலவில் ஒரு முந்திரி அபிவிருத்தி திட்டம் செயல்படுத்த பரிசீலிக்கப்பட்டு பின்னர் அது கைவிடப்பட்டது.

திரு. எஸ். இராசாராமன் : தலைவர் அவர்களே, அங்கே ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டு கைவிடப்பட்டதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எதற்காக அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. தமிழகம் பூராவும் ஆயிரக்கணக்கான ஏக்கர் தரிசு நிலங்கள் முந்திரி பயிர் அபிவிருத்தி செய்யக்கூடிய நிலையில் —தஞ்சாவூர் மாவட்டத்திலே மருங்குளம் பகுதியிலேயும், புதுக்கோட்டை மாவட்டத்திலே ஆதனக்கோட்டை பகுதியிலேயும் ஆயிரக்கணக்கான ஏக்கர் தரிசு நிலங்கள் இருக்கின்றன— இருக்கின்றன, என்பதை அரசு அறியுமா ? அந்த நிலங்களை அரசு கையகப்படுத்தி அங்கே முந்திரிப் பயிர் அபிவிருத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்ய முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நாம் தயாரித்து உலக வங்கி உதவியைப் பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பினோம். மத்திய அரசும் அதனைப் பரிசீலனை செய்து நபாட் என்ற நிறுவனமும் இவ்வளவு பெரிய திட்டம் சரியாகப் பலன் அளிக்காது என்றும் வேறு மாநிலங்களிலே இப்படிப்பட்ட திட்டங்கள் போடப்பட்டு அவை சரியாகப் பலனை அளிக்கவில்லை என்றும் தெரிவித்து அந்தக் காரணத்தை எடுத்துக் காட்டிய காரணத்தினால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. இருந்தாலும் சிறிய அளவிலே அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக விரிவான செயற்குறிப்புகளை நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம்.

[1985 ஜூன் 4

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

(முற்பகல் 10—00)

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஏறத்தாழ ஒரு இலட்சம் தொழிலாளர்கள் முந்திரித் தொழிற்சாலைகளிலே கச்சா முந்திரி கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் வேலையில்லாமல் இருக்கின்ற நிலைமையைப் போக்குவதற்காக, முந்திரிப் பயிரை அபிவிருத்தி செய்து எந்தெந்த மாவட்டங்களில் பயிரிட முடியுமோ அந்த அளவிற்குத் திட்டத்தை அரசு வைத்திருக்கிறதா? எந்தெந்த மாவட்டங்களில் இப்படிப்பட்ட செடிகள் பயிரிடப்படுகின்றன? அதை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு ஏதேனும் திட்டம் உருவாக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, தோட்டக் கலைத் துறையினால் இப்பொழுதுதான் அந்தத் திட்டம் செயற் குறிப்பில் வகுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே சாகுபடி செய்யக்கூடிய பரப்பளவை மேம்படுத்துவதற்கு, அவர்களுக்கு உதவி செய்வதற்கு எந்த எந்த வகையிலே முயற்சி எடுக்க முடியுமோ அத்தகைய முயற்சிகளை அரசு செய்யும்.

திருத்துறைப்பூண்டி மருத்துவமனை

(109—*வினா எண் 138)—திரு.பொ.உத்திராபதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி நகரத்தில் மருத்துவமனையை ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவு வெவ்வேறு இடத்தில் உள்ளதை பெண்கள் பிரிவு உள்ள இடத்திலேயே மருத்துவமனையை அமைக்கும்படி கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதன் மீது அரசின் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.



1985 ஜூன் 4]

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, திருத்துறைப்பூண்டி தாலுக்கா மருத்துவமனை
என்பது, எப்பொழுது அந்த மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்
டதோ அன்று முதல் இன்று வரையில் அதே நிலையில்தான்
இருக்கிறது. மருத்துவமனை இருக்கின்ற இடம் ரொம்பவும்
குறுகலான இடம். அங்கே 48 படுக்கைகள் இருக்கின்றன.
அதைப் போல பெண்கள் மருத்துவமனை, பேருந்து போகும்
ரோட்டுக்கும் அப்பால் ஒரு இடத்தில் இருக்கிறது. இதனால்
இரண்டு மருத்துவமனைகளுக்கும் சென்று வருவது என்றால்
நோயாளிகளுக்குப் பெரும் கஷ்டம் ஏற்படுகிறது. இந்த
நிலையில் ஆண்கள் மருத்துவமனையில் காலராக் கொட்டகை
இருக்கிறது. டெட்டனஸ் நோயினால் பாதிக்கப்படக்கூடிய
நிலைமை இருக்கிறது. பெண்கள் மருத்துவமனை இருக்கின்ற
பகுதியில் அதிகமாக இடம் இருக்கிறது. அந்த இடத்தில்,
கட்டிடம் கட்டி, புதிய நாகரிக உலகத்திற்குத் தகுந்தாற்போல்
மருத்துவமனையைக் கட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கம் நிச்சய
மாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் சொன்னது மாதிரியாக அங்கே இரண்டு மருத்துவ
மனைகள் இருக்கின்றன. பெண்கள் மருத்துவமனைக்கும், ஆண்
கள் மருத்துவமனைக்கும் இருக்கக்கூடிய இடைவெளி 150
மீட்டர்கள். ஆகவே, அப்படிப்பட்ட ஒரு ப்ரச்னை இருக்கிறது.
அதுமட்டுமல்லாமல், ஆண்களுக்காகக் கட்டப்பட்ட மருத்துவ
மனையில் இடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன
கருத்தின் அடிப்படையில் பெண்கள் மருத்துவமனை இருக்கும்
அந்தப் பகுதியிலேயே புதிய கட்டிடம் கட்டுவதற்கான தாக்கீது
அரசுக்கு வந்திருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்
கிறது என்பதை இங்கே வாக்குறுதியாக நான் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவ
ரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தப் புதிய இடத்தில்
கட்டிடம் கட்டுவதற்கு அரசாங்கத்தின் பரிசீலனையில் இருப்
பதாகச் சொன்னார்கள். அதற்காக என்னுடைய நன்றியை
நான் தெரிவித்துக்கொள்கிறேன். நாகப்பட்டினத்தில் உள்ள
டி.எம்.ஓ. நேரில் வந்து பார்த்து அவர்களே சிபாரிசுசெய்திருப்
பதாக என்னிடத்தில் சொன்னார்கள். ஆகவே 1986 ஆம்
ஆண்டிலேயே இந்த வேலைகளைத் துவக்குவதற்கு அரசு முன்
வருமா? ஏனென்றால், அந்தப் பகுதியில் உள்ள சாதாரண
மக்கள் இந்த இரசு மருத்துவமனையில் உள் நோயாளிகள்
வெளி நோயாளிகள் பகுதிகளில் நெருக்கடி இருப்பதால் காலம்
கடத்தாமல் இருப்பதற்காகத் தனியார் மருத்துவமனை
களில் செல்லுகின்ற நிலைமை இருக்கிறகு. எனவே, இந்த

நிலைமையைப் போக்குவதற்காக வரும் ஆண்டிலேயே அமைச்ச
ரவர்கள் இந்தத் திட்டத்தை எடுத்து அந்தப் பகுதி மக்களின்
நலனை கருத்திற்கொண்டு செய்வதற்கு வாக்குறுதி அளிப்பார்
களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஓரளவிற்கு
மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் அவர்களுக்கே தெரி
யும் சென்ற ஆண்டு இந்தப் பிரச்சினை சொல்லப்பட்டு, பிறகு
டி.எம்.ஓ.வினிடத்தில் நானே சொல்லி, நல்ல ப்ரப்போசலை
அனுப்புங்கள் என்று சொன்னபிறகு அவர்கள் நேரில் பார்வை
யிட்டு அனுப்பியிருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது
என்று சொல்வதற்குக் காரணம், அது பார்ட்-2 ஸ்கீமில் வரு
வதற்கான வாய்ப்பு இல்லை என்றாலும், உடனடியாகப் பரி
சீலித்துத் தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள்.

(110—*வினா எண். 184)—திரு. செ. செம்மலை: மாண்புமிகு
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தை அரசு மருந்தகமாக
மாற்ற ஏதேனும் தடை உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மக்கள்
நல்வாழ்வுத்துறை வெளியிட்டுள்ள 18—1—1984 ஆம் தேதி
யிட்ட அரசு ஆணைப்படி தற்போதுள்ள ஊராட்சி ஒன்றிய
மருந்தகங்களை அரசு ஏற்பதில்லை என முடிவு செய்துள்ளது.

(ஆ) இவ்வாணையை மாற்றும் குறிப்பு அரசின் பரிசீலனை
யில் இல்லை.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தை அரசு மருந்தகமாக
மாற்றுகின்ற நடைமுறை அரசு ஆணையின் மூலமாக நிறுத்தப்
பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே
ஆரம்பிக்கப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் பெரும
பாலானவைகள் சித்த மருந்தகங்களாகவும், ஆயுர்வேதிக்
மருந்தகங்களாகவும் தான் இப்பொழுது செயல்பட்டு வருகின்றன.
எனவே, அவைகளை அரசு மருந்தகமாக மாற்றுகின்ற உத்தேசம்
இல்லை என்றாலும், ஊராட்சி ஒன்றியம் மருந்தகங்களை



அலோபதிக் மருந்தகமாக ஆரம்பிக்க முன் வந்தால் அரசாங்கம்
அதற்கு உதவுவதற்கு முன் வருமா அதற்கு உத்தரவு கொடுக்க
முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே சித்த மருந்தகங்களை
அலோபதியாக மாற்ற வேண்டுமென்று கோரிக்கை விட்டிருக்
கிறார்கள். அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலே, மாற்ற
வேண்டிய தேவை இல்லையென்றுதான் கருதுகிறது. ஏனென்
றால், சித்த வைத்தியத்திலே நல்ல மருந்துகள் இருக்கின்றன.
ஆகவே, தேவையினுடைய அடிப்படையிலே மருந்தகங்களை,
மருத்துவ மனைகளை அமைக்கவேண்டுமென்பது அரசின் எண்
ணம். சித்த மருந்தகங்களை மாற்றி அமைப்பது என்பது
இயலாத காரியமாக இருக்கிறது.

அதுமட்டுமல்ல, இப்பொழுது பஞ்சாயத்து யூனியன்
டிஸ்பென்சரீஸ் நடைமுறைப்படுத்துகிறார்கள். அதற்கு
Payment of maintenance grant Rs. 5,400 ஆண்டுதோறும்
தருகிறோம். அதை நிறுத்தி வைக்க வேண்டாம் என்றுதான்
சொல்லியிருக்கிறோம், அதை அரசாங்கம் கொடுக்க வேண்டாம்
என்று அந்த ஆணையிலே நாம் எந்த மாறுதலும் செய்யவில்லை.

அதோடு Mini Health Centres, 264—இதுவரையில்
துவக்கியிருக்கிறோம். அதிலே ரூ. 9,000 மத்திய அரசாங்கமும்
ரூ. 9,000 வாலண்டரி ஏஜன்ஸீஸும் மாநில அரசாங்கம்
ரூ. 9,000 ஆக ஆண்டுதோறும் ரூ. 27,000 செலவிலே 264 மினி
ஹெல்த் சென்டர்களை ஆரம்பித்திருக்கிறோம். அங்கே இருக்
கிற வாலன்டரி ஏஜன்ஸீஸ் கொஞ்சம் முயற்சி எடுத்துக் கொள்ள
வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அதே மாதிரி
மற்ற உறுப்பினர்கள் அங்கங்கு உள்ள வாலன்டரி ஏஜன்ஸிஸ்
மூலமாக, அவர்களே முயற்சி எடுத்துக் கொண்டு ஆரம்பிப்பார்
களானால், பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்சரீசை விட மிகச்
சிறப்பான வகையில், இது பயன் அளிக்கும் என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலே நடைபெற்றுக் கொண்டு
வருகிற சித்த மருந்தகங்களும் ஆயுர்வேத மருந்தகங்களும்
தொடர்ந்து நடக்கட்டும். ஆனால், நான் அமைச்சரிடம் விளக்கம்
கேட்க விரும்புவது, ஊராட்சி ஒன்றியங்கள், அலோபதி மருந்
தகங்களைத் தாங்களாகவே திறக்க முன் வருவார்களானால் அரசு
உதவ முன் வருமா என்பதுதான் . ஊராட்சி ஒன்றியங்களுக்கு
மானியமாக ரூ. 5,400 தொடர்ந்து கொடுப்பதாக அமைச்சர்
அவர்கள் சொல்கிறார்கள். அந்தத் தொகை என்றைக்கோ
ஏதோ ஒரு காலத்திலே, எப்பொழுதோ நிர்ணயிக்கப்பட்ட
தொகை. தற்போது ஊராட்சி ஒன்றியங்கள் நிதிப் பற்றாக்குறை

யுடன் இருந்து வருவதால், அந்தத் தொகையை உயர்த்திக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார் களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே வெளியிடப்பட்ட இன்னொரு ஆணையை நான் படித்துக் காட்டினால் மாண்புமிகு உறுப்பினருக்குக் கொஞ்சம் மகிழ்ச்சி தரும் என்று நம்புகிறேன்.

Panchayat Unions will be permitted to open new regular allopathy dispensaries in future and financial assistance from the State Government up to Rs. 100 for the maintenance of these dispensaries will be granted depending upon the financial position of the Panchayat. இந்த ஆணை 7—1—1977 அன்று பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆணையிலே எந்தவிதமான மாறுதலும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### ஆரம்ப சுகாதார நிலையம்.

111—(*வினா எண் 562)—திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், வடகாடு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, புதுக்கோட்டை மாவட்டத்திலே வடகாடு கிராமம், திருவலம் ஒன்றியத்தைச் சேர்ந்தது. அந்தக் கிராமத்திலே மட் டும் 8,000 ஜனத்தொகை இருக்கிறது. அதைச் சுற்றியிருக்கிற கிராமங்களைச் சேர்த்து 20,000 ஜனத் தொகை இருக்கிறது. அப்படியிருந்தும் 1977 ஆம் ஆண்டிலிருந்து அங்கு மருத்துவ மனை வேண்டுமென்ற கோரிக்கையை நாங்கள் வைத்துக் கொண் டிருக்கிறோம். அப்பொழுது நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தேன். இதுவரை அரசாங்கம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது அமைச்சர் பதிலிலிருந்து தெரிய வரு கிறது. இனி மேலாவது அந்த மக்களுக்கு வசதி செய்து தருகின்ற வகையிலே மருத்துவ மனை அமைக்க அரசு முன்வருமா ? அதற் கான பங்குத் தொகை கட்டவும் இடம் ஒதுக்கி, கட்டிடம் எல்லாம் நாங்கள் தரத் தயாராக இருக்கிறோம் என்பதையும் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.





மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கிராமத்தைப் பொறுத்த வரையில் 3,000 ஜனத்தொகை கொண்ட கிராமமாக இருக்கிறது. பஞ்சாயத்து ஒன்றியத்திலே 1,20,000 ஜனத்தொகை இருக் கிறது. கீரமங்கலம் 15 கிலோமீட்டர் தூரத்திலே உள்ளது. அதேபோல் ஆலங்குடி 8 கிலோ மீட்டர் தூரத்திலே உள்ளது. அங்கே மருத்துவ மனைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் இப்பொழுது சட்டமன்றத்திலே வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். இடத்தைக் கொடுக்கிறோம், பணம் கொடுக்கிறோம், என்று. அவர்கள் எழுத்து மூலமாகக் கொடுத் தால் அரசாங்கம் நிச்சயமாகக் கவனிக்கும் என்பதை நான் வாக்குறுதியாகச் சொல்ல விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

திரு. த. புஷ்பராசு : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலில் அங்கே ஜனத்தொகை 3,000 என்று சொன்னார்கள். இப்போது நடைபெற்ற தேர்தலிலே அங்கே வாக்களித்த மக்கள் தொகையே 3,000-க்கு மேற்பட் டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் சொல்கிற கணக்கு பழைய விவரமாக இருக்கும் என்று கருதுகிறேன். அது என்னுடைய சொந்த கிராமம் என்ற முறையில் சொல்கிறேன் இதற்கு முன்பே அங்கே மருத்துவமனை கட்டுவதற்கு தேவையான இடம், மக்களுடைய பொதுப்பணம் எல்லாம் கொடுப்பதாக லெட்டர் மூலம் வாக்குறுதி அளித்திருக்கிறோம். தேவை என்றால் மீண்டும் அத்தகைய வாக்குறுதி கொடுக்க தயாராக இருக்கிறோம். ஆகையால் அரசு விரைவிலே அங்கே மருத்துவமனை அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நல்ல முறை யில் கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. பாலுசாமி : தலைவரவர்களே, புதிதாக ஆரம்பிக் கப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு புது கட்டிட வசதி செய்து கொடுக்க ஏதாவது காலவரையறை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பிரைமரி ஹெல்த்சென்டர்களைப் பொறுத்தவரையில் வேகமாக கட்டிடங்களைக் கட்டி முடித்து, ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுவான பிரச்சனையைக் கேட்டிருக் கிறார்கள். இந்தக் கேள்வி மூலக்கேள்விக்கு சம்பந்தம் இல்லை என்றாலும் வெகு விரைவில் கட்டிடம் கட்டி முடிக்கப்படும், பல ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கான கட்டிட வேலை தொடங்கப்பட்டு, வேலை நடந்துகொண்டிருக்கிறது. என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1985 ஜூன் 4

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவரவர்களே, ஆரம்பச்
சுகாதார நிலையங்களில் இப்போது 'இன் பேஷன்ட்' இருக்கக்
கூடியவை மிகக் குறைந்த அளவில் இருக்கின்றன. எங்களுடைய
கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்குள்ள
ஆரம்பச் சுகாதார நிலையங்கள் எல்லாவற்றிலும் 'அவுட்
பேஷன்ட்ஸ்' வந்துபோகக்கூடிய அளவில்தான் இருக்கின்றன.
குறிப்பாக என்னுடைய தொகுதியில் கருங்கல் ஆரம்பச் சுகாதார
நிலையம் 1960-ல் ஆரம்பிக்கப்பட்டது. இப்போது அங்கே
கிட்டத்தட்ட ஆயிரம் அவுட் பேஸன்ட்ஸ் வந்து போகக்கூடிய
அளவில் இருக்கிறது. நோயாளிகள் தங்கி சிகிச்சைப் பெற
வேண்டுமென்றால் நாகர்கோவில், குழித்துறை மருத்துவ மனை
களுக்குச் செல்ல வேண்டும். கிட்டத்தட்ட 25 கிலோ மீட்டர்,
15 கிலோ மீட்டர் தூரத்தில் அந்த மருத்துவ மனைகள் உள்ளன.
ஆயிரத்திற்கு மேற்பட்ட நோயாளிகள் அவுட் பேஷன்டுகளாக
வருகிற காரணத்தால் அங்கே படுக்கை வசதி அமைத்துத் தந்து,
நவீன கருவிகள் வைத்து சிகிச்சை செய்ய அரசு முன்வருமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு யோசனையாகச் சொல்
கிறேன். இது மூலக் கேள்விக்கு தொடர்பு இல்லை. இதைத்
தனிக் கேள்வியக எழுத்து மூலமாக, ஒரு ஸ்டார்டு கொஸ்டி
னாக போட்டிருந்தால் அவர்களுக்கு விவரமான பதில் கிடைத்
திருக்கும். பொதுவாக கன்னியாகுமரி மாவட்டத்தில் எல்லா
ஆரம்பச் சுகாதார நிலையங்களும் நல்ல முறையில் செயல்படு
கின்றன. நானே நேரடியாக பல ஆரம்பச் சுகாதார நிலையங்
களைப் பார்த்திருக்கிறேன். எல்லாவற்றையும் தொகுத்து விவர
மான பதில் கொடுக்க மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு
ஸ்டார்டு கொஸ்டின் போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. வெங்கடாசலம் : தலைவரவர்களே, புதுக்கோட்டை
மாவட்டம் வடகாடு கிராமத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம்
அமைப்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. புஷ்பராஜ் அவர்
கள் கேட்டார்கள். நானும் அதே ஊரைச் சேர்ந்தவன்தான்.
1977-ல் அவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது இதே
கோரிக்கையை இந்த மன்றத்தில் வைத்து ஆரம்பச் சுகாதார
நிலையம் கட்டித் தருவதாக அரசு ஒப்புதல் கொடுத்துள்ளதாகச்
சொன்னார்கள். இப்போதும் அதே கேள்வியைக் கேட்டிருக்
கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. புஷ்பராஜ் அவர்கள்
சொன்னதைப்போல வடகாடு கிராமத்தில் இந்த ஆண்டு ஒட்டுச்
சாவடியில் வாக்காளர்கள் எண்ணிக்கை 5,063. மக்கள் தொகை
3,000 என்பது பழைய கணக்காக இருக்கலாம். அதைப்போன்று
கீரமங்கலம், ஆலங்குடியில் அரசு மருத்துவமனை இருப்பதாகச்
சொல்லியிருக்கிறார்கள். வடகாடு கிராமத்தைச் சுற்றியுள்ள
பகுதியில் ஏறத்தாழ 20,000 அல்லது 25,000 வாக்காளர்கள்
இருக்கிறார்கள். அங்கே அரசு மருத்துவமனை இல்லாதது



1985 ஜூன் 4]

ஒரு பெரும் குறையாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் சொன்னதைப்போல் வடகாடு கிராமத்தில் ஆரம்பச்
சுகாதார நிலையம் அமைக்க இடமும் தயாராக இருக்கிறது.
6 ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அரசுக்கு எவ்வளவு
தொகை கட்ட வேண்டுமென்றாலும் கட்டுவதற்குத் தயாராக
இருக்கிறார்கள். அதைப்போன்று ஆலங்குடி அருகில் அறந்
தாங்கியில் செனட்டூர் ஒன்றியத்தில் ஆரம்பச் சுகாதார நிலையத்
திற்காக 25,000 ரூபாய் கட்டி, இடமும் ஒதுக்கியிருக்கிறார்கள்.
அதைப்போல ஆலங்குடி தொகுதியில் அறந்தாங்கி ஒன்றியத்தைச்
சேர்ந்த மரமடக்கியில் 87,500 ரூபாய் ஒதுக்கப்பட்டு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைச் சுருக்க
மாகக் கேட்க வேண்டும்.

திரு. அ. வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, மரமடக்கி
ஊராட்சியில் 87,500 ரூபாய் ஒதுக்கப்பட்டு ஒன்றியத்தினுடைய
வளர்ச்சி நிதியிலிருந்து 12,500 ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்
கிறது. ஆக மொத்தம் ஒரு இலட்சம் ரூபாய் நிதி தயார் நிலையில்
இருக்கின்றது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த
ஆண்டு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க ஆவன செய்வார்
களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத்
தலைவர் அவர்களே, வடகாடு கிராமத்தைப் பொறுத்தவரையில்
மாண்புமிகு உறுப்பினர் திரு. புஷ்பராஜ் அவர்களும் ,மாண்புமிகு
திரு. வெங்கடாசலம் அவர்களும் சேர்ந்து தீவிர முயற்சி எடுத்துக்
கொள்வார்களேயானால் — அவ்வாறு முயற்சி எடுத்துக்கொள்
வார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது—இன்னும் சிறப்பான
வகையில் வெகு வேகமாக அந்தப் பணியை நாம் துவக்கி வைக்க
லாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிப்பதைப்
பொறுத்தவரையில் என்ன மக்கள் தொகை அடிப்படையில்
ஆரம்பிக்கப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.
உதாரணமாகச் சொல்கிறேன். ஒரு இலட்சம் பேருக்கு ஒரு
ஆரம்ப சுகாதார நிலையம் என்றிருந்தால் 50 ஆயிரம் பேர்
களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில்
இந்த நடப்பாண்டில் அதாவது 1985-86லேயே துவக்கப்படுமா ?
அதைப்பற்றி அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத்
தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பொறுத்த
வரையில் இப்போது 436 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்
கின்றன. ஒன்றியத்திற்கு ஒன்று என்று இருந்ததை மாற்றி

யமைத்து கூடுதலாக 50 இடங்களில் நாம் ஆரம்பித்திருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் 1985-86-ல் 20 Subsidiary health centres under Part II Scheme under minimum needs programme என்ற அதையும் துவக்க இருக்கிறோம். அதுமட்டுமல்ல. 30 ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றியமைத்திருக்கிறோம். ஒரு ஒன்றியத்திற்கு ஒன்று என்று இருந்ததை மாற்றியமைத்து, ஒரு ஒன்றியத்திற்கு இரண்டு என்று 7-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் அதைச் செய்ய வேண்டும் என்று மத்திய அரசு பரிந்துரை தந்திருக்கிறது. ஆனால் பல மாநில சர்க்கார்கள் அதற்கான முயற்சியைக் கூட எடுத்துக்கொள்ளவில்லை. நாம் ஏற்கனவே 50 கட்டி இருக்கிறோம். இன்னும் 7-வது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள்ளாக முனைப்பாக இதைச் செய்து முடிக்கவாம் என்று நான் கருதுகிறேன்.

திரு. மு. ஜான் வின்செண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஜனத்தொகை அடிப்படையில் செயல்படுத்தப் படுவது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவ்வாறு செயல்படுத்தப்படுகின்றபோது ஒரு நகரம் என்று சொன் னால் அது அந்த நகரத்தினுடைய மக்கள் தொகையை மட்டும் கணக்கில் எடுத்துக்கொள்வதா அல்லது சுற்றுவட்டாரத்தில் இருக் கின்ற கிராமங்களும் சேர்த்து கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். இந்த அடிப்படையில் வருகிற ஐந்தாண்டுத் திட்டத்தில் மேலும் கூடுதலாக எத்தனை சேர்க்கப் படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஜனத்தொகையைப் பொறுத்தவரையில் கிராமப் பகுதிகளில் ஒன்றியத்தில் இருக்கக் கூடிய ஜனத்தொகையை அடிப்படையாக வைத்துக்கொண்டுதான் நான் அந்தக் கணக்கைச் சொன்னேன். இன்னொரு குறிப்பையும் சொல்ல விரும்புகிறேன். மலைப் பிரதேசங்களைப் பொறுத்த வரையில் 30 ஆயிரம் ஜனத்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்று 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிடப் பட்டு இருக்கிறது. அந்தக் கருத்தையும் கொடுத்திருக்கிறார்கள்.

## தஞ்சை மாவட்டத்தில் நெல் கொள்முதல்

112—(*வினா எண் 135)—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்ட நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்த நெல் எடுத்துச் செல்லாமல் தேங்கியிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன





மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) தஞ்சை மாவட்டத்தில் நெல் கொள்முதல் நிலையங்களில் தேங்கி இருக்கும் நெல்லை அந்த மாவட்டத்தில் சேமித்து வைப்பதற்கு போதிய கிடங்கு வசதி இல்லாமையால் மேற்படி நெல்லை அடுத்த மாவட்டங்களுக்கு லாரிகள் மற்றும் வேகன்கள் மூலமாக எடுத்துச் சென்று சேமித்து வைக்கப்படுகிறது. மேலும் போதிய கிடங்கு வசதிகளை ஏற்படுத்த தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் மூலமாகவும், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் மூலமாகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேள்வியைப் போட்ட காலம் நெல்லிலே தண்ணீர் தேங்கி இருந்த காலம். இப்போது ஜூன் மாதம் தண்ணீர் வருமா என்று எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருக்கின்ற நேரத்தில் இந்தக் கேள்வி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது. எனவே, கடந்த காலம் எப்படி இருந்தாலும் ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகள் குறுவை அறுவடை செய்கிறபோதும் சரி, சம்பா அறுவடை செய்கிற காலத்திலும் சரி, நெல் கொள்முதல் செய் கின்றபோது ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான மூட்டை நெல் தேங்கியிருப்பதால் வியாபாரிகளாலும் நெல் கொள்முதல் செய்ய முடியவில்லை : மழை வந்தால் அரசு கொள்முதல் செய்த நெல்லுக்கும் சேதம் ஏற்படுகின்றது. இப்படி விவசாயி களுக்கும் நஷ்டம் ; அரசினுடைய பணத்திற்கும் நஷ்டம் ஏற் படுகின்றது. இந்த நிலைமைகளை முழுமையாகப் போக்க வேண்டும் என்றால் அடுத்த ஆண்டிலிருந்தாவது நெல்லை சேமிக்கக்கூடிய கிடங்குகளை ஏற்படுத்த வேண்டும். கீழ்த் தஞ்சைப் பகுதியில் அதிகமாகப் பாதிக்கப்படுகின்ற நிலை வளர்ந்துகொண்டு வருகிறது.

(முற்பகல் 10–20)

ஆகவே, தஞ்சை மாவட்டம் முழுவதிலும் நெல்லை பாது காக்கக் கூடிய கிடங்குகளில் அரசு அதிகமாக கவனம் செலுத்தி ஒரு யூனியனுக்கு ஒரு கிடங்கு வீதம் கட்டி, எதிர்காலத்திலாவது பாதுகாக்க வேண்டும். விவசாயிகள் நெல்லைக் கொண்டு வந் தால் உடனுக்குடன் நெல்கொள் முதல் பண்ணக் கூடிய அளவுக்கு அரசு துரிதமாக இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் எதிர்காலத் தில் ஈடுபடுவார்களா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல இப்பொழுது அந்தப் பிரச்சினை இல்லை. என்றாலும், வருகிற 1985-86-வது ஆண்டில் 5 இடங்களில் ஒவ்வொன்றும் 2 இலட்சம் வீதம் 10 இலட்சம் ரூபாய் அளவில் சேமிப்பு வசதியுடன் கூடிய கொள்முதல் நிலையங்களை தஞ்சை மாவட்டத்தில் இந்த அரசு கட்ட இருக்கிறது. அது தவிர, வருகிற 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சுமார் 24 ஆயிரம் மெட்ரிக்

டன் கொள்முதல் திறன் கொண்ட சேமிப்பு நிலையத்தை தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் 2 கோடியே 23 லட்ச, ரூபாய் மதிப்பீட்டிலே பல இடங்களில் தஞ்சை மாவட்டத்திலே கட்டயிருக்கிறது.

திரு. பொ. உத்திராபதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன வரைக்கும் சந்தோஷம். ஆனால் இப்பொழுது கட்டப்படுகின்ற கட்டிடங்கள் கூட, இந்த குறுவை பருவ காலங்களில் விவசாயிகளின் தேவைக்கு ஏற்ற அளவிற்கு இருக்காது என்றும், இந்த 1985-86 ஆம் ஆண்டில் பூரணமாக பாதுகாக்க முடியாத நிலைதான் இருக்கும் என்றும் நினைக்கிறேன். இந்த நிலையில் அரசு சம்பந்தப்பட்ட மார்க்கெட்டிங் சொசைட்டி அல்லது அரசுத் துறையின் பல பிரிவினர்கள் கட்டி வைத்திருக்கின்ற கட்டிடங்கள் சும்மா தான் இருக்கின்றன. அப்படிப்பட்ட கட்டிடங்களிலே உடனடியாக தேவை ஏற்படும்போது, முழுமையான அளவு நெல்லை சேமித்து வைப்பதற்கு அரசு யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திடம் ஏறக்குறைய 66,549 மெட்ரிக் டன் கொள் அளவு வைக்கக் கூடிய கிடங்குகள் இருக்கின்றன. தமிழ்நாடு சேமிப்புக் கழக நிறுவனத்திடம் 10 ஆயிரம் மெட்ரிக் டன் கொள் முதல் அளவு கொள்ளக்கூடிய கிடங்குகள் இருக்கின்றன. கூட்டுறவுத் துறையிலே 68,365 மெட்ரிக் டன் அளவுக்கு சேமித்து வைக்க இடம் இருக்கிறது. இது தவிர, மத்திய சேமிப்பு கிடங்குகளில் 1 இலட்சத்து 31,649 மெட்ரிக் டன் அளவுக்கு சேமிக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் 4 இலட்சம் மெட்ரிக் டன் லெவி ஒவ்வொரு ஆண்டுக்கும் டார்ஜெட் ஆகும். கூடுதலாக வருகிறபோது மற்ற மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல பல வசதிகள் ஏற்கெனவே செய்யப்பட்டிருக்கின்றன. தேவைப்படும்போது கோவில்களில் கூட சேமித்து வைக்கப்பட்டு கெட்டுப் போகாமல் பாதுகாத்து வைத்திருக்கின்றனர். தொடர்ந்து அந்த நடைமுறைகள் பின்பற்றப்படும்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையில் உள்ள உணவு தானிய சேமிப்புக் கிடங்குகளில் நெல்லை வைத்து பாதுகாப்பதற்கு போதுமான இடம் இல்லாமல் மேல்நிலை பள்ளிக் கட்டிடத்தில் கீத்துக் கொட்டகை போட்டு வைத்திருந்தார்கள். அது கடந்த பிப்ரவரி மாதம் பெய்த மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, இப்பொழுது தார்பாய் போட்டு மூடப்பட்டு ஒரு திடலில் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலைமைகளை தவிர்ப்பதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தது போல வரவிருக்கும் 5 கிடங்குகளில் ஒன்றை, மதுக்கூர் ஒன்றியத்தில் கட்டித் தர ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னது போல தஞ்சை மாவட்டத்திலே பல இடங்களில் சேமிப்புக் கிடங்குகள் கட்டப்பட இருக்கின்றன. அப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல அவருடைய கோரிக்கையும் கவனிக்கப்படும்.

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் அரசே கொள்முதல் செய்வதால் அரசின் சார்பாக ஒரு கொள்முதல் நிலையம் ஒன்று வேண்டும் என்றும், அவைகளும் புதியதாக கட்டப்பட வேண்டும் என்றும் கோரிக்கைகள் வருகின்றன. குறிப்பாக தஞ்சை மாவட்டம் மழையால் பாதிக்கப்படுகிறபோது, இதற்கென்று சிறப்பாக பிரத்தியேகமாக மாநில அரசு, உலக வங்கியிடமிருந்து நிதி பெற்று இப்படிப்பட்ட சேமிப்புக் கிடங்குகளை கட்டுவதற்கு முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற திட்டங்கள் எதுவும் அரசினுடைய பரிசிலனையில் இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை அரசு கவனத்தில் எடுத்து பரிசீலிக்கும்.

### பாலிஸ்டர் கைத்தறித்துணி உற்பத்தி.

(113—*வினா எண் 102) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் '' பாலிஸ்டர் '' கைத்தறித் துணிகள் எங்கெங்கு உற்பத்தி செய்யப்படுகிறது ?

(ஆ) பாலிஸ்டர் ரகம் நெய்வதற்கு உள்ள கூலியை உயர்த்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (அ) தமிழ்நாட்டில், மதுரை, காமராஜர் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில் பாலியஸ்டர் சட்டைத் துணிகளும், கோவை மாவட்டத்தில் பாலியஸ்டர் சேலைகளும், சேலம் மற்றும் கன்னியாகுமரி பகுதிகளில் பாலியஸ்டர் வேட்டிகளும், பெரியார் மாவட்டத்தில் பாலியஸ்டர் சூட்டிங் ரகங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

(ஆ) பாலியஸ்டர் ரகத் துணிகளுக்கு கூலி ஆரம்ப காலத்தில் சட்டைத் துணி ரகங்களுக்கு மீட்டர் ஒன்றுக்கு ரூபாய் 2.25 என்று இருந்தது தற்போது ரூபாய் 2.75-ம், சேலைத் துணிகள் ரகங்களுக்கு மீட்டர் ஒன்றுக்கு ஆரம்ப காலத்தில் ரூபாய் 3.00 இருந்ததை தற்போது ரூபாய் 4.00 முதல்

ரூபாய் 4.25 வரையும், வேட்டி ரகங்களுக்கு வேட்டி ஒன்றுக்கு முதலில் ரூபாய் 12.75 இருந்ததை தற்போது ரூபாய் 19.00 என்றும், சூட்டிங் ரகங்களுக்கு மீட்டர் ஒன்றுக்கு முதலில் ரூபாய் 5.00 இருந்ததை தற்போது ரூபாய் 7.30 வீதமும் அளிக்கப்படுகிறது. இப்போது கூலியை உயர்த்துவதற்கு உத்தேசமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, பாலியஸ்டர் ரகம் நெய்வதற்கு ஒரு தறிக்கு காசுக்கடன் என்று மத்திய வங்கியிலிருந்து 10 ஆயிரம் ரூபாய் தருகிறார்கள். பாலியஸ்டர் ரகம் நெய்வது நெசவாளர்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கிற காரணத்தால் மத்திய வங்கியிலிருந்து தறிக்கு கொடுக்கும் 10 ஆயிரம் ரூபாயை 15 ஆயிரம் ரூபாயாக உயர்த்துவதற்கும், இங்கே பாலியஸ்டர் நெய்வதற்கு நூல்கள் கிடைப்பதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிற காரணத்தால் பாலியஸ்டர் நூல் தயாரிக்கும் நூற்பாலை ஒன்று தமிழகத்தில் நிறுவுவதற்கும் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, சமீபத்திலே தான் பாலியஸ்டர் நூல்களுக்கு கொடுக்கிற கடனை உயர்த்தலாமா என்று யோசிக்கப்பட்டு, உயர்த்தத் தேவையில்லை என்று அரசு முடிவு எடுத்திருக்கிறது. பாலியஸ்டர் இழை உற்பத்திக்காக தமிழகத்திலே புதியதாக ஒரு ஆலை துவங்க வேண்டுமென்று மத்திய அரசை கேட்கிற குறிப்பு அரசின் கவனத்திலே இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, பாலியஸ்டர் ரகம் எந்தெந்த ஊர்களில், எந்தெந்த மாவட்டங்களில், எந்தெந்த கூட்டுறவுச் சங்கங்களில் நல்ல முறையில் நெய்கிறார்கள் என்று டைரக்டர் ஆப் ஹாண்ட்லூம்ஸிலிருந்து சர்டிபிகேட் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் கோவாப்டெக்ஸ் அந்த ஊர்களுக்கும், அந்த நெசவாளர்கள் சங்கங்களுக்கும் இந்த ரகங்களை நெய்ய கொடுக்காமல், தரம் குறைந்து நெய்கிற ஊர்களுக்கும், தரம் குறைந்து நெய்கிற கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கொடுக்கிற காரணத்தால், அவர்கள் இழை குறைவாகவும், பாலியஸ்டர் நூல்களுக்கு பதிலாக வேறு நூல்களைப் போட்டும் நெய்வதால், பம்பாயில் புராசசிங் செய்யும்போது ஆரம்ப காலத்திலிருந்து லட்சக்கணக்கில், கோடிக் கணக்கில் கோவாப்டெக்சிற்கு நஷ்டமாகி இருப்பதை அரசு அறியுமா ? இதைப் போக்க, வருங்காலத்தில் இவ்வாறு தவறு நிகழாமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ? பாலியஸ்டர் ரகம் புராசசிங் செய்வதற்கு தமிழ் நாட்டிலேயே வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப் போல குறைபாடுகள் அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை.





மாண்புமிகு உறுப்பினர் தக்க ஆதாரத்துடன் குறைகளைச் சொன்னால் சர்க்கார் நடவடிக்கை எடுக்கும். பாலியஸ்டர் துணிகளை புராசஸ் செய்வதற்கு ஈரோட்டில் புதியதாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மேலும், புதியதாக நவீனமான புராசசிங் ஆலை துவங்குவது நடவடிக்கையில் இருக்கிறது.

திரு. க. பாரமலை : தலைவர் அவர்களே, பாலியஸ்டர் ரகத் துணிகளை நெய்வதற்கு ஆரம்பத்தில் கொடுத்த கூலியையும், தற்போது கொடுக்கிற கூலியையும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆரம்பகாலத்தில் என்றால் எந்தக் காலத்திலிருந்து அந்தக் கூலி கொடுக்கப்படுகிறது ? தற்போது எப்போதிலிருந்து புதிய திருத்தப்பட்ட வீதத்தில் கூலி கொடுக்கப்படுகிறது ? தற்போது இருக்கிற விலைவாசியை அடிப்படையாகக் கொண்டு இதை மாற்றிக் கொடுப்பதற்கு அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு பழைய கூலி வீதம் நிர்ணயிக்கப்பட்டது. இப்போது புதிய வீதம் நான் அறிவித்தபடி அளிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (அ) அன்றாடம் குறித்தபடி அலுவல்களை எடுத்து முடிக்க ஒத்துழைப்புக் கோருதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

இப்பேரவைக் கூட்டத் தொடர் சுமார் ஒரு மாத காலத்திற்கு தொடர்ந்து நடைபெறலாம். வினாப்பட்டியல்கள் முன்னதாகவே அச்சடித்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர்களுக்கும், மற்றும் துறைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. இன்று முதல் 7-6-1985 முடிய எந்தெந்த மானியக் கோரிக்கைகள் என்றென்று எடுத்துக்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்தாகிவிட்டது. மேலும் அலுவல் ஆய்வுக் குழுவில் மற்ற மானியக் கோரிக்கைகள் என்றென்று எடுத்துக் கொள்ளப்பெறும் என்பது தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்பெறும்.

(முற்பகல் 10–30)

எனவே, பேரவைப் பணிகளுக்கு முதலிடம் கொடுத்து அந்தந்த நாட்களில் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளைத் தள்ளிப் போடாது எடுத்து முடிக்க மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(ஆ) உறுப்பினர் திரு. பிரணவநாதன் கைது செய்யப்பெற்று விடுதலையானது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ''18–5–1985-ஆம் தேதியன்று கைது செய்யப்பட்ட கடலாடி தொகுதி சட்டமன்ற உறுப்பினரான திரு. ஏ. பிரணவநாதன் அவர்கள், 1–6–1985-ஆம் தேதியன்று விடுவிக்கப்பட்டார் என்று இராமநாதபுரம் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடமிருந்து, நேற்று (3–6–1985) மாலை செய்தி வரப்பெற்றுள்ளது''.

(இ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கிணங்க பேரவையின் நிகழ்ச்சிகள் கீழ்க் கண்டவாறு நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

| | | |
|---|---|---|
| 4–6–1985 செவ்வாய் | .. | எண். 20— வேளாண்மை<br>எண். 45—குடிநீர் வழங்கல்<br>எண். 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. |
| 5–6–1985 புதன் | .. | அரசினர் சட்ட முன்வடிவுகள்— ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும். |
| 6–6–1985 வியாழன் | .. | எண். 3— மோட்டார் வண்டிகள் சட்டங்கள்— நிர்வாகம்.<br>எண். 39— சாலைகளும் பாலங்களும்<br>எண். 40— சாலைப் போக்குவரத்துப் பணிகளும்— கப்பல் போக்குவரத்தும்.<br>எண். 54— சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.<br>எண். 55— சாலைப் போக்குவரத்துப் பணிகள்— கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. |





| | | |
|---|---|---|
| 7–6–1985 வெள்ளி | .. | எண். 5—முத்திரைத்தாள்கள் நிர்வாகம்.<br>எண். 6—பத்திரப் பதிவு<br>எண். 10—பால் வழங்கு திட்டங்கள்<br>எண். 22— கால்நடை வளர்ப்பு. |
| 8–6–1985 சனி | .. | விடுமுறை. |
| 9–6–1985 ஞாயிறு | .. | விடுமுறை. |
| 10–6–1985 திங்கள் | .. | எண். 18 – மருத்துவம்.<br>எண். 19 – பொதுச் சுகாதாரம். |
| 11–6–1985 செவ்வாய் | .. | எண். 1 – நிலவரித்துறை.<br>எண். 11 – மாவட்ட நிர்வாகம்.<br>எண். 41 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.<br>எண். 42 – ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும்.<br>எண். 43 – பல்வகை.<br>எண். 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.<br>எண். 58—பல்வகை மூலதனச் செலவு.<br>எண். 59—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும். |
| 12–6–1985 புதன் | .. | எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும். |
| 13–6–1985 வியாழன் | .. | எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்.<br>எண். 25—சின்கோனா.<br>எண். 45—காட்டுவளத்துறை.<br>எண். 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்.<br>எண். 56—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு. |
| 14–6–1985 வெள்ளி | .. | எண். 24—தொழில்கள்.<br>எண். 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. |

D 2 A 126—7

[பேரவைத் தலைவர்] [1985 ஜூன் 4

| | | |
|---|---|---|
| 15–6–1985 சனி | .. | விடுமுறை. |
| 16–5–1985 ஞாயிறு | .. | விடுமுறை. |
| 17–6–1985 திங்கள் | .. | எண். 35—நுகர் பொருள் வழங்கல் |
| 18–6–1985 செவ்வாய் | .. | எண். 26—கைத்தறியும், நெசவுத் தொழிலும். எண். 27—கதர்த் தொழில் |
| 19–6–1985 புதன் | .. | எண். 29—தொழிலாளர் நலனும், தொழிற் சாலைகளும். |
| 20–6–1985 வியாழன் | .. | ரம்சான் விடுமுறை. |
| 21–6–1985 வெள்ளி | .. | பேரவைக் கூட்டம் இல்லை. |
| 22–6–1985 சனி | .. | விடுமுறை. |
| 23–6–1985 ஞாயிறு | .. | விடுமுறை. |

மற்ற மானியக் கோரிக்கைகள் குறித்த அறிவிப்பு பின்னர் வரும். பேரவை வழக்கம்போல் காலை 9.00 மணிக்குக் கூடும்.

அரசு அலுவலகங்கள் வாரத்தில் 5 நாட்களே நடைபெறும் என்றும், எல்லா ஞாயிற்றுக்கிழமைகளைப் போல எல்லா சனிக்கிழமைகளும் அரசு அலுவலகங்களுக்கு விடுமுறை நாட்க ளாக இருக்கும் என்றும் அரசு அறிவித்துள்ளதையொட்டி, பேரவைக் கூட்டமும் வாரத்தில் 5 நாட்கள் மட்டுமே நடை பெறும், ஒவ்வொரு வாரமும் சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் பேரவைக் கூட்டம் நடைபெறாது.

மேலும், தற்போது வினாப்பட்டியல்களை முன்னதாகவே அச்சிட்டுவிடுவதால், 8–6–1985-ஆம் நாளுக்கான வினாப் பட்டியல் அச்சடிக்கப்பட்டுவிட்ட காரணத்தால், அந்தத் தேதி யிட்ட 174 முதல் 193 முடிய எண்ணுள்ள வினாக்கள் 18–6–1985 அன்று எடுத்துக் கொள்ளப்பெறும்.



3. சட்டமன்றக் கட்சிகளுக்கு அரசினர் தோட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்த அறைகளை சட்டமன்றச் செயலகம் கையகப் படுத்திக்கொண்டது.

*திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **நேற்றைய** தினம் இந்த அவையிலே எதிர்க்கட்சி வரிசையிலே உள்ள அணிகளுடைய உரிமை எப்படி பாதிக்கப் பட்டு இருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னோம். சட்ட மன்ற அலுவலகம், எதிர்கட்சிகளுடைய அணிகளுடைய அறை களை கையகப்படுத்த எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளின் கார ணமாக அந்த உரிமை பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை, இங்கே உள்ள 4, 5 கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் வலியுறுத்திப் பேசினார்கள். அவைமுன்னவர் அவர்களும், எதிர்ககட்சித் தலைவர் அவர்களும் இடையிலே சில கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள்.

சட்டமன்றப் பேரவையினுடைய அலுவல் ஆய்வுக் குழு கூட் டத்திலே இதுபற்றி கலந்து பேசுவதன் மூலமாக ஒரு தகுந்த முடிவை, ஏற்ற முடிவை எடுக்கலாம் என்று அவர்கள் சொன்ன ஆலோசனையை தாங்களும் ஏற்றுக்கொண்டு, அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தை 11–30 மணியளவில் கூட்டினீர்கள். இந்த அவை தொடர்ந்து நடைபெறவும், இடையில் அலுவல் ஆய்வுக் குழுவில் இந்தப் பிரச்சனையைப் பற்றி பேசி முடிவு எடுக்கலாம் என்றும் தாங்கள் அழைத்து, நாங்கள் அத்தனை பேரும் அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தில் கலந்து கொண்டோம். ஏறக்குறைய 30, 40 நிமிடங்கள் பல்வேறு கோணங்களில் எதிர்க்கட்சித் தலை வர் அவர்களும், அவை முன்னவர் அவர்களும், இந்திய யூனியன் முஸ்லீம் கட்சியினுடைய தலைவர் அப்துல் சமத் சாகிப் அவர் களும் நானும், தாங்களுமாக விவாதித்தோம். இறுதியில், ஏற்கனவே இருந்த நிலை 'ஸ்டேடஸ்கோ, நிரந்தரமாக நீடிக் கப்படவேண்டும் என்று இல்லா விட்டாலும், தற்காலிகமாக இரண்டு மூன்று மாதங்களுக்காவது ஸ்டேடஸ்கோ நீடிக்கப்படு வது ஒரு சுமூக நிலையை உருவாக்க அவசியமாகும்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்று இந்தப் பிரச் சினை முடிந்து விட்டது ; அலுவல் ஆய்வுக் குழுவில் என் முடி வைத் தெரிவித்தவுடன் நீங்கள் வெளியே போய்விட்டீர்கள். இன்று அவைக்கு வந்து அதுபற்றி சொல்லியிருக்கலாம் ; அப்படிச் செய்யவில்லை. வெளியே போய் தாங்கள் கொடுத்து இருக்கிற அறிக்கைகளை எல்லாம் பார்த்தேன். நீங்கள் நேற்று மாலை நிறைவேற்றியுள்ள தீர்மானங்களையும் பார்த்தேன். அதன் பிறகு இங்கே என்ன வேலை? (கூச்சல்-குழப்பம்)

திரு. க. அன்பழகன் : இங்கே என்ன வேலை என்று கேட்க நீங்கள் யார் ? (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்சினை குறித்து இங்கே என்ன வேலை என்று தான் கேட்டேன். (கூச்சல்-குழப்பம்) இதெல்லாம் அவைக்குறிப்பில் ஏறாது. எல்லோரும் அவரவர்கள் இடத்தில் உட்கார வேண்டும் ; (குறுக்கீடு) வேண்டாம் ; இதையெல்லாம் வேறு இடத்தில் வைத்துக் கொள்ளுங்கள். இங்கே பேசவேண்டாம் (குறுக்கீடு) Don't force me. இந்த மாதிரி ஆயிரம் பேரைப் பார்த்தவன் இந்தப் பாண்டியன் (கூச்சல்-குழப்பம்). நீங்கள் இந்தப் பிரச்சினையை பிரளிக்கு கொண்டு போனதால் நான் அந்த வார்த்தையைச் சொன்னேன். எனக்கு உங்களைப் போல பேசிப் பழக்கம் கிடையாது. நீங்களே பேசுங்கள் ; நான் உட்கார்ந்து கொள்கிறேன். (கூச்சல் குழப்பம்).

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் என்ன சொல்லியிருந்தாலும் கூட அந்த வருத்தத்தை நாங்கள் மறந்து விடத் தயாராக இருக்கிறோம். ஆனால் நேற்றையதினம் இதுபற்றிய விவாதம் நடந்து கொண்டிருந்தபோது இவற்றை எல்லாம் அவைக்குறிப்பில் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று நீங்கள் சொன்னீர்கள் ; அவைக்குறிப்பில் ஏற்றாவிட்டாலும், எங்கள் உணர்ச்சியின் நியாயத்தை உணர்ந்து ஒரு நல்ல முடிவை எடுப்பீர்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று நடைபெற்ற விவாதத்தை அவைக்குறிப்பிலிருந்து எடுக்கவில்லை.

திரு. கு. ரமணி : நீங்கள் 'அவைகள் எல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது' என்று சொன்னீர்கள்.

திரு. க. அன்பழகன் : நான் பேசியதில் சட்டப்படி தவறு இருந்தாலோ அல்லது முறை தவறி பேசியிருந்தாலோ அல்லது அவைத் தலைவருக்கு குறை ஏற்படுத்துவதாக இருந்தாலோ அல்லது இன்னும் சொல்லப் போனால் இந்த அவையின் மரபுக்கு மாறாக இருந்தாலோ நான் பேசிய பகுதியை தாங்கள் நீக்கி இருந்நால் அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். தாங்கள் சொன்னது தவறாகவே இருந்தாலும் கூட, இறுதியில் தாங்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

ஆனால் இந்த அவையில் இருக்கிற ஏறத்தாழ 234 உறுப்பினர்கள் சார்பாக, அவர்களில் யார் எந்தக் கருத்தை உடையவர்களாக இருந்தாலும் கூட, ஏறத்தாழ 1 மணி 20 நிமிடங்கள் நேற்றைய தினம் திரும்பத் திரும்ப எங்களுடைய குறைகள் எடுத்து



வலியுறுத்தப்பட்டு எங்களுக்கு இழைக்கப்பட்டது எத்தனை வகையில் அநீதி ஆகிறது என்று இங்கே பேசப்பட்டு, ஒரு வகையில் தாங்களும் அதை ஏற்றுக்கொண்டு, நமக்குள் பேசி ஒரு நல்ல முடிவு காணலாம் என்று சொன்ன அடிப்படையில் தான், அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திற்கு நாங்கள் வர நேர்ந்தது. இல்லை என்றால் நேற்றைய தினம் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் நாங்கள் கலந்து கொள்ள விரும்பவில்லை. பேசி ஒரு நல்ல முடிவுக்கு வரலாம் என்று சொன்னதால் நாங்களும் வந்தோம். அலுவல் ஆய்வுக் குழுவில் எந்தெந்த வகையில் எங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பது குறித்து, 20, 30 நிமிடங்கள் பேசினோம். எதிர்க்கட்சித் தலைவர் திரு. உ. சுப்பிரமணியம் அவர்களும், அவை முன்னவர் அவர்களும் ஒரு சுமூக நிலை ஏற்பட சில கருத்துக்களைச் சொன்னார்கள். நிரந்தரமாக என்று இல்லாவிட்டாலும் பர்மனென்டு அரேஞ்மெண்டு இல்லை என்றாலும் டெம்பரரியாக தற்காலிகமாக ஒரு இரண்டு மாதத்திற்கு மூன்று மாதத்திற்கு ஏற்கனவே இருந்த நிலை ஸ்டேடஸ்கோ நீடிக்கப்படலாம் என்கிற கருத்து உருவானது. பின்னர் மறுபடியும் கலந்து பேசி, கட்டளை என்ற முறையில் அல்ல, எல்லாத் தரப்பினருக்கும் இசைவான ஒரு முடிவை எடுக்கலாம் என்ற முடிவுக்கு நாம் வந்தோம்.

(முற்பகல் 10-40.)

அந்த முடிவைத் தாங்கள் எடுத்து எங்களுக்கு அறிவிக்க முன் வந்த நேரத்தில் தங்களுக்கு ஒரு யோசனை சொல்லப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தம் அறையில் இருக்கிறார். அவரைப் போய்க் கேட்டுக் கொண்டு வந்து தெரிவிப்பது நல்லது என்ற யோசனையை சில மாண்புமிகு அமைச்சர்கள் தெரிவித்தார்கள்.

எங்களுக்கு அதிலே மாறுபாடு இருப்பதற்கு அவசியம் இல்லை. ஒரு ஆளுங்கட்சி அவை முன்னவரைக் கேட்பதைப் போல, முதல் வரைக் கேட்பதை, ஆளுங்கட்சி சார்பிலே கேட்பதை மறுக்க எங்களுக்கு காரணம் இல்லை. அதன் பின்னர் தாங்கள் இது பற்றி முதலமைச்சர் அவர்களைக் கேட்கச் சென்றீர்கள் ; சென்று கேட்டு, 10 நிமிடம் கழித்து வந்து ஏற்கனவே எடுத்த முடிவுகளை மாற்றிக் கொள்வதற்கில்லை என்று அலுவல் ஆய்வுக் குழுவிலே தாங்கள் தெரிவித்தீர்கள். எப்படி மாற்றிக் கொள்வது. எடுத்த முடிவை மாற்றிக் கொண்டால் எங்கள் சபாநாயகருடைய அலுவலகத்தின் உரிமை என்ன ஆவது என்று கேட்டீர்கள். சபாநாயகருடைய அலுவலகத்தினுடைய உரிமை என்ன ஆவது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களைக் கேட்கிறார் என்று தாங்கள் தெரிவித்ததற்குப் பின்னால் அலுவலகம் எடுத்த முடிவை மாற்ற முடியாது என்றீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொஞ்சம் நடந்ததைத் திரித்துப் பேசுங்கள். அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டிப் பேசலாம் என்றீர்கள். நீங்கள் சொல்லித்தான் அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்ட நான் இசைந்தேன். பேசினோம். அலுவல் ஆய்வுக் குழுவில் நான் முதலிலேயே சொல்லி விட்டேன். இது சட்டமன்ற அலுவலகத்தின் நடவடிக்கை. என்னுடைய ஆணை ; அரசுக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை ; என்பதைப் பலமுறை தெளிவுபடுத்தினேன். இப்பிரச்சினையில் அரசை இழுக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். அதனுடைய நோக்கம் எனக்குத் தெரியவில்லை.

அரசுக்கும், இந்தப் பிரச்சினைக்கும் சம்பந்தம் இல்லை ; அலுவல் ஆய்வுக் குழுவிலேயே நான் எனது அலுவலகம் எடுத்த நடவடிக்கையை மாற்றத் தேவையில்லை என்று நான் சொன்னவுடன், நீங்கள் தான் முதலமைச்சரும் இன்று இங்கே இருக்கிறார், அவரையும் கலந்து கொள்ளுங்கள் என்று சொன்னீர்கள். 'நீங்கள் சொல்வதால் முதலமைச்சரிடம் கலந்து பேச நான் போகிறேன்.' என்று சொல்லித்தான் சென்றேன். நீங்கள் சொன்னதால்தான் போய்க் கேட்டேன். இல்லையென்றால் அவரை கன்சல்ட் பண்ணுவதாக இல்லை. இப்பிரச்சினை எனது அதிகாரத்தின் எல்லைக்குட்பட்டது.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்களுடைய அதிகாரத்தை எங்களிடத்திலேயாவது நிலைநாட்டியதற்கு நான் தங்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன், பாராட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பாண்டியன் எங்கும் நிலை நாட்டுவான். நிலை நாட்டி வருவதனாலேதான் இன்றைக்கு வீரனாக இருக்கிறான்.

திரு. க. அன்பழகன் : தயவு செய்து அந்தமாதிரி வார்த்தையைச் சொல்வதனாலேயே, நாங்கள் பதில் சொல்ல முடியாது என்று அர்த்தம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சில பேர் பாண்டியன் என்று பெயர் தான் வைத்திருப்பார்கள். அதற்கேற்ற குணங்கள் இருக்காது. (குறுக்கீடு).

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் அலுவல் ஆய்வுக் குழுவிலே நடந்த நிகழ்ச்சியைத் தான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானும் அங்கு என்ன நடந்தது என்பதைத் தான் சொன்னேன். தயவுசெய்து இதை நீங்கள் அரசியலாக்க வேண்டும் என்று நினைக்காதீர்கள்,



இது நம்முடைய சட்டமன்றக் கட்சி அலுவலகம். அதற்காகப் பேரவைத் தலைவருக்கும், அவர் ஆளுகைக்குட்பட்ட சட்டமன்ற அலுவலகத்திற்கும், நீங்கள் மதிப்பளிக்க வேண்டும் ; உறுப்பினர்களது உரிமைகளைப் பாதுகாத்து, அவர்களுக்கு வேண்டிய வசதிகள் அனைத்தையும் அளிப்பவர்கள் நாங்கள் தான். எங்களுடன் நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். நீங்கள் பாதிக்கப்பட்டது போன்ற நினைப்பிலேயே இருக்கிறீர்கள்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நாங்கள் பாதிக்கப்பட்டோம் என்பதையாவது ஒப்புக் கொண்டதற்கு உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வார்த்தைகளை வைத்துக் கொண்டு இப்படிப் பேசவேண்டாம். நான் என்ன தமிழ்ப் பேராசிரியரா ? நான் வக்கீல். குறுக்குக் கேள்வி கேட்டுத் தான் பழக்கம். சாதுர்யமாகப் பதில் சொல்லிப் பழக்கமில்லை.

திரு. கு. ரமணி : அலுவல் ஆய்வுக் குழுவில் என்ன நடந்தது என்பதைத் தான் சொன்னோம் ; இட்டுக் கட்டி நாங்கள் எதுவும் சொல்லவில்லையே.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையில் பலவற்றைப் பேச முடியாது என்பதால் தான் அலுவல் ஆய்வுக் குழுவில் பேசப்படுகிறது. அலுவல் ஆய்வுக் குழுவில் என்னென்ன பேசினோம் என்பதை எல்லாம் அவையில் மீண்டும் பேசுவது என்று ஆரம்பித்தால் அதன் விளைவுகள் வேறு எங்கோ போய்ச் சேரும் என்பதை நான் முதலிலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவதாக, அலுவல் ஆய்வுக் குழுவைப் பற்றிச் சொல்கிறபோது, பேராசிரியர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களைக்கலந்து கொள்ள வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தபோது முதலில் அவர் வர மறுத்தார். இதுதான் உண்மை. ஆனால், எல்லோரும் சொன்ன பிறகு தான் அவர்கள் முதலமைச்சரிடம் சென்று கலந்து வர ஒப்புக் கொண்டாரே தவிர, அவராகப் போக விரும்பவில்லை. உண்மை இதுதானே தவிர வேறு அல்ல என்பதையும் தெளிவாக்க விரும்புகிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நடைபெற்ற நிகழ்ச்சி எதுவாக இருந்தாலும் முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராக இருக்கிற அந்த நிலையில் அவரை மதிப்பது தவறு என்று கருதுகிறவன் நான் அல்ல. முதலமைச்சருக்கு ஏதோ உரிமை இல்லாததைப் போலவும் அவர் ஆலோசனை சொல்வதற்கு உரிய இடத்தில் இல்லாததைப் போலவும் இந்த அவையிலே நடக்கிற அலுவல் தனியாக நடந்துவிடுவதைப் போலவும் அவருக்கு அப்பாற்பட்டு ஒரு அவை இங்கே நடைபெறுவதைப் போலவும் எண்ணிக் கொள்கிற அந்த நிலைக்கு நான் ஆளாகத் தயாராக இல்லை.

மற்றொன்று. சட்டமன்றத்தை அரசியல் கட்சி அடிப்படையில் அணுகாதீர்கள். அதனுடைய தனித் தன்மையை எண்ணிப் பாருங்கள் என்று சபாநாயகர் ஆகிய தாங்கள் தெரிவித்தீர்கள். அது ஒரு தத்துவம். தத்துவமே தவிர நடைமுறையில் அப்படி யில்லை என்பதை நான் பணிவோடு தெரிவிக்க விரும்புகிறேன். இருக்க முடியாது என்பதும் நானும் இந்த அவையிலே இருக்கிற பலரும் உணர்ந்த ஒன்று. அரசியல் கட்சிகள், கட்சி என்ற ஒன்றின் பேரால் நடவடிக்கை எடுக்க முடியாதே தவிர சட்ட மன்றத்தின் உரிமைகளுக்குட்பட்டு நடவடிக்கை எடுக்க எல்லா அரசியல் கட்சிகளுக்கும் உரிமை உண்டு. எனவே நான் வாதம் செய்ய நேரத்தை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. திட்டவட்டமாக நான் தங்களிடத்திலே தெரிவிக்க விரும்புவது அலுவல் ஆய்வுக் குழு எந்த நோக்கத்தோடு கூடியதோ அந்த நோக்கம் அந்த அலுவல் ஆய்வுக் குழுவால் நிறைவேற்றப்படவில்லை. பாதிக்கப்பட்டவர்கள் என்று சொல்லக்கூடிய நிலையில் உள்ள எதிர்க் கட்சி வரிசையில் உள்ள எங்களுக்கு எந்த நியாயமும் தரப்படவில்லை. இன்னும் சொல்லப் போனால் கட்சி அலுவலகம் தரப்படும் என்ற வாக்குறுதியும் தரப்படவில்லை. கட்சி அலுவலுக்கு எப்படி இடம் தருவதாகச் சொன்னீர்கள் என்பதை இந்த அவை தெரிந்து கொள்ள வேண்டும். எழுதப்பட்ட கடிதத்தில் என்ன இருக்கிறது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். அணிகளாக இருக்கிற, திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர, மற்ற சிறு கட்சிகளாக இருக்கிற, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, ஜனதாக் கட்சி மற்றக் கட்சிகள் அந்தக் கட்சிகளுக்கு அவர்கள் என்றென்றைக்குக் கூட விரும்புகிறார்களோ அன்றைக்கு 24 மணி நேரத்திற்கு முன்னர் செயலாளருக்குக் கடிதம் எழுதினால் அவர்கள் கூடுவதற்கு இடம் தருவார்கள் என்று சொல்லப்பட்டதே தவிர அலுவலுக்கு இடம் தரப்படும் என்று கூறப்படவில்லை....



மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் திரு. ரமணிக்குச் சொல்ல விரும்புகிறேன். மேற்கு வங்கத்திலே உள்ள நிலைமையைச் சொல்லிவிடுகிறேன்.

There is no rule for allotment. Allotment of rooms to different parties of this Assembly — Rooms are allotted to parties for use as office of their MLAs on specific request subject to availability and approval of Speaker. One room has been allotted to main Opposition Party of present Assembly and one room for R.P.T. and one room for Leader of Opposition.

இதுதான் அங்கே உள்ள நிலைமை.

அடுத்து கர்நாடக மாநிலத்தில் உள்ள நிலைமையைச் சொல்ல விரும்புகிறேன்.

With reference to your Telex dated 16th May 1985 I am directed to state that in the precincts of Legislative Assembly one well furnished room each is earmarked to the ruling Legislature Party and th largest Oppsition Legislature Party. No other Legislature Parties have been provided rooms. There are no rules for allotment of rooms for the Legislature parties,

அங்கே எந்தக் கட்சிக்கும் கிடையாது.

அடுத்து, மேற்கு வங்கத்திலே உள்ள பார்ட்டி ஸ்ட்ரெங்த் பற்றிச் சொல்லி விடுகிறேன்.

திரு. க. அன்பழகன் : தாங்கள் கர்நாடகம், மேற்கு வங்கம் ஆகிய சட்டமன்றப் பேரவைகளில் எதிர்க் கட்சிகளுக்கு எப்படி இடம் தரப்பட்டு இருக்கிறது என்று சொன்னீர்கள். அங்கு எப்படி இருக்கும் என்று நான் கருதுகிறேன் என்றால் இங்கு எப்படி சட்டமன்ற வளாகத்திலே எதிர்க் கட்சித் தலைவருக்கு அறை ஒதுக்கப்பட்டிருக்கிறதோ அதைப் போன்றதாக அது இருக்கக் கூடும். தாங்கள் சொல்வது உண்மையென்றே நான் ஏற்றுக் கொண்டாலும் பாராளுமன்றத்தில் இன்றுள்ள நிலை என்ன ? என்பதைத்தான் கவனிப்பது மரபு பாராளுமன்றத்திலே இருக்கிற முறையை நாம் ஏற்றுக்கொள்வதுதான் முறை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்குச் சாதகமாக இருந்தால் இப்படிச் சொல்வீர்கள்.

[1985 ஜூலை 4

(முற்பகல் 10-50)

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, தாங்கள் இந்த மன்றத்தில் ஏற்கனவே துணைச்சபாநாயகராக இருந்த பொழுது இன்னும் நல்ல நிலைமைகள் எங்களுக்கு இருந்தன. ஆனால் தாங்கள் சபாநாயகர் ஆனவுடன் எங்களுடைய நிலைகளே மாறியிருக்கின்றன. இதைத்தான் தாங்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கேரளத்தையும், கர்நாடகத்தையும் மேற்கோளாகக் காட்டுகிறீர்கள், என்றைக்குமே நாங்கள் அங்கே போய்த்தேர்தலுக்கு நிற்கப் போவதில்லை.

இரண்டாவதாக, அறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலிருந்த நிலைமை, இன்னும் சொல்லப் போனால் கலைஞர் முதலமைச்சராக இருந்த காலத்திலிருந்த நிலைமை, மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் முதலிலே ஐந்தாண்டுக் காலம் முதலமைச்சராக இருந்த காலத்திலே இருந்த நிலைமை பெரும்பாலும் நீடிக்கப்பட வேண்டும் ; நூற்றுக்கு நூறு அப்படியே நீடிக்க வேண்டுமென்று நான் சொல்லா விட்டாலும், பெரும்பாலும் நீடிக்கப்பட வேண்டுமென்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

It is in the discretion of the Speaker and there is no rule to prevent the Speaker to provide any room for any Party. சட்டத்திலே அப்படி ஒன்றும் இல்லை. நீங்கள் தீர்மானிக்கலாம். தாங்கள் எங்களிடம் நடந்து கொண்ட முறை நியாயம் அல்ல என்று திட்டவட்டமாக என்னுடைய மனசாட்சியின்படி வலியுறுத்தி, நடந்து விட்ட அநீதிக்குத் தாங்கள் தக்க நியாயம் வழங்க வேண்டுமென்று பணிவன்போடு இந்த அவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றைய தினம் அலுவல் ஆய்வுக் குழு எந்த நோக்கத்திற்காகக் கூட்டப் பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை. அதற்கு நேர் மாறாக, இழைக்கப்பட்ட அநீதி—நியாயம் என்று வாதிக்கப்பட்டதற்கு எங்கள் வருத்தத்தையும், கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்ள வேண்டிய கட்டத்திற்கு நாங்கள் தள்ளப்பட்டிருக்கிறோம் என்பதை நான் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, நானும் ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே பேச முடியாது. அலுவல் ஆய்வுக் குழுவிலே விவாதித்ததை எல்லாம் திரும்ப அவையிலே விவாதிக்க முடியாது.



1985 ஜூலை 4]

திரு. கு. ரமணி : நாங்கள் உங்கள் கஸ்டடியில் இருக்கிறோம். எங்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டியவர் தாங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் அனைவருக்கும் எப்பொழுதும் தக்க பாதுகாப்பு கிடைக்கும்.

திரு. கு. ரமணி : மேற்கு வங்கத்திலுள்ள நிலைமையைப் பற்றி நீங்கள் சுட்டிக் காட்டினீர்கள். அங்குள்ளதைவிட மேலான நிலை இங்கு உள்ளது என்ற கருத்தையும் சொன்னீர்கள். லெப்ட் பிரண்ட் அரசாங்கம் மேற்கு வங்காளத்தில் இருக்கிறது. பல கட்சிகள் சேர்ந்து ஒரு அமைப்பை உருவாக்கி அதற்கு வேண்டிய நடவடிக்கையை அங்கே எடுப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு நிமிஷம் இருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். அதாவது, மேற்கு வங்க சட்டமன்றத்தில்

| | | |
|---|---|---|
| Total strength. | .. | 295 |
| Congress. | .. | 57 |
| C.P.I. (M). | .. | 170 |
| C.P.I. | .. | 7 |
| Forward Block. | .. | 28 |
| Revolutionery Socialist Party | .. | 18 |
| West Bengal Socialist Party | .. | 3 |
| Democratic Socialist Party. | .. | 2 |
| Revolutionery Communist Party of India. | .. | 2 |
| Forward Block (Marxist). | .. | 2 |
| Socialist Unity Centre of India | .. | 2 |
| Nominated. | .. | 1 |
| Independents. | .. | 3 |

இதிலே மெயின் அப்போசிஷனைத் தவிர வேறு எந்தக் கட்சிக்கும் தனியே அறை கிடையாது.

திரு. கு. ரமணி : நீங்கள் இப்போது பூராப் பட்டியலையும் காட்டினீர்கள். ஆனால் இன்னொரு விஷயம் அந்தப் பட்டியலில் வரவில்லை. இவர்கள் அத்தனை பேர்களும் சேர்ந்து லெப்ட்

பிரண்ட் கவர்மெண்டிலே இந்தக் கட்சிகள் முழுவதும் மினிஸ்ட்ரி யிலே இருக்கக் கூடியவை. அப்படி மினிஸ்ட்ரி சபையில் இருந்து அந்தக் கட்சிகள் ஆட்சி புரியும்பொழுது சட்டசபைக் கட்சிக்கு என்று ஒரு இடம் ஒதுக்கவில்லை என்று மட்டும் நீங்கள் எங்க ளுக்குச் சொன்னால்,......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்காகச் சொல்ல வில்லை. பேரவைத் தலைவரின் டிஸ்கிரிஷனில்தான் செய்யப் படுகிறது என்று சொன்னேன்.

திரு. கு. ரமணி : என்னைப் பேசுவதற்குக் கொஞ்சம் விடுங் கள். அங்கே மற்ற கட்சிகள் பரிபூரணத் திருப்தியோடுதான் இருக்கிறார்கள். அது ஒரு பக்கம் இருக்கட்டும்.

நாங்கள் இப்பொழுது என்ன சொல்ல விரும்புகிறோம் என்றால், பாராளுமன்றத்தினுடைய நடவடிக்கைகளை நீங்கள் ஒவ்வொன்றுக்கும் கோட் செய்து, உதாரணமாகக் காட்டுகிறீர்கள். அது கரெக்ட். அதை நாங்கள் ஒத்துக்கொள்ளக் கடமைப்பட்ட வர்கள். இங்கே இருக்கும்படியான உங்களுடைய ரூல்ஸ் கமிட்டி யினுடைய ரிப்போர்ட் பிரசென்டேஷன் பண்ணியதிலேயே சில விஷயங்கள் கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கின்றன. அங்கே, பாராளுமன்றக் கட்டிடத்திற்குள்ளேயே பார்ட்டி ஜெனரல்பாடிக் கூட்டம் நடத்துவதற்கு ஒவ்வொரு கட்சிக்கும் தனி அறை கொடுக்கப்பட்டுள்ளது. அதை இன்றைக்கும் அனுபவிக்கிறார்கள். நானும் பாராளுமன்றத்தில் இருக்கின்றபொழுது அதை அனுபவித்திருக்கிறேன்.

அதற்குப் பிறகு வெளியிலே, வித்தல் பாய் பட்டேல் பவனிலே ஒவ்வொரு கட்சிக்கும் தனியாக அறை கொடுக்கப்பட் டிருக்கிறது. மெம்பர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற வீடுகள் வேறு. அங்கு அறையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. சரண்சிங் அவர்கள் கட்சியிலே அவர் மட்டும்தான் இருக்கிறார். அவருக்கு— நான் கேள்விப்பட்டது தவறாக இருந்தால் திருத்திக் கொள்ளத் தயார்—4 இடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன ஏற்கனவே ஒரு உயர்ந்த அந்தஸ்திலே இருந்தவர் என்ற முறையிலே. ஒரு குறுகிய காலத்திலே அவர் இந்திய நாட்டினுடைய பிரதமராக இருந்தவர். அந்த முறையிலே அவருக்குக் கொடுக்கப்பட்டிருக் கிறது. எதற்காகச் சொல்கிறேன் என்றால், நீங்கள் ரூல்களை குறிப்பிட்டீர்கள். பார்லிமென்டினுடைய விதிகள் எல்லாம் எப்படி இருந்தாலும், அந்த விதிகள் எல்லாம் புத்தகங்களிலே இருந்தாலும், மரபுகள் அடிப்படையிலே கட்சிகளை மதித்து எப்படி அவர்கள் நடந்து கொண்டார்கள்? அதையே இங்கே நாம் கணக்கிலே எடுத்துக் கொள்ளக் கூடாதா? தமிழ்நாட்டிலே அப்படி இல்லையே..





மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் திரு ரமணி அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார் கள். தாங்கள் மேற்கு வங்காளம், கர்நாடகம் ஆகிய இரண்டு மாநிலங்களுடைய நிலைமைகளையும் சுட்டிக் காட்டினீர்கள். அவர்கள் மேற்கு வங்காளத்திற்காக மட்டும் வாதாடிவிட்டு கர்நாடகத்தை இப்படிக் கைவிட்டு விடலாமா?

திரு. கு. ரமணி அமைச்சர் திரு. காளிமுத்து போன்றவர்கள் வெகு தீவிரவாதிகளாக இருக்கிறவர்கள், காப்பாற்றுவார்கள் என்று நினைக்கிறேன். ஒரு மாநிலம் என்கிற முறையில் அந்த மாநிலத்திற்கு பினான்ஷியல் அண்டு அதர் டிபிகல்ட்டீஸ் வருகிற பொழுது மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்பதிலே உங்களைவிட முன்னணியில் இருந்து நாங்கள் போராடுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று 1½ மணி நேரம் இதுபற்றிப் பேசியாயிற்று. இன்று ½ மணி நேரம் பேசியாயிற்று. (குறுக்கீடுகள்)

திரு. கு. ரமணி : நாங்கள் பாதிக்கப்பட்டவர்கள். அதை நீங்களே சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாதிக்கப்பட்டவர்கள் என்று நினைத்துப் பேசாதீர்கள் என்றேன். நீங்கள் எத்தனை பேர்கள் இந்த அவையில் இடம் பெற்றிருக்கிறீர்களோ, அந்த எண்ணிக்கைக்கேற்ப கொடுத்திருக்கிறேன். அதற்கு மேல் எப்படிக் கொடுப்பது? நான் உங்களது உரிமையைப் பறித்துவிட்ட தாகப் பேசாதீர்கள்; உங்கள் உரிமைகளை எல்லாம் பாதுகாத்துக் கொடுப்பவன் நான்தான்; நான் எல்லாக் கட்சிகளையும் கட்சி உறுப்பினர்களையும் மதிக்கிறவன்; எல்லா தரப்பினரையும் மதிக்கிறவன். நமது விதிமுறைகளின்படி செயல்பட வேண்டியவ னாகவும் இருக்கிறேன். (குறுக்கீடுகள்)

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் தேர்தலில் வழங்குகின்ற தீர்ப்பை மையமாக வைத்து கட்சிகளுக்கு அறைகள் ஒதுக்குவது என்ற தங்களுடைய முடிவைத் தாங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும். காரணம் ஒரு அரசியல் இயக்கம் தேர்தலில் வெற்றி பெறலாம். தோல்வி அடையலாம். உங்களுடைய கட்சியே கூட சென்ற முறை பார்லிமெண்டில் இரண்டு இடங்களைத்தான் பெற்றது. பாண்டிச் சேரியில் ஒரு இடம் கூடப் பெறவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்னைப் பார்த்து உங்களுடைய கட்சி என்று சொல்கிறீர்கள். முதலிலேயே இது போன்ற வாதம் வேண்டாம் என்றுதான் சொன்னேன். நடுநிலை யில் இருந்து பாருங்கள். இதை அரசியலாக்க வேண்டாம்;

உங்கள் எல்லோரிடமும் தனிப்பட்ட மதிப்பு இருக்கிறது. அது வேறு. ரூம்ஸ் அலாட்மென்ட் என்கிறபோது ஒரு கிரைட்டீரியா வேண்டும். அவ்வளவுதான்.

திரு. அ. ரகுமான்கான். தேர்தல் முடிவுக்கும், அலாட்மெண்டுக்கும்........(குறுக்கீடுகள்)

MR. SPEAKER : Yesterday itself I made it clear that only under direction this was carried out.

இதில் அரசாங்கத்ினுடைய 'ஹாண்டு' இல்லை; வேறு யாரும் சொல்லி நான் செய்ததும் இல்லை. இதை மன்றம் வகுத்துத் தந்துள்ள விதிமுறைகளின்படி நான் சொன்னதால்தான் எனது அலுவலகம் இந்த நடவடிக்கையை எடுத்தது. இதை ஒரு பிரச்சினையாக ஆக்க வேண்டாம். (குறுக்கீடுகள்)

(முற்பகல் 11–00)

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தேர்தலில் எங்கள் கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை இந்த மன்றத்தில் குறைந்த காரணத்தால் இந்த நடவடிக்கை எடுத்தேன் என்று தாங்கள் தெரிவிக்கிறீர்கள். கடந்த முறை சட்ட மன்றத்தில் இருந்த அத்தனைக் கட்சிகளின் பட்டியலையும் எடுத்துப் பாருங்கள், இரண்டு பேர் இருந்த கட்சிகளுக்குக் கூட எப்படி இடம் ஒதுக்கித் தரப்பட்டிருந்தது என்பதைப் பாருங்கள். 3 பேர் இருந்த கட்சிக்கும் இடம் தரப்பட்டிருக்கிறது (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போதுள்ள விதிமுறைகளையும் பாருங்கள். வெளியே அரசியலுக்குப் பேசினால் இந்த வாதம் பயன்படலாம்.

திரு. க. அன்பழகன் : நான் விவாதம் செய்ய வேண்டுமென்று ஆசைப்படவில்லை. தாங்கள் சொல்லுகிற கருத்து நியாயத்தின் அடிப்படையில் இல்லை. கடந்த முறை இதே சட்டமன்றத்தில் 2 பேர், 3 பேர் இருந்த கட்சிகளுக்குக் கூட இடம் தரப்பட்டிருக்கிறதா இல்லையா என்பதைப் பாருங்கள். அப்படி இருக்கும் போது, 2 பேர் இருந்த கட்சிக்கு 1980 முதல் 1984 வரை இடம் தரலாம், 1985-ல் தரக்கூடாது என்பது எந்த விதியிலும் இல்லை. அப்படிச் சொல்வதற்கு விதிமுறைகள் எதுவும் இல்லை. உங்களுடைய உரிமை. அது தேர்தல் தீர்ப்பின் விளைவு என்று சொல்லுகிறபோது தாங்கள் அளித்த தீர்ப்பினால் பாதிக்கப்படுகிறபோது, ஏன் அதை மறுபரிசீலனை செய்யக்கூடாது ? முறை தவறாகச் செய்த காரணத்தால் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டோம். தாங்கள் மறுபரிசீலனை செய்து எங்களுக்கு நியாயம் வழங்குவது தங்கள் கௌரவத்திற்கும்



அந்தஸ்துக்கும் பாதகமாகக் கருதவில்லை எனினும், தாங்கள் எடுத்த முடிவை, கொடுத்த தீர்ப்பை மாற்றிக்கொள்ள விரும்பாததால் இதனால் எங்களுக்கு ஏற்பட்ட அநீதியை எடுத்துக்காட்ட எங்களுடைய ஆழ்ந்த கண்டனத்தைத் தெரிவித்து, அவையைவிட்டு வெளியேறுகிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய கட்சிகள், சட்டமன்றம் சம்பந்தமாக தங்கள் அலுவல்களை ஆற்றுவதற்கு தாங்கள் அறைகளை ஒதுக்கித்தருகிறீர்கள். பெரிய கட்சியாக இருந்து இயங்குகிறபோது பெரிய இடமும், அவர்களுடைய எண்ணிக்கை குறைகிறபோது அதற்கேற்ப குறைந்த இடமும் தாங்கள் வழங்குவது தர்மத்தின்பாலும் நியாயத்தின்பாலும் தங்களுக்கு இருக்கிற உரிமையாகும். ஏனென்றால் உறுப்பினர்களுடைய வசதிக்கேற்ப அறைகள் வழங்கப்படுகின்றன. ஏற்கனவே எங்களுக்கு நிரம்ப இடம் இருந்தது. அதே இடம்தான் இப்போதும் வேண்டும் என்று வற்புறுத்துவதால்தான் இத்தகையப் பிரச்சனைகள் எழுகின்றன. இருந்ததை இழக்கின்றபோது யாருக்கும் எரிச்சல் ஏற்படுவது இயற்கைதான். ஆனால் அந்த எரிச்சலுக்கு பேரவைத் தலைவரை இழுப்பது எந்தவகையில் நியாயம் என்பதுதான் அவை முன்னால் இருக்கிற பிரச்சினை. முன்னால் திராவிட முன்னேற்றக் கழகம் பெரிய கட்சியாக இருக்கும்போது பெரிய இடத்தை வைத்திருந்தார்கள். இன்று சின்ன கட்சியாக ஆகியிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் சின்ன இடத்திற்குப் போவதுதான் நியாயம். இதிலே ஏன் வீண் பிடிவாதம் காட்டுகிறார்கள் ? (குறுக்கீடுகள்)

திரு. கு. ரமணி : எங்களது நியாயமான கோரிக்கையை ஏற்காத காரணத்தால் எங்களுடைய கண்டனத்தைக் தெரிவித்து நாங்களும் வெளியேறுகிறோம்.

(மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்) (குறுக்கீடுகள்)

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும், ஜனதா கட்சி உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது 1985–86 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும் தொடரும். மாண்புமிகு உறுப்பினர் திரு. வேணுகோபால் அவர்கள் பேசுவார்கள்.

4. வரவு-செலவுத் திட்டம் 1985-86—வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 20.—வேளாண்மை— தொடர்ச்சி.

(ஆ) கோரிக்கை எண் 49.—குடிநீர் வழங்கல்—தொடர்ச்சி.

(இ) கோரிக்கை எண் 50.—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு—தொடர்ச்சி.

*திரு. எஸ். வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இன்றையதினம் தமிழக அரசு குடிநீர் வடிகால்
வாரியத்தின் அறிக்கையைச் சமர்ப்பணம் செய்திருக்கிறது.
அதனை இந்த அவையிலே மிகத் திறமையோடு சமர்ப்பித்திருக்
கிறார்கள். ஆனால் அவ்வாறு சமர்ப்பிக்கின்ற நேரத்தில்தான்
தமிழகத்தின் முதல்வர் அவர்கள் சுதந்திர தின அறிவிப்பு என்ற
வகையில் மிகச் செம்மையாக நல்லதொரு அறிக்கையைச
சமர்ப்பித்து இருகிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சென்னையிலும், தமிழகத்தின் பல பகுதிகளிலும் இருந்து
வருகின்ற குடிநீர்ப்பிரச்சினையை ஆழ்ந்த அக்கறையோடு
கவனித்து, அந்த உள்ள உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற
வகையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்
தின் அரசு குடிநீர்ப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கின்ற வகையில்
அறிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
நமது அமைச்சர் அவர்களுடைய திறமையும், நிர்வாகத்திலுடைய
திறமையும் பின்னிப் பிணைந்து இந்த குடிநீர்ப்பிரச்சினையைத்
தீர்த்து வைப்போம் என்று அறிக்கை தந்திருக்கிறார்கள்.
மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதை
நமது முதல்வர் அவர்களும், மற்றும் அமைச்சர்களும் ஆனாலும்
பல நல்ல திட்டங்களைத் தாக்கல் செய்தாலும் நிர்வாக இயந்
திரம் சரியாக இயங்குகிறதா என்று எண்ணிப் பார்க்கின்ற
நேரத்தில் அந்த நிர்வாக இயந்திரம் சரியாக இயங்கவில்லை
என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. ஏன் இப்படிச் சொல்
கிறேன் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். நாங்கள் தோழ
மைக் கட்சியிலே இருக்கிறோம் என்று சொன்னாலும் மாண்பு
மிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லித்தான் வாக்குகளை சேகரித்
திருக்கிறோம். ஆனால் இன்று சென்னை நகரத்தைப் பொறுத்த
வரையில் தண்ணீர் இல்லாமல் சென்னை வாசிகள் எல்லாம்
கஷ்டப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல. தமிழகத்திலே சென்
னைக்கு கிருஷ்ணா நதித் திட்டத்தின் மூலமாகத் தண்ணீர் தருகி
றோம் என்று சொல்லி ஒரு திட்டத்தை உருவாக்கினாலும்
அந்தத் திட்டத்தின் செயல்திறன் மந்தமாக இருக்கிறது
என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.





என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் உள்ள
தண்ணீர்ப் பஞ்சத்தைப்பற்றி பலமுறை அமைச்சரிடம் அன்பாகச்
சொல்லியிருக்கிறேன். அவ்வாறு அவரிடம் சொல்லிய நேரங்
களில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆனால்
நிர்வாக இயந்திரத்தில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கிறார்
களா என்றால் இல்லை என்று தான் சொல்ல முடிகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
பேரவையின் உறுப்பினர்கள் அவரவர்களுடைய இருக்கையில்,
விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது அதற்கு உதவு
கின்ற வகையில் அமைதியாக அமர்ந்திருக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

திரு எஸ். வேணுகோபால் : பேரவைத் தலைவர் அவர்
களே, நான் இதற்கு முன்னாலே இருந்த அந்த வாரியத்தின்
இயக்குநர் திரு. ஆவுடையபிள்ளை அவர்களை அழைத்துக்
கொண்டு என்னுடைய தொகுதியிலே வீதி, வீதியாகத் திரிந்து
நிலவரங்களை விளக்கினேன். ஆனால் உரிய வகையில் காரியங்
கள் நடைபெற்றதா என்றால் நடைபெறவில்லை.

(முற்பகல் 11-10)

இன்றைக்கு நம்முடைய குடிநீர்த் திட்டங்களிலே பல திட்டங்
களைப் போட்டிருக்கிறார்கள். சென்னை நகர மேம்பாட்டுத்
திட்டத்திலே ராயபுரத்திலே இருக்கிற ராபின்சன் அண்ணா
பூங்காவிலே, நீர்த் தொட்டியிருக்கிறது. அங்கேயிருக்கிற
நிலவரங்களை பார்க்கும் போது, குடிநீர்த் திட்டங்களைப்
பார்க்கும்போது, அங்கே குடிநீர் என்னவோ இருக்கிறது. ஆனால்
அது வினியோகம் செய்யப்படுகிறதா, முறையாக பொது மக்க
ளுக்குக் கொடுக்கப்படுகிறதா என்றால் ஒன்றும்முறையாகஇல்லை.
சென்னை நகரத்திற்கு என்று 42 லாரிகள் ஒதுக்கப்பட்டிருப்ப
தாகச் சொல்லப்படுகிறது. அந்த 42 லாரிகளிலே எத்தனை
இயங்குகின்றன என்று சொல்லப்படவேயில்லை. எப்பொழுது
பார்த்தாலும் அந்தப் பகுதியில் லாரிகள் ரிப்பேர் என்றுதான்
சொல்லுகிறார்கள்.

சென்னை நகரத்திலே மிகச்சாதாரணமாக இருக்கிற, வறுமைக்
கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்களின் குடியிருப்புகளில் 560
தொட்டிகள் கட்டப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்
கிறது. ஆனால் அந்த 560 தொட்டிகளும் எங்கே எப்படி என்று
யாராலும் சொல்ல முடியவில்லை. தொட்டிகள் சரிவர இயங்கு
கிறதா என்றும் சொல்ல முடியவில்லை. எப்பொழுது பார்த்தா
லும் மக்கள் மத்தியிலே நாங்கள் போகிறபோது குடிநீர் பிரச்னை
தான் பிரதானமாக எழுகிறது. நான் ஆளும் கட்சியைச் சார்ந்த
வன் என்று எண்ணிக் கொண்டிருக்கிற காரணத்தாலும், தோழ
மைக் கட்சிக்காரன் என்று சொல்வதினாலேயும், எந்தவித

ஆர்ப்பாட்டமோ, ஆர்ப்பரிப்போ, அரசுக்கு களங்கத்தை ஏற்படுத்தக்கூடாது என்று போராட்டத்தை நடத்தவோ முடியாத காலக் கட்டத்திலே இருக்கிறேன்.

நேற்றையதினம் கூட என்னுடைய அருமை நண்பர் திருவண்ணாமலை தொகுதியிலிலேருந்து தேர்ந்து எடுக்கப்பட்ட உறுப்பினர் திரு. ரவீந்திரன் அவர்கள் இதையே சொன்னார்கள். சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொள்ள வேண்டிய கால கட்டத்திலே இந்த அரசினால் நான் உந்தப்பட்டிருக்கிறேன். மக்கள் என்னைப் புறக்கணித்து விடுவார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் தயவு கூர்ந்து பரிகாரம் காண வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இப்படி அவர் சொன்னது மாதிரி தான் நிலைமை இருக்கிறது. சென்னை நகரத்திலேயும் எங்கே பார்த்தாலும் தண்ணீர்ப்பஞ்சம் இருக்கிறது. ஆனால் அப்படித்தண்ணீர் பஞ்சம் அதிகமாகி இருக்கிறது என்பதை நிர்வாகத்தினர் ஏற்றுக் கொள்கிறார்களா என்றால், ஏற்றுக் கொளவதில்லை. திட்டங்களைப் பார்த்தாலே மிகத் தெளிவாக அது தெரியும். சென்னை நகர குடிநண்ணீர்த்திட்டத்தில் 1984-85-ல் 9லட்சமும் 1985-86-ல் 500 லட்சமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றையதினம் வழக்கமாக சென்னை நகரத்திற்கு கொடுக்கப்படும் குடி தண்ணீர் கூட கிடைக்காமல் இருக்கும் சூழ்நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. சென்னை நகரத்திற்கு இந்த நிலையிலே 12 ஊராட்சிகளை வேறு புதிதாகச் சேர்த்திருக்கிறார்கள். இதனால் சென்னை நகரத்திலே நல்ல தண்ணீர்ப் பஞ்சம் மிகமிகக் கடுமையாக இருக்கிறது.

ஏன் இந்தக் கொடுமை? இதற்குக் காரணம் என்ன? எப்படி இந்தக் கொடுமை நாட்டில் உருவாக்கப்பட்டது? சுதந்திர தின விழாவிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தமிழகத்திலே குடிதண்ணீர் இல்லாத இடம் இனி இருக்காது, எல்லோருக்கும் குடிக்கத் தண்ணீர் கிடைக்கும். யாருக்குமே, குடிப்பதற்கு தண்ணீர் இல்லை என்ற எண்ணம் வரக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களுடைய நல்ல எண்ணத்தின் விளைவாக நல்ல பல திட்டங்கள் சிறப்பான திட்டங்கள் உருவாகியிருக்கின்றன. ஆனால் அவைகள் செயல்படும்போது, சிறப்பாக, செம்மையாக செயல்படுகிறதா என்றால் அதுதான் இல்லை. மத்திய அரசும் நிறைய பணம் கொடுக்கிறது. மாநில அரசும், அதன் அமைச்சர்களும், மத்திய அரசுக்கு உடந்தையாக இருந்துதான் திட்டங்களைச் செயல்படுத்துகிறார்கள். ஆனாலும் நிர்வாக இயந்திரம் ஒழுங்காகச் செயல்படாத காரணத்தால் இப்படிப்பட்ட நிலை நாட்டில் ஏற்பட்டிருக்கிறது.

1971-72 ஆம் ஆண்டிலே மத்திய சர்க்காரிடத்திலேயிருந்து 1.05 கோடி ரூபாய் மானியமாகக் கொடுக்கப்பட்டது. அது மட்டும் அல்ல, வெளிநாட்டிலிருந்து 20 கோடி ரூபாய் மதிப்புள்ள





துளை போடுகிற இயந்திரங்கள் திறப்பான்கள் வரவழைத்துக் கொடுக்கப்பட்டன. ஆனால் அவைகள், 1982-83 வரை ஒழுங் காக இயங்கியதற்கு தேவையான சான்றிதழ்களை சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினரால் கொடுக்க முடியாமல் போன காரணத்தினால், தொடர்ந்து அதற்கான சாத்தியக் கூறுகளை, உதவிகளை நம் மால் உருவாக்க முடியவில்லை. நிர்வாக அதிகாரத்தில் இருப் பவர்கள் செம்மையாகப் பணியாற்றுவதில்லை. 9 லட்சம் என்று முதலிலே போட்ட திட்டத்திற்கு 500 லட்சமாக உயர்த்தியிருந் தாலும், அவைகள் எல்லாம் அதிகாரிகள் தங்களுடைய நிர்வாகத் திலே இருக்கிற அலுவலர்களுக்கு அதிகமான சலுகைகளைக் காட்டி, வசதி வாய்ப்புகளை பெருக்கிக் கொண்டே போக செலவிடுகிறார்களே தவிர, திட்டங்களை நிறைவேற்றும் வகை யில் யாரும் எதையும் சரியாக செய்வதாக தெரியவில்லை.

அதேபோல எல்.ஐ.சி.யிலே கொடுக்கிற லோன்களுக்குக் கூட அவைகளை சரியாக முறைப்படுத்த முடியாத நிலை இருக்கிற காரணத்தாலே தேவையானவர்களுக்கு அது சரிவர கிடைப்ப தில்லை. அடுத்தபடியாக உலக வங்கியிலேயிருந்து கொடுக்கின்ற பணத்திற்கு இப்போது தனிக் கணக்கு வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சென்னை நகரம் மட்டும் அல்ல, சென்னை நகரத்திற்கு அப்பால் இருக்கிற தமிழகத்தைச் சுற்றிப் பார்த்தால் கூட நன்றாகத் தெரியும், குடிதண்ணீர் எவ்வளவு விரயமாகிக் கொண்டிருக்கிறது என்று. நெய்வேலியிலே இருக் கிற தண்ணீர் வீணாகிக் கொண்டிருக்கிறது. ஏன் வீணாக வேண்டும்? பக்கத்திலே இருக்கிற தென்னாற்காடு மாவட்டத் திற்கோ அல்லது அருகாமையில் உள்ள ஊர்களுக்கோ அந்த தண்ணீரைப் பயன்படுத்தக் கூடாதா? அப்படி அந்தத் தண்ணீரை பயன்படுத்தும் வகையில் தக்க முயற்சிகளை அரசு உருவாக்கித் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இன்னொன்றையும் நான் சொல்ல வேண்டும். நாங்கள் சாலை யில் வந்துக் கொண்டிருக்கும்போது, வீராண திட்டத்திற்காக வரவழைக்கப்பட்ட பைப்புகள் ஆங்காங்கே இருப்பதைப் பார்க் கிறோம்.

அந்த பைப்புகளை இந்தத் தமிழகத்திலே இருக்கிற சில சமூக விரோதிகள் தவறாகப் பயன்படுத்துகிறார்கள். கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களும், இழிவான தொழிலில் இருப்பவர் களும் அதை முறையாக வரைப்படுத்தி பயன்படுத்திக் கொள் கிறார்கள். இந்த நிலைமை தடுக்கப்பட வேண்டும் என்றால், அந்த பைப்புகளை நெய்வேலியில் உள்ள தண்ணீரை தமிழகத் திலே உள்ள தென்னாற்காடு மாவட்டத்திற்கும், அருகில் உள்ள பகுதிகளான திருவண்ணாமலை, செஞ்சி போன்ற இடங்களுக்கு கொண்டு வருவதற்குப் பயன்படுத்த அரசு ஆலோசனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலே வறட்சி நிவாரணத்தைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். அதிலே புதிய ஆழ்துளை கிணறுகளை வாடிகள் போட்டிருப்பதாகவும், கை பம்புகளையும், கை இறைப்பான்களையும் போட்டிருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அப்படிச் சொல்லும்போது, நான் கேட்க விரும்புகிறேன்., அன்றைக்கு போட்ட அத்தனை பைப்புகளும் செயலில் இருக்கிறதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். எங்கேயாவது செயலாற்றுகிறதா என்பதை எண்ணிப் பாருங்கள். சென்னை நகரத்தில் எத்தனை பைப்புகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை எண்ணிப் பாருங்கள். எங்கேயும் பைப்புகள் இயங்கவில்லை. ஏன் இதையெல்லாம் சுட்டிக்காட்டுகிறேன் என்றால், நாம் தோழமை கட்சியாக இருக்கிற காரணத்தால் எங்கே போனாலும் மக்கள் என்னை கேட்கிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நண்பர்கள் என்ற முறையில் எங்களைக் கேட்கிறார்கள். ஏழைகளுக்கு வாக்குறுதி கொடுத்தீர்களே, முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்களே, நாங்கள் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறோமே என்று கேட்கிறார்கள். ஆகவே தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் தண்ணீர்ப் பஞ்சம் இருக்கிறது. சென்னை நகரம் மட்டுமல்லாமல் சுற்றி இருக்கிற எல்லாப் பகுதிகளிலும் தண்ணீர்ப் பஞ்சம் இருக்கிறது. திண்டிவனத்தில் தண்ணீர் இல்லை. பாதுகாக்கப்பட்ட தண்ணீர் என்று சொல்கிறார்கள். அங்கே கொடுக்கப்படுவது பாதுகாக்கப்பட்ட தண்ணீர் அல்ல. கழிவு நீரும், குடிதண்ணீரும் கலந்து பின்னிப் பிணைந்து ஓடிக்கொண்டிருக்கிற காட்சியை நாம் பார்க்கிறோம்.

அடுத்தபடியாக வடிகால் வாரியம். வடிகால் வாரியத்தை நினைத்தாலே சிரிப்பு தான் வருகிறது. இந்த நகரத்திற்காக 50 ஆண்டுகளுக்கு முன்னால் எப்படி திட்டமிட்டார்களோ, அந்த அடிப்படையில் போடப்பட்ட குழாய்கள் தான் கீழே இருக்கின்றன. குழாய்கள் புதியதாக போடப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. தெருக்களில் சிறு மழை தூறினாலும் தண்ணீர் தேங்கி நிற்கிறது. இந்தக் காட்சியைப் பார்த்து யாராவது அதிகாரிகளிடம் சொன்னால் அதிகாரிகள், ஏ.ஈ. இல்லை, ஜே.ஈ. இல்லை என்று சொல்கிறார்களே தவிர, சரியான நடவடிக்கைகள் எதுவும் எடுப்பதில்லை. இப்போது சாதாரண மக்கள் எல்லாம் அரசியலில் விழிப்புணர்ச்சி பெற்று இருக்கிறார்கள். ஓட்டு போட்டோமே, ஓட்டு வாங்கியவர்கள் எங்கே என்று தெருக்களில் அவர்கள் வந்து போடுகிற சத்தம் இந்த அரசை பாதிக்கிறது என்பதாலே தான் இவைகளை எல்லாம் நான் சொல்கிறேன்.

சென்னை நகரம் மிகமிக சீரழிந்து இருக்கிறது. சென்னை நகரம் மிகமிகக் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது. ஆங்காங்கு அடைப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. இதனை யாரும் மறுக்க முடியாது. சென்னை நகரத்தில் மாடிக் கட்டி





டங்கள் அதிகமாகி இருக்கின்றன. ஆனால் கழிவு நீரை வெளியேற்றுவதற்கு வேண்டிய போதுமான வசதிகள் செய்யப்படவில்லை. இன்றைக்கு இப்படிப்பட்ட நிலைமைகள் சென்னை நகரத்தில் இருக்கின்றன. ஆனால் அதிகாரிகள் தங்களுடைய அறிக்கையில் ஒன்றை மட்டும் சொல்லி இருக்கிறார்கள். ஜார்ஜ் டவுன் பகுதியில் 21 தெருக்களில், 47 ஆயிரம் மக்கள் வசிக்கிற இடத்தில் வடிகால் வாரியம் சிறப்பாக செயலாற்றுகிறதாம். சென்னையைச்சுற்றிப் பார்க்கிற அதிகாரிகள், சிங்காரச்சென்னை என்று சொல்கிற அதிகாரிகள், பரந்து விரிந்து இருக்கிற சென்னையில் ஒரே ஒரு இடத்தை மட்டும் காட்டி தங்களுடைய எண்ணங்களை அங்கே முத்தாய்ப்பாக வைத்திருக்கிறார்கள். அங்கே சாக்கடை நீர் தேங்கவில்லை என்று அவர்கள் சொல்கிறதைப் பார்க்கிறபோது ஏதோ வானத்தில் ஒரே ஒரு நிலவு என்பதைப் போல சொல்கிறார்கள். மீதி இடமெல்லாம் கறுப்பாக இருக்க வானத்தில் ஒரேஒரு நிலவு இருக்கிறது என்பதைப் போல அறிக்கை சொல்கிறது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவாக கேட்டுக் கொள்வேன். இப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்க வேண்டாம். இந்த அரசு ஏழை, எளிய மக்களின் அரசு, புனிதமான அரசு என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆகவே இருக்கிற நிலைமைகளை மாற்றி மக்களுக்கு வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திருமங்கலம் நகரத்திற்கு சோழவந்தானிலிருந்து குடிதண்ணீர் கொண்டுவருவதற்கு 80 லட்சம் ரூபாய் செலவில் திட்டம் வடிகால் வாரியத்தில் செயல்பட்டு வருகிறது. சோழவந்தான் ஆற்றில் கிணறு தோண்டப்பட்டு, திருமங்கலம் வரையில் சுமார் 30 கிலோ மீட்டர் தூரம் குழாய்கள் பதிக்கப்பட்டு, தண்ணீர் கொண்டு வரப்படவுள்ளது. ஆனால் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டும் பணி இன்னும் துவங்கப்படவில்லை. திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு இது வரையில் மூன்று ஆண்டுகளாகியும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டாத காரணம் என்னவென்று புரியவில்லை. வாரியம் ஏன் அந்தப் பகுதியில் அசட்டையாக இருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. உடனடியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டும் பணியை வாரியம் துவங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி பல பிரச்சனைகள் இருக்கின்றன. சென்னை நகரத்தில் இருக்கிற பிரச்னைகள் மிகவும் கடுமையாக விமர்சிக்கப்படுகின்றன. நாம் தோழமை கட்சிகளாக இருக்கிறோம். இப்போது பார்த்தீர்கள் அல்லவா ? தி.மு.க. அணி என்று சொன்னார்கள். அவர்கள் வெளியேறிய உடன் பின்னாலேயே மற்றவர்களும் போய்விட்டார்கள். ஒரே அணி என்பதால் மனசாட்சியை கீழே வைத்துவிட்டார்கள். நாமும் ஒரே அணி என்று சொல்கிறபோது நாங்கள் சொல்கிற காரியங்களை இந்த மாமன்றத்திலே இருக்கிற அமைச்சர்கள் அவற்றைச் செய்தாக

வேண்டும். அப்போது தான் நம்முடைய தோழமை அணி ஒத்து, நின்று நிலைக்கிற நிலைமை இருக்குமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே தான் கேட்டுக் கொள்கிறேன். இலக்கியத் தென்றலாக இருக்கிற நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், நாங்கள் எழுப்புகிற பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்கிற வகையில், வேளாண்மை துறையிலும், வடிகால் வாரியத்திலும் இருக்கிற அதிகாரிகளை இயக்கி, முறைப்படுத்தி, எங்கெங்கே பிரச்னைகள் இருக்கிறதோ, எங்கெங்கே ஏழைகள் தண்ணீர் இல்லாமல் வாடுகிறார்களோ அங்கெல்லாம் தண்ணீர் ஊற்ற வேண்டும். அப்படி ஊற்றுகின்ற தண்ணீரிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தெரிவார்கள். அங்கே அமைச்சர் காளிமுத்து அவர்கள் தெரிவார்கள்

(முற்பகல் 11-20)

ஆகவே அமைச்சர் அவர்கள் சரியாக வேலை செய்கிறார்கள் என்று சொல்வார்கள். அதிலே நமக்கும் மரியாதை, நம்முடைய அணிக்கும் மரியாதை. எனவே தயவு செய்து சென்னையை சீரமைக்குங்கள். தண்ணீர் இல்லாத இடங்களுக்கு தண்ணீர் கொடுங்கள். அதற்கான செலவினங்களை மத்திய அரசு, அதிகமாகத் தருகிறது. ஆகவேதான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை எடுத்து இதிலே அதிகமான கவனம் செலுத்தி, இதைச் செயல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

**திரு. ப. ந. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃது ஆற்றாது எழுவாரை எல்லாம் பொறுத்து'' என்று வான்புகழும் வள்ளுவன் தெளிவாகச் சொல்லியிருக்கிறான். அந்தக் குறிக்கோளை தன்னகத்தே தேக்கி வைத்துள்ள புரட்சித்தலைவர் அவர்களின் இனிய அரசு இன்றைய தினம் வேளாண்மைத்துறை பற்றிய மானியக் கோரிக்கையை இங்கே வைத்திருக்கிறது. 1985-86 ஆம் ஆண்டில் பல் வேறு நல்ல திட்டங்கள், புதிய திட்டங்கள், வேளாண்மைத்துறையைச் செம்மைப் படுத்துவதற்கு, சீர் படுத்துவதற்கு, சரி செய்வதற்கு அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். மானாவரியில் பாகுபாடு மேம்பாடு திட்டம், சான்றிதழ் பெற்ற பயிர் வகைகளை மானிய உதவியுடன் உற்பத்தி செய்கின்ற திட்டம், 1985-86 ஆம் ஆண்டில் சாக்கோடு மற்றும் பாப்பான்குளம் பகுதியில் விதைப் பண்ணையை செம்மைப்படுத்துகின்ற திட்டம், விதை சேகரிப்பு மற்றும் தரம் பிரிக்கும் 56 இயந்திரங்களை வாங்குகின்ற திட்டம், தஞ்சை மாவட்டப் பகுதியிலே உப்பு படிந்த நிலமாக இருக்கின்ற நிலங்களை ஆண்டு ஒன்றுக்கு 500 ஹெக்டேர் நிலங்களை தரம் பிரித்து ரசாயன உரங்களைக் கொண்டு சீர் செய்கின்ற திட்டம், என்று இப்படி பல்வேறு திட்டங்களை





எதிர்வரும் காலங்களில் நிறைவேற்ற இந்த மானியக் கோரிக்கையிலே அனுமதி கோரியிருக்கிறார்கள். தஞ்சை, திருச்சி, ஆற்காடு, புதுக்கோட்டை, பகுதியில் விவசாயத்தை சீர் செய்வதற்கும், கடந்த வெள்ளச் சேதக் காலங்களில் பாதிக்கப் பட்ட நிலப் பகுதிகளை சீர் செய்யும், பொருட்டு 24.8 லட்சத்திற்கு திட்டம் தீட்டி, அதிலே 1,200 ஹெக்டேர் நிலங்களை புல் டோசர் வைத்து சமன் செய்கிற திட்டம் என்று இப்படி பல்வேறுதிட்டங்கள் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன.

குடிநீர் வாரியத்தைப் பொறுத்தவரை, ரூ. 128.5 கோடிக்கு உலக வங்கி உதவியுடன் குடிநீர் மற்றும் குறைந்த செலவில் சுகாதார திட்டத்தின் கீழ், எனது தொகுதியான, பட்டுக் கோட்டை நகரத்திற்கு ரூ. 64.5 லட்சத்திலே ஒரு திட்டத்தை இந்த அரசு தீட்டியிருக்கிறது. இப்படி பல்வேறுபட்ட நல்ல திட்டங்களை தீட்டி இருக்கின்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசு, மேலும் பல நல்ல திட்டங்களை தீட்டித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் நிலமகளைக் குளிர்விக்கும் மலைமகள் உலர்த்தும் மாநெடும் கூந்தல் காவிரித்தாய். அந்தப் படுகையிலே இருக்கின்ற தஞ்சை மாவட்டத்தில் வாழ்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள், வேளாண் பெருங்குடி மக்கள் நன்மை பெறுகின்ற வகையில், இன்றைய தினம் அரசு 102 கோடி ரூபாயிலே ஒரு திட்டத்தை வைத்து, ஆறுகளைப் புதுப்பிக்கின்ற பணிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அப்படி மேற்கொண்டிருக்கிற அந்தப் பணியில், இந்த ஆண்டு ஜி.ஏ. கனால் பகுதி மட்டும் சேர்க்கப்பட்டு இருக்கிறது. குறிப்பாக கீழ்த்தஞ்சைப் பகுதியில் உள்ள இடங்கள் இதிலே சேர்க்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் மேல் தஞ்சையிலே இருக்கின்ற ஒரத்தநாடு, திருவோணம், பட்டுக்கோட்டை, பேராவூரணி, திருத்துறைப் பூண்டி போன்ற பகுதிகள் விடுபட்டுப் போய் இருக்கின்றன. அதையும் அரசு கவனித்துப் பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, காவிரிப் பிரச்சனையில் பல்வேறுபட்ட ஆட்சியாளர்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் இந்த மன்றத்தில் கூறப்பட்டு இருக்கின்றன. எத்தனையோ வாதங்கள் எடுத்து வைக்கப்பட்டு இருக்கின்றன. முந்தைய ஆட்சியாளர்கள் சரியாக செயல்படவில்லை என்ற காரணத்தால்தான் பிறந்த மண்ணுக்குச் சொந்தம் கொண்டாடியவர்களை புறம் தள்ளிவிட்டு, தஞ்சை மக்கள் வளர்ந்த மண்ணுக்கு உரியவரை இன்றைய தினம் ஆட்சியிலே அமர்த்தி இருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு கூறிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். ''Yes. It is a land of M. G. R.'' என்று சொல்லுகின்ற வகையிலே தஞ்சை மாவட்டம் முழுவதும் ஆளும் கட்சி வெற்றி பெற்றுள்ள இந்த நேரத்தில் இங்கே இருக்கின்ற வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களும், நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சை மக்களின் நெஞ்சம் கொஞ்சுகின்ற வகையில், அவர்கள் வாட்டம் போக்குகின்ற வகையில், நாட்டம் கொண்டு, கர்நாடக அரசோடு உரிய தொடர்பு கொண்டு விரைவான நல்ல நடவடிக்கையை எடுத்து, தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைத் துறையில் ஈடுபடுகின்ற அந்த விவசாய, பெருங்குடி மக்களின் வாட்டம் போக்குகின்ற வகையில், வருவாய் பெறுகின்ற வகையில், நல்ல திட்டமான அந்த காவேரி நீர்த் திட்டத்தை அவர்கள் உடனடியாக கர்நாடக அரசோடு தொடர்புகொண்டு நிறைவேற்றித் தர வேண்டும் என்று, ஒரு சுமுகமான தீர்வு காணவேண்டும் என்று இந்த இனிய நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டும் அல்லாது, கோவை மாவட்டத்தை நீங்கள் எடுத்துக்கொள்வீர்களானால், அங்கே இருக்கின்ற மண் வள பாதுகாப்பு, விவசாயிகள் உழைப்பு போன்ற வகைகளினால் ஒரு ஏக்கருக்கு 40 மூட்டைகளுக்கு மேல் நெல் அறுவடை செய்வார்கள். அவர்களுக்கு விலையும் அங்கே அதிகமாக இருக்கிறது. விளைச்சலும் அதிகமாக இருக்கிறது. ஆனால் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கே இருக்கின்ற மண் தரத்தைப் பொறுத்த வரையில், எவ்வளவு தான் விவசாயிகள் சிரமம் எடுத்து உழைத்தாலும் கூட, ஒரு ஏக்கருக்கு 25 மூட்டைக்கு மேல் எந்த விவசாயியும் சாகுபடி செய்ய முடியாத நிலை இருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற வேளாண்மைப் பெருங்குடி மக்களுக்கு குவிண்டால் ஒன்றுக்கு வழங்கப்படுகின்ற 145 ரூபாய் என்ற தொகையை—அண்மையில் கர்நாடக மாநில அரசு கூட 193 ரூபாய் என்று தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கிறார்கள்—அதிகமாக்கி அந்த அளவுக்கு எங்களுக்கு 200 ரூபாய் குவிண்டாலுக்கு என்று உயர்த்தித் தரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் பெருந்தகையை கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டும் அல்லாது, தஞ்சையில் வேளாண்மைக் கல்லூரி ஒன்று அமைக்கப்படும் என்று கடந்த சட்டமன்ற கூட்டத்தின் போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்து இருந்தார்கள். அந்த வேளாண்மைக் கல்லூரியை விரைவில் தஞ்சையில் அமைத்துத் தரவேண்டும். காலம் கடத்தாமல் அதை சீக்கிரமாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே இன்னும் ஒன்றையும் குறிப்பிட்டுக் கூற கடமைப் பட்டிருக்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற விவசாயிகளுக்கு, குறிப்பாக காவேரி நீர் பாசனத்தை நம்பி விவசாயம் செய்பவர்களுக்கு, 6 மாதம் நிச்சயமாக வேலை இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அந்த 6 மாதத்திற்கு ஏதேனும் ஒரு தொழில் செய்கின்ற வகையில் தென்னை வளர்ச்சியிலும்,





எண்ணை வித்துக்கள் வளர்ச்சியிலும் ஈடுபடுத்தி அண்மையில் நடந்த மாவட்ட கவுன்சில் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, பட்டுக்கோட்டை சரகத்தில் ஒரு தென்னைத் தொழிற்சாலை, தென்னையின் உப பொருட்களில் இருந்து கிடைக்கின்ற பொருள்களை வைத்து ஒரு தொழிற்சாலை 10 கோடி ரூபாய் செலவில் நிறுவுவதற்கு அரசுக்கு கோரிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சீர்தூக்கி பரிசீலித்து உதவி செய்து, அதை நிறைவேற்றித்தர வேண்டும் என்று இந்த இனிய நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாது, வறட்சிப் பணிகளின் போது 1982—83-ஆம் ஆண்டில் பழைய டெல்டாவில் 2000 வடிமுனை குழாய் கிணறுகள் போட வேண்டும் என்று அரசுக்கு ஒரு கோரிக்கை கொடுக்கப்பட்டது. அது இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று இந்த இனிய நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். சி. எம். பி. பாசன வசதியில் 1750 குழாய் கிணறுகள் போடப்படவேண்டும் என்று இதுவும் அந்த வறட்சித் திட்டத்தில் ஒத்துக் கொண்ட ஒன்று--இதை 2 தினங்களுக்கு முன்னால் ஒரு கருத்தரங்கில் பேசுகின்றபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். இதையும் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் ஒன்றையும் இந்த இடத்தில் எடுத்துச் சொல்லக் கடமை பட்டிருக்கிறேன். ''நடவு செய்த உழவர் கூலி 4 அணா ஏற்பதும் உடல் உழைப்பு இல்லாத செல்வர் உலகை ஆண்டுலாவலும்'' என்று பாரதிதாசனார் அவர்கள் ஒரு கவிதையில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக கூட்டுறவு கடன் பெற்ற தஞ்சை மாவட்ட விவசாயிகள் பிரச்சினை பற்றி ஒரே ஒரு கருததை மட்டும் இந்த இடத்தில் சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்ளலாம் என்று நான் கருதுகிறேன். தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற விவசாயிகளுக்கு கடந்த 10 ஆண்டு காலமாக கூட்டுறவுக் கடன்கள் தள்ளி வைக்கப்பட்டக் காரணத்தால் வட்டி, அபராத வட்டி, பல்வேறு வட்டிகள் எல்லாம் கூடி அன்றையதினம் ஆயிரம் ரூபாய் கூட்டுறவு கடன் பெற்ற ஒருவர் 1,420 ரூபாய் வட்டியாக சேர்த்து மொத்தம் 2,420 ரூபாய் செலுத்துகின்ற அளவுக்கு, அந்தச் சுமையை அந்த விவசாயிகள் தாங்கமுடியாத அளவுக்கு அது சென்று இருக்கிறது. இதை அருள் கூர்ந்து, வேளாண்மைத்

(முற்பகல் 11-30)

துறை அமைச்சர் அவர்களும், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற விவசாயிகள் ஆறு ஏக்கர், ஏழு ஏக்கர் நிலம் உள்ள நடுத்தர விவசாயிகள் எல்லாம் இன்றையதினம் ஆழ்துளைக் கிணறுகள் போடுகின்ற பணியிலே தீவிரமாக தங்களை அர்ப்பணித்துக் கொள்கிற நேரத்தில், தினசரி வாடகை டிரில்லர்களுக்கு 75 ரூபாயாக இருந்ததை இன்றைய

நிலம் வேளாண்மைத் துறை 250 ரூபாய் ஆக உயர்த்தி இருக்கிறது. டெபாசிட் 1300 ரூபாயாக இருந்ததை 3,000 ரூபாயாக உயர்த்தி இருக்கிறார்கள். அந்தத் தொகையினை அருள் கூர்ந்து பரிசீலித்து குறைத்துக் கொடுக்க வேண்டும். விவசாயிகள் ஏறத்தாழ 8 நாள் 10 நாள் கூட போர் போடுவதற்கு ஒரு மாதம் கூடப் பிடிக்கின்றது. அந்த டிரில்லர் வாடகை அதிகப்படியாக இருக்கின்றது. அருள் கூர்ந்து சிந்தித்து குறைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த இனிய நேரத்தில் வேளாண்மை மானியத்தில் என்னுடைய கருத்துக்களையும் எடுத்துச் சொல்ல வாய்ப்பினை நல்கிய சட்டப் பேரவைத் துணைத் தலைவருக்கு என்னுடைய நன்றியறிதலைக் கூறி அமர்கிறேன். நன்றி வணக்கம்.

திரு. வே. கு. சின்னசாமி : சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரால் கொண்டுவரப்பட்டு, அறிவிக்கப்பட்ட வேளாண் துறை மற்றும் குடிநீர் வழங்கல் சம்பந்தமாக என்னுடைய கருத்துக்களை கூற நான் ஆசைப்படுகிறேன். காலையிலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் , சட்டமன்றத்தைத் துவக்குகின்ற நேரத்தில் 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்' என்ற ஒரு அருமையான வள்ளுவன் கருத்தை இங்கே எடுத்துரைத்தார்கள். அதற்காக அவர்களுக்கு நான் நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு, குறிப்பாக, புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் தமிழகத்தினுடைய முதலமைச்சராக பொறுப்பேற்றதற்குப் பின்னாலே தான் விவசாயப் பெருங்குடி மக்களுடைய வாழ்க்கைத் தரம் அந்த அளவுக்கு உயர்ந்துள்ளது என்பதை நான் எடுத்துக்கூற கடமைப்பட்டுள்ளேன்.

புரட்சித் தலைவர் அவர்கள் இன்றையதினம் சினிமாத் துறையிலே இருந்த நேரத்தில் அவர் 'விசவாயி' என்ற படத்திலே நடித்திருக்கின்றார். அந்தப் படத்திலே கூட, 'கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி' என்ற தன்னுடைய கொள்கையை, விளக்கமாக சினிமாத்துறையிலே எடுத்துக் காட்டினார்கள். ஆனால், அப்படிச் சொன்னவர் இந்த நாட்டினுடைய முதலமைச்சராக பொறுப்பேற்றதற்குப் பின்னால், முதலமைச்சராகப் பொறுப்பேற்ற புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களைப் பார்த்து எதிர்க்கட்சி நண்பர்கள் எல்லாம் விவசாயி என்ற படத்திலே நடித்த புரட்சித் தலைவர் விவசாயிகளுக்கு என்ன செய்தார் என்று கேட்டவர்களும் வெளியிலே உண்டு. உள்ளேயும் உண்டு. ஆனால் அந்த லட்சியத்திற்கேற்ப கொள்கை விளக்கமாகத்தான் இன்றையதினம் விவசாயிகளுக்கு இலவச மின் சாரம் என்ற திட்டத்தை அறிவித்தார். இந்தியத் துணைக் கண்டத்திலேயே பெருமைக்குரிய முதல்வர் தமிழக முதல்வர் என்று நான் மனம் திறந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.





அதேபோல் கோடிக்கணக்கான ரூபாய்களை வரி தள்ளுபடியாக விவசாயத் துறையிலே செய்திருக்கிறார், கூட்டுறவுக் கடன் சங்கத்தின் மூலமாக என்பதை நான் இந்த நேரத்திலே பணிவன்போடு நெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியான பவானிசாகர் பகுதியிலே கீழ்பவானி அணைக்கட்டு தண்ணீர் பாய்ந்து கொண்டிருக்கிறது. அங்கே வாழ்கின்ற விவசாயிகளுக்கு இரண்டாம் போகத்திற்கு முறை வைத்து விடுகின்ற சிஸ்டம் கடைப்பிடிக்கப்பட்டது. அப்படி விடும்போது அங்கே இருக்கின்ற விவசாயிகள் தங்களுடைய சொந்த பூமியிலே உள்ள சொந்தக் கிணறுகளிலே தண்ணீரை இறைத்தும், அங்கே எல்லோருக்கும் விடப்படுகின்ற முறைவைத்து பாய்ச்சுகின்ற தண்ணீரை வைத்தும், நெல், கரும்பு, போன்ற சாகுபடிகளைச் செய்து வந்தார்கள். அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு தற்சமயம் வரி அதிகமாக விதித்திருப்பதாக எங்களிடத்திலே கூறியிருக்கிறார்கள். ஆனால் விவசாயிகள் எல்லோருக்கும் என்ன தண்ணீர் வரி விதிக்கிறீர்களோ அதைத்தான் போடவேண்டும் என்பதை இந்த நேரத்திலே வலியுறுத்திக் கூறிக் கொள்கிறேன்.

அதோடு, அங்கே விவசாயிகளுக்கு என்று கிளை வாய்க்கால்களை சீரமைக்கின்ற பணியானது துரிதமாக நடைபெற்று வருகிறது. அந்தப் பணி நடைபெறுகின்ற நேரத்தில் ஒரு சில விவசாயிகளுக்கு அந்த சுலூஸ் வைக்கின்ற நேரத்தில் பல பிரச்சினைகள் ஏற்பட்டு எந்தனை நம்பர் சுலுஸிலிருந்து தண்ணீரை எடுத்துக் கட்டுவது என்ற நிலைமை தெரியாத நேரத்தில் சரியான தகவல் கொடுக்கப் படாமல் சில பூமிகளில் இந்த முறை தண்ணீர் கூட பாயாமல், வறண்டுள்ளது என்று தெரிவிக்கக் காரணம் இதுதான். காரணம் அங்கே இருக்கிற வருவாய்த்துறை அதிகாரிகளும், நீர்ப பாசனத் துறை அதிகாரிகளும் ஆலோசித்து ஜாயின்ட் ரிப்போர்ட்- ஆகக் கொடுக்கிற நேரத்திலேதான் அந்தப் பணிகள் துவங்கப் படுகின்றன. இப்படிப்பட்ட முறையிலே காலதாமதம் தவிர்க்கப் படுகின்ற நிலையிலே பணிகளைத் துரிதப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் திரு எம். ஜி. ஆர். ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப் பின்னர் தான் குடிநீர்ப் பிரச்சினை முழுமையாகத் தமிழகத்திலே தீர்க்கப்படவேண்டுமென்ற முறையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் பெருமையோடு சொல்லிக் கொள்ள வேண்டும். வறட்சி ஏற்பட்ட காலத்திலே லட்சக்கணக்கான கிராமங்களிலே ஆழ் குழாய்க் கிணறுகள் போர்க்கால அடிப்படையிலே அமைக்கப்பட்டன. அதே போன்று இந்த ஆண்டும் நிறுவப்பட வேண்டும். சத்தியமங்கலத்திலே, பவானிசாகரிலே, காடுகளிலே இருக்கிற மிருகங்கள் கூட குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் இறந்துபோன நிலைமையை நாம் கண்கூடாகக் கண்டிருக்கிறோம், பத்திரிகைகளிலே படித்து இருக்கிறோம். அதனால் வனத் துறை மூலமாகத் தண்ணீர்த் தொட்டிகள் கட்டப்பட்டு, அந்த மிருகங்களுக்குத் தினந்தோறும்

தண்ணீர் கிடைக்கக்கூடிய ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். அதே நிலைமை பொதுமக்களுக்குச் செய்யப்பட வேண்டும். புஞ்சைப் புளியம்பட்டிக்கு பவானிசாகரிலிருந்து கூட்டுக் குடிநீர் திட்டத்தின் அடிப்படையிலே பழங்காலத்திலிருந்து நீர் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பக்கத்திலே இருக்கிற கிராமங்களுக்குத் தண்ணீர் இல்லாத நிலைமை ஏற்பட்டு அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அங்கே இருக்கின்ற குழாயிலிருந்து இணைப்பை ஏற்படுத்தி தண்ணீரை அந்தக் கிராமங்களுக்கு வழங்கலாம் என்றால் புஞ்சைப் புளியம்பட்டி நிர்வாக அதிகாரிகளும், பொதுமக்களும், அதற்கு ஆட்சேபனை தெரிவிக்கிறார்கள். எங்களுக்குப் போதுமான தண்ணீர் இருக்கிறது. அதிலிருந்து தண்ணீர் எடுத்தால் எங்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்ற நியாயமான காரணத்தைச் சொல்கிறார்கள். ஆகவே நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன் . பவானிசாகரிலே இன்னொரு சுத்தகரிப்பு நிலையத்தை அமைத்து, இன்னொரு லைன் போட்டு அது மூலமாக பக்கத்திலே உள்ள கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுப்பதற்கு முயற்சிகளை எடுக்க வேண்டுமென்றும் இது மிக மிக அவசியம் என்றும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து புரட்சித் தலைவர் அரசு ஏற்பட்டதற்குப் பிறகு நம்பியூருக்கும், 5 பஞ்சாயத்துக்களுக்கும் 1979–80-ஆம் ஆண்டிலே உத்திரவைப் போட்டு 45 லட்சம் ரூபாய் செலவிலே திட்டத்தை ஏற்படுத்தி தண்ணீர் கொடுக்கப்பட்டது. வெள்ளியபாளையம், கிடாறை, கிளியம்பாளையம் ஆகிய பகுதிகள் மேடான பகுதிகளிலே இருப்பதால் தண்ணீர் கிடைக்கவில்லை. குடிநீர் வாரியமும் ஆழ்குழாய்க் கிணறுகளை போட்டும் அங்கே இருக்கிற நொருக்குக் கற்கள் கீழே இறங்கி அது மூடப்பட்டு விட்டது. அவர்களுக்கு எந்தவிதமான முயற்சியும் வாரியம் எடுக்கவில்லை. தண்ணீர் கொடுக்கப்படாத நிலைமை இருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். நம்பியூர் ஸ்கீமில் 3,4 லட்ச ரூபாய் சர்ப்ளஸாக இருப்பதாக அறிகிறேன். அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு வறட்சி நிவாரணக் கிணறு என்ற முறையிலே, பெரிய கிணறைத் தோண்டி இருக்கிறார்கள். அந்தக் கிணற்றிலே தண்ணீர் போதுமான அளவுக்கு இருக்கிறது. நான் சென்று பார்த்தேன். வாரியத்தின் அதிகாரிகளும் பார்த்து இருக்கிறார்கள். அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு கிணற்றிலிருந்து மோட்டார் மூலமாகத் தண்ணீர் எடுத்து அந்த ஊர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் உதவியோடு, கோவை பெரியார் மாவட்டங்களிலே புளுரைடு வாட்டரை சீராக்கு வழங்கும் திட்டத்தை 15 கோடி ரூபாய் செலவிலே நிறை வேற்ற இருக்கிறார்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக நான் நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே இலத்தூர் போன்ற



கிராமங்கள் அதிலே சேர்க்கப்படவில்லை. அங்கே நல்ல நீராகத்தான் இதுவரையிலே இருந்தது. என்ன காரணத்தினாலோ உப்புத் தண்ணீராக மாறியிருக்கிறது. ஆகவே விட்டுப் போன கிராமங்களையும் இந்தத் திட்டத்திலே சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் திட்டம் முடிவதற்கு 2½ ஆண்டுக்காலமாகும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அவர்களுக்குக் குடிக்கக்கூட தண்ணீர் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட முக்கியமான இடங்களில் வேலைகளைத் துரிதப்படுத்த வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11–40)

தற்சமயத்திலே ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்ட இடங்களிலே மின்சார மோட்டார்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் ஊராட்சி ஒன்றியங்களால் கட்டப்பட்டிருக்கின்றன. குடிதண்ணீருக்காக வைக்கப்பட்டிருக்கின்ற கிணறுகளில் உள்ள மோட்டார்கள் பழுதடைந்துவிட்டால் குறிப்பிட்ட சில தனி நபர்களிடத்தில் கொடுத்து ரிப்பேர் செய்யச் சொல்கிறார்கள். அவர்கள் 15 நாட்கள், 20 நாட்கள், ஒரு மாதம் என்று எடுத்துக்கொண்டு பழுது பார்த்துக் தருகிறார்கள். இப்படி அவர்கள் சரி செய்து கொடுப்பதற்குக் காலதாமதம் ஆகிறது. அந்த ஒரு மாத காலத்தில் அந்தப் பகுதி மக்கள் குடிதண்ணீருக்காக மிகவும் அவஸ்தைப்படுகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அரசாங்கத்தின் மூலமோ அல்லது குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமோ, தனியாகப் பணி மையங்கள் ஏற்படுத்த வேண்டும். இப்பொழுது போக்குவரத்துக் கழகங்களுக்கு என்று தனியாகப் பணி மனைகள் அமைக்கப்பட்டு, வண்டிகளைச் சரி செய்கிறார்கள். அன்றன்றைக்கு ஏற்படுகின்ற ரிப்பேர்களை அன்றிரவே ரிப்பேர் செய்து காலையிலே வண்டிகள் ஓட்டத்திற்கு வருகின்றன. எனவே இப்படிப்பட்ட நிலையில் ஒவ்வொரு டிவிஷனிலோ, அல்லது ஒவ்வொரு மாவட்டத்திலோ, அல்லது ஒவ்வொரு எக்சிகியூட்டிவ் என்ஜினியர் உள்ள பகுதிகளிலே பணி மையங்களை அமைத்து, மோட்டாரில் பழுது என்று தொலை பேசி மூலமோ அல்லது ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள் மூலமோ அல்லது பொது மக்கள் மூலமோ பணிமனைகளுக்கு தகவல் வந்தால் கூடிய விரைவில் அந்த மோட்டார்களைச் சரி செய்து கொடுக்கும் வகையில், அத்தகைய பணிமனைகளை உருவாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களுடைய மின்சார மோட்டார்கள் பழுதடைந்து விட்டால் ஒரே நாளில் அல்லது ஒரே இரவிற்குள் சரி செய்து விடுகிறார்கள். ஆனால் குடிதண்ணீருக்காக இந்த மோட்டார்கள் பழுதடைந்து விட்டால் மாதக் கணக்கில் ஆகிறது என்பதை இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிநீர் வடிகால் வாரியத்தின் மின்சார மோட்டார்களை வைத்திருக்கிறார்கள். குழாய்க் கிணறுகளில் உள்ள மின்சார மோட்டார்கள் பழுதடைந்துவிட்டால், உடனடியாக அவர்கள் வேறு மோட்டார்களைத் தயாராக வைத்திருந்து அந்த இடத்தில் தற்காலிகமாகப் பொருத்தி, பழுதடைந்த மோட்டார்களைப் பழுது பார்க்கின்ற வரையில் தண்ணீர் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரூராட்சி மன்றங்கள், அதாவது டவுன் பஞ்சாயத்துகள் என்று சொல்லப்படுபவைகளுக்கு மத்திய நிதி உதவி கிடைப்பதில்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், பேரூராட்சிகள் என்பதற்கு மற்ற மாநிலங்களில் மத்திய அரசின் நிதி உதவி கிடைக்கிறது. ஆனால் தமிழ்நாட்டிலே உள்ள டவுன் பஞ்சாயத்துக்களுக்கு மட்டும் மத்திய அரசின் நிதி உதவி கிடைக்காமல் இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். நாம் ஒரே இயக்கமாக இருக்க வேண்டுமென்று விரும்புகின்ற தோழமைக் கட்சியான இந்திய தேசிய காங்கிரஸ் நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற மாநிலங்களில் கிடைப்பதைப்போல, நம்முடைய மாநிலத்தில் உள்ள பேரூராட்சிகளுக்கும் நிதி உதவி கிடைக்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் இதைத் தெரிவிப்பதற்கான காரணம் என்னவென்றால், மற்ற மாநிலங்களில் பேரூராட்சிகளை மேஜர் பஞ்சாயத்து என்றும், மைனர் பஞ்சாயத்து என்றும்தான் அழைத்து நிதி உதவி கேட்கிறார்கள். ஆனால், நம் மாநிலத்திலே மட்டும் டவுன் பஞ்சாயத்துக்கள் என்று ப்ரப்போசலை அனுப்புகின்ற நேரத்தில், டவுன் பஞ்சாயத்துக்கள் என்றால் அவர்களுக்கு நிதி உதவி தேவையில்லை என்று கருதி அவர்கள் தள்ளி விடுகிறார்கள். எனவே, டவுன் பஞ்சாயத்துக்களுக்கும் உதவி கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதை இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயத்தைப் பொறுத்தவரையில், பவானிசாகர் தொகுதி என்றால் குறிப்பாக அணைகளிலிருந்து தண்ணீர் பாய்கிற பகுதி என்ற நம்பிக்கையில் இருக்கிறார்கள். ஆனால், புளியம்பட்டி, அதைப்போன்று நம்பியூர் பகுதிகள் மிகவும் வறட்சிக்குரிய பகுதிகள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேட்டுப்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் பேசுகின்ற நேரத்தில், மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளில் வீணாகப் போகும் தண்ணீரை அவினாசி வரையில் நீட்டித்துத் தரவேண்டுமென்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், புஞ்சைப் புளியம்பட்டி, நம்பியூர் ஆகியவற்றையும் அந்தத் திட்டத்தை அமல்படுத்தும் நேரத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





வேளாண்மைத் தொழில் துறையிலே, நம்முடைய தொழில் கழகத்திலே மரியாதைக்குரிய லியாகத் அலிகான் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, நஷ்டத்திலே ஓடிக்கொண்டிருந்த அந்தக், கழகம் இன்றைக்கு இலாபத்திலே ஓடிக்கொண்டு இருக்கின்ற வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல, வேளாண் தொழில் கழகம் பல விவசாயத் தொழில்கள் துவங்குவதற்கு இன்றையதினம் உறுதுணையாக இருந்து வருகிறது. அதேபோல், வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவு இணையம் மற்றும் கரும்புப் பண்ணைக் கழகம் போன்ற கழகங்களுக்குப் பொறுப்பாளர்களாக, தலைவர்களாக, சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள், விவசாயிகள் போன்றவர்களை நியமித்தால், அந்த நிறுவனங்களும் இலாபத்திலே இயங்குவதற்கு உறுதுணையாக இருக்கும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

*திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் விவசாயத் துறைக்கு மானியம் ஒதுக்க வேண்டுமென்ற கோரிக்கையை அவைமுன் வைத்திருக்கிறார். அந்தக் கோரிக்கைமீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

விவசாயம் இன்றைக்கு தமிழகத்திற்கு மாத்திரம் அல்ல, இந்தியாவிற்கே முதுகெலும்பு போன்றது. விவசாயம் நாட்டிலே முதன்மையான ஒரு தொழிலாக இருக்க வேண்டும். அது சிறப்பாக இருக்க வேண்டுமென்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடில்லை. தமிழகத்திலே, இன்றைக்குப் பல நவீன முறைகளிலே, புதுமைகளைப் புகுத்தி, நல்ல வீரிய வித்துக்களை எல்லாம் கண்டு பிடித்து, நல்ல முறையிலே பணியாற்றி, விவசாயத் துறையிலே ஒரு மறுமலர்ச்சி தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது என்பதை நாமெல்லாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். குறிப்பாக, நம்முடைய மாநிலத்திலே மாவட்டத்திற்கு மாவட்டம் பலதரப்பட்ட முறைகளிலே விவசாயிகள் நிலைமை இருக்கிறது என்பதை நாம் உணர்கிறோம். வறட்சிப் பகுதி, நீர்ப்பாசனப் பகுதி, தஞ்சை போன்ற டெல்டா பகுதிகள் என்று பலதரப்பட்ட பகுதிகள் இருக்கின்றன. இன்றைக்கு நாம் விவசாயத்திலே வளமாக இருந்தாலும், பெரும்பாலும் நம்முடைய தமிழகம் வறட்சிப் பகுதி. வானம் பார்த்த பூமியை நம்பி வாழக்கூடிய விவசாயிகள் பெரும்பான்மையான மக்கள் இருக்கிறார்கள் என்பதை நாம் உணர்கிறோம். இந்த நிலைமையிலே பார்த்தால், இன்றைக்கு அப்படி வறட்சி நிலவி இருக்கக்கூடிய இடங்களிலே விவசாயம் செழிப்பாக இருக்க வேண்டுமானால், நிலவளம், நீர்வளம், பரந்து

இருந்தால்தான் விவசாயம் சிறப்பாக இருக்க முடியும். நீர்
வளம் இல்லாத இடத்திலே, நிலத்தடி நீரைக் கொண்டு வந்து,
அதிலே விவசாயம் செய்து, ஓரளவு தோட்டப் பயிர்கள் செய்து,
விவசாயிகளுடைய நிலைமைகளை வளர்க்கக்கூடிய அளவுக்கு,
அவர்களுடைய நிலைமைகள் இருந்துகொண்டு இருக்கின்றன.

எங்களுடைய தர்மபுரி மாவட்டத்திலே, சின்ன அணைகள்
இருக்கின்றன. கே. ஆர். பி. கிருஷ்ணகிரி அணை 10,000
ஏக்கருக்குப் பாய்கின்றது. ஈச்சம்பாடி அணை, முள்ளிக்
காட்டு அணை என்று 3000, 4000 ஏக்கர்களுக்குப் பாயக்கூடிய
சின்னச் சின்ன அணைகளைக் கட்டியிருக்கிறார்கள். வேறு நீர்ப்
பாசனம் இல்லை என்றால், நிலத்தடி நீரைத்தோண்டித்தான்
பெரும்பாலான விவசாயிகள் விவசாயம் செய்ய வேண்டிய
நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களிலே, மின்சார
மோட்டார்கள், ஆயில் இன்ஜின்கள் வைத்துத்தான் நீரை
எடுத்து விவசாயம் செய்ய வேண்டிய நிலைமையிலே நாம்
இருக்கிறோம். மின்சார மோட்டார் அமைக்க வேண்டுமென்
றால், விவசாயிகளுக்கு எளிதாக மின்சாரம் கிடைப்பதில்லை.
மின்சாரம் வேண்டுமென்று கேட்டு ஒரு விவசாயி மனு செய்தால்
10 ஆண்டுகள் இணைப்பு கிடைக்காமல் காத்துக் கொண்டிருக்க
வேண்டிய நிலைமை இருக்கிறது. மாண்புமிகு விவசாயத் துறை
அமைச்சர் சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரிகளை அணுகி,
எப்படித் தொழில் துறைக்கு மின்சாரம் முன்னுரிமை அடிப்படை
யில் கொடுக்கப்படுகிறதோ, அதேபோல், விவசாயத்திற்கும்
முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட ஏற்பாடு செய்ய
வேண்டும். ஒரு விவசாயி மனு செய்தால் 3 ஆண்டுக்காலத்திற்
குள்ளாக மின்சாரத் தொடர்பு கிடைக்கின்ற நிலைமையை
அமைச்சர் அவர்கள் உண்டாக்க வேண்டும். அப்படி உண்டாக்கு
வதற்கு நம்முடைய அமைச்சருக்குத் தகுதி இருக்கிறது என்று
நான் நினைக்கிறேன். வேளாண்மைத் துறை அமைச்சர்
திரு. காளிமுத்து—காளி என்றால் வைராக்கியம் பொருந்தியவர்,
வீரம் பொருந்தியவர்—அந்த வகையிலே அமைந்திருக்கிறார்.
அவர் தற்போதுள்ள முறையை மாற்றி, ஒருவிவசாயி மனு கொடுத்
தால் 3 ஆண்டுகளுக்குள்ளாக அந்த விவசாயிக்கு மின்சாரம்
கொடுக்க வேண்டுமென்ற திட்டத்தைக் கொண்டு வர சட்ட
மாக வைத்தால்கூட நல்லது என்று கருதுகிறேன். நமது
மின்சாரத் துறை அமைச்சர், மற்றுமுள்ள அதிகாரி
களை எல்லாம் கலந்து, விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுக்க
வேண்டுமென்ற நிலைமையை ஏற்படுத்துவார்கள் என்று
நம்புகிறேன்.

(முற்பகல் 11–50)

அடுத்து இன்றைக்கு 'பயிற்சி வழித் தொடர்புத் திட்டம்'
என்ற ஒரு முறையை விவசாய இலாகா மேற்கொண்டிருக்கிறது.
அதிலே பல வழிமுறைகளைச் சொல்லிவருகிறார்கள். என்னு





டைய சொந்த அனுபவம் என்னவென்றால் இப்போது
சொல்லுகிற முறையைவிட பழைய முறையே சிறந்தது என்
பது. எப்படி என்றால் முன்பு ஊராட்சி ஒன்றியத் தலைவர்
களுடன் அங்கே இருக்கிற கிராம சேவக்குகள் விவசாயிகளுக்கு
வேண்டிய அறிவுரைகளைச் சொல்லிவந்தார்கள். இப்போதும்
ஊராட்சி ஒன்றியத் தேர்தலை நடத்துவிருக்கிறோம். எனவே
விரைவிலே ஒன்றியத் தலைவர், உறுப்பினர்கள் இருந்து
செயல்படும் வாய்ப்பு ஏற்படவிருக்கிறது. கிராம சேவக்குகள்
இருக்கிறார்கள். முன்பு கிராம சேவக்குகள் விவசாய நடை
முறைகளில் பெரும் பொறுப்பு வகித்தார்கள். விவசாயிகளுக்குத்
தேவையான பொருக்கு விதை, உரம், எந்த எந்த பருவத்தில்
என்ன என்ன பயிர் செய்ய வேண்டும் என்பன போன்ற விவரங்
களை சொல்லிவந்தார்கள்; நேரிலும் கவனித்து வந்தார்கள்.
அந்தந்த ஊராட்சி ஒன்றியத் தலைவருடன் கலந்து பேசி காரியம்
செய்து வந்தார்கள்.

இந்த பயிற்சி வழித் தொடர்புத் திட்டம் என்பது முன்னைப்
போல விவசாயிகளுக்கு அவ்வளவு பயனளிப்பதாக இல்லை.
இது ஏதோ பேப்பர் அளவிலே இருக்கிறதே தவிர பிராக்டிக்
கல்லாக நல்ல பயன் கொடுப்பதாக இல்லை என்பது ஆராய்ந்து
பார்த்தால் தெரியவரும். அவ்வளவு சிறந்ததாக இல்லை என்
பது என்னுடைய கருத்து. ஆகவே, முன்னைப்போல, ஊராட்சி
ஒன்றியங்களுக்கும் கிராம சேவக்குகளுக்கும் பொறுப்புகளைக்
கொடுத்து, அவர்கள் முன்னைப்போல விவசாயிகளோடு
தொடர்பு கொண்டு காரியங்கள் செய்ய ஏற்பாடு செய்ய
வேண்டும்.

அதுமட்டுமல்ல, பயிற்சி வழித் தொடர்பு திட்டத்தினால்,
பல பிரச்சனைகள் வருகின்றன. விவசாய நடைமுறைகளில்
திருப்தி அளிப்பதாக இல்லை. ஒரு விஸ்தரிப்பு அதிகாரி
இருந்த இடத்தில் இன்றைக்கு 10 பேர் இருக்கிறார்கள். ஒவ்வொரு
ஒன்றியத்திற்கும் ஒரு விஸ்தரிப்பு அதிகாரியைப் போட்டு,
அதற்கு மேலே ஒரு ஏ. இ. (அக்ரி.), அதற்கு மேலே டிவிஷன்
என்ஜினீயர் (அக்ரி.) என்று போட்டு இன்றைக்கு நிர்வாகச்
செலவு ஒன்றுக்கு பத்தாகப் பெருகியிருக்கிறதே தவிர விவசாயி
களுக்கு பலன் பெருகவில்லை. நிர்வாகம் பெருகியிருப்ப
தற்கு ஏற்ப விவசாயம் பெருகவில்லை. வேலைகள் திருப்தி
கரமாக நடக்கவில்லை. ஆகவே, முன்னால் இருந்த நிலைமை
யில் காரியங்களைச் செய்தால் பயனுடையதாக இருக்கும்
என்று கருதுகிறேன்.

முன்பெல்லாம் ஏழை விவசாயிகளுக்கு விதை வழங்குவதிலே
மானியம் உண்டு; அவர்களுடைய பிளாண்டேஷனுக்கு மானி
யம் உண்டு; கம்போஸ்ட் உரம் தயாரிப்பதற்கு மானியம்
உண்டு; கம்போஸ்ட் உரத்திற்கு மானியம் உண்டு. இப்படி

[திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்] [1985 ஜூன் 4

பல்வேறு வகைகளில் ஏழை விவசாயிகளுக்கு அரசாங்க
மானியம் கொடுக்கப்பட்டது. இன்றைக்கு அந்த மானியங்
கள் எல்லாம் கொடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்
றன என்று நான் அறிகிறேன். அது சரியல்ல. விவசாயிகளுக்கு
முன்போலவே இந்த மானியங்களை வழங்கி வந்தால் ஏழை
எளிய விவசாயிகள் பயனடைவார்கள்.

நம்முடைய மாநிலத்திலே குறைந்த நிலம் உள்ள விவசாயி
களும் நடுத்தர விவசாயிகளும்தான் அதிகமாக இருக்கிறார்கள்.
மிராசுதார விவசாயிகள் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலே
தான் இருக்கிறார்கள். குறிப்பாக தர்மபுரி மாவட்டத்தில் இன்
றைக்கு பருவமழை பொய்த்து அங்கு பெரும் வறட்சி ஏற்பட்டி
ருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவ
னத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். என்னுடைய தொகுதி
யில் இராமநாதஹள்ளி, கர்த்தானூர், குருமனஹள்ளி
கிராமங்கள் மிகவும் செழிப்பான பகுதி. பாக்கு, தென்னை,
வாழை பயிர்கள் நிறைந்த பகுதி. இன்றைக்கு பெரும் வறட்
சிக்கு உள்ளாகி பாக்குமரங்கள் எல்லாம் காய்ந்துவிட்டன.
தென்னை மரங்கள் காய்ந்துவிட்டன, வாழை எல்லாம் கருகி
விட்டன. இன்றைக்கு குடிநீருக்கே பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது.
மாவட்ட ஆட்சித் தலைவர் நேரில் பார்த்து அரசாங்கத்திற்கு
அறிக்கை அனுப்பியிருப்பதாக நான் அறிகிறேன்; அதை
கவனிக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கி
றேன்.

இப்படி வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை எல்லாம்
நிவாரணப் பகுதியாக அறிவிக்க வேண்டும். எங்கள் மாவட்
டத்தில் வறட்சி அதிகமாக இருக்கிறது. எனவே தர்மபுரி
மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும்.

இந்த அறிக்கையிலே அமைச்சர் அவர்கள் தர்மபுரி
மாவட்டத்திலுள்ள 16 ஒன்றியங்களில் 10 ஒன்றியங்களை
வறட்சிப் பகுதியாக அறிவித்துவிட்டோம் என்று சொல்லி
யிருக்கிறார்கள். மீதியுள்ள 6 ஒன்றியங்களை விட்டுவிடுவது
சரியல்ல. அவற்றையும் சேர்த்து வறட்சிப் பகுதியாக அறி
விக்க வேண்டும். வறட்சிப் பகுதியாக அறிவித்து, தேவையான
நிவாரணப் பணிகளையும் வறட்சி உதவியையும் அரசாங்கம்
செய்ய வேண்டும்.

ஏனென்றால், இன்றைக்கு விவசாயிகள் மிக மோசமான
அளவுக்கு கஷ்ட நிலையில் இருக்கிறார்கள். அவர்களால் வாங்
கிய கடனைக் கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது.
மாடுகள், பசுமாடுகள் போன்ற கால்நடைகளுக்குக்கூட
தீவனம் கொடுக்க முடியவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலை
யில் மாடுகளை வெளியிடங்களுக்கு ஓட்டிக்கொண்டு போய்விட்
டார்கள். அந்த அளவுக்குக் காய்ந்து இருக்கின்றது. ஹோசூர்



1985 ஜூன் 4] [திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்]

போன்ற பகுதிகளிலே ஒருசில இடங்களில் மழை கொஞ்சம்
பெய்து இருக்கின்றது. பரவலாக மழை எங்கள் மாவட்டத்தில்
இல்லை. எனவே விவசாயிகள் வாங்கிய கடன்களைக் கொடுக்க
முடியாத நிலையில் இருக்கிறார்கள். அரசாங்கக் கடன், கூட்டு
றவு வங்கிக் கடன், நிலவள வங்கிக் கடன் போன்றவற்றை
அவர்களால் செலுத்த முடியவில்லை. அந்தக் கடன்களுக்கு
இன்றைக்கு பீனல் இண்டரஸ்ட் போட்டு வசூலிக்க முற்பட்டு
அரசாங்கம் கெடுபிடி நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கி
றது என்று நான் அறிகிறேன். மூன்று நான்கு வேன்களையும்
ஜீப்புகளையும் வைத்துக் கொண்டு, சுமார் 20, 30 அதிகாரிகள்
சேர்ந்துகொண்டு போய் விவசாயிகளை மிரட்டி வசூல் செய்வ
தாகப் பலபேர் புகார் சொன்னார்கள். இதன் காரணத்தால்
விவசாயிகள் மிகவும் பயந்துபோய் இருக்கிறார்கள். எனவே
கடுமையாக அதை வசூலிக்காமல் ஓரளவுக்கு முறையாக வசூ
லிக்கின்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று
கேட்டுக்கொண்டிருக்கிறோம். இதனை அமைச்சரின் கவனத்
திற்கு நான் கொண்டு வருகிறேன். கடன் வசூலிப்பதைப்
பொறுத்தவரையில் பீனல் இண்டரஸ்ட் போட்டு வசூலிப்பது
சரியில்லை. நமது அரசாங்கத்தின் சார்பில் விவசாய உயர்
மட்டக்குழு என்று ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. விவ
சாயிகளின் நிலைமைகளை அந்தக் குழு உணர்ந்து, விவசாயி
களிடம் பீனல் இண்டரஸ்ட் போட்டு கடனை வசூலிக்கக்கூடாது;
ஜப்தி நடவடிக்கை எடுக்கக் கூடாது என்றெல்லாம் பரிந்துரை
செய்திருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்படி அர
சாங்கத்தால் நியமிக்கப்பட்டிருக்கின்ற அந்த உயர்மட்டக்
குழுவின் பரிந்துரைக்கு அரசாங்கம் செவிமடுத்து அதற்குரிய
வகையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விவசாயி
களுக்கு ஓரளவுக்கு வருமானம் தரக்கூடிய பயிர் கரும்பு, பருத்தி
இரண்டும்தான். எங்களுடைய மாவட்டத்தில் கரும்பைப்
பொறுத்தவரையில் $10\frac{1}{2}$ சதவீதம், 11 சதவீதம் என்று
சர்க்கரைச் சத்து இருப்பதன் காரணத்தால் ஒரு டன்னுக்கு
ஏறக்குறைய 249 ரூபாய் என்ற அளவுக்கு வருவாய் கிடைக்
கிறது. அது இன்றைக்கு ஓரளவுக்கு விவசாயிகளுக்கு இலாபகர
மாக இருப்பதால் விவசாயிகள் எல்லோரும் கரும்பு சாகுபடி
செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். பாலக்கோடு கூட்டுறவு
சர்க்கரை ஆலை என்று ஒன்று அங்கே இருக்கின்றது. அந்த
ஆலையில் அங்கே உற்பத்தி ஆகக்கூடிய கரும்பு அனைத்தையும்
எடுத்துக் கொள்ள முடியவில்லை. எனவே, அவர்கள் வடாற்காடு
மாவட்டத்தில் உள்ள திருப்பத்தூர் ஆலைக்கும், சேலத்தில்
இருக்கக்கூடிய மோகனூர் ஆலைக்கும் ஈரோட்டில் உள்ள
பொன்னி ஆலைக்கும் கரும்பை அனுப்புகிறார்கள். எனவே,
அரூர் தாலுக்காவிலே ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை ஏற்படுத்த

வேண்டும் என்று அங்கேயுள்ள விவசாயிகள் எல்லாம் கோரிக்கை வைத்து அது அரசாங்கத்தின் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டு இருக்கின்றது. அதற்கு தக்க நடவடிக்கை எடுத்து அங்கு ஆலை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து விவசாயிகள் நிலத்தை உழவு ஓட்டுவதற்கும், கிணறை ஆழப்படுத்துவதற்கும் போர்வெல் போடுவதற்கும் உரிய இயந்திரங்களை விவசாயப் பொறியியல் இலாக்காவில் வாடகைக்கு கொடுக்கிறார்கள். ஆனால், அவற்றுக்கெல்லாம் முதலிலே இருந்த வாடகையை விட இப்போது, இரண்டு மடங்கு மூன்று மடங்கு அதிகமாக வாடகை வாங்கப்படுகிறது என்று விவசாயிகள் சொல்கிறார்கள். எனவே, இதைப் பொறுத்தவரையில் அரசாங்கத்திற்கு ஓரளவுக்கு நஷ்டம் ஏற்பட்டாலும் கூட இந்தக் கருவிகளை எல்லாம் குறைந்த வாடகைக்கு விவசாயிகளுக்கு கொடுக்கத்தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரூர் பகுதியிலே அக்ரோ சர்வீஸ் என்று இருந்தது. அங்கே உழவு ஓட்டக்கூடிய கருவி போன்றவற்றை வாடகைக்கு எடுத்திருந்தார்கள். அந்த அக்ரோ சர்வீஸ் எல்லாம் இப்போது நடைபெறவில்லை. தர்மபுரியில் அதாவது அம்மாவட்டத்தின் தலைநகரில்தான் அது இருக்கின்றது. அங்கே ஒரு விவசாயி போய் அதாவது 30 மைல் தூரத்திற்குச் சென்று கொண்டு வரவேண்டும் என்றால் செலவு அதிகம் ஆகின்றது. எனவே, ஒவ்வொரு தாலூகா தலைநகரிலும் அக்ரோ சர்வீஸ் இருந்தால் விவசாயிகளுக்கு வேண்டிய உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக இருக்கும். அந்த வகையில் உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று இந்தச் சமயத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அரசாங்கம் இந்த நிலைமைகளை எல்லாம் கவனத்தில் எடுத்துக் கொண்டு விவசாயிகளுக்கு இருக்கும் பல பிரச்சினைகளையும், குறைகளையும் நிவர்த்தி செய்ய தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

அடுத்தபடியாக, குடிதண்ணீர் பிரச்சினை என்பது எங்களுடைய மாவட்டத்திற்கு வாடிக்கையாக இருக்கிறது. எங்களுடைய மாவட்டத்தில் குடிதண்ணீர் பிரச்சினையை தீர்க்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக் கொள்கிறேன். எங்களுடைய பகுதி மேட்டுப் பாங்கான பகுதியாகவும், வறண்ட பகுதியாகவும் இருப்பதால் அங்கே போர்வெல் போடவேண்டுமென்று நிறைய பேர்கள் கேட்கிறார்கள். கலெக்டர் அவர்களும் எந்தெந்தப் பகுதிகளில் போர்வெல்கள் போட வேண்டுமென்று அரசாங்கத்திற்கு அறிக்கை அனுப்பி இருக்கிறார்கள். ஆனால் குடிநீர் வாரியம் தாங்களாக திட்டம் போட்டு தேவையில்லாத இடங்களில் எல்லாம் போர்வெல்கள் போட்டு விடுகிறார்கள்.



தேவையிருக்கிற கிராமங்களில் போர்வெல்கள் போடாமல் தங்களுக்குத் தோன்றிய இடங்களில் போட்டு விடுகிறார்கள். வாரியம் இப்படி செய்வது கலெக்டருக்கும் தெரிவதில்லை. குடிநீர் வாரியம் தாங்களாக பணிகளைச் செய்வது பொதுமக்களின் தேவைகளை உணர்ந்து செய்வதாகத் தெரியவில்லை. ஆகவே வாரியம் பொதுமக்களின் தேவைகளை உணர்ந்து பணிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குடிநீர் வாரியத்தில் '' ரிக்ஸ் '' போன்ற கருவிகளை விவசாயிகளுக்கு கொடுக்கிறார்கள். அவற்றின் வாடகை மிக அதிகமாக இருக்கிறது. ஆகவே, அவற்றிற்கான வாடகையை குறைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தனியார்கள் துளை போடுவதற்காக எங்களுடைய பகுதியில் ரிக்சை கொண்டு வந்தார்கள். போர் பாயின்ட் போட்டதில் பில்கள் தவறாக உள்ளதாக எங்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறார்கள். பில் போடுவதிலே பில் தொகைக்கும் அவர்கள் போடக்கூடிய தொகைக்கும் வித்தியாசமாக போட்டு, அதிலே தவறுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்தக் குறைகளை நீங்கள் போக்குவதற்கு தக்க நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

அதோடு அரசாங்க போர்வெல்கள் அதிகமாக பழுதடைந்து விடுகின்றன. பழுதடைந்த போர்வெல்களை ரிப்பேர் பார்க்க வேண்டுமென்றால், இயந்திரங்கள் அடங்கிய ரிப்பேர் யூனிட் அங்கே எங்கள் ஜில்லாவில் ஒன்றே ஒன்று தான் இருக்கிறது. அதுவும் இரண்டு, மூன்று மாதங்களாக ரிப்பேராகி இருக்கிறது. இப்போது அவசரமாக கலெக்டர் அவர்கள் எழுதி அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்து திருச்சியிலிருந்து ஒன்றை அனுப்பி இருக்கிறார்கள். அதையும் தற்காலிகமாக உபயோகத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். அதையும் கூட வடாற்காட்டிற்கோ அல்லது வேறு ஏதோ பகுதிக்கோ ஒரு வாரம் உபயோகித்துக் கொண்டு அனுப்ப வேண்டுமென்று மேலிடத்திலிருந்து கட்டளை பிறப்பிக்கப்பட்டிருப்பதாக ஆட்சித்தலைவர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, முழுமையாக எங்களுடைய தேவையை பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு அந்தக் கருவிகள் பயன்படவில்லை. தர்மபுரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். விவசாயத்திலே, பொருளாதாரத்திலே, குடிதண்ணீரிலே, தொழில் துறையிலே இப்படி எல்லா துறைகளிலும் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது எங்கள் மாவட்டம். ஆனால் அமைச்சர் அவர்கள் எல்லா மாவட்டங்களுக்கும் அதிகமாக நிதியை ஒதுக்கி விட்டு, எங்களுடைய மாவட்டத்திற்கு குறைவாக ஒதுக்கி இருக்கிறார்கள்.

எங்களுடைய மாவட்டத்தில் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இரண்டு, மூன்று கோரிக்கைகளை விடுத்திருக்கிறோம், குறிப்பாக கடத்தூருக்கு குடிதண்ணீர் பிரச்சினை அதிகமாக இருக்கிறது. கடத்தூர் ஒரு நகர பஞ்சாயத்தாக இருக்கிறது. குடிதண்ணீர் பிரச்சினைக்காக திட்டம் போட்டு, இலாக்கா அதிகாரிகள் அரசாங்கத்தின் அனுமதிக்காக அனுப்பி இருப்பதாக அறிகிறேன்.

ஆக அந்த திட்டங்களை எல்லாம் நிறைவேற்றி அந்தப் பிற்பட்ட பகுதியிலே இருக்கிற குடிதண்ணீர் பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று இந்தச் சமயத்திலே அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

அதேபோல பாப்பிரெட்டிபட்டிக்கு, டிரையினேஜ் போன்ற வசதிகள் இல்லாதது அங்குள்ள மக்களுக்கு பெரும் குறையாக இருக்கிறது. பாப்பிரெட்டிபட்டி மட்டும் அல்ல என்னுடைய தொகுதியிலே பல இடங்களில் டிரையினேஜ் இல்லாத குறை பெரும் பிரச்சினையாக இருந்துக் கொண்டிருக்கிறது. இவற்றிற்கு எல்லாம் அரசாங்கம் தக்க கவனம் செலுத்தி உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களின் அன்றாட அத்தியாவசிய அடிப்படைத் தேவைகளான டிரையினேஜ் சிஸ்டம், குடிதண்ணீர் பிரச்சினை போன்றவைகளையெல்லாம் நிறைவேற்றித் தரும் வகையில் விரைவில் ஆணை பிறப்பிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல என்னுடைய மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையைச் சார்ந்த பல விவசாயக் கிடங்குகள் இருக்கின்றன. விவசாயிகள் உற்பத்தி பண்ணக் கூடிய விவசாயப் பொருள்களை எல்லாம் இந்தக் கிடங்குகளிலே வைத்து நல்ல விலைக்கு விற்று, அவர்களுக்கு கூடுதல் இலாபம் ஈட்டித் தருவதற்காக இந்தக் கிடங்குகள் வசதி செய்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தக் கிடங்குகளிலே விவசாயிகள் கொண்டு போய் வைக்கின்ற போது, அங்கே சில குறைகள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அங்கு வைக்கப்படும் பொருள்களுக்கு தவறாக விரயம் ஏற்படுவதாகச் சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட குறைகளை எல்லாம் சரி செய்து, விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க, நல்ல இலாபம் கிடைக்க தக்க கண்காணிப்பு நடவடிக்கைகளை எடுத்து நிர்வாக சீரமைப்புகளைச் செய்து, விவசாயிகளுக்கு எல்லாவிதமான பாதுகாப்பும் கிடைக்கச் செய்யவேண்டும் என்று இந்தச் சமயத்திலே அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப் பெற்றது).

ஆக என்னுடைய மொரப்பூர் தொகுதி மக்களின் சார்பாக நான் எடுத்து வைத்த கோரிக்கைகளையும், அந்த மக்களின் தேவைகளையும் கவனித்து, அரசாங்கம் எங்களுடைய பிற்பட்ட





பகுதிக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தர ஆவனச் செய்ய வேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். எல்லோருக்கும் வணக்கம்.

திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன் : மாண்புமிகு சட்டப் பேரவை துணைத் தலைவர் அவர்களே, 7½ கோடி தமிழ் மக்களின் நெஞ்சத்திலே நீங்காத இடத்தைப் பெற்றுவிட்ட சுமார் 83 இலட்சம் ஏழை குழந்தைகளுக்கு இலவச உணவு, இலவச உடை, இலவச பள்ளிப் புத்தகங்கள் வழங்கி உலக வரலாற்றிலேயே இமாலய சாதனை நிகழ்த்தி விட்ட, எங்கள் இதயந் தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களின் பொற்பாதங்களில் முதலில் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, திருச்செந்தூர் சட்டமன்றத் பேரவைத் தேர்தலிலே எனக்கு வாக்கு அளித்த வாக்காளப் பெருமக்களுக்கும், எனக்கு மகத்தான வெற்றியைத் தேடித்தரப் பாடுபட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுக்கும், எங்கள் எம். ஜி. ஆர். மன்ற ரசிகப் பெருமக்களுக்கும், இந்திரா காங்கிரஸ் நண்பர்களுக்கும், காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸை சார்ந்த சகோதரர்களுக்கும் என்னுடைய நன்றியைத் காணிக்கையாக்கி விட்டு, என்னுடைய முதல் பேச்சை இந்த சட்டமன்றப் பேரவையில் நான் துவக்குகிறேன்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்களுடைய இலாகாவின் சார்பாக இந்த அவையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை நான் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

கடந்த 35 ஆண்டுகள் அரசியல் வாழ்விலே இந்த உணவுத் துறையிலே ஒரு மாபெரும் சாதனையை புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுதான் நிகழ்த்தியிருக்கிறது. அதை நாம் கண்கூடாகக் கண்டுகொண்டு வருகிறோம். ஒரு காலத்திலே உணவுத் துறையிலே பெரிய பஞ்சத்திலே இருந்த தமிழகத்தை, மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் வழி காட்டியாக விளங்குகிற வகையில் மாற்றி அதை சாதித்துக் காட்டியிருக்கிறோம். இன்று உணவுப் பற்றாக்குறை என்ற பேச்சே இல்லை. இந்த அதிசயத்தை நடத்திக் காட்டிய மாண்புமிகு இதயத் தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், அவருடைய கட்டளையை ஏற்று செயலாற்றும் எங்களுடைய அமைச்சர் மாண்புமிகு டாக்டர் காளிமுத்து அவர்களுக்கும், நாட்டு மக்களின் சார்பாக இதற்காக நான் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையிலே நல்ல பல திட்டங்களையெல்லாம் இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. அந்த வகையிலே நம் தமிழக மக்கள் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், இந்த அரசையும் நன்றி தெரிவித்து பாராட்டி வருகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இருப்பினும்

[திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்] [1985 ஜுன் 4

என்னுடைய தொகுதியினைச் சார்ந்த ஒரு சில கோரிக்கைகளை யும், ஒரு சில குறைகளையும், செய்ய வேண்டிய சில நடவடிக்கை களைப் பற்றியும் நான் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரிவிப்பது என்னுடைய கடமை என்று கொண்டு, சொல்ல விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

குறிப்பாக விவசாயம் என்று எடுத்துக் கொண்டால், அவற்றில் சம்பந்தப்பட்ட 4 துறைகள் பின்னிப் பிணைந்து இருக்கின்றன. ஒன்று விவசாயம், இரண்டு மின்சாரத் துறை, மூன்று ரெவின்யூ துறை, கடைசியில் நீர்பாசன துறை. இந்த நான்கு துறைகளையும் சேர்த்து நல்லதொரு வகையில் ஒரு உயர் மட்டக் குழு ஒன்று மாவட்ட அளவிலே அமைத்தால் நல்ல பல திட்டங்களையெல்லாம் மிகவும் சிறப்பாக செயல்படுத்துவதற்கு அது வாய்ப்பாக இருக்கும் என்கிற ஒரு கருத்தை முதலில் இந்த மாமன்றத்திலே வைக்க விரும்புகிறேன்

(பிற்பகல் 12–10)

ஏன் என்றால் இப்போது பெரும்பாலான விவசாயிகள் எல்லாம் மின்சாரத்தை நம்பி, மின்சார மோட்டார் பம்பு செட்டுகளை நம்பியிருக்கிறார்கள், எங்கள் பகுதியில். எனவே அவர்களுக்குத் தேவையான மின்சார இணைப்பு கொடுப்பது மட்டுமல்லாமல், குறைந்த மின் அழுத்தத்தோடு, பகலிலே மின்சாரம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை அநேகமாக தமிழகத்திலே உள்ள அத்தனை விவசாயிகளும் விடுத்துக் கொண்டிருக்கிறார்கள். புஞ்சை விவசாயம் செய்கிற எங்கள் பகுதியிலே மிகவும் தீவிரமாக வேண்டப்படுகிறது. அமைச்சர் அவர்கள் இதை மனதில் கொண்டு அதற்கான சாதகமான முடிவுகளை எடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஸ்ரீகண்டத்திலே எங்கள் பகுதியில், தென்கால், வடகால் என்று இரண்டு கால்கள் தனித் தனியாக இருக்கின்றன. அதிலே தென்கால் பகுதியில் எப்போதுமே நீர் வரத்து மிகவும் குறைவாக இருக்கிறது. அதன் காரண மாக அந்த கடம்பாகுளம் என்ற குளத்திலே இருந்து சுமார் 11 குளங்களுக்கு எங்கள் பகுதியிலே உள்ள கீழ் பகுதிக்கு என்று தனி யாக ஒரு திட்டம் சுமார் 80 லட்சம் ரூபாய் செலவிலே அமல் படுத்த அரசினுடைய மேலான பரிசீலனையில் இருந்து வருகிறது. அந்த நல்ல திட்டத்தை, சர்ப்ளசாக இருக்கும் தண்ணீரை தேக்கி வைத்து, வேண்டப்பட்ட காலங்களில் விவசாயிகளுக்கு தேவைப் பட்ட காலங்களில் அந்த தண்ணீரை பயன்படுத்தும் அந்த நல்ல திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள் கிறேன். இது 10, 15 ஆண்டுக் காலமாக அரசினுடைய பரி சீலனையில் இருந்து வருகிறது. கடந்த ஒரு ஆண்டு காலமாகத் தான் இது அரசின் தீவிர பரிசீலனையில் இருந்து இப்போது செயல் படுத்துவதற்கான ஒரு நிலைமையில் இருப்பதாக நான் அறிகிறேன் எனவே இந்த திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவர வேண்டும் என்று எங்கள் பகுதி விவசாய மக்களின்



1985 ஜுன் 4] [திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்]

சார்பாக அன்போடு வேண்டிக்கொள்கிறேன். அப்படி இந்தத் திட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்தால் அது எங்கள் பகுதி மக் களுக்கு ஒரு மிகப் பெரிய வரப்பிரசாதமாக இருக்கும். எனவே இதை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக மெய்ஞானபுரம் பகுதியிலே செம்மறிக்குளம் என்ற ஒரு பகுதியில் படுகை என்று ஒரு இடம் இருக்கிறது. சுமார் 500 ஏக்கர் நஞ்சை நிலங்கள் விவசாயம் செய்கிற இடம். ஆண்டுதோறும் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டு, நல்ல பயிர்கள் எல்லாம் மிகவும் சேதத்திற்கு ஆளாகின்றன. எனவே அந்தப் பகுதியிலே நல்ல வடிகால் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தால் கீழ் பகுதியிலே தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுகிறபோது, தேக்கி வைத்த இந்த தண்ணீரின் மூலமாக பாசனத்திற்கு வேண்டிய தண்ணீரை சப்ளை செய்ய முடியும். எனவே இந்த திட்டத்தை செயல்படுத்த ரூ. 25 லட்சம் செலவில் ஒரு திட்டம் அரசின் பரி சீலனையில் இருக்கிறது. அந்த திட்டத்தையும் அரசு மிக விரை வில் செயல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக எங்கள் பகுதியிலே முக்கியமான விவசாயம் என்று கருதப்படுவது ' பனைத் தொழில். இந்தத் தொழிலின் மீது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்றால் இப்போது இந்தத் தொழில் மிகவும் சீரழிந்து கொண்டு இருக்கிறது. எனவே இந்தத் தொழிலைக் காப்பாற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தொழிலுக்காக எவ்வளவோ ஆராய்ச்சிகள் செய்தபோதிலும் பதநீர் இறக்கும் ஒரு இயந்திரத்தை மக்கள் மத்தியிலே இன்னும் பரவலாக்க முடிய வில்லை. எனவே இந்த ஆராய்ச்சியை அரசாங்கமே மேற் கொண்டு, நல்லதொரு கருவியைக் கண்டு பிடித்தால் அது எங்கள் பகுதியில் மட்டுமல்லாது, நெல்லை மாவட்டம், ராமநாதபுரம் மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம், மற்றும் மதுரை மாவட் டம் போன்ற மாவட்டங்களில் உள்ள மக்கள் இந்தக் கருவியைப் பயன்படுத்தி, அதனால் பலன் அடைய முடியும். எனவே அர சாங்கத்தின் சார்பிலே ஆராய்ச்சி செய்து நல்ல பிராக்டிகலாக ஒரு கருவியைக் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகளுக்குத் தேவையான பூச்சி மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. அந்த பூச்சி மருந்துகள் வெளி மார்க் கெட்டில் வாங்கினாலும் சரி, அல்லது அரசாங்கத்தின் மூலமாக, பஞ்சாயத்து யூனியன் மூலமாக வாங்கினாலும் சரி, அவைகள் தரமானவைகளாக இல்லை. ஆங்காங்கு போலியான மருந்து கள் வருவதால், விவசாயிகள் அதை நம்பி வாங்கி உபயோகிக்கும் போது, பயிர்களுக்கு மிகவும் சேதம் ஏற்படுகிறது. எனவே, அரசாங்கம் ஒட்டுமொத்தமாக மருந்து அடிக்கும் திட்டத்தை

கிராமங்கள்தோறும் பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக கொண்டு
வந்து நல்லமுறையில் செயல்படுத்த வேண்டும் என்று நான்
கேட்டுக் கொள்கிறேன். உரங்கள் வாங்குவதற்கு அரசாங்கம்
மானிய உதவி செய்கிறது. அப்படி இருந்தபோதிலும், இன்று
இருக்கிற கூலி மற்றும் விவசாயம் செய்வதற்கான அனைத்து
செலவினங்களும் மிக அதிகஅளவில் கூடிவிட்ட காரணத்தினால்,
விவசாயப் பொருள்களுடைய விலை ஏறிவிட்ட காரணத்தால்,
அதற்கான மானியங்கள் எல்லாம் கூடுதலாக்கிக் கொடுக்க வேண்
டும், அப்போதுதான் நம்முடைய விவசாயிகளுக்கு அது ஊக்கத்
தைக் கொடுக்கும் என்பதை நான் அன்போடு சொல்லிக் கொள்ள
விரும்புகிறேன். என்னுடைய பகுதியில் ஆத்தூர் பகுதியில்
வெற்றிலை கொடிக்கால் விவசாயம் மிகவும் பிரதானமாக
செய்யப்படுகிறது. அதுவும் இந்தியாவில் மட்டும் அல்ல வெளி
நாடுகளுக்கு எல்லாம் இந்த வெற்றிலை ஏற்றுமதி ஆகிறது.
சுமார் 2 ஆயிரம் குடும்பங்கள், அந்த வெற்றிலை விவசாயிகள்
அந்த விவசாயத்தை நம்பியிருக்கிறார்கள். அந்த வெற்றிலை
விவசாயிகளுக்கு எல்லாம் வருடம் முழுவதும் தண்ணீர் கிடைப்
பதற்கான உதவியை நீர்ப்பாசன துறையை கலந்து மாண்புமிகு
வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் பகுதிக்கு
செய்து தர வேண்டும் என்று இந்த நேரத்தில் பணிவன்போடு
வேண்டுகோள் வைக்கிறேன். ஏன் என்றால் ஆண்டாண்டுதோறும்
அந்த வெற்றிலை விவசாயிகள் தண்ணீருக்கு படும் அல்லல்
கொஞ்சம் நஞ்சம் அல்ல. நல்லதொரு சிறந்த விவசாய தொழி
லான இந்த வெற்றிலை கொடிக்கால் இன்னும் சொல்லப்போனால்
சிறப்பாகச் செய்தால் அன்னிய செலாவணியை சம்பாதித்துக்
கொடுக்கும் அளவுக்கு அந்தப் பகுதியில் இந்த வெற்றிலை
விவசாயம் வளரும் என்ற ஒரு குறிப்பு இருக்கிறது. எனவே,
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குவருடம் முழுவதும்
நீர்ப்பாசனத்திற்கு வழி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் கான்கிரிட் நஞ்சை என்று
ஒரு நஞ்சை எங்கள் பகுதியில் இருக்கிறது. இது தமிழ் நாட்டி
லேயே எங்கள் பகுதியில்தான் இருக்கிறது. அதாவது இந்த
தேரி பாங்கான மணல் பாங்கான இடங்களில் காங்கேய
குளம் என்று இருக்கிறது, அந்த குளத்தில் உள்ள களிமண்ணை
எல்லாம் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்று சுற்றி காங்கிரிட்
கட்டிக் கொண்டு அதிலே இந்த மணலைப்போட்டு அதன் மூலமாக
நல்ல ஒரு நஞ்சை நிலமாக செய்து விவசாயத்தை பிராக்டி
கலாக செய்து விட்டார்கள். எங்கள் பகுதியில் சுற்றிப் பார்த்
தால், தெரியும். நிறைய விவசாயிகள், சாதாரண விவசாயிகள்
எல்லாம் அந்த நஞ்சைப் பகுதியில் விவசாயத்தை மிகவும் சிறப்
பான முறையில் செய்து வருகிறார்கள். ஒரு மாபெரும் புரட்சி
யைச் செய்கிறார்கள். உண்மையாகச் சொல்லப்போனால் ஒரு
பசுமைப் புரட்சி என்றால் அதுதான் உண்மையான புரட்சி. தேரி
பாங்கான இடத்திலே கூட நஞ்சையை விளைவிக்கின்ற ஒரு
மாபெரும் புரட்சியை அந்தப் பகுதி விவசாய பெருங்குடி மக்கள்





இன்று உலகத்திற்கும் காட்டிக் கொண்டு இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை இன்னும் நல்ல முறையில் விரைவுப் படுத்த ஏழை ஆதி திராவிட விவசாய பெருங்குடி மக்களுக்கு அரசுக்குச் சொந்தமான நத்தம் நிலமாக இருந்தாலும் வனத்துறைக்கு சொந்தமான நிலமாக இருந்தாலும் சரி அந்த நிலத்தை பங்கிட்டுக் கொடுத்து ஒரு குறிப்பிட்ட தொகையை மானியமாக வழங்கினால் அந்தப் பகுதி மக்கள் எல்லாம் அந்த விவசாயத்தை செய்ய வாய்ப்பு இருக்கும். அதோடு நமக்கு எல்லாம் உணவு வழங்குகின்ற இந்த நெல் உற்பத்தியும் மிகப் பெரிய அளவில் நமக்குக் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது.

அடுத்து, விவசாய கூலி சம்பந்தமாக இங்கே பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் எடுத்துச் சொன்னார்கள். விவசாயக் கூலிக்கு ஒரு நிரந்தரமான பாதுகாப்பு இல்லை. அவர்களுக்கு ஒரு நிரந்தரமான பாதுகாப்பை இந்த அரசு செய்ய வேண்டும். நல்ல பல இன்சூரன்ஸ் திட்டங்கள் இருந்தபோதிலும் அவர்களின் வாழ்க்கையினுடைய பிடிப்புக்கு ஒரு ஆதாரமான பொருளாதாரம் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

விவசாயத்தில் ஈடுபட்டுக்கொண்டு இருப்பவர்கள் இறந்து விட்டால் அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்ற யோசனையை இந்த மாமன்றத்தில் பல உறுப்பினர்கள் சொல்லி இருக்கிறார்கள். அந்தத் திட்டத்தையும் நான் வரவேற்கிறேன். அந்தத் திட்டத்தை விரைவில் கொண்டு வந்தால் தமிழகத்தில் இருக்கின்ற லட்சக்கணக்கான விவசாயிகளுடைய எதிர் காலத்திற்கு ஒரு நம்பிக்கை ஏற்படும் என்ற நல்ல கருத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, என் தொகுதியான திருச்செந்தூரில் மக்கள் அதிகமாக முக்கால் பகுதி மக்கள் கடற்கரைப் பகுதியி- இருக்கிறார்கள். முக்கால் பகுதி நீர் உப்பு நீராக இருக்கிறது. குடிநீர் வடிகால் வாரிய அமைச்சர் அவர்கள் எங்கள் திருச்செந்தூரின் மீது தனிக் கவனத்தை செலுத்தி எங்கள் பகுதி மக்களுக்கு குடிநீர் பற்றாக்குறையை இப்போது நல்ல முறையில் தீர்த்து வருகிறார்கள். இருந்தாலும் கூட இன்னும் சில கோரிக்கைகள், சில தேவைகள் எங்கள் பகுதியில் இருந்து கொண்டு இருக்கிறது. எனவே திருச்செந்தூர்-புன்னக்காயல் குடிநீர் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செயல்படுத்த வேண்டும் என்று அன்போடு பணிவோடு கேட்டுக் கொண்டு இன்னும் எங்கள் பகுதியில் பல குடிநீர் திட்டங்கள் எல்லாம் இந்த அரசின் ஆய்வில் இருக்கிறது. சேதுக் கால்வாய் குடிநீர் திட்டம், புன்னக்காயல் குடிநீர்த் திட்டம், திருச்செந்தூர் குடிநீர் திட்டம் ஆகிய இந்த மூன்று திட்டங்களின் மீதும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல கவனம் செலுத்தி அவைகளை சீரிய முறையில் செயல்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று அன்போடு, பணிவோடு வேண்டிக்

கொண்டு எனக்கு பேச வாய்ப்புக் கொடுத்த பேரவைத் துணைத்
தலைவர் அவர்களுக்கும், மாற்றுத் தலைவருக்கும் நன்றி தெரி
வித்து விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, ''கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்று
ஆங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை'' என்று கூறிச் சென்று
இருக்கிறார் வள்ளுவர். இன்றைக்கு இங்கே பேசப்படுகின்ற
மானிய கோரிக்கைகளில் முக்கியமான பிரச்சினையாக நீர்ப்
பாசனம் இருக்கின்ற காரணத்தாலோ என்னவோ இன்றைக்கு
விவசாயத்தை குடிநீர் பிரச்சினையோடு இணைத்து இங்கே பேசப்
படுகிறது என்று நான் கருதுகிறேன்.

(பிற்பகல் 12-20)

விவசாய மானியக் கோரிக்கையைப் பற்றிப் பேசுகின்றபோது,
முதற்கண், நடந்து முடிந்த ஊட்டி ப்ளவர் ஷோவிலே இந்தத்
தமிழக அரசு, அங்கே இருக்கக் கூடிய பொட்டானிகல் கார்ட
னுக்கு எங்களுடைய கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, அன்னை
இந்திரா காந்தியின் பெயரை வைத்ததற்காக தமிழக அரசுக்கு
என்னுடைய மனமார்ந்த நன்றியையும், பாராட்டுதலையும் தெரி
வித்துக் கொண்டு பேச்சைத் தொடங்குகிறேன்.

தோட்டக் கலையைப் பற்றி பேசுகின்ற போது, தோட்டக்
கலையினுடைய தலைமையகமானது, சென்னையிலே இல்லாமல்
இன்றைக்கு சென்னையிலே இருந்து வெகு தூரத்திலே தர்மபுரி
மாவட்டத்திலே இருக்கிற காரணத்தால் போடுகின்ற திட்டங்
களும், செயல்களும், சிறப்பாக செயல்பட முடியாமலும், ஒதுக்கப்
படுகின்ற பணங்கள் அங்கே இருக்கின்ற அதிகாரிகள் சென்னைக்கு
வருவதற்கும், தங்குவதற்கும், தொலைபேசிக்கும்தான் அதிகமாக
செலவு ஆகிற காரணத்தால் உடனடியாக போடுகின்ற
திட்டங்களும், தீட்டுகின்ற விளக்கங்களும் மக்களைச் சென்று
அடைய அந்தத் தலைமையகத்தை உடனடியாக தர்மபுரியில்
இருந்து சென்னைக்கு மாற்ற வேண்டிய சரித்திர அவசியம் இருப்
பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்த ஹார்டிக்கல்ச்சர் துறையைப் பற்றிப் சொல்கிற போது,
இன்றைக்கு 66 அசிஸ்டென்ட் டைரக்டர் பதவியிலே 56 பதவிகள்
காலியாக இருக்கின்றன. விவசாயத் துறையிலிருந்து தோட்டக்
கலைத்துறை பிரிக்கப்பட்டதனால் பணியாளர்களிடத்திலே ஏற்
பட்ட சலசலப்பின் காரணமாக, பணியாளர்களின் பதவி இடங்கள்
காலியாக இருப்பதால் வேலைகள் முடக்கப்பட்டிருக்கின்றன
என்று நான் அறிகிறேன். ஒன்றாக இருந்து வேலை பார்த்துக்
கொண்டிருந்த, ஒரே விவசாயத் துறையிலே ஒரே அமைச்சரின்
கீழே இருந்து வேலை பார்க்கின்ற ஒரே துறையிலே இன்றைக்கு
இரண்டு பிரிவுகளாகப் பிரிந்த காரணத்தால், அதிகாரிகளிடத்
திலே ஏற்பட்டுள்ள மனக்கசப்பை நீங்கள் தயவு செய்து ஒன்
றாகக் கூடிப் பேசி குறைந்தபட்சம் என்றைக்கு விவசாயத் துறை





யிலிருந்து தனியாக தோட்டக் கலை பிரிக்கப்பட்டதோ, அன்றைய
தேதியிலிருந்து ஒரு கட்-ஆஃப் டேட் என்று சொல்வார்களே,
அதைப் போன்று ஒரு தேதியை எடுத்து வைத்துக் கொண்டு,
அங்கே ஏற்கனவே வேலை பார்த்த பி.எஸ்.சி. அக்ரிகல்சுரிஸ்ட்ஸ்,
பி.எஸ்.சி. ஹார்ட்டிகல்சுரிஸ்ட்ஸ்க்கும் எந்தவிதமான பாதிப்பும்
ஏற்படாத வகையில் வேலைகளைப் பிரித்து தருவதற்கு இந்த
அரசு உடனடியாகச் செயல்பட வேண்டும் என்று மிகுந்த அன்
போடு கேட்டுக்கொள்கிறேன்.

'அடுத்தபடியாக, இதை நான் சொல்கிற போது, இன்றைக்கு
இந்த விவசாயத் துறையிலேயே ஒரு கோ-ஆர்டினேஷன் இல்
லையோ அல்லது லேக் ஆப் கோ-ஆர்டினேஷன் இருக்கிறதோ
என்ற அச்சத்தை எனக்கு ஏற்படுத்துகிறது. மிகச் சிறப்பான
ஒரு பொறுப்பு விவசாயத் துறையிலே உள்ளது. நாம் உண்ணு
கின்ற உணவை பெற்றுத் தருவதிலே, அன்றைக்கு நாம் கையிலே
பாத்திரங்களை வைத்துக் கொண்டு வெளி நாடுகளுக்கு உணவுக்
காக அலைந்த நிலை மாறி இன்றைக்கு செல்ஃப்-சபிஷியன்ஸி-யை
யும் தாண்டி, உணவுப் பொருளை உற்பத்தி செய்து வெளி நாடு
களுக்கு ஏற்றுமதி செய்கிற அளவுக்கு உயர்த்தி விட்ட அதிகாரி
களிடத்திலே இன்றைக்கு ஒரு ஒற்றுமை இல்லாவிட்டால் அது
நம்மைத்தான் பாதிக்கும் என்பதைச் சுட்டிக்காட்டி, உடனடியாக
இந்தப் பிரச்சினைக்கு இந்த அரசு தீர்வு காண வேண்டும் என்று
அன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, தொடர்ந்து தோட்டக் கலையைப் பற்றிச்
சொல்கிறபோது, தோட்டக் கலைக்கு இப்போது ஒதுக்கப்படு
கிற பணங்களும் அதுபோன்று மேற்கு மலை தொடர்ச்சியினு
டைய மேம்பாட்டுத் திட்டங்களுக்கு மத்திய அரசிலிருந்தும்,
மாநில அரசிலிருந்தும் வருகின்ற பணங்கள் எல்லாம் நீலகிரி
மாவட்டத்திற்கு மட்டுமே அதிகமாக செலவழிக்கப்படுகின்றன
என்ற ஒரு கருத்து, நான் இந்த பட்ஜெட்டினுடைய டாகு
மென்ட்ஸை எல்லாம் படிக்கின்ற போது அதிகப்படியான பணம்
நீலகிரிக்கு மட்டும் ஒதுக்கப்படுகிறது என்பதை சுட்டிக்காட்ட
விரும்புகிறேன். ஏன் மற்ற மாவட்டங்களிலே மலைகள் இல்
லையா? நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழ்ப்
பற்று அதிகம் கொண்டவர். 'வானரங்கள் கனி கொடுத்து மந்தி
யொடு கொஞ்சி' என்ற குற்றால மலையும், பொதிகை
மலையும் மலைகளாக உங்கள் கண்களுக்குத் தெரியவில்லையா?
உடனடியாக இந்த மாற்றான்தாய் மனப்பான்மையை மாற்றி,
நீலகிரி மாவட்டத்தை மட்டும் மலைப் பிரதேசமாக எடுத்துக்
கொண்டிருக்கிற அந்தக் கருத்தை மாற்றி, தமிழ்நாட்டிலுள்ள
அனைத்து மலைப்பகுதிகளையும், குறிப்பாக நெல்லை மாவட்
டத்திலே இருக்கின்ற பொதிகை மலையினையும், அந்த மலை
மேம்பாட்டுத் திட்டத்திலேயும், மேற்கு மலைத் தொடர்ச்சி
யுடைய மேம்பாட்டுத் திட்டத்திலேயும் நீங்கள் எடுத்துக்கொள்ள
வேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நீரினுடைய வாட்டர் மானேஜ்மென்ட் என்று சொல்கிற,
சிறப்பான முறையிலே தண்ணீரை வயல்களுக்குஎடுத்துச்
செல்வதற்காக, போடப்படுகின்ற அந்த வாய்க்கால்
திட்டங்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் இன்றைக்கு ஒரு இடத்
தில் கூட செயல்படுத்தப் படவில்லை. பொன் விளையும் பூமி
யாம் பொருணை நதியின் பூமியிலேயும் சரி, சித்திரா நதி பாயும்
தென்காசி பகுதியிலேயும் சரி, ஒரு இடத்திலே கூட ஆற்று
மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை என்று
மிகுந்த வருத்தத்தோடு தெரிவிக்க விரும்புகிறேன். உடனடியாக
இந்த திருநெல்வேலி மாவட்டம் பொதுவாக மேற்கு மலை
திட்டத்திலும், ஆற்றுப் படுகை திட்டத்திலேயும் சற்று புறக்
கணிக்கப்படுகிறதோ என்ற அச்சத்தை மாற்றி எல்லா
மாவட்டங்களும், எல்லா மலைத் திட்டங்களும் இந்த அரசுடைய
கண்காணிப்பிலே ஒன்றாகத்தான் செயல்படுகிறது என்ற உத்தர
வாதத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுக்கு தர
வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக விவசாயத்தைத் திரும்பிப் பார்க்கிறபோது
காங்கிரஸ் ஆட்சியிலே போடப்பட்ட திட்டங்களின் அடிப்படை
யில் நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி அவைகளையெல்லாம்
நம்முடைய விவசாயத் துறை சிறப்பாகச் செயல்படுத்தியதன்
காரணமாக இன்றைக்கு நாம் வளத்தோடு இருக்கிறோம். இன்
றைக்கு நம்முடைய சிந்தனையும் செயலும் இரசாயன உரத்திலே
போய் அதிலே அதிகப்படியான கவனம் செலுத்தப்பட்டதின்
காரணமாகவோ என்னவோ புதிய புதிய நோய்களும், சிக்கல்
களும் ஏற்பட்டு விவசாயிகளுக்கு பெரும் இழப்புகள் ஏற்பட்டுக்
கொண்டிருக்கின்றன. அதற்காக நான் பண்டைக்கால முறை
களைத்தான் கையாளவேண்டுமென்றோ புதிய முறைகளை கை
விடவேண்டுமென்றோ சொல்லவில்லை. பையலாஜிக்கல் கம்ப்
போஸ்ட் என்ற முறையிலே தாவர இயல் சார்ந்த உரங்களுக்கு
முக்கியத்துவம் கொடுத்துச் செயல்பட வேண்டும்.

அந்த வகையிலே இந்த அரசு நீல பச்சைப் பாசிக்கு முக்கி
யத்துவம் கொடுத்து வந்திருக்கிறது. அந்த முறையிலே தான்
1980–81 ஆம் ஆண்டிலே ஒரு லட்சம் ஹெக்டேர் அளவுக்கு நீல
பச்சைப் பாசியை விரிவுபடுத்தவேண்டுமென்ற குறியீட்டை நிர்ண
யித்து 1.11 லட்சம் ஹெக்டேர் அளவுக்கு அந்தக் குறியீட்டு
அளவை மிஞ்சி இருக்கிறது என்று நம்மால் காணமுடிகிறது.
ஆனால் அதற்காக 1983–84, 1984–85, 1985–86 ஆகிய ஆண்டு
களிலே அந்தக் 'குறியீட்டு அளவைக் கூட்டாமல் ஒரு லட்சம்
ஹெக்டேர் என்ற அளவுக்கே வைத்திருக்க வேண்டுமா அதை
உயர்த்தாமல் அப்படியே வைத்துக்கொண்டிருப்பது சரியல்ல,
குறியீட்டளவை ஒரு ஆண்டிலே எட்டி அதை மிஞ்சிவிட்டோம்
என்பதற்காக வருகிற ஆண்டுகளிலே அந்த குறியீட்டு அளவை
உயர்த்தாமல் இருப்பது வேதனைக்குரியதாகும். எல்லா நாடு
களிலுமே இந்த நீலபச்சைப் பாசி உரம் விவசாயிகளுக்கு





நன்மை அளிக்கிறது நல்ல பலனை அளிக்கிறது என்று ஏற்றுக்
கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கமும் அதை ஏற்று
கொண்டு செயல்பட்டு வந்திருக்கிறது, அப்படியிருக்கிறபோது
இப்போது அதை விஸ்தரிக்கவில்லை என்பது சரியல்ல. அதை
விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இங்கே கொடுக்கப்பட்டுள்ள பாலிசி மேட்டர்களில்
குறிப்பாக அர்பன் கம்ப்போஸ்ட்டுக்கு புதிய அணுகுமுறை
களைச் செய்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அதை
வரவேற்கிறேன். டிரை லெட்ரின் முறைகளை மாற்றி பிளஷ்
அவுட் லெட்ரின் முறைகளைக் கொண்டு வருகிறார்கள். பில்த்
சக்கிங் மெஷின் என்பதன் மூலமாக அதை அகற்றுகிறார்கள்.
ஒவ்வொரு நகராட்சிக்கும் அதை விஸ்தரிக்கவேண்டும். சென்னை
நகரம், மற்றும் உள்ள பெருநகரங்களிலே அர்பன் கம்ப்போஸ்ட்
என்ற வகையிலே பணிகள் நடைபெற அவைகளை அகற்று
வதற்கு மோட்டார் வண்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்
றை நகராட்சிகளுக்கும் விஸ்தரிக்க வேண்டும். அதன் மூலமாக
அர்பன் கம்ப்போஸ்ட் என்ற முறையிலே சிறப்பாக செயல்
படுத்த முடியும்.

அடுத்து தென்காசி பகுதியிலே ஒரு கோடி ரூபாய் செலவிலே
ஜாஸ்மின் எக்ஸ்ட்ராக்ஷன் பிளாண்ட் ஏற்படுத்த இருப்பதாகச்
செய்திகள் வந்திருக்கின்றன. அதற்காக நான் இந்த அரசுக்கு
நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தனை ஆண்டுக்
காலத்திலே முதன்முதலாக இப்போதுதான் தென்காசி பகுதியிலே
ஒரு தொழிற்சாலை வருகிறது என்பதால் நான் அந்த
தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே அதனை
வரவேற்று, விரைவிலே அது அமைக்கப்படவேண்டும். அது
விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்பட இருக்
கிற தொழிற்சாலையாக இருப்பதால் என் பகுதியிலே மகத்
தான முறையிலே முன்னேற்றம் ஏற்படும் வாய்ப்பு இருக்கிறது
என்பதை சுட்டிக்காட்டி, அதற்கான வேலைகளை விரைவு
படுத்தவேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்
கொள்கிறேன்.

இரசாயன உரத்தின் காரணமாக நோய்களும் பெருகி
யிருக்கின்றன என்று நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். நோய்த்
தடுப்புத் திட்டங்களுக்காக ஒதுக்கப்படுகிற மானியத் தொகை
கள் குறைக்கப்பட்டிருக்கின்றன என்பது வேதனைக்குரியதா
கும். நோய்கள் பெருகிவருகிறபோது நோய்கள் பற்றி ஆராய்ச்சி
செய்வதற்காக ஒதுக்கப்படுகிற தொகை அதிகப்படுத்தப்பட
வேண்டும்.

நெல்லை, குமரி ஆகிய மாவட்டங்களிலே தென்னை
மரங்கள் நோயால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. கேரள வெக்கை
நோய் அங்கே உள்ள தென்னை மரங்களையெல்லாம் கபளீ
கரம் செய்யக்கூடிய துர் பாக்கியமான நிலைமை இருக்கிறது.

மானியம் கொடுத்து அந்தத் தென்னை மரங்களையெல்லாம் வெட்டி எரித்துவிடச் சொல்கிறார்கள். இப்படி மானியம் கொடுத்து, வெட்டச் சொல்வதன் மூலமாக இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது. ஆகவே நோய் வராமல் இருக்கச் செய்கின்ற முறையிலே ஆராய்ச்சியை முடுக்கிவிட்டு அந்தத் தென்னை மரங்களைக் காப்பாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

டிரிப் இரிகேஷன் என்பதற்கு இன்றைக்குப் புதிய ஊக்கம் கொடுக்கப்பட்டுவருகிறது. நான் அதை வரவேற்கிறேன்.

**(பிற்பகல் 12-30)**

**ஆனாலும்கூட** மிகப்பெரிய அளவிற்கு இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய எல்லோரும் மின்சார உற்பத்திக் குறைவின் காரணமாக விவசாயிகள் எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள் என்று கூறிச் சென்றார்கள். எப்படி நீரினால் ஆக்கவும் முடியும், அழிக்கவும் முடியுமோ அதைப் போலவே காற்றினாலும் ஆக்கவும் முடியும், அழிக்கவும் முடியும் என்ற அளவிற்குக் காற்றிற்கும் சக்தி இருக்கிறது. என்னுடைய பகுதியில் காற்றினால் வாழைகள் சாய்ந்து விடுகின்றன. காற்றின் காரணமாக வாழை மகசூல் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. இதற்குப் பொதுவான, நிலையான ஒரு பாதுகாப்பை ஏற்படுத்துகின்ற முறையில் தடுப்புச் சுவர் போன்ற திட்டங்களை அரசு கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே சமயத்தில், காற்றின் மூலமாக இயங்கக் கூடிய காற்றாடிகளை அமைத்து, அந்த காற்றாடிகள் அசைகின்ற பொழுது ஏற்படுகின்ற சக்தியின் மூலமாக நிலத்தடி நீரை மேலே கொண்டு வருவதற்கான திட்டங்களையும் தீட்ட வேண்டும். காற்று நீர் தூக்கிகளின் மூலமாக உலகமெங்கிலும் விவசாயிகளுக்குத் தேவையான நீர் இறைக்கப்பட்டு வருகின்றன. சமீபத்தில் பத்து நாட்களுக்கு முன்னால் கோயம்புத்தூருக்குச் சென்ற நான் அங்கேயுள்ள விவசாயப் பல்கலைக் கழகத்திற்கும் சென்றேன். காற்றழுத்த நீர் தூக்கிகளைக் காணச் சென்றேன். ஆனால் அப்பொழுது அங்கேயுள்ள மூன்று காற்றழுத்த நீர் தூக்கிகளும் வேலை செய்யாமல் உடைந்து போய் மூன்று வருஷங்களாக வீணாகக் கிடக்கின்ற நிலைமையைத்தான் பார்த்தேன். ஒரு ஆராய்ச்சிக் கூடத்தில், விவசாயத்திற்கு முக்கியமான தேவையான அடிப்படைகளை ஆராய்ச்சி செய்வதற்காக இருக்கின்ற இடத்தில் இப்படி காற்றழுத்த நீர் தூக்கிகள்--வின்ட் மில்கள் வேலை செய்யவில்லை, அதற்காக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை அறிந்து நான் மிகுந்த வேதனைப்பட்டேன். தென்காசி பகுதியில் காற்று வேகம் அதிகமாக





இருக்கிறது. எனவே, நம்முடைய பகுதிக்கு அந்த வின்ட் மில்களின் மூலம் பலன் கிடைக்கும், அதைப்பற்றி அறிந்து வரலாம் என்று அங்கே உள்ள ஆராய்ச்சி கூடத்திற்கு சென்றால் அங்கேயே இப்படிப்பட்ட அவலநிலை இருப்பதை கண்டு வேதனையோடு திரும்பி வந்தேன். ஆகவே, உடனடியாக இப்படிப்பட்ட யூனிட்டுகள் மூலம் தண்ணீர் இறைக்கின்ற திட்டத்தைக் கொண்டு வர வேண்டும். இலவசமாக மின்சாரம் கொடுப்பதில் எத்தனையோ துஷ்பிரயோகங்கள் நடக்கின்றன என்றெல்லாம் பேசப்படுகின்ற இந்தக் காலக்கட்டத்திலே, ஒவ்வொருவருக்கும் இப்படிப்பட்ட யூனிட்டுகளைத் தனித்தனியாக அமைத்துக் கொடுத்தால், குறிப்பாக, எங்கள் தென்காசி பகுதி, திருநெல்வேலி மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் போன்ற இடங்களில் அதிகமான காற்றழுத்தம் இருப்பதால், அங்குள்ள மக்கள் யாருடைய தயவும் இல்லாமல் அதிக நாட்களுக்குத் தண்ணீரை இறைத்து விவசாயத்தை முன்னேற்றுகின்ற வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தற்பொழுது தென் மாவட்டங்களில் புதிதாக ஒரு ஆபத்து உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குளங்களிலும், நீர்த்தேக்கங்களிலும், நதிகளிலும் ஆகாயத் தாமரை என்ற விஷச் செடி மிகவும் வேகமாகப் பரவி வருகிறது. நான் கூட முதலில் நினைத்தேன், ஆகாயத் தாமரை படர்வதால் தண்ணீர் ஆவியாவது குறையும் என்றுதான் நினைத்தேன். ஆனால் பிறகு விஞ்ஞானிகளிடத்தில் கலந்த பொழுது, சூரிய வெப்பத்தால் தண்ணீர் ஆவியாவதை விட அதிக அளவிற்கு 40 சதவீத அளவிற்கு இந்த ஆகாயத் தாமரைகள் தண்ணீரை உறிஞ்சுவதால் தண்ணீரில் கொள்ளளவு குறைகிறது என்று தெரிவித்தார்கள். ஆகாயத் தாமரைகள் படர்வதால் தண்ணீரிலே சூரியக் கதிர்கள் படாமல் போகின்றன. அதனால் தண்ணீரில் உள்ள மீன்கள் பாதிக்கப்படுகின்றன. எனவே, ஆகாயத் தாமரை இருக்கின்ற இடங்களில் மீன் வளம் அடியோடு பாதிக்கப்படுகிறது. அந்த தண்ணீரின் குளிக்க முடியவில்லை. அந்த தண்ணீரில் குளிப்பவர்களுக்கு புது வகையான ஊறல் நோய் தோன்றுகிறது ; சுகாதாரக் கேடுகள் வருகின்றன என்றெல்லாம் அங்கேயுள்ளவர்கள் கூறுகிறார்கள். இது குறித்து நான் பி.டபிள்யு.டி, அதிகாரிகளிடத்திலே கேட்டேன். நீங்கள் ஆகாயத் தாமரையை அகற்றினால் என்ன என்று கேட்டேன். அதற்கு அவர்கள், இது விஞ்ஞான சம்பந்தப்பட்ட விஷயம், ஆகாயத் தாமரைகளை அடியோடு அகற்ற வேண்டும். காளான்களைப் போல் அவைகள் முளைத்து இருக்கின்றன, ஆனால் அவற்றை அழிக்கின்ற சக்தி எங்களுக்கு இல்லை என்று பி.டபிள்யூ.டி.யில் உள்ளவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, விவசாயத் துறையைச் சேர்ந்தவர்கள் தண்ணீரையும் மக்களையும் காப்பாற்றும் வகையில் அதற்கான திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. டி. ஆர். வேங்கடரமணன்] [1985 ஜூன் 4

சுந்தரபாண்டியபுரத்தில் வேளாண்மைக் கிடங்கு பல ஆண்டுகளாகக் கட்டி முடிக்கப்படாமல் பாதியிலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிநீரைப் பொறுத்தவரையில், தென்காசி முனிசிபாலிட்டியில், 1977 ஆம் ஆண்டு 50,000 ரூபாய் பொதுத் திட்டத்திற்காக கட்டப்பட்டு, இன்வெஸ்டிகேஷன் எடுக்கப்பட்டும்கூட, மீண்டும் 40,000 ரூபாய் கட்ட வேண்டுமென்று கேட்கிறார்கள். முதலில் கட்டப்பட்ட 50,000 ரூபாய்க்கு 15 சதவீதம் வட்டி என்றாலும் கூட ஏழு ஆண்டுக் காலத்திற்கு 72,000 ரூபாய் வரும். ஆகவே நீங்கள் கேட்டும் பணத்தை எங்கள் பணத்திற்கு உண்டான வட்டியின் மூலமே சம்பாதித்துக் கொள்ள முடியும். எனவே, இந்தத் திட்டத்தை நீங்கள் முடுக்கிவிட வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தைப் பற்றி விவாதிப்பதற்காக மதுரையில் உள்ள 'ட்வாட்' போர்டு அதிகாரிகளைச் சந்திக்க சென்றேன். அப்பொழுது நான் பெற்ற அனுபவத்தைச் சொல்கிறேன். மதுரையில் 'ட்வாட்' போர்டு அதிகாரிகள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்று அறிந்து கொண்டேன். Urban, Rural, Project formation, Execution, World Bank Scheme, Chief Engineer's Office, T.K. Circle, Designs Office,........

இப்படி எட்டு ஆபீஸ்கள் மதுரை மாவட்டத்திற்கு இருக்கின்றன. இராமநாதபுரம் மாவட்டத்திற்கும் இப்படி இருக்கிறது. கிட்டத்தட்ட 16 ஆபீஸ்கள் இருக்கின்றன. நான் இந்த ஆபீஸ்களில் ஏறி இறங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இங்கே நாங்கள் தண்ணீர் இல்லை என்று தவித்து, திட்டங்கள் தீட்ட வேண்டுமென்று ட்வாட் என்ற ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தினால், அங்கே அது ஆலமரம் போல் வளர்ந்து, இன்றைக்கு ஏகப்பட்ட கிளைகளாகப் பிரிந்து, பாட்டில் நெக் என்ற சொல்லத்தக்க அளவிலே, ஒவ்வொரு திட்டமும் ஒவ்வோரிடத்திலே தேங்கி வந்திருக்கிறது. அது மட்டுமல்ல, சுண்டைக்காய் கால் பணம், சுமைக்கூலி முக்கால் பணம் என்பது போல், திட்டங்களுக்காக ஒதுக்கப்படுகிற பணம் எல்லாம் அதிகாரிகள் எல்லாம் அதிகமான அளவில் ஏற்படுத்தப்படுவதன் மூலமும், அரசு அலுவலகங்கள் அதிகமான அளவில் ஏற்படுத்தப்படுவதன் மூலமும் செலவிடப்படக்கூடிய துர்பாக்கியமான சூழ்நிலை இன்றைக்கு ட்வாட் பொறுத்தவரையில் ஏற்படுகிறதோ என்று நான் அச்சப் படுகிறேன். இன்றைக்கு அதிகாரிகளே வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஆனால் அமைச்சர் அவர்கள் ட்வாட் போர்ட் ஓரளவுக்கு மேல் அதிகமாக விரிந்து விடாமல், இத்தனைப் பிரிவுகளாகப் பிரிந்து செயல்படுவதைக் காட்டிலும் ஒரே பிரிவாகப் பிரித்து, செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது)

11,850 குழாய் கிணறுகள் போடப்பட்டிருப்பதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது. ஆனால் எவ்வளவு குழாய் கிணறுகள் வேலை செய்கின்றன என்ற தகவல் தரப்படவில்லை. போட்டப்



1985 ஜூன் 4] [திரு. டி. ஆர். வேங்கடரமணன்]

பட்ட குழாய்களிலே பாதி வேலை செய்யவில்லையென்பதுதான் நிலைமை. காரணம் கேட்டால் மார்க் 1 பம்ப் போட்டோம், மார்க் 1 பம்ப் டெக்னிக்கல் பெயிலியர் என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே எத்தனை அதிகாரிகள் இருக்கிறார்கள் எத்தனை அலுவலகங்கள் இருக்கின்றன என்று நான் குறிப்பிட்டேன். இவ்வளவு தூரம் இருந்தும், கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவிட்டும் கூட, போடப்பட்ட குழாய்கள் நம்முடைய தமிழ் நாட்டிற்கு ஏற்றதல்ல என்ற நிலைமையிலேதான் இன்றைக்கு சேலம் மாவட்டத்திலும் வடாற்காடு மாவட்டத்திலும் மட்டும் ரூ. 1 கோடியே 1 இலட்சம் செலவிலே பம்புகளை மாற்றுவதாக தகவல் தந்திருக்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துகின்ற முறை சிறப்பாக அமைய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டே இரண்டு நண்பர்கள் கூறிய கருத்துக்களை மட்டும் இந்த நேரத்திலே கூறி, விடைபெறுகிறேன். சேந்தமங்கலம் தொகுதியிலே இருக்கக்கூடிய தாளவாடி பகுதியிலே 8 நீர்த் தேக்கங்களும், புழல் பகுதியிலே இருக்கக் கூடிய 9 மேல்நிலைநீர் தேக்கங்களும், கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டி முடிக்கப்பட்டு, அவற்றிற்குத் தேவையான பம்புகள் வைக்கப்பட்டு, குழாய்கள் போடப்பட்டு, புது மணப் பெண்ணைப் போல் காத்துக் கொண்டிருக்கிறது என்றும் அமைச்சர் என்ற திருமகனார் வந்து அவற்றைத் திறந்து வைக்க வேண்டும்மென்றும் என்னிடத்தில் சில உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இது போன்ற திட்டங்கள் தீட்டப்படாமல், தண்ணீர் இல்லாமல் வாடுகின்ற பகுதியிலே மக்கள் ஒரு பக்கம் இருக்க, பல இலட்சம் ரூபாய்களை செலவழித்து, திட்டங்கள் தீட்டப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்கங்கள் கட்டப்பட்டும்கூட அவற்றைத் திறந்து வைக்காத காரணத்தினால் மக்கள் தண்ணீர் இல்லாமல் அவதிப்படுகின்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அது இனியாவது மாற வேண்டுமென்று அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, சேலம் ஆத்தூர் நகரத்திற்கு 5 நாட்களிலே 1 நாள் மட்டும்தான் தண்ணீர் தரப்படுவதாக நம்முடைய அன்பர்கள்—உறுப்பினர்கள்—என்னிடத்திலே தெரிவித்தார்கள். மிகுந்த வறண்ட பகுதியான, அங்கே மொத்தமுள்ள 4 பஞ்சாயத்து யூனியன்களிலே, மொத்தம் 10 ஆழ்குழாய்க்கிணறுகள்தான் போடப்பட்டன என்று குறிப்பிட்டார்கள். தயவு செய்து 300 அடி ஆழத்திலே 6'' அகலமுள்ள குழாய்கள் போட்டு, அந்தப் பகுதிக்குத் தண்ணீர் கிடைக்க வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, இந்த மாமன்றத்தில் எனக்கு மீண்டும் பேச வாய்ப்
பளித்த முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் சேந்தமங்
கலம் தொகுதி மக்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு
மக்களின் உயிர் நாடியாக விளங்குகின்ற வேளாண்மைத் துறை
யினைப் பற்றியும் குடிநீர் வழங்கு துறை பற்றியும் மாண்புமிகு
வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்
கின்ற மானியக் கோரிக்கையினை வரவேற்று என்னுடைய ஒரு
சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். வேளாண்மைத்
துறையைப் பொறுத்த வரையிலும் நாட்டிலே பல்வேறு
வறட்சி நிலைமை இருந்த காலத்திலும், இந்த ஆண்டு
வேளாண்மைத் துறை சிறந்து விளங்குகின்ற துறையாக இருக்கிற
காரணத்தால்தான் ஓரளவு விலையேற்றத்தை தடுக்க முடிந்தது.
வேளாண்மைத் துறை விளை பொருள்களை உற்பத்தி செய்திருக்
கிற காரணத்தால்தான், இன்று நாடு விலையேற்றத்திலிருந்து
குறைந்து, மக்கள் வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளும் முறை
யிலே இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. இன்னும் மேன்
மேலும் வேளாண்மைத் துறையைச் சீராக வைக்க ஒத்துழைக்கின்ற
மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் என்
னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுடைய பகுதியைப் பொறுத்த வரையில் தோட்டக்
கலைத் துறை சிறந்து விளங்குகிறது. தோட்டக்கலைத்
துறையின் மூலம் எங்கள் பகுதியில் அன்னாசிப்பழ ஆராய்ச்சிப்
பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு
அங்கே மேலும் 16 ஏக்கர் எடுத்து இப்பணியை விரிவு
படுத்த அரசு நிதி ஒதுக்கியிருக்கிறது. அதை விரைவாகச்
செயல்படுத்த வேண்டும் என்றும் அந்தப் பகுதியிலே இருக்கிற
மலைவாழ் மக்களுக்கு மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத்
திட்டத்தின் கீழ் பல்வேறு உதவிகளைச் செய்து, புதிய புதிய
பயிர்களை அந்தப் பகுதிக்கு ஏற்ப உருவாக்கிக் கொடுத்து இந்தத்
துறை நல்லமுறையில் செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக்
கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40.)

கொல்லிமலையைப் பொறுத்தவரையில் மண்வள மேம்
பாட்டுத் திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்கள் செயல்பட்டு
வருகின்றன. இந்தத் திட்டங்கள் மூலம் பல்வேறு பணிகள்
செயல் படுத்தப்பட்டு வந்தாலும் அவை ஒருசில கோளாறு
களினால் நல்லமுறையில் செயல்படாமல் இருக்கின்றன.
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை கருத்திற் கொண்டு,
நல்லமுறையில் திட்டங்கள் செயல்பட சம்மந்தப்பட்ட அதி
காரிகள் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு தகுந்த நடவடிக்கை
களை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து, இந்தத் துறையின் மூலம் கசிவுநீர்க் குட்டைகள்
அமைக்கப் பட்டிருக்கின்றன. இந்த கசிவுநீர்க் குட்டைகளைப்
பொறுத்த மட்டில் ஒவ்வொரு பகுதியாகத் தேர்ந்தெடுத்து
அமைத்து வருகிறார்கள். இது பயனுள்ள வகையில் அமைந்
திருக்கிறது என்பதைத் காண்கிறோம். எனவே தொடர்ந்து
இந்த கசிவுநீர்க் குட்டைகள் அமைக்கும் திட்டத்தை ஐ.ஆர்.
டி.பி. போன்ற பல்வேறு திட்டங்கள் மூலம் நல்லமுறையில்
செயல்படுத்த வேண்டும்; அதன் மூலம் விவசாயத்திற்கு
3 மாதம் 6 மாதம் பாசன வசதிக்கு பயன் ஏற்படும் வகையில்
செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலை மலைப்பகுதி பல்வேறு தரமாகப் பிரிந்து
இருக்கிற காரணத்தால் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொருவித
மாக இருக்கிறது. அதனால் அங்கே ஏர்க்காட்டில் உள்ளதைப்
போல ஒரு பல்கலைக் கழக ஆராய்ச்சி தோட்டக்கலைத்
துறையை உருவாக்கலாம்.

அதைப்போன்று கல்வராயன் மலைப் பகுதியில் தோட்டக்
கலைத் துறையின் மூலம் ஒரு பழப் பண்ணையை உருவாக்கிக்
கொடுக்க அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும். தோட்டக்
கலைத் துறையின் மூலம் கொல்லி மலையில் தேயிலை பயிர்
செய்ய 2.5 கோடி ரூபாய்ச் செலவிலான ஒரு திட்டம்
இருப்பதாக நான் அறிகிறேன். மலைவாழ் மக்கள் மேம்
பாட்டுத் திட்டத்தின் மூலம் மத்திய அரசு அனுமதி பெற்று
இப்பணி நிறைவேற்றப்படும் என்று தெரிகிறது. தேயிலை
பயிரிட நல்ல சூழ்நிலை இருக்கிறது. நீலகிரியில் தேயிலை
வளர்ச்சி பெற 8 மாதங்கள் ஆகும் என்றும் கொல்லிமலை
யில் 6 மாதத்தில் அதே வளர்ச்சியைப் பெற்றுவிடும் என்றும்
அங்கே இருக்கிற அதிகாரிகள் கூறுகிறார்கள். இந்தக்
கருத்தை ஆராய்ந்துபார்த்து, 2.5 கோடி ரூபாய்ச் செலவிலான
திட்டத்தை மத்திய அரசின் அனுமதி பெற்று, விரைந்து
செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்தபடியாக தமிழ்நாடு வேளாண் பொறியியல் மற்றும்
பணித்துறைப் பிரிவைப் பொறுத்தவரையில் மைய அரசும்
மாநில அரசும் விவசாயிகளுக்கு உதவி செய்யும் விவசாய சேவை
மையங்களை 72 இடங்களில் தொடங்கியிருக்கிறார்கள். இதன்
மூலம் விவசாயிகளுக்கு பல்வேறுபட்ட விவசாய நவீன
கருவிகளை 50 சதவீத மானியத்தில் கொடுக்கிறார்கள்.
மைய அரசு 25 சதவீதம் மானியமும் மாநில அரசு 25
சதவீதம் மானியமும் கொடுத்து மீதியுள்ள 50 சதவீதத்தை
பொறியியல் துறையில் கொடுக்கிறார்கள். இந்தத் துறையின்
மூலம் இயங்குகிற 72 மையங்களைப்போல் என்னுடைய
தொகுதியிலும் சில மையங்களைத் திறப்பதற்கு அரசு
முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மையை பொறுத்தவரையில் இன்று நவீன
உரங்கள் வருகிற காரணத்தால் புதிய ரக உரங்களைப்
போட்டு பயிர் சாகுபடி செய்கிறார்கள். அதனால் மண்
வளம் பாதிக்கப்படுகிறது. வேளாண்மைத்துறை இயற்கை
எருக்களை முன்பு உற்பத்தி செய்ததுபோல இப்போது
அதிகமாக உற்பத்தி செய்யவில்லை. இயற்கை உரங்களை
அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும். நல்ல பலன் தரும்
மரவகைகளை உற்பத்தி செய்து அதிகமாக தழை உரங்களை
உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கவும்,
இந்த முறையை கற்றுக்கொடுக்கவும் அரசு முன்வர வேண்டும்.

குடிநீர் வடிகால் வாரியத்தைப் பொறுத்த மட்டில்,
தமிழ்நாட்டில் இந்த வாரியம் சிறப்பாகச் செயல்பட்டுக்
கொண்டிருக்கிறது. உள்ளாட்சித்துறையும் முனிசிபல் துறையும்
சேர்ந்து இயங்கினால்தான் குடிநீர் வடிகால் வாரியம் சிறப்
பாகச் செயல் படமுடியும். இந்தக் குடிநீர் வடிகால் வாரியம்
ஒரு பணியைச் செய்து முடிக்கிற வாரியமாகத்தான் இருக்கிறது.
செய்ய வேண்டிய பணியைப் பற்றி முடிவு எடுப்பது
உள்ளாட்சித் துறையும் முனிசிபல் துறையும். எடுத்த முடிவைச்
செயல்படுத்துவது குடிநீர் வடிகால் வாரியம். அதனால்
இந்த வாரியம் ஓரளவு மக்களுக்குப் பணிகளைச் செய்து
கொண்டிருந்தாலும் சிறப்பாகச் செய்ய முடியாமல் இருக்
கிறது.

எங்களுடைய பகுதியிலே காலப்பநாயக்கன்பட்டி
யிருப்புக்குக் குடிநீர் வழங்க அரசு அனுமதி வழங்கியும் இது
வரையில் அந்தப் பணி நிறைவேற்றப்படாமல் காலதாமதப்பட்
டிருக்கிறது. ஏனென்றால் அதற்கான டெக்கினிகல் எஸ்டிமேட் இது
வரையில் செயல்படுத்தி முடிக்கப்படாத காரணத்தால் அந்தத்
திட்டத்தை எவ்வளவோ கஷ்டப்பட்டு வாங்கியும் இதுவரை
யில் அது செயல் படுத்தப்படவில்லை என்ற காரணத்தால்
அந்தப் பகுதியில் உள்ள மக்கள் மன நிறைவு அடைய
முடியாத நிலையில் இருக்கிறார்கள். எனவே அதைச் செயல்
படுத்தி அதற்குப் பக்கத்தில் இருக்கின்ற துத்திகுளத்தையும்
அந்தத் திட்டத்தில் இணைத்துக்கொள்ளவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தன்னிறைவுத் திட்டத்தில் அது எடுத்துக்கொள்ளப்
பட்டு அரசின் அனுமதிக்காக அந்தக் கோப்பு வந்திருக்கிறது.
அந்தக் கோப்புக்கும் அரசு அனுமதி கொடுத்து இந்தத்
திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தில் முதல் கட்டமாக நிறைவேற்றப்
பட்ட பகுதிகளில் ஒருசில பணிகள் பவர் பம்ப் மூலமாக நிறை
வேற்றப்பட்டிருந்தாலும் அந்தப் பணிகள் சிறப்பாக இல்லை.





அந்தப் பவர் பம்ப் வைக்கப்பட்டிருக்கின்ற இடத்திற்குப்
பக்கத்தில் விவசாயப் பெருமக்கள் இருப்பதாலோ என்னவோ
ஒருசில பவர் பம்ப்கள் ஒருநாள் தான் இயக்கக்கூடியதாக இருக்
கின்றது. ஒரு மாதம் இயங்கக்கூடிய அளவில் கூட பெரும்
பாலான பவர் பம்ப்கள் இல்லை. எனவே அதனை யார்
கோளாறு செய்கிறார்கள் என்றறு பார்த்து உரியவர்கள் மீது
நடவடிக்கை எடுத்து பொதுமக்களுக்கு நிரந்தரமாகக் குடிநீர்
கொடுக்கக்கூடிய வசதி வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க
வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதிகளைப் பொறுத்தவரையில் புதுச்சத்
திரம் ஒன்றியம் மிகுந்த வறட்சிப் பகுதியாக இருப்பதால்
அந்தப் பகுதியில் ஒரு தனி குடிநீர்த் திட்டத்தை உருவாக்கி
அதற்காக 60 இலட்சம், 70 இலட்சம் செலவு செய்து
நிறைவேற்றி இருந்தாலும் அந்தப் பகுதி மக்களுக்கு நிறைவு
ஏற்படாத நிலைதான் இருந்துகொண்டிருக்கிறது,. அதைப்
போக்க ஒரு நல்ல திட்டத்தை உருவாக்கிக் கொடுக்க
வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மலைவாழ்
கொல்லிமலை மக்களைப் பொறுத்தவரையில் மலைவாழ்
மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 9 கோடி ரூபாய்
செலவில் ஒரு திட்டத்தைத் தயாரித்து குடிநீர் வடிகால்
வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசினுடைய
உதவியைப் பெற்று அந்தத் திட்டத்தை விரைவாகச் செயல்
படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆழ்துளை குழாய்க் கிணறு அமைப்பதைப் பொறுத்
தவரையில் இன்று வரையில் குடிநீர் வடிகால் வாரியமும்,
உள்ளாட்சித் துறையும் சேர்ந்து செயல்படுகின்றன. அவ்வாறு
சேர்ந்து செயல்பட்டாலும் அந்தப் பணியை அவர்களிடத்தி
லிருந்து இன்று குடிநீர் வடிகால் வாரியம் பெற்றிருக்கின்றது.
அவ்வாறு அமைகின்ற பணிகளைப் பொறுத்தவரையில்
அவற்றை இவர்களாகவே உருவாக்கிக் கொடுத்து சிறந்த
பிட்டர்களைக் கொண்டு நல்ல நிலைமையில் அமைக்க
வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது வறட்சிக் காலத்திலே போடப்படுகின்ற குடி
நீர் ஆழ் குழாய் கிணறுகளைப் பொறுத்தவரையில் பெய்
லியர் ஆகிவிட்டது என்ற காரணத்தால் மிக மோசமான-
நிலைமை பல்வேறிடங்களில் நிலவுகின்றது. எனவே உடனடி
யாக அந்தப் பகுதிகளை மாற்றி கிணறு அமைக்கவேண்டும்
என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்
கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் அக்கியம்
பட்டி, கோனாலூர், கல்குறிச்சி, வெள்ளாளபட்டி, இராசி
புரம் சாலை, அண்ணா நகர், விலாங்காடு வாழவந்திக்

கோம்பையில் நாடார் தெரு, துத்திக்குளம், தேவேந்திரன்
தெரு, வடுகப்பட்டி அருந்ததியர் தெரு, புதுச்சத்திரம்-
ஒன்றியத்தில் ஏளூர்-அருத்ததியர் தெரு, எஸ்-உடுப்பம்
செங்கோடம்பிள்ளை அருந்ததியர் தெரு, கதிராநல்லூர்
குடிநீர்த் திட்டம் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் தன்
னிறைவுத் திட்டத்தில் எடுக்கப்பட்டு நீண்டகாலமாக நிலுவை
யில் இருக்கின்றன. எனவே அதைச் சிறப்பாகச் செயல்
படுத்துகின்ற வகையில் தன்னிறைவுத் திட்டத்தில் மூன்றாம்
திட்டத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

உலக வங்கித் திட்டத்தில் இரண்டு மாவட்டங்கள்
மட்டும்தான் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அத்தோடு
சேலம் மாவட்டத்தையும் எடுத்துக் கொண்டு எங்கள் மாவட்
டத்தில் உள்ள பல்வேறு குடிநீர் பற்றாக்குறை உள்ள
பகுதிகளையும் சேர்த்துக்கொண்டு, அதனை அமல்படுத்த
வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த
மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களுக்கும் புரட்சித் தலைவர்
அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சருக்கும் நன்றி கூறி
விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள்
கொண்டு வந்திருக்கும், விவசாயம், குடி தண்ணீர் ஆகிய இந்த
இரண்டு மானியக் கோரிக்கைகளின் மீதும், நான் சார்ந்திருக்கிற
காந்தி காமராஜ் தேசீய காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஓரிரு
கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

(பிற்பகல் 12-50)

சமீபத்திலே ஏற்பட்ட வறட்சியின் காரணமாக அதுவும் சாத்
தான் குளம் தாலுக்கா மிகவும் பின் தங்கிய பகுதியாக இருப்பதன்
காரணமாக, அந்த வறட்சியின் கடுமை அங்கு மிகவும் பாதித்து
இருக்கிறது. எனவே சாத்தான்குளம் தாலுக்காவை வறட்சிப்
பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்
கிறேன்.

மேலும் விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு
வந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கையில் பேசுகையில், விவ
சாயப் பகுதியாக இருக்கிற என்னுடைய தொகுதியில், கருங்
குளம் ஒன்றியத்தைப் பொறுத்தவரை, அங்கு ஒரு பெரிய ஏரி,
பாசன ஏரியாக இருந்து வருகிறது. ஆனால் அந்தப் பாசன ஏரி
தூர்ந்து உள்ளதாகச் சொல்லப்படுகிறது. அதன் காரணமாக
கிட்டத்தட்ட 30 ஆண்டுகளாக அந்தக் கருங்குளம் பகுதியில்
பாசன வசதி இல்லாமல் இருப்பதால், அந்த ஏரியை தூர்
எடுத்து ஆழப்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்





கிறேன். அதேபோல கடம்பா பாசனம் என்று ஒன்று. 28 ஆயிரம் ஏக்கர் கொண்ட பாசனமாக அமைந்திருக்கிற அந்தக் குளம், வெள்ளம் வந்த போது கிட்டத்தட்ட 7 அடி தூர்ந்து உள்ளதாக அங்குள்ள பெரியவர்கள் கூறுகிறார்கள். எனவே அந்தக் கடம்பா பாசனக் குளத்தையும் ஆழப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மணிமுத்தாறு பாசனம். இந்த மணிமுத்தாறு கால்வாயை வெட்டுவதற்காக, எங்கள் பகுதி மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் தாங்களாகவே டொனேஷன் செய்து உதவி செய்து, இந்த கால்வாய் கட்டப்பட்டது. அதில் 4 வகையான பாசனம் அடங்கியுள்ளது. எனது தொகுதியில் 3-வது பாசனமும், 4-வது பாசனமும் வகுக்கப்பட்டு அந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. மூன்றாவது பாசனம் என்று சொல்லக்கூடிய இடத்திலே வரக்கூடிய கால்வாய் மூலக்கரைப்பட்டிக்கு கிழக்கே கிட்டத்தட்ட 7 மைல் நீள அளவைக் கொண்டு வெட்டப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தக் கால்வாய் மிகவும் குறுகிய கால்வாயாக இருக்கிற காரணத்தாலே, அங்கே தண்ணீர் வரக்கூடிய நேரத்திலே 440 கியூசெக்ஸ் தண்ணீர்தான் வந்துக் கொண்டிருக்கிறது. அதை 800 கியூசெக்ஸ் தண்ணீர் கொண்டு வரக்கூடிய அளவிற்கு அகலப்படுத்தி, ஆழப்படுத்தி, சிமெண்ட் கான்கிரிட் போட்டுக் கொடுத்தால் பழனியப்பபுரம் வரையில் இருக்கக் கூடிய ஊர்களுக்குப் பாசன வசதிகளைக் கொடுப்பதற்கு ஒரு வாய்ப்பாக அமையும்.

அதேபோல 4 வது ரிட்ஸ். சாத்தான் குளத்திற்குத் தண்ணீர் வரும் கருமேனி ஆற்றுவழிப் பாசனமாக இருந்து கொண்டிருக்கிறது. அங்கே தண்ணீர் வரும்போது பெரும்பத்துக் குளம் என்று ஒரு குளம் இருக்கிறது. அங்கேயிருக்கக்கூடிய கருமேனி ஆற்றிலே குறுக்கே அணையைக் கட்டி மழைக் காலங்களில் இந்த பெரும்பத்து குளத்தில் நீர் விழச் செய்து தேக்கச் செய்தால், அந்தப் பகுதி மக்களுக்கு கோடை காலம் வரை தண்ணீர் கிடைப்பதற்கு வாய்ப்பாக அமையும். ஆகவே, இந்த 4வது பாசனப் பகுதியான பெரும்பத்து குளத்தில் தண்ணீர் வரும் வகையில் அணையைக் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் ஆளங்கால் வடிகால் திட்டம் என்று ஒன்று ஆரம்பிக்கப்பட்டு நீண்ட நாட்களாக ஆய்விலே இருப்பதாகச் சொல்லுகிறார்கள். என்னுடைய தொகுதியிலே கோட்டூரிலேயிருந்து கராரர்விளை வரை அந்தக் கால்வாயை ஏற்பாடு செய்து அகோபாலபுரம் என்ற கிராமப் பகுதியில் கடலுக்குச் செல்வதாகச் சொல்லப்படுகிறது. அந்த ஆளங்கால் வடிகால் திட்டத்தை உடனடியாக கோட்டூர் பகுதியிலிருந்து கடல் வரை கொண்டு செல்வதை அமல் செய்தால் மழைக் காலங்களில் அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள், பாதிக்கப்படாத அளவுக்கு அது நல்ல வாய்ப்பாக அமையும். ஆகவே அந்த ஆளங்கால் வடிகால் திட்டத்தை விரைவில் ஏற்பாடு செய்துத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குடிதண்ணீர் வசதிக்காக 130 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டிருப்பதாக செய்தி இருக்கிறது. ஆனால் குடிதண்ணீர் என்பது இப்பொழுது எல்லாக் கிராமத்திற்கும் தேவைப்படுகிறது. சமீபத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வந்து, 2, 3 குடிநீர் திட்டத்தைத் திறந்து வைப்பதாக இருந்தது. ஆனால் அவசர வேலை காரணமாக அவர்கள் வந்து அந்த அடிக்கல் நாட்டு விழாவிலே கலந்துக் கொள்ளவில்லை. இருந்தபோதிலும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இந்த அடிக்கல் நாட்டு விழாவிலே கலந்துக் கொண்டார்கள். அதேபோல ஏற்கெனவே நாசரேத் என்னும் இடத்தில் 68 இலட் சம் ரூபாய் செலவிலே நீண்ட நாட்களாக போடப்பட்டு வந்த அந்தக் குடிநீர் திட்டம் இன்று முடிவடையும் தருவாயில் இருக் கிறது. ஆற்றுக்குள்ளே போடப்பட்டிருக்கிற கிணறு சரியான முறை யில் பராமரிக்கப்படவில்லை. அந்தத் திட்டம் முடிவாகும் நிலையில் இருந்தும், அங்கே ஆறு மோட்டார்கள் வைத்து தண் ணீர் எடுப்பதாகச் சொல்லப்பட்டு, இப்போது இரண்டு மோட் டார்கள் தான் வேலை செய்கிறது. மீதியுள்ள நான்கு மோட் டார்கள் உடனடியாக அதற்கு மாற்றம் செய்து நாசரேத் குடி தண்ணீர் திட்டத்தை முடிவுசெய்து தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஒரு தொகுதியிலிருந்து இன்னொரு தொகுதிக்குத் தண்ணீர் கொண்டு செல்வதாகச் சொல்லப்படுகிறது. என்னு டைய தொகுதியிலிருந்து தண்ணீர் எடுத்து நாங்குநேரி பகுதிக்கு இட்டப்புளி மொழி வழியாக கொண்டு செல்வதாகச் சொல்லப் படுகிறது. ஆனால் தண்ணீர் எடுக்கக் கூடிய பகுதியில் தண்ணீர் அதிகமாக இருந்தாலும், அந்தப் பகுதியில் இருக்கிற சுற்றுப்புற கிராமங்களுக்கு தண்ணீர் கொடுத்துவிட்டு மற்றப் பகுதிக்குத் தண்ணீர் கொண்டு போக வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

அதேபோல, அடி பம்புகள் பொறுத்தவரையில் ஒவ்வொரு யூனியனுக்கும் 250 அடி பம்புகள் வரையில் இருக்கின்றன. அடி பம்புகள் அடிக்கடி பழுதடைந்து விடுகின்றன. அவற்றை ரிப்பேர் செய்வதற்கு அங்கே ஒருவர் தான் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவரால் எல்லா பழுதுகளையும் சரிவர பார்க்க முடியாமல் இருந்து வருகிறது. ஆகவே ஒவ்வொரு யூனியனுக்கும் இரண்டு நபர்களை கட்டாயமாக அடி பம்புகளை ரிப்பேர் செய்வதற்கு நியமித்தால் தான் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்ய முடி யும். ஆகவே அடி பம்புகளை ரிப்பேர் செய்வதற்கு இரண்டு நபர்களை நியமிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட் டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் செய்துங்கநல்லூர் குடி தண்ணீர் பஞ்சத்தால் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அது ஒரு பெரிய நகரம். அந்த நகரத்தைச் சுற்றி பல கிராமங்கள்





இருக்கின்றன. அந்த கிராமங்களுக்கு குடி தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று பொது மக்கள் 1981 ஆம் ஆண்டில் ஒரு போராட்டத்தை நடத்தினார்கள். நான் சென்று உடனே தண் ணீர் வாங்கிக் கொடுக்கிறேன், போராட்டத்தை கைவிடுங்கள் என்று சொன்னேன். மூன்று, நான்கு ஆண்டுகள் ஆகியும் குடி தண்ணீர் பிரச்சினை இன்னும் தீர்த்து வைக்கப்படவில்லை. செய் துங்க நல்லூர் பகுதியில், வசவப்பபுரம் என்ற ஊரில் தாமிர பரணி ஆற்றுப் பகுதியில் குடிநீர் வாரியத்தின் மூலமாக ஒரு பெரிய 'போர்' போடப் பெற்று, அதிலே நிறைய தண்ணீர் உள்ள தாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆகவே உடனடியாக அந்த இடத் திலே பெரிய குடி தண்ணீர் திட்டத்தை ஏற்பாடு செய்து செய் துங்கநல்லூர் மக்களுக்கு குடி தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி மிகவும் வறட்சியான தொகுதியாக இருப்பதால் தாமிரபரணி ஆற்றிலிருந்து ஒரு கூட்டுக் குடி தண் ணீர் திட்டத்தை ஏற்பாடு செய்து பேய்குளம் வழியாக கொண்டு வந்து அந்தப் பகுதியில் இருக்கிற மக்களுக்கு குடி தண்ணீர் கொடுத்து விட்டு, சாத்தான்குளம் பகுதியைச் சேர்ந்த மக்களுக் கும் தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

*திரு. கே. உச்சி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் தமிழகத்தின் முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு, நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப் பட்டிருக்கும் வேளாண்மைத்துறை, குடிநீர் வடிகால் வாரிய மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழகம் அரிசி உற்பத்தியில் இந்தியாவிலேயே இரண்டாவது இடத்திலும், கரும்பு உற்பத்தியில் முதல் இடத்திலும் இருப்பது நாம் நிச்சயமாக பெருமைப்பட வேண்டிய ஒன்றாகும். அதே நேரத்தில், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வேளாண்துறை யில் அந்தந்தப் பகுதியில் உற்பத்தியாகும் பொருள்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்பதை தனித்து கவனிக்க வேண்டும்.

நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அங்கே எல்லா பகுதிகளிலும் தோட்டக் கலை துறை தான் உண்டு. தோட்டக் கலையை தனித் துறையாக ஆக்கிய பெருமை மாண்பு மிகு புரட்சித் தலைவர் அவர்களையே சாரும். அப்படி தனித் துறையாக ஆக்கிய பிறகுதான் அங்கே பல்வேறு திட்டங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இங்கே எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள் நீலகிரி

மாவட்டத்தைப் பற்றி ஆரம்பத்திலே பரிவுடனும், பாசத்துட னும் பேசினார்கள். நானும் அதை வரவேற்று அமர்ந்திருந் தேன். ஆனால் திடீரென்று அவருக்கு அந்த மாவட்டத்தின் மீது பொறாமை உணர்ச்சி வந்து விட்டதென்றே கருதுகிறேன். தமிழகத்தின் மற்ற மாவட்டங்களில் எல்லாம் வேளாண்மைத் துறை உண்டு. சில பகுதிகளில் தோட்டக் கலைத் துறையும் உண்டு.

(பிற்பகல் 1-00)

ஆகவே, நீலகிரி மாவட்டத்தில் மாத்திரம் முழுமையாகத் தோட்டக்கலைத்துறை என்று இருப்பதால், அதற்குரிய பணத்தை நீலகிரி மாவட்டத்திற்கு மட்டும்தான் ஒதுக்க வேண்டும். மற்றும் சில பகுதிகளில், கொல்லி மலை போன்ற பகுதிகளுக்கு ஒதுக்கிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நீலகிரி மாவட்டத் தில் தோட்டக்கலைத் துறையை இன்னும் அதிக அளவில் வளர்க்க வேண்டும் என்று நாங்கள் போராடிக்கொண்டிருக்கிறோம். அமைச்சர் அவர்களோடு. அங்கே உள்ளவர்கள் தேயிலையை மட்டும் அதிக அளவில் நம்பிக்கொண்டு இருக்கிறார்கள். இதைத் தவிர, உருளைக்கிழங்கு, முட்டை கோஸ், மற்றும் உள்ள காய் கறிகளை நம்பிக்கொண்டிருக்கிறார்கள். மற்ற ஊர்களைப் போல் அல்லாமல், அங்கே நாங்கள் இரண்டுவிதமான கஷ்டங் களை சந்தித்தாக வேண்டும். ஒன்று மழை அதிகமாக பெய்யும் போது, விளைபொருட்கள் எல்லாம் இந்த மழையினால் அழிந்து விடும். மழை குறைவாகப் பெய்தாலோ அவைகள் கெட்டு விடும். இது மட்டுமல்லாமல், பனியினாலும், அங்கே பல கஷ் டங்கள் ஏற்படுகின்றன. எனவே, இவைகளை எல்லாம் அனு சரித்து உருளைக்கிழங்குகளை எந்த அளவிற்குக் குறைக்க முடி யுமோ, அந்த அளவிற்குக் குறைத்து, வாட்டர் ஷேட் பகுதியில் அதிகமான அளவிலே தேயிலை வளர்க்க வேண்டும்; அதற்கு 10 ஆண்டுக் காலத்திற்கு ஒரு திட்டத்தைத் தயாரித்து, அதற்கு பல கோடி செலவழிக்க முன்வந்திருப்பதை நான் பாராட்டு கிறேன்.

அதே நேரத்தில் இந்த நீலகிரி மாவட்டத்திற்கு என்று தனி யாக ஒரு டைரக்டரேட் ஒன்றை ஏற்படுத்தி, இந்த தோட்டக் கலைக்கு என்று உண்டாக்க வேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், எந்தப் பகுதியை எடுத்துக் கொண்டாலும், தோட்டக் கலைத்துறையையும், விவசாயத் துறையையும் தவிர வேறு எந்தத் தொழிலும் கிடையாது. எனவே, அங்கே ஒரு விவசாயக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.





அதுமாத்திரம் அல்ல. விவசாயத்தைப் பொறுத்தவரையில், சமீபத்தில் என்னுடைய தொகுதியான சோளூர் பிர்க்காவும், தூனேரி பிர்க்காவும் கடுமையான வறட்சியினால் பாதிக்கப்பட்டு அங்கேயுள்ள பயிர்கள், அது தேயிலையானாலும் சரி, அல்லது உருளைக்கிழங்காக இருந்தாலும் சரி, அல்லது முட்டைகோஸ் போன்ற எந்தப் பொருள்களாக இருந்தாலும் சரி, எந்த உற் பத்தியும் இல்லை என்ற அளவிற்கு கடுமையாக பாதிக்கப் பட்டு இருக்கிறது. ஆகவே, அவைகளை வறட்சியால் பாதிக் கப்பட்ட பகுதிகளாக, அந்த சோளூர் பிர்க்காவையும், தூனேரி பிர்க்காவையும் அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

அதே போல் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த கவரட்டி என்ற கிராமத்திலும், தாவணி என்ற கிராமத்திலும் கல் மழை பெய்திருக்கிறது. இதனால் பச்சைப் பயிர்களை அது அழித்து விட்டது. எனவே, அந்தப் பகுதியையும் வறட்சியால் பாதிக் கப்பட்ட பகுதியாக அறிவிக்க வேண்டும் என்றும், அவர்களுடைய கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் கூடலூர் பகுதியை எடுத்துக் கொண்டால், அங்கே இஞ்சி ஏராளமாக விளைகிறது. அதே போல் குச்சிக் கிழங்கு என்று சொல்லக் கூடிய மரவள்ளிக் கிழங்கு விளைகிறது. இவைகளில் இருந்து நாம் எக்ஸ்ட்ராக்ட் தயாரிக்கலாம். எனவே, அங்கே ஒரு தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன், மேலும், அந்தக் கிழங்கு களில் இருந்து வற்றல், சவ்வரிசி போன்ற பொருட்களையும் உற்பத்தி செய்யலாம். எனவே, ஆங்காங்கு சிறு தொழில்கள் ஏற்படுத்தவும் வாய்ப்பிருக்கிறது. இதற்கு முதலில் அக்கறை காட்டிய அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன், அதற்குப் பிறகு இந்தத் துறைக்கு வந்த அமைச்சர் அவர்கள் இதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீரைப் பொறுத்த வரையிலும், கூடலூர் பகுதி மிகவும் வறட்சியான பகுதியாகும். கூடலூர் தாலுக்காவாக இருந்தா லும் சரி, அல்லது பந்தலூர் தாலுக்காவாக இருந்தாலும் சரி, அங்கு கடுமையான தண்ணீர் தட்டுப்பாடு உண்டு. அந்தத் தண் ணீர்த் தட்டுப்பாட்டை நீக்கத்தான் உலக வங்கி உதவியுடன் ஹெலன் திட்டம் என்ற ஒரு திட்டம் கடந்த பல ஆண்டுக்கால மாகச் சொல்லி, இதற்கு இப்போது 1 கோடி ரூபாய் ஒதுக்கி யுள்ளதை நான் வரவேற்கிறேன். ஆனால், இந்த ஹெலன் திட் டம் உடனடியாக செயல்பட வேண்டும். அப்படிச் செயல்பட் டால், பல ஆண்டுகாலமாக இருந்து வரும் தண்ணீர்த் தட்டுப் பாட்டைக் குறைக்க முடியும், எனவே அந்தத் திட்டத்தை உட னடியாக நிறைவேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

[திரு. கே. உச்சி] [1985 ஜூன் 4

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இப்போது குடிநீர் வாரியத்தால் பல கிணறுகள் தோண்டப்பட்டு உள்ளன. ஆனால், அதற்கு மின்சார இணைப்பு தரப்படவில்லை. கிணறுகள் தோண்டப்பட்டு இருந்தும், மக்களுக்கு அந்தத் தண்ணீரை வினியோகிக்க முடியவில்லை, அதற்குக் காரணம் அந்தப் பகுதியில் உள்ள அதிகாரிகள் சற்று அக்கறை காட்டாததுதான் என்பதை நான் அரசுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். எனவே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு கலந்து பேசி, அதிகாரிகளை விரைவுபடுத்தி, இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்றால், தேவாளா, பந்தலூர் போன்ற இடங்களில் ஏராளமான கிணறுகள் தோண்டப்பட்டும், மின்சார இணைப்பு இல்லாததன் காரணமாக, மக்களுக்குத் தண்ணீரை வினியோகிக்க முடியவில்லை. எனவே, இப்படிப்பட்ட குறைகள் எல்லாம் தீர்க்கப்பட வேண்டும் என்றால், அந்தப் பகுதியில் உள்ள அதிகாரிகள் அதிக ஒத்துழைப்பு தருகிற அளவிற்கு செயல்பட வேண்டும். சமீபத்தில் அந்த வாரியத்தினுடைய தலைவர் அவர்கள் வந்திருந்தபோது நான் அவர்களுக்கு அந்த இடங்களை எல்லாம் சுட்டிக் காட்டினேன், எனவே, அங்குள்ள குறைகளை உடனடியாகத் தீர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். எந்த அளவிற்கு நீலகிரி மாவட்டம் வளமாக இருக்க வேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறதோ, அந்த அளவிற்கு அங்கே உள்ள செயல்முறைகளை துரிதப்படுத்த வேண்டும். இதைச் சொல்லும் போது அங்கேயுள்ள தாமதங்களைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. அதில் நம்முடைய அதிகாரிகள் அதிகமான அளவுக்கு அக்கறை காட்டும் அளவுக்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் அவர்களை உசுப்பி விட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு நீலகிரி மாவட்டத்தில் பல நீர்த்தேக்கங்களில் தண்ணீர் தொடர்ந்து கிடைக்க ஆங்காங்கே வடிகால்களை கட்டித் தர வேண்டும் என்று கூறி வாய்ப்புக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன், நன்றி. வணக்கம்.

*திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்மீது நானும் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தி பேச விரும்புகிறேன். நான் தஞ்சை மாவட்டம் குடந்தை தொகுதியைச் சேர்ந்தவன். தஞ்சை மாவட்டம் தமிழக நெற்களஞ்சியம் என்று கூறப்பட்டு வருகிறது. ஆனால், நான் கவர்னர் உரையில் குறிப்பிட்டது போல் தஞ்சை மாவட்டம் ஒரு பஞ்சப் பிரதேசமாக மாறி வருகிறது என்பதால் இப்போது இந்த வேளாண்மை மானியத்தின் மீது ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க விழைகிறேன்.



1985 ஜூன் 4] [திரு. கி. கிருஷ்ணமூர்த்தி]

தஞ்சை மாவட்டம், திருச்சி மாவட்டம் ஆகியவை காவேரியின் பாசனத்தை நம்பி இருக்கிறது. காவேரி டெல்ட்டா பிரதேசம் ஆகும். அது கடந்த 1974ஆம் ஆண்டிலிருந்து கர்நாடக அரசின் பிடிவாத போக்கினால் தங்களுக்கு கிடைக்க வேண்டிய தண்ணீர் கிடைக்காமல் அதை நம்பிக்கொண்டு இருக்கிற தஞ்சை மாவட்ட மக்கள் மிகவும் வாடுகிறார்கள். ஒரு துன்பமான, துயரமான சூழ்நிலையில் நாங்கள் இருக்கிறோம். 1974ஆம், ஆண்டிலே தமிழகத்தை ஆண்டவர்கள் அலட்சியமாகவும், கவனக் குறைவாக இருந்ததால் இன்று கூட 10 ஆண்டுகள் கழித்தும் நாம் கஷ்டப்படக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறோம். இதற்கு ஒரு பரிகாரமாக ஒரு தனி நபர் ஒரு விவசாயி சுப்ரீம் கோர்ட்டில் ஒரு வழக்கை தொடர்ந்து இருக்கிறார். அந்த வழக்கில் தமிழக அரசையும் கர்நாடக அரசையும், மத்திய அரசையும் பார்ட்டியாக சேர்த்து இருக்கிறார். தமிழக அரசு அந்த வழக்கை முறையாக பயன்படுத்தி தமிழகத்திற்கு நியாயமாக தேவையான அளவிற்கு தண்ணீர் கிடைக்க அந்த வழக்கில் நாம் பார்ட்டியாக இருப்பதால் சட்ட பூர்வமாக, கோர்ட் மூலமாகவே தமிழகம் தனக்கு நீதி பூர்வமாக நியாய பூர்வமாக கிடைக்க வேண்டிய தண்ணீரைப் பெற்றுக் கொள்ளலாம். அதற்கு தமிழக அரசு ஆவன செய்து தஞ்சை மாவட்ட விவசாயிகளை, தமிழகத்து விவசாயிகளை காப்பாற்றுவதற்கு இந்த வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகள், தஞ்சை மாவட்ட விவசாயிகள் தற்போது எதிர்நோக்கி உள்ள மிகப் பெரிய பிரச்சினை விவசாய கூட்டுறவுக் கடன். முன்பு பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு. பி. என். இராமச்சந்திரன் அவர்கள் கூறியது போல் ஆயிரம் ரூபாய் வாங்கிய விவசாயி 1,500 ரூபாய், 2,000 ரூபாய் வட்டியாக கொடுக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் சொத்துக்களை ஜப்தி செய்யக்கூடிய சூழ்நிலையில் இந்த நேரத்தில் அவர்கள் குறுவை எங்கே பயிரிடப் போகிறார்கள். எப்படி பயிரிட அவர்களுக்கு ஊக்கம் எங்கேயிருந்து வரும். விவசாயிகளை கடன்களிலிருந்து முதலில் மீட்க வேண்டும். வட்டி, அபராத வட்டி, கூடுதல் வட்டி, மிஸிலெனியஸ் எக்ஸ்பென்ஸஸ் என்று குறிப்பிடும் சில தவறான கணக்கிலிருந்து அவர்களை விடுவித்து அவர்கள் நியாயமாக கொடுக்க வேண்டிய அசலை மட்டும் பெற்றுக் கொண்டு விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும் என்றும் அதற்கு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்து தஞ்சை மாவட்ட விவசாயிகளை காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த 4, 5 ஆண்டுகளாகவே தஞ்சை மாவட்டம் புயல், வெள்ளம், வறட்சி என்று பலவிதமான இயற்கை சீற்றத்திற்கு ஆளாகி விவசாயிகள் கஷ்டத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கு முறையான பாதுகாப்பு முறையான நீதி அளிக்கப்பட வேண்டும்.

கடந்த ஆண்டு சம்பா தாளடிப் பயிர் மஞ்சள் நோயால் முற்றிலும் பாதிக்கப்பட்டு விவசாயிகள் மிகவும் நஷ்டத்தோடு இந்த ஆண்டு குறுவை பயிரிடுவதற்கு அனைத்தும் செய்து இருக்கிறார்கள். நியாயமாக கிடைக்க வேண்டிய நஷ்ட ஈட்டை வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் முயற்சி செய்து வாங்கித்தர வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், 12–6–1985 அன்று மேட்டூரிலிருந்து நீர் திறந்து விடப்படும் என்று முதலில் கூறப்பட்டது. ஆனால் தற்போது மேட்டூரிலிருந்து வருவதாக தெரியவில்லை. அதோடு கடந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்திற்கு தனியாக விசேஷமாக ஒரு நாளைக்கு 20 மணி நேரம் மின்சாரம் கொடுக்கப்பட்டது. அதனால் அவர்கள் மிகவும் விரைவாக காவேரியில் இருந்து தண்ணீர் வருவதற்கு முன்பாக குறுவை நாற்று விட்டு குறுவை பயிரிட தயாராக இருந்தார்கள்.

(பிற்பகல் 1-10)

ஆனால், துரதிர்ஷடவசமாக இந்த ஆண்டு 6 மணிநேரம்தான் மின்சாரம் கொடுக்கப்படுகிறது. மேட்டூர் தண்ணீரும் இல்லாத சூழ்நிலையில் விவசாய அமைச்சர் அவர்கள் கவனித்து, ஒரு நாளைக்கு 20 மணி நேரமாவது தண்ணீர் கிடைக்குமாறு மின்சாரத் துறை அமைச்சர் மூலமாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன். இல்லையேல், குறுவை நாற்று நட முடியாது. மேட்டூரிலே தண்ணீர் வந்து விவசாயிகள் தண்ணீரைப் பாய்ச்சி குறுவை நடுவதற்குள் குறுவை சீசனே போய் விடும் அபாயகரமான சூழ்நிலை இருக்கிறது என்று அரசுக்கும், வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வர விரும்புகிறேன்.

வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் மானியக் கோரிக்கையில் குடிநீர் வடிகால் வாரியத்திற்கான கோரிக்கைகளைப் பார்க்கும் போது, தஞ்சை மாவட்டத்திற்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பல சலுகைகள் கிடைக்கவில்லையோ என்று அஞ்சுகிறேன். வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்திற்கு நீதி கிடைக்குமாறு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆடுதுறையிலே உள்ள விவசாய ஆராய்ச்சிப் பண்ணையை ஒரு பல்கலைக் கழகமாக மாற்றி அதை விரிவுபடுத்த வேண்டும். சாக்கோட்டை விதைப் பண்ணையை பெரிய அளவில் விரிவு படுத்த வேண்டும். தஞ்சை மாவட்டம் ஆழ்துளைக் கிணறுகளைப் பொறுத்தவரை மிகவும் கவனிக்கப்படாமல் உள்ளது. தஞ்சை மாவட்டத்திலே உள்ள நிலத்தடி நீர் தாழ்ந்து போய் விட்டதால், வாட்டர் லெவல் இறங்கிவிட்டதால், ஆழ்துளை குழாய் கிணறுகள் போட வேண்டிய சூழ்நிலை தஞ்சை மாவட்டத்திற்கு வந்து விட்டது. ராமநாதபுரம், மதுரைக்கு உள்ள





சூழ்நிலை தஞ்சை மாவட்டத்தில் ஒரு சில பகுதிகளில், முக்கியமாக கீழ்த்தஞ்சைமாவட்டத்தில் இருந்து வருகிறது. இதே நிலை காவிரியில் தண்ணீர் இல்லாததால், குளம் குட்டைகள் இல்லாததால் மேலத்தஞ்சை, கும்பகோணம், திருப்பனந்தாள், திருவிடைமருதூர் போன்ற பகுதிகளிலேயும் வாட்டர் லெவல் மிகவும் இறங்கிவிட்டதால் ஆழ்துளைக் கிணறுகள் அதிகமாக நிறுவ ஏற்பாடு செய்ய வேண்டும். கசிவு நீர்க் குட்டைகளும் அமைக்க வேண்டும். வாட்டர் மானேஜ்மென்ட் என்று கூறுவதிலே, தண்ணீரை முறையாகப் பயன்படுத்துவதிலே தமிழகம் ஓரளவுக்குப் பின் தங்கியிருப்பதாக மற்ற இடங்களிலே கூறுகிறார்கள். காவிரியில் எப்போதோ வரும் ஒரு குறிப்பிட்ட தண்ணீரின் பெரும் பகுதி கடலிலே கலக்க விட்டுவிடப்படுகிறது என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. அதைப் போக்குவதற்கு, மினி டாம், நீர்த் தேக்கங்களை ஏற்படுத்தித் தண்ணீரைச் சேமித்து விவசாயிகள் உபயோகப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். தண்ணீரைத் தேக்கி வைத்தால், மினி டேம் மூலமாக தேக்கி வைத்தால் அவற்றிலிருந்து மின்சார உற்பத்தியும் செய்து நமக்கு இரண்டு விதத்தில் பர்ப்பஸ் சர்வ் ஆகும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ளுகிறேன்.

டிரெயினேஜ் மற்றும் வாட்டர் சப்ளை ஸ்கீமிலே பார்த்தால், குடந்தை நகரம் மிகவும் தண்ணீர் இன்றி பாதிக்கப்பட்டுள்ளது. அதற்கு நிலத்தடி தண்ணீரோ, ஆற்றுத் தண்ணீரோ இல்லாதது காரணம் அல்ல. அரசு அதிகாரிகளிடையே ஒற்றுமை இல்லாமல், கோ-ஆர்டினேஷன் இல்லாதது தான். குடந்தைக்கு 6 மணி நேரம் கரண்ட் கொடுக்கிறார்கள். தண்ணீர் சப்ளை கொடுக்கக் கூடிய குடிதாங்கிக்கு 6 மணி நேரம் கொடுக்கிறார்கள். இரண்டு இடங்களுக்கும் ஒரே நேரத்தில் கரண்ட் கொடுத்தால், குடந்தையைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு குடிதண்ணீர் பஞ்சம் வராது. ஆனால் அதிகாரிகள், இரண்டு இடங்களிலேயும் ஒரே நேரத்தில் தண்ணீர் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய, ஒத்துழைக்க மறுக்கிறார்கள். அதை அரசு கவனித்து, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக குடந்தைக்கு மினிமம் 14 மணி நேரம் தண்ணீர் கிடைக்குமாறும். மின்சாரம் கிடைக்குமாறும், குடந்தையிலும், கொள்ளிடத்தில் குடிதாங்கியிலும் ஒரே நேரத்தில் பவர் சப்ளை இருக்குமாறு ஏற்பாடு செய்தால், குடந்தையில் குடி தண்ணீர் இன்றி அவதிப்படும் சூழ்நிலை இருக்காது. தமிழகத்திலேயே மிக அதிகமாக குடிதண்ணீர் சப்ளை செய்த குடந்தை நகரில் 3 மணி அல்லது 2 மணி நேரம்தான் தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது. இதற்கு இயற்கையோ அல்லது நம்முடைய வாய்ப்புக் குறைவோ காரணம் அல்ல. அரசு அதிகாரிகள் ஒருவரோடொருவர் ஒத்துழைக்க மறுப்பதுதான் காரணம். இப்படி சில காரியங்களினால் இந்த அரசுக்கும், இந்த அரசின் கூட்டணியாக இருந்து, இந்த அரசு வர முயற்சித்த எங்களுக்கும் அவப் பெயர் வருகிறது. அரசு அதிகாரிகளின்கவனக்

குறைவு, புரியாத போக்கு இவற்றை அமைச்சர் அவர்கள்
தலையிட்டு குடந்தைக்கு தண்ணீர் கிடைக்குமாறு, முதலில் ஏற்
பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் கைப் பம்புகள் 100-க்கு 75 சதவீதம்
வேலை செய்வதில்லை. மாவட்டக் கவுன்சில் கூட்டத்திலேயும்
கூறியுள்ளோம். அனைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி
களிலும் மோட்டார் இல்லை, கரண்ட் இல்லை. டவுன் பஞ்சா
யத்து, மேஜர் பஞ்சாயத்திலே தண்ணீர் கிடைப்பதில்லை. இதற்
கும் மாவட்ட கவுன்சிலிலே கூறி உள்ளோம்.

அதைப்பற்றி நாங்கள் மாவட்ட வளர்ச்சிக் கவுன்சிலில் கூறி
யுள்ளோம். இன்றுவரை அவர்களுக்கு விடிவுகாலம் ஏற்பட
வில்லை. நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர்
அவர்கள் அதிலே தலையிட்டு கிராம மக்களுக்குப் பாதுகாக்கப்
பட்ட குடிநீர் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்து உதவிட வேண்
டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கசிவு நீர்க்குட்டைகள் ஏற்படுத்தி, வீணாகின்ற தண்ணீரைச்
சேமித்து விவசாயிகளுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

கும்பகோணத்தைப் பொறுத்தவரையில், பல சட்டமன்ற
உறுப்பினர்களும் கூறியபடி, கொசுவுக்குப் பெயர்போனது.
கொசு உற்பத்தியைத் தடுக்கவும், கொசுக்களிலிருந்து மனிதர்
களைக் காப்பாற்றவும் வியாதிகளிலிருந்து மனிதர்களைக் காப்
பாற்றவும் கும்பகோணம் நகராட்சியும் அரசும் திட்டம் தீட்டி
பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தும் கொசுக்கள் முன்பு தோற்று
விட்டன. காரணம் குடந்தையிலே 25 ஆண்டுக்காலத்திற்கு
முன்பாக ஏற்பாடு செய்யப்பட்டு இன்றுவரை முடியாமல் இருக்கிற
பாதாள சாக்கடைத் திட்டம்தான். அந்தத் திட்டத்திற்கு 5
கோடி ரூபாய் வேண்டுமென்று அந்த நகராட்சியிலிருந்து எழுதி
யிருக்கிறார்கள். வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள்
குடிநீர் வடிகால் வாரியத்திற்கும் பொறுப்பாக இருக்கிற காரணத்
தினால் அவர்கள் தலையிட்டு அந்தத் திட்டத்தை உடனடியாக
நிறைவேற்ற ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்
கிறேன்.

குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய அறிக்கையைப் படிக்கிற
போது பல மாவட்டங்களிலே பல்வேறு நகரங்களிலே பணிகளைச்
செய்கிறது என்று தெரிகிறது. ஆனால் தஞ்சை மாவட்டத்திலே
அது எந்தத் திட்டத்தையும் எடுத்துக்கொள்ளவில்லை. தஞ்சை
மாவட்டத்திலே குடந்தை மிக முக்கியமான கேந்திரமான இட
மாகும். அந்தப் பகுதியிலே பாதாள சாக்கடைத் திட்டத்தை
விரைவிலே நிறைவேற்ற அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய
வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து தஞ்சாவூர் மாவட்டத்திலே உள்ள அனைத்துக் கிரா
மங்களும் என்று ஒட்டுமொத்தமாக நான் சொல்லவில்லை, 75
சதவீதம் கிராமங்களிலே கைபம்புகள் வேலை செய்யவில்லை.
அவைகள் வேலை செய்வதற்காகப் பிடுங்கிப் போடப்பட்டன.
போட்டது போட்டபடியே இருக்கின்றன. அவைகளை உடனடி
யாகப் பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று
அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

எனக்குப் பேசுவதற்குத் தந்த வாய்ப்பிற்காக நான் நன்றியைத்
கூறி நாங்கள் ஆளுங் கட்சியினுடைய கூட்டணித் தோழர்கள்.
உங்களுடைய கஷ்டநஷ்டங்களில் எங்களுக்கும் பங்கு உண்டு,
உங்களுடைய நல்ல பெயரில் எங்களுக்கும் பங்கு உண்டு.
குறைகள் இருந்தால் உங்களைக் குறைகூறும் மக்களை எங்களை
யும் தான் குறைசொல்வார்கள். இந்த அரசுக்கு அவப்பெயர்
ஏற்படக்கூடாது குறைகளைச் சொல்கிறபோது நாங்கள் இந்த
அரசையோ அமைச்சரையோ தனிப்பட்ட முறையிலே எதையும்
சொல்லவில்லை என்பதைத் தெரிவித்து நாங்கள் கூறுவது எல்லாம்
உங்களுடைய நன்மைக்காகத்தான் ,நம்முடைய நன்மைக்காகத்
தான் என்பதைத் தெரிவித்து உங்கள் மீது குறைகூறுவதாக
எடுத்துக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொண்டு மக்களுக்கு
நன்மைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு
முடித்துக்கொள்கிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து** : மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை, குடிநீர்
வழங்கல் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது மாண்புமிகு
உறுப்பினர்கள் இங்கே வழங்கியிருக்கிற பண்பும் பயனுமிக்க
கருத்துக்களுக்கு நான் முதலிலே நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அவர்கள் வழங்கியிருக்கிற ஆலோசனைகள் கவனத்தில்
எடுத்துக் கொள்ளப்படும் என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டி
யிருக்கிற குறைபாடுகள் நீக்கப்படுவதற்கு முறையான நட
வடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் தெரிவிக்கக்
கடமைப்பட்டு இருக்கிறேன்.

வேளாண்மையைப் பொறுத்த அளவில் அதிகமான விளைச்
சல் கிடைக்கவேண்டும் என்பது மட்டுமல்ல, அதனை உற்பத்தி
செய்து தரக்கூடிய விவசாயப் பெருமக்கள் நல்ல வருவாய் பெற
வேண்டும் நல்ல வாழ்க்கையைப் பெறவேண்டும் என்பதுதான்
இந்தத் துறையின் அடிப்படையான நோக்கம் என்பதை நான்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உழவன் உள்ளத்திலே புயல்
இருந்தால் வயலில் வளம் காணமுடியாது என்று பேரறிஞர்
அண்ணா அவர்கள் அடிக்கடி கூறுவார்கள். வயலில் இருக்கிற
பசுமை அவர்களுடைய வாழ்விலேயும் நிலவவேண்டுமென்ற
வகையிலே இந்தத் துறை பல்வேறு சலுகைகளை வேளாண்
பெருமக்களுக்கு வழங்கியிருக்கிறது, வழங்க இருக்கிறது என்பதை
நான்தெரிவிக்க விரும்புகிறேன்.

கடந்த ஆண்டைப் பொறுத்தவரையில் நாம் எதிர்பார்த்த அளவிற்கு உரிய தருணத்திலே தென்மேற்குப் பருவ மழை பெய்யவில்லை; வடகிழக்குப் பருவ மழை 33 விழுக்காடு குறைவாகத்தான் பெய்தது; மேலும், துங்ரோ வைரஸ், மஞ்சள் நோய் போன்ற நோய்த் தாக்குதல்கள் பரவலாகத் தமிழகத்திலே காணப்பட்டது. என்றாலும் இந்த இயற்கை சோதனைகளை எதிர்த்துச் சாதனை செய்திருக்கின்ற ஆண்டாகக் கடந்த ஆண்டு இருந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-20)

நெல்லைப் பொறுத்த அளவிலேயும் சரி, பயிறு, பருத்தி, எண்ணெய் வித்துக்கள் இவைகளைப் பொறுத்த அளவிலேயும் சரி, நல்ல உற்பத்தியை வேளாண் பெருமக்கள் வழங்கியிருக்கிறார்கள்.

இங்கே பெரிய உறுப்பினர்கள் எடுத்துக் தெரிவித்ததைப் போல, கரும்பு உற்பத்தியிலே. இந்தியாவிலேயே முதலிடம் தமிழகத்திற்குக் கிடைத்தது இருக்கிறது. இந்தியாவிலே மட்டும் அல்ல, உலகத்திலேயே கரும்பு உற்பத்தியிலே நாம் முதலிடத்தை பெற்றிருக்கிறோம் என்பதையும், அதைப்போல ராகி உற்பத்தி லேயும்கூட நாம் முதலிடத்தைப் பெற்றிருக்கிறோம் என்பதை யும், நெல் உற்பத்தியிலே இரண்டாவது இடத்தைப் பெற்றி ருக்கிறோம் என்பதையும் நான் இங்கே தெரிவிக்கின்றபொழுது இந்தியத் துணைக் கண்டத்திலே தமிழகம் வேளாண்மையிலே ஒரு முன்னணி மாநிலமாகவே விளங்குகிறது என்பதைத் தன் னடக்கத்தோடும், பணிவோடும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மாண்புகு பேரவைத் தலைவர் தலைமை)

வேளாண்மைத் துறைக்கும் வேளாண் பெருமக்களுக்கும் இடையிலே தூதுவர்களாக விளங்குகின்ற வகையிலேதான் பயிற்சி வழித் தொடர்புத் திட்டத்தினுடைய அலுவலர்கள் இயங்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களால் ஏற்படும் பலன்கள் நேரடியாக நமக்குத் தெரியவில்லை என்றாலும்கூட, வேளாண் பெருமக்கள் விளைவித்துத் தருகின்ற அந்த உற்பத்தியைக் காணு கின்றபொழுது அந்தப் பயன்களை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. உலக வங்கியின் சார்பாக இங்கே வந்து பார்த்த நிபுணர்கள் நம்முடைய வேளாண் துறை செயலாளருக்கு எழுதிய கடிதத்தில், இந்தியாவிலே இந்தத் திட்டத்தைத் தமிழகம் சிறப்பாகச் செயல்படுத்துகிறது என்பதைச் சுட்டிக்காட்டியிருக் கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஹெக்டேருக்கு ஐந்து டன் விளைவிக்க வேண்டுமென்பதை நாம் இலக்காக நிர்ணயித்திருந்தோம். சிலயிடங்களிலே ஹெக் டேருக்கு ஆறு டன், பத்து டன் என்கின்ற அளவிற்குக்கூட விளை வித்துக் காட்டியிருக்கிறார்கள். தஞ்சை திருச்சி மாவட்டப் பகுதி





களிலே. அந்த அளவிற்கு கூட நாம் மகிழ்ச்சியடையத்தக்க அள விற்கு விளைச்சல் கிடைத்திருக்கிறது. என்றாலும், பரவலாகப் பார்க்கின்றபொழுது ஹெக்டேருக்கு ஐந்து டன் என்பதை 28 விழுக்காடு நிலப்பரப்பிலேதான் எய்திருக்கிறோம் என்பதை யும், இந்த ஆண்டு 50 விழுக்காடு நிலப்பரப்பிலே அதனைப் பெற்றாக வேண்டும் என்ற வகையிலேயும் நாம் முயற்சிகளைச் செய்யவிருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. வேங்கடரமணன் அவர்கள் பேசுகின்றபொழுது பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கை களுக்காக, நோய்த் தாக்குதலிலிருந்து பயிர்ப் பச்சைகளைப் பாதுகாக்கின்ற நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற பணம் குறைவாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். எப்பொழு துமே இன்னின்ன நோய்கள் எல்லாம் வரும், ஆகவே அவைகளை எதிர்க்க நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும், அதற்காக இவ்வளவு பணம் செலவாகும் என்று நாம் முதலிலேயே திட்ட மிடுவது இல்லை. அப்படிப்பட்ட நோய்கள் வருவதை நாம் விரும்பவில்லை; வரக் கூடாது என்றுதான் விரும்புகிறோம். ஆனால் அப்படி வரும்பொழுது முழுமையாக அதை எதிர்க்கின்ற அளவிற்கு நாம் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை நிச்சய மாக எடுப்போம். கடந்த ஆண்டிலேகூட 4 கோடி ரூபாய்தான் அதற்காக ஒதுக்கீடு செய்திருந்தது என்றாலும், எதிர்பாராமல் ஏற்பட்ட இந்த நோய்த்தாக்குதலைச் சமாளிக்க வேண்டுமென்ற வகையில் 8 கோடி ரூபாய் அதற்காக அரசு செலவிட்டிருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஆகவே, வரக்கூடிய காலத்திலே, அப்படிப்பட்ட நிலைமைகள் வருமேயானால் அதை எதிர்த்துச் சமாளிப்பதற்கு, உரிய அளவிற்குப் பணத்தை அரசு செலவிடும் என்பதை நான் நம்பிக்கையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற பெருமக்கள் இன்றைக் கிருக்கின்ற சூழ்நிலையில் குறுவை சாகுபடி செய்வார்களா என்ற அளவிற்கு நிலமைகள் இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எடுத்துத் தெரிவித்தார்கள். அவர்களுக்கு உற்சாகப்படுத்தும் வகையில், கடந்த ஆண்டு தந்ததைப்போலவே இருபது மணி நேரத்திற்கு மின்சாரம் தரு கின்ற அளவிற்கு ஏற்பாடு இந்த ஆண்டும் செய்யப்படும் என் பதை நான் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அதை மின்சார அமைச்சரோடு கலந்து உரிய வகையில் அரசு அறிவிப்பு தரும்.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும். அப்படிக் கிடைத்தால்தான் விவசாயிகள் மகிழ்ச்சி அடைவார்கள் என்பதில் ஐயமில்லே. ஆனால் அப்படி விலைகளை நிர்ணயிக்கின்ற அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை என்பதையும், மைய அரசினிடத்தில் அந்த அதிகாரம் இருக்கிறது

என்பதையும், அவர்கள் நெல்லுக்கோ, கரும்புக்கோ நிர்ணயித்திருக்கின்ற விலையைவிட நாம் கூடுதலாக விவசாயிகளை உற்சாகப்படுத்துகின்ற அளவிற்கு, ஊக்கம் அடைகின்ற அளவிற்கு வழங்கிக்கொண்டிருக்கிறோம் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள். கடந்த ஆண்டு நெல்லுக்கு நாம் குவிண்டாலுக்கு 15 ரூபாய் என்கின்ற அளவிற்கு உரத்தை வழங்கியிருக்கிறோம். அதிலேகூட இருக்கின்ற சிக்கலை நான் சட்டமன்றத்திலேகூட சுட்டிக்காட்டியிருக்கிறேன். இதில், அதிகப்படியான பணத்தை, மைய அரசு நிர்ணயித்திருக்கின்ற தொகையைவிட அதிகப்படியான பணத்தை நாம் பணமாக வழங்குவதக்கூட ரிசர்வ் வங்கி போன்ற நிறுவனங்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றன. அது விவசாய பொருளாதாரத்தைச் சீர்குலைத்து விடும். அப்படிப்பட்ட முயற்சியை மேற்கொள்ளக் கூடாது என்று தெரிவிக்கின்றன. என்றாலும்கூட, நாம் விவசாயிகள் உற்சாகம் இழக்காமல் உரிய நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஆண்டில் மானாவாரி நிலத்திலே நவீன சாகுபடி செய்வதற்காக 2,000 ஹெக்டேர் அளவினைக் கொண்ட ஒரு புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அரசு விதைப் பண்ணைகளுடைய உள் அமைப்புகளைச் சீர்படுத்துகின்ற வகையிலும் விதைச் சுத்திகரிப்பு நிலையங்களை வலுப்படுத்துகின்ற வகையிலும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தரக் கட்டுப்பாடு அலுவலர்களுக்கு 1,000 கலவைப் பெட்டி வழங்கி அந்தத் தரக்கட்டுப்பாட்டை வெகு விரைவிலே அவர்கள் கண்டறிந்து தெரிவிக்கத்தக்க அளவுக்கு நிலைமைகளை உருவாக்கி இருக்கின்றோம் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பாசன ஏரிகள் இருக்கிற பகுதிகளில் பண்ணை மேம்பாட்டுக்காக 2,600 ஹெக்டேரிலே திட்டம் மேற்கொள்ளப்பட இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எண்ணெய் வித்துகள் பொறுத்தஅளவில் இறவை நிலக்கடலை நாம் எதிர்பார்த்ததைவிட மிக அதிக அளவிலே உயர்ந்திருக்கிறது கிடைத்திருக்கிறது. ஹெக்டருக்கு 2 டன் மகசூல் என்கின்ற அளவுக்கு நாம் எய்தியிருக்கிறோம். இந்த ஆண்டில் ஜே. எல். 24 என்கிற இந்தக் கடலை ரகம் ஏற்கனவே விவசாயப் பெருமக்களாலே பெரிதும் வரவேற்கப்பட்டிருக்கிறது. இதை நம் விவசாயிகள் விரும்புகிற அளவுக்கு அவர்களுடைய தேவைகளை ஈடுசெய்கிற அளவுக்கு விதைகள் வழங்குகின்ற அளவுக்கு இந்த ஆண்டு விநியோகிக்க இருக்கின்றோம்.



சோயா, மொச்சை கொஞ்சம் அதிகமாகப் பயிராகின்ற வகையில் 25,000 ஹெக்டேர் இதற்கான விதைகள் வழங்குவதற்கும் நாம் திட்டத்தைத் தயாரித்திருக்கிறோம்.

தென்னங்கன்றுகள் கடந்த ஆண்டு 27.12 இலட்சம் கன்றுகள் நாம் வழங்கினோம். இந்த ஆண்டு 37 இலட்சம் கன்றுகள் வழங்குவதற்குரிய வகையிலே திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சோளம், எள், ஆமணக்கு ஆகிய இந்தப் பயிர்களை அதிகமாக தீவிரப்படுத்துகின்ற வகையில் நாம் இந்த ஆண்டு திட்டங்களைத் தயாரிக்க இருக்கின்றோம்.

தமிழ்நாடு எண்ணெய் வித்து உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் சார்பாக 122 எக்டேரில் நெய்வேலியிலே ஒரு உழவியல் மையம் அமைய இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்தக் கூட்டுறவு இணையத்தின் சார்பாக 152 கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டு 23,340 டன் கடலை விவசாயப் பெருமக்களிடத்திலேயிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. விவசாயப் பெருமக்களுக்கு இதிலே நல்ல விலை கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது.

அதைப் போலவே, விற்பனை இணையத்தின் சார்பாக திருவண்ணாமலை, விருதாசலம் ஆகிய இரண்டு இடங்களிலேயிருந்த ஆலைகளை அந்த இணையம் ஏற்றுக்கொள்கிறது. டேன்காப் என்கின்ற கடலை எண்ணெய் வெகு விரைவிலே விற்பனைக்கு வர இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தோட்டக் கலைத் துறையைப் பொறுத்த வரையில் கடந்த ஆண்டு 19 இலட்சம் பழக் கன்றுகளை வழங்கினோம். இந்த ஆண்டு 37 இலட்சம் பழக் கன்றுகளை வழங்குவதற்காகத் திட்டத்தைத் தயாரித்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உறுப்பினர் திரு. வேங்கடரமணன் அவர்கள் தெரிவித்த பொழுது, நீலகிரி மாவட்டத்திற்கே மிக அதிகமான அளவு பணத்தைச் செலவு செய்வதைப் போல தெரிகிறது. நமது மாவட்டங்கள் எல்லாம் கவனிக்கப்படவில்லையென்பதைப் சொல்லி, அவர்களுடைய மலைப் பகுதியை வர்ணித்து, அருமையான இலக்கிய உதாரணங்களை எல்லாம் இங்கே சுட்டிக்காட்டினார்கள். வானரங்கள் கனி கொடுத்து மந்தியோடு கொஞ்சும் என்கின்ற அளவுக்கு வளம் உள்ள ஒரு பகுதிக்கு நாம் அதிகமாக ஒரு திட்டத்தைத் தர வேண்டிய அவசியம் இல்லை என்ற காரணத்தால்தான் உரிய அளவுக்குப் போதுமான அளவுக்கு, தேவையான அளவுக்கு நாம் அதற்குத் திட்டத்தை வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

நெல்லை, குமரி மாவட்டங்களுக்கு மேற்கு தொடர்ச்சி மேம்பாட்டு அடிப்படையில் ரூ. 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

நம்முடைய தோட்டக் கலைத் துறையின் சார்பாக ரூ. 50 இலட்சம் அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இதிலே அவர்கள் குறை காண்பதற்கு எதுவும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்களே, இங்கே சொன்னதைப் போல அவர்கள் மகிழக்கூடிய அளவுக்கு ஒரு மணமுள்ள செய்தியாக தமிழ்நாடு வேளாண் தொழில் கழகத்தின் சார்பாக மல்லிகைப் பூ வாசனைத் தைலம் எடுக்கிற அந்தத் தொழிற்சாலை அவருடைய பகுதியிலே, அவருடைய வட்டாரத்திலே நிறுவப்பட இருக்கிறது. என்பதை அவர்கள் இங்கே சுட்டிக்காட்டி நன்றி தெரிவித்தார்கள். ஆகவே, அந்தப் பகுதிகளிலே உரிய அளவுக்கு விவசாயப் பெருமக்கள் மகிழ்ச்சி அடையத்தக்க அளவுக்கு நிலைமையை நாம் மேற்கொள்வோம்.

தோட்டக் கலைத் துறையின் சார்பாக சிறுமலைப் பகுதியிலே 200 ஹெக்டேரிலே பழப் பண்ணை அமைக்கப்பட இருக்கிறது என்பதையும் கீழ் பழனிப் பகுதியில் 75 ஹெக்டேரில் ஆரஞ்சுப் பழப் பண்ணைத் தொடங்கப்பட இருக்கிறது என்பதையும் நீலகிரி மாவட்டத்தில் 800 ஹெக்டேரிலே பழங்கள், வாசனைப் பொருட்கள் உரிய ஒரு பண்ணைத் தொடங்கப்பட இருக்கிறது என்பதையும் மதுரை அடிவாரப் பகுதியில் 450 ஹெக்டேரில் தோட்டக் கலைப் பயிர்கள் வளர்க்கக்கூடிய திட்டம் மேற்கொள்ளப்பட இருக்கிறது என்பதையும் ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 3,000 குடும்பங்களுக்கு 50 விழுக்காடு மானிய விலையிலே இடுபொருள் வழங்கப்பட இருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விதைச் சான்றுத் துறையைப் பொறுத்த அளவில் கடந்த 1984–85-லே 49,500 ஏக்கர் நாம் பதிவு செய்திருந்தோம். இந்த ஆண்டிலே 51,850 ஏக்கர் பதிவு செய்யப்படுகிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். விதைச் சான்றுப் பணியாளர்கள் விதை உற்பத்தி செய்யக் கூடியவர்கள், ஆகியோருக்கு ஒரு பயிற்சி நிலையமும் தொடங்கப்பட இருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விற்பனைத் துறையைப் பொறுத்த அளவில் நம்முடைய தமிழகத்திலே 13 விற்பனைக் குழுக்கள், 271 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. பெரியார் மாவட்டம், கோவை மாவட்டம் இரண்டும் ஒரே விற்பனைக் குழு கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிறது. இந்த ஆண்டு பெரியார் மாவட்டம் தனி விற்பனைக் குழுவைப் பெறத்தக்க அளவுக்கு நிலைமைகள் மேற்கொள்ளப்படும். அதிலே 21 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் இணைக்கப்படும் என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 1–30)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : 89 ஊரகக் கிட்டங்கிகள் கிராமப்புறங்களில் விவசாயிகள் உற்பத்தி செய்யக் கூடிய விளைபொருள்களைச்சேமித்து வைக்கக்கூடிய கிட்டங்கிகள் கட்டப்பட்டு வருகின்றன. அவற்றிலே பல கிட்டங்கிகள் வேலை முடியும் நிலைமையில் இருக்கிறது. பலவற்றுக்குக் கட்டிடப் பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன.

இந்த ஆண்டு 15 ஊரகக் கிட்டங்கிகள் புதிதாகக் கட்டுவதற்கும் திட்டங்களை வகுத்திருக்கிறோம் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டம் புறக்கணிக்கப்படுகிறதோ என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கவலை தெரிவித்தார்கள். நிச்சயமாக புறக்கணிக்கவில்லை. விரைவிலே தஞ்சை மாவட்டம் காட்டுத் தோட்டப் பகுதியில் வேளாண்மைக் கல்லூரி தொடங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். கிள்ளிகுளத்திலே இந்த ஆண்டிலே கல்லூரி தொடங்கப்பட்டிருக்கிறது. நாமக்கல் பகுதியிலே கால்நடை மருத்துவக் கல்லூரி ஒன்று தொடங்கப்படயிருக்கிறது.

அதோடு விவசாயப் பெருங்குடி மக்கள் இந்த விவசாயக் கல்வியைப் பெறத் தக்க அளவுக்கு, அவர்களும் முடிந்தால், பட்டம் பெறத்தக்க அளவுக்கு தொலைக்காட்சி கல்வித் திட்டம் என்ற திட்டத்தை நாம் பல்கலைக் கழகத்தில் இந்த ஆண்டு கொண்டு வர இருக்கிறோம்.

வேளாண்மை பல்கலைக் கழகம் 16 புதிய ரகங்களை இந்த ஆண்டிலே அறிமுகப்படுத்தியிருக்கிறது. அங்க இருக்கிற ஆராய்ச்சியாளர்கள் திறம்பட செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி அவர்களைப் பாராட்ட விரும்புகிறேன்.

பொறியியல் துறையைப் பொறுத்த வரையில் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ் 318 இலட்சம் ரூபாய் மஞ்சளாறு நீர்ப்பிடிப்புப் பகுதியில் மண் வளம், நீர் வளம் ஆகியப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்பட இருக்கிறது. காவிரி, பெரியாறு, கீழ்ப்பவானி ஆகிய பகுதிகளில் 19,670 ஹெக்டேரில் கடந்த ஆண்டில் வேளாண்மை மேம்பாட்டுப் பணி செய்யப்பட்டது. இந்த ஆண்டு 38,000 ஹெக்டேரில் மேம்பாட்டுப் பணிகளைச் செய்யஇருக்கிறோம் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சின்னராசு போன்றவர்கள், சோலைராஜ் போன்றவர்கள் கசிவுநீர் குட்டைகள் அமைக்கப்பட்டதால் ஏற்பட்டிருக்கிற நல்ல பயன்களை எடுத்துச் சொல்லி, நன்றி கூறினார்கள். அதனால் நிலத்தடி நீர் கூட உயரும் நிலைமை இருக்கிறது என்பதையும் அவர்கள் தெரிவித்தார்கள்.

கடந்த ஆண்டு 926 கசிவுநீர்க் குட்டைகளை 7.13 கோடி
ரூபாய் செலவிலே நாம் நிறைவேற்றினோம். இந்த ஆண்டு
இதற்காக 10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும்
ஆயிரம் கசிவு நீர்க் குட்டைகளையும் 500 தடுப்பணைகளையும்
நாம் வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பாக கட்ட
இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட
விரும்புகிறேன்.

விவசாயிகளுக்குக் கருவிகளை வழங்கக் கூடிய வகையிலும்
அவர்களுக்கு பயிற்சி தரக்கூடிய வகையிலும் வேளாண்மைப்
பொறியியல் பயிற்சி திருச்சியில் இருக்கிற அந்த மையத்தை
விரிவுபடுத்த நாம் திட்டமிட்டிருக்கிறோம். என்பதைத் தெரிவித்
துக்கொள்கிறேன்.

அதைப்போன்று 'என்கோபெட்' நிறுவனம் மூலமாக
மதுரை, தஞ்சை மாவட்டங்களில் வேளாண் சிறப்பங்காடிகள்
படிப்படியாக நிறைவேற்றப்பட இருக்கின்றன என்பதையும்
எல்லாவகை தெளிப்பான்களையும் இலவசமாகப் பழுதுபார்க்கக்
கூடிய வகையிலே திட்டங்கள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன
என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வேளாண்மை தொழில் கழகத்தின் சார்பாக சூரியகாந்தி
விதைகளை 3,402 டன் கடந்த ஆண்டு கொள்முதல் செய்து,
உற்பத்தி செய்யக்கூடிய பெருமக்களுக்கு நல்ல விலை கிடைக்கச்
செய்தோம். இந்த ஆண்டு 6,000 மெ.டன் அளவுக்கு கொள்முதல்
செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குடிநீர் பிரச்சினையைப் பொறுத்த வரையில் இங்கே பல
பிரச்சினைகளை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இங்கே
பேசிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன். நம்முடைய காங்கிரஸ் கட்சி உறுப்
பினர், திருவண்ணாமலை சட்ட மன்ற உறுப்பினர் குடிநீர்
தேவையை எடுத்துச் சொல்லி, அது கிடைக்காவிட்டால் நான்
உண்ணாவிரதம் இருப்பேன் என்று தெரிவித்தார்கள். அவர்கள்
தற்போது அவையிலே இல்லை என்றாலும் இங்கே இருக்கிற
நம்முடைய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவருக்கு தகவல்
தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். 474 இலட்சம் ரூபாயில்
திருவண்ணாமலை குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது
என்பதையும், அதனால் அவர்கள் நிச்சயமாக உண்ணாவிரதம்
இருக்கக்கூடிய அவசியம் வராது என்பதையும், அதைத் தடுத்து
நிறுத்துகிற பொறுப்பை அந்தக் கட்சி ஏற்றுக்கொள்ளும் என்பதை
யும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போன்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பிர
மணிய ஆதித்தன் அவர்கள் திருச்செந்தூரைக் குறிப்பிட்டுச்
சொல்லி, அங்கே குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டு
மென்று கேட்டுக்கொண்டார்கள். திருச்செந்தூர் நகருக்கு
60,60,000 ரூபாய் செலவில் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட
இருக்கிறது என்பதையும் அதைப்போன்று புன்னக்காயலுக்கு



9,40,000 ரூபாய் செலவில் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட
இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்
கிறேன்.

குறிஞ்சிப்பாடி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இங்கே
உருக்கமாகத் தெரிவித்து, வடலூர் வள்ளலார் பிறந்த ஊர்,
அந்த ஊருக்கு குடிநீர்த் திட்டம் இல்லையே என்று குறை
பட்டார்கள். வள்ளலார் பிறந்த ஊருக்கு வள்ளல் ஒருவர்
முதலமைச்சராக இருக்கிற காலத்திலே குடிநீர்த் திட்டம் நிறை
வேற்றப்படாமல் இருக்காது என்பதையும் 75 இலட்சம் ரூபாய்
மதிப்பீட்டில் அங்கே குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட இருக்
கிறது என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் வேங்கடரமணன் போன்றவர்கள்
இந்த குடிநீர்த் திட்டத்தினுடைய அமைப்புப் பணிகளில் இருக்
கிற சில சிக்கல்களைச் சுட்டிக்காட்டினார்கள். அந்தச் சிக்கல்
களை நாங்களும் உணர்ந்திருக்கிறோம். அதைப் பற்றி ஆய்வு
செய்த பெர்க்குஷன் கம்பெனி அந்தப் பணிகளிலே சில திருத்தங்
கள் செய்யப்பட வேண்டுமென்று தெரிவித்திருக்கிறது.

இப்போது இந்த குடிநீர்வாரியத்தில் மூன்றுதலைமைப் பொறி
யாளர்கள் இருக்கிறார்கள். ஒருவர் நகர அமைப்புப்பணிகளைக்
கவனிக்கிறார், ஒருவர் ஊரக குடிநீர் பணியைக் கவனிக்கிறார்,
ஒருவர் திட்ட வரைவினைக் கவனிக்கிறார். இந்த மூன்று பேர்
களும் சென்னையில் இருக்கிறார்கள். அலுவலகம் ஒரே இடத்
தில்தான் இருக்கிறது. ஆனால் மூவருக்கும் இடையில் இருக்கிற
பணி வெகு தொலைவில் இருப்பதைப்போல் முறையாக சில
திட்டங்களை நிறைவேற்றுவதில் பெருத்த தாமதம் ஏற்படக்
கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே இதை மாற்றியமைக்க
அரசு கருதுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்பு
கிறேன்.

நான்கு மண்டலங்களாகப் பிரித்து மதுரை, திருச்சி, கோவை,
வேலூர் இவைகளைத் தலைமையிடங்களாகக் கொண்டு நான்கு
தலைமைப் பொறியாளர்கள் இனிமேல் அந்தந்த இடங்களில்
இருந்து பணிகளைச் செய்வார்கள் வேலைகள் துரிதமாக நடக்க
அந்த ஏற்பாடு வகை செய்யும் என்பதையும் இவைகளை எல்லாம்
மொத்தமாக ஒருங்கிணைத்து கவனிக்கக்கூடிய வகையில் இனி
மேல் சூழ்நிலை உருவாகும் என்று இங்கே நான் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். 1976—77 இல் தான் நாம் எத்தனை
கிராமங்களுக்கு, குடியிருப்புக்களுக்கு குடிதண்ணீர் தேவை
இருக்கின்றது என்பதைக் கண்டறிந்து அந்த வகையிலே பெருந்
தொகையைச் செலவிட்டோம். முதலமைச்சரின் தன்னிறைவுத்
திட்டம் என்கிற திட்டத்தின் அடிப்படையில் ஏறத்தாழ 90
கோடி ரூபாயை நாம் குடிதண்ணீருக்காக மட்டும் செலவழித்
திருக்கிறோம். பல இடங்களில் அந்தத் தேவைகள் நிறைவேறி
இருக்கின்றன. என்றாலும் ஒருமுறை நாம் ஒரு இடத்திற்குக்
குடிதண்ணீர் வழங்கிவிட்டால் அது நிரந்தரமான ஏற்பாடாகக்

காலம், காலமாக இருக்கும் என்கிற நிச்சயம் இல்லை. நல்ல தண்ணீராக இருப்பது உவர் நீராக மாறக்கூடும்; அல்லது கிடைத்துக்கொண்டிருக்கிற குடிதண்ணீர் அதற்குப் பிறகு கிடைக்காமல் வறண்டு போகக்கூடிய நிலைமை இருக்கக்கூடும். ஆகவே இவைகளை எல்லாம் கருத்தில் கொண்டு இவற்றை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்ற வகையில் நாம் முடிவு செய்திருக்கிறோம். 50 ஆயிரம் குடியிருப்புக்கள் அப்படிப்பட்ட மறு ஆய்வு செய்யப் பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உலகவங்கி உதவியோடு கோவை மதுரை, சேலம் ஆகிய குடிநீர்த் திட்டங்கள் இந்த ஆண்டுலேயிருந்து தொடங்கப்பட இருக்கின்றன என்பதை நான் இந்தநேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் அதற்காக கிருஷ்ணா நதி நீர்த்திட்டத்தைக் கொண்டுவருகிற முறையிலே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதிலே நம்முடைய அரசின் சார்பாகவும் பணிகள் துரிதமாக நடைபெறுகின்றன. ஆந்திரா அரசிலும் கூட அவர்கள் இரண்டு தலைமைப் பொறியாளர்களை இதற்காக நியமனம் செய்து, 11 கண்காணிப்பு பொறியாளர்களை நியமனம் செய்து 48 நிர்வாகப் பொறியாளர்களை நியமனம் செய்து அவர்களும் பணிகளை விரைவு படுத்திக் கொண்டிருக்கிறார்கள். 7-வது ஐந்தாண்டுத்திட்ட காலத்திற்குள் இந்தத் திட்டத்தை எப்படியும் முடிக்கவேண்டும் என்று நாம் முனைப்போடு செயல் பட்டுக்கொண்டிருக்கிறோம். எவ்வப்போது தேவையோ அந்த நேரத்தில் எல்லாம் நம்முடைய அலுவலர்கள் ஆந்திரா அரசு அலுவலர்களோடு தொடர்பு கொண்டு தக்க பரிமாற்றத்தைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

எனவே இதிலே பணிகள் விரைவாக நடக்கும் என்ற நம் பிக்கையை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என்றாலும் ஒரு இடைக்கால ஏற்பாடு தேவை என்ற வகையில் இந்த ஆண்டிலே 15 கோடி ரூபாய் செலவில் 12 மில்லியன் காலன் தண்ணீர் சென்னை நகருக்குக் கிடைக்கக்கூடிய வகையில் ஒரு ஏற்பாட்டை நாம் செய்திருக்கிறோம். சென்னையைச் சுற்றியிருக்கக்கூடிய பகுதிகளில் நிலத்தடி நீர் ஏராளமாக கிடைக் கின்றது என்பதை ஐக்கிய நாடுகள் வளர்ச்சி நிறுவனம் ஆராய்ந்து நமக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த நிறுவனத்தினுடைய கருத்தை ஏற்று நாம் பூண்டி, கொடுகலையாறு, வெள்ளப்படுகை ஆகிய இடங்களிலிருந்து நிலத்தடி நீரை நாம் முழுமையாகப் பயன்படுத்தக்கூடிய வகையில் இந்தத் திட்டம் இருக்கும். 12 மில்லியன் காலன் என்பது சென்னை மாநகர மக்கள்பயன்படுத்திக் கொண்டிருக்கின்ற தண்ணீரை விட அதிகமாக இன்னும் 23 விழுக்காடு அவர்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். இது 18, 19 மாதங்களுக்குள்ளாக





நிச்சியமாகக் கிடைக்கும் என்பதையும் அதற்கான ஆணைகள் இன்னும் இரண்டொரு நாட்களில் பிறப்பிக்கப்பட இருக்கின்றன என்பதையும் நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

சென்னை மாநகரத்தினுடைய குடிதண்ணீர் வழங்கல் துறை தொடங்கப் பட்டகாலத்திலிருந்த மக்கள் தொகை ஏறத்தாழ 31 இலட்சம். ஆனால் இன்றைக்கு மக்கள் தொகை வளர்ந்திருக் கின்றது. வளர்ந்திருக்கின்ற மக்கள் தொகையினுடைய தேவை யைக் கவனித்து அதை ஈடுசெய்யவேண்டும் என்ற வகையில் முன்பு நான்கு பகுதி அலுவலகங்களாக இருந்ததை இப்போது 6 பகுதி அலுவலகங்களாக நாம் மாற்றுகிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே சென்னைமாநகரத் திற்கும் சரி, தமிழகத்திற்கும் சரி நாம் குடிதண்ணீர் தேவை களை உரிய வகையில் கவனித்து ஏற்பாடு செய்வதற்கு விரை வான நடவடிக்கைகள் மேற்கொள்வோம். அதற்கு சட்டப் பேரவை உறுப்பினர்கள் ஒத்துழைக்கவேண்டும். ஆங்காங்கு இருக்கின்ற சிக்கல்களை அவர்கள் எடுத்துக்கூறி அந்தச் சிக்கல் களை உடனடியாகத் திர்க்கத்தக்க அளவுக்கு மக்களுக்கும் அரசுக்கும இடையிலே பாலமாக அவர்கள் திகழவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே வேளாண்மைத் துறையில் ஏற்பட்டிருக் கின்ற இந்தச் சாதனைகளும் தனியாக இந்தத் துறைக்கு மட்டுமே பெருமை அளிக்கக்கூடியதல்ல என்பதையும் வேளாண் பெரு மக்களுக்கே பெருமை அளிக்கக்கூடியது என்பதையும் கடந்த காலத்தில் நிலவிய கொதிப்பும், குமுறலும் அடங்கி இப்போது நல்ல சூழ்நிலை நிலவுகிறது என்பதையும், ஆகவே அரசினுடைய பெரும்பாலான துறைகள் விவசாயப் பெருமக்களைக் கவனிக்கக் கூடிய துறைகளாக இருக்கின்றன என்பதையும், மின்சாரமா னாலும், கூட்டுறவுத்துறையானாலும், உணவுத்துறையானாலும் வேளாண் துறைக்குத்தான் அவை முதலிடம் தருகின்றன என் பதையும் அந்த வகையில் ஒட்டுமொத்தமாக அரசினுடைய ஒத்துழைப்பு பெற்ற வேளாண்மைத் துறையைப் பெருமைப் படுத்தத் தக்க அளவிற்கு நல்ல சூழ்நிலை நிலவுகிறது என் பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அனைத்து உறுப்பினர்களும் தெரிவித்திருக்கின்ற அனைத்து கருத்துக்களுக்கும் நான் இந்த நேரத்தில் பதில் சொல்ல இயலா விட்டாலும் அவைகளை எல்லாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு உரிய நடவடிக்கை அரசின் சார்பாக எடுப்பேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கின்ற உறுப்பினர் அவற்றைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கைகளை முழுமனதாக, ஏகமானதாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் கேட்டு அமைகிறேன்.

(பிற்பகல் 1-40)

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பருவமழை பொய்த்த காரணத்தாலே தமிழகத் திலே பல்வேறு இடங்களிலே இன்றைக்கு கடுமையான குடி தண்ணீர் தட்டுப்பாடு நிலவி வருகிறது என்பதை நாம் அறி வோம். பொதுவாக கிராமங்களிலே ஊராட்சி ஒன்றியங்களிலே குடிதண்ணீருக்காக வேண்டி கை இறைப்பான்களை அதிகமாகப் போடவேண்டும் என்ற கோரிக்கை அதிகமாக வந்திருந்தாலும் கூட, அரசு தரப்பிலே வடிகால் வாரியத்தின் மூலமாக எடுத்துக் கொண்ட முயற்சி மிகக் கொஞ்சமாக இருக்கிறது. குடிதண்ணீர் தட்டுப்பாட்டின் நிலைமையை உணர்ந்து மிக அதிகமாக கை யுத்த கால அடிப்படையில் எடுக்குமா என்று அறியவிரும்பு கிறேன். இதேப் பிரச்னையை இதே மாமன்றத்திலே 2, 3 மாதங் களுக்கு முன்னாலே நான் சொன்னேன் வருகிற மாதங்களிலே குடிதண்ணீர் தட்டுப்பாடு மிகக் கடுமையாக இருக்கும். அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண் டிருந்தும் கூட இன்றைக்கு கிராமங்களுக்கு அந்த திட்டங்கள் போய்ச் சேரவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவ்வளவு கோடி ரூபாயை அதற்காக ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன் னாலும் கூட அந்த திட்டங்கள் கிராமங்களுக்குப் போய்ச் சேர வில்லை. ஆகவே உடனடியாக எங்கெங்கே தேவையிருக்கிறதோ அந்தந்த கிராமங்களிலே கை இறைப்பான்களை அதிகமாக போடுவதற்கான முயற்சிகளை அரசாங்கம் உடனடியாக எடுத்துக் கொள்ளுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, கடுமையான வறட்சியினால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று கண்டு அறியப்பட்ட பகுதிகள், அரசு அலுவலர்கள் ஆங்காங்கே சென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களோடு சேர்ந்துபேசி முடி வெடுத்து தெரிவித்திருக்கக் கூடிய பகுதிகள் என்ற வகையிலே 25 வட்டங்கள் தேர்ந்து எடுக்கப்பட்டு அதிலே 660 ஆழ்துளை கிணறுகள் இப்போது நாம் போட்டிருக்கிறோம். அதிலே பாதிக்கு மேல் இப்போது முடிந்து விட்டது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற கருத்தின் அடிப்படை யில் யுத்த கால அடிப்படையில் நாம் புதியதாக செய்ய இருக்கும் கை இறைப்பான்களை ஆழ் துளை கிணறுகளை போட வேண்டும் என்ற வகையிலே அரசு முயற்சிகளை செய்யலாம். ஆனால் இருக்கிற சூழ்நிலையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒவ்வொரு வறட்சி வருகிற நேரத்திலும் நாம் பெரும்பா லான அளவுக்கு ஆழ்துளை கிணறுகளைப் போடுகிறோம். அதற்குப் பிறகு அந்தக் கிணறுகள் என்ன ஆயிற்று என்று தெரியாத அளவுக்கு நிலைமை ஏற்பட்டு அடுத்த வறட்சி வருகிற காலத்திலே மறுபடியும் யுத்த கால அடிப்படையில் அதிகமான ஆழ்துளை கிணறுகளை போடுவது என்பது அரசாங்கத்தினுடைய





நிதியை விரயம் செய்யக் கூடிய அளவுக்கு கொண்டு வந்துவிடும். ஆகவே நான் தெரிவிக்க விரும்புவது 68 ஆயிரம் ஆழ் துளை கிணறுகள் ஏற்கெனவே போடப்பட்டிருக்கின்றன. அதிலே இயங்க முடியாத சூழ்நிலை சில கிணறுகளுக்கு ஏற்பட்டு இருக் கலாம். அங்கே தண்ணீர் இல்லாமல் போய் இருக்கலாம். அல்லது பெரிய அளவிலே ஏதாவது பழுது ஏற்பட்டு இருக்கலாம் அப்படி ஏற்பட்டு இருந்தாலும் கூட எஞ்சிய கிணறுகளில் எந்த அளவுக்கு பயன்படுகின்றன, செயல்படுகின்றன, அதிலே ஏற்பட்டிருக்கிற பழுது என்ன என்பதை முழுமையாக கண்டு அறிந்து அவைகளை முழுமையாக இந்த நேரத்திலே பயன்படுத்தினாலேயே எவ்வளவு கடுமையான வறட்சி வந்தாலும் அந்த வறட்சியை சமாளிக்கலாம் என்கிற அளவிற்கு சூழ்நிலை இருக்கிறது.

ஆகவே அதையும் கணக்கிலே எடுத்துக் கொண்டு தேவைப் பட்டால் புதிய ஆழ் துளை கிணறுகளைப் போடுவதற்கும் உரிய வகையிலே அரசாங்கம் முயற்சி எடுக்கும். அந்த வகையிலே நாங்கள் செயல் திட்டத்தை வகுத்திருக்கிறோம், என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** விவாதம் முடிந்தது. இப்போது வாக்கெடுப்பு.

**கோரிக்கை எண் 20—வேளாண்மை.**

திரு. சி. பழனிமுத்து அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

" மானியக் கோரிக்கை எண் 20 —வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,03,24,42,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண் 49—குடிநீர் வழங்கல்**

திரு. கே. எம். தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர் மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள் ளப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி

:" மானியக் கோரிக்கை எண் 49—குடிநீர் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,28,51,78,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண் 50—வேளாண்மை குறித்து மூலதனச் செலவு.**

திரு. கே. எம். தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 50—வேளாண்மை குறித்து மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,23,55,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (5–6–1985) காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–43 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



(5) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

195. இராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரம் தீவில் காரைக்குடியிலுள்ள திருவாளர்கள் மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகத்தினரால் நடத்தப்படும் சிறிய சக்கரங்களைக் கொண்ட ஏழு பேருந்துகளுக்கு செலுத்தப்பட வேண்டிய வரியினை குறைப்பது குறித்து உள் துறையின் 25–3–1985 ஆம் நாளிட்ட 731 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

196. தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 7–3–1985 ஆம் நாளிட்ட 229 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

197. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 24–8–1984 ஆம் நாளிட்ட 1875 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

198. வணிக வரிகள்—சமய அறக் கட்டளைகள் துறையின் அறிவிக்கைகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 16–4–1985 ஆம் நாளிட்ட 333 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

80. தமிழ்நாடு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த சட்ட முன் வடிவு. (நகலும், இணைப்பும்).

81. தமிழ்நாடு ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (நகலும், இணைப்பும்).

82. தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தம்) சட்ட முன்வடிவு (நகலும், இணைப்பும்).

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2,
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5,
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1,
12 New Century Book House (Private) Limited, Madras-2
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District)
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P N Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K V Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286. R.B. Gandhi Street, Calcutta-11.

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

A.210
76/86
வெளியீடு 30-12-1985
2955
24 ...
2843

Issued 30—12—1985

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை, ஜூன் 5, 1985 - தொகுதி VI எண் 3
Wednesday the 5th June 1985 - Volume VI No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly, Secretariat, Fort St. George, Madras - 600 009

விலை [ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 paise

## உள்ளடக்கம்

5—6—1985

| | | பக்கங்கள். |
|---|---|---|
| 1. | வினாக்கள்—விடைகள் : | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள். .. .. | 283—335 |
| 2. | தகவல் கோரல் : | |
| | தஞ்சை மாவட்டத்தில் விவசாயக் கடன் வசூல். .. .. .. .. | 335 |
| 3. | ஒத்திவைப்புத் தீர்மானம் : | |
| | மூர் மார்க்கெட் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து .. .. .. | 335—351 |
| 4. | அறிவிப்பு : | |
| | பேரவை அலுவல் .. .. .. | 351—355 |
| 5. | அரசினர் சட்ட முன்வடிவுகள் : | |
| | (அ) மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு 1985 .. .. | 356—399 |
| | (ஆ) ஊராட்சி ஒன்றிய மன்றங்கள்.. (தனி அலுவலர்கள்நியமனம்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு 1985 | |
| | (இ) ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு 1985. .. | |
| | (ஈ) ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட் முன்வடிவு 1985. .. | |
| 6. | பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். .. | 399 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1985, ஜூன் 5, புதன்கிழமை

வைகாசி 23, குரோதன—திருவள்ளுவர் ஆண்டு 2016

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல் ".

சொற்களில் பயன் உடைய சொற்களை மட்டும் சொல்ல வேண்டும். பயன் இல்லாதவைகளாகிய சொற்களை சொல்லவே கூடாது.

## 1. வினாக்கள் - விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### தண்ணீர் தீர்வை

114—(*வினா எண் 18) திரு. கு. ரயணி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள அரசு நீர் நிலைகளிலிருந்து பாசனம் பெறுகிற நிலங்களுக்கு தண்ணீர் தீர்வை நான்கு மடங்கு உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : விவர அறிக்கை @ ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற விவர அறிக்கையைப் பார்த்தால் ஏற்கனவே ஆறு ரூபாயாக இருந்த வரி இப்போது 24 ரூபாய், 28 ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தப்படுவதாகத் தெரிகிறது. இந்த அளவிற்கு நான்கு மடங்கு இந்த வரியை, உயர்த்துவதன் காரணமாக, ஏற்கனவே வறட்சி ஏற்பட்டு பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளை இது மேலும் பாதிப்பிற்குள்ளாக்கும். இதனால் விவசாயிகள் மேலும் கஷ்டத்திற்குள்ளாக்கப்படுவார்கள் என்ற காரணத்தால், இந்த வரி உயர்த்துவதை கைவிடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

---

@ 400—405ஆ பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள அரசு நீர்ப் பாசன திட்டங்களின் கீழுள்ள பாசன ஆதாரங்களிலிருந்து, பாசனம் பெறும் நிலங்களுக்கு தண்ணீர் வரி விதிப்பு 1865 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாசன வரிவிதிப்புச் சட்டம் வழிவகை செய்கிறது. அரசு நீர்ப் பாசன திட்டங்களின் மூலம் பாசனம் பெறும் எல்லா நிலங்களுக்கும் விதிக்கப்படும் தண்ணீர் வரி வீதங்களை உயர்த்தும் திட்டம் எதுவும் இப்போது அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால் 1865 ஆம் ஆண்டு பாசன வரிவிதிப்புச் சட்டத்தின் பிரிவு 1-ல் குறிப்பிடப்பட்டுள்ள, நீர்ப்பாசன திட்டங்கள் நீங்கலாக, ஏனைய அரசு பாசன ஆதாரங்களின் கீழ் பாசன வசதி பெறும் புன்செய் நிலங்களுக்கு நிலைப்படுத்தப்பட்ட மாவட்ட தண்ணீர் தீர்வை வீதங்கள் நிலவரி திட்ட எற்பாட்டின்படி பல ஆண்டுகளுக்கு முன்னாலே நிர்ணயிக்கப்பட்டது என்ற காரணத்தினால், இந்தத் தண்ணீர் தீர்வை வீதங்களை திருத்தியமைக்கும் பொருட்டு முன்னாள் வருவாய் வாரியம் அரசுக்கு பரிந்துரை செய்து செயல் குறிப்பு அனுப்பியது. அந்தச் செயல் குறிப்பு எற்றுக்கொள்ளப்பட்டு மேற்குறித்த பாசனம் பெறும் புன்செய் நிலங்களுக்கு விதிக்கப்படும் தண்ணீர் தீர்வை வீதங்களை அறிக்கையில் கண்டவாறு திருத்தியமைக்கப்பட்டது. என்றாலும், கூட, தமிழ்நாடு அரசிதழ் மாவட்ட அரசிதழ்களில் 7—8—1984 அன்று இதுபற்றி கருத்துக்கள், மறுப்பு கருத்துக்கள் அல்லது மாற்றுக் கருத்துக்கள் சொல்ல வேண்டுமானால் சொல்லலாம் என்றும், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் அளிக்கலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய அந்தக் குறிப்புகள் எல்லாம் வந்ததற்குப் பிறகு, மறுப்புரைகள், கருத்துக்கள் எல்லாம் வந்ததற்குப் பிறகு மீண்டும் அரசே பரிசீலனை செய்து ஏற்றதொரு முடிவை எடுக்கும். இப்போது வரி விதிப்பு அமலுக்கு வரப்படவில்லை. தெரிவிக்கப்பட்டிருக்கிறது ; இதன்மீது கருத்து கேட்கப்பட்டிருக்கிறது.

திரு. பொ. உத்திராபதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தற்போது வரி உயர்த்தப்படவில்லை என்று சொன்னார்கள். நான் கேட்டுக் கொள்வது இப்போது தண்ணீர் தீர்வை ஆறு, ஏழு ஆண்டுகளாகவே வெள்ளம், புயல் வறட்சி போன்ற பல்வேறு காலங்களில் கட்டாமலே இருக்கிறது. இந்த ஆண்டு தேர்தலுக்குப் பிறகு வசூல் செய்யப்பட்டது. இப்படிப்பட்ட பாதிக்கப்பட்ட காலங்களில் வரிகளை தள்ளுபடி செய்து, மற்ற காலங்களுக்குள்ள வரிகளை வசூல் செய்வதற்கு ஒரு நடவடிக்கை எடுப்பதற்கு, அமைச்சர் அவர்கள் ஆலோசிப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, வெள்ளத்தினாலேயோ , புயலாலேயோ. வறட்சியினாலோ பாதிக்கப்படுகிற சூழ்நிலை ஏற்படுகிறபோது இந்தத்





தண்ணீர் வரித் தீர்வை ஆங்காங்கே தள்ளப்பட்டு வருகின்றன. எங்கே பாசன வசதிகளை முழுமையாக பயன்படுத்துகிற சூழ்நிலை எற்படுகிறதோ அங்கே தான் முழுத் தீர்வையும் வசூலிக்கிற நிலைமை வரும். அப்போதும் வறட்சி காரணமாக வசூலிக்கப்படாத நிலைமை ஏற்படுகிறபோது தள்ளிப்போட்டு, தவணை முறையில் வசூலிக்கிற நிலைமையும், ஆங்காங்கு மாவட்ட ஆட்சி தலைவர்களுக்கு அறிவுறுத்துகிறபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர் தீர்வையை சீரமைப்பதற்கு அரசால் அமைக்கப்பட்ட தண்ணீர் சீரமைப்புக்கமிட்டி தனதுஅறிக்கையை அரசுக்கு அளித்துவிட்டதா ? அதுபற்றிய விவரத்தை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாநிலத்திலுள்ள தண்ணீர் தீர்வை வீத அமைப்பு முழுவதையும் சீரமைப்பது பற்றி அரசு அமைத்த குழு தனது அறிக்கையை அரசிடம் கொடுத்துள்ளது. அக்குழுவின் பரிந்துரைகள் மீது தற்போது ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் அரசு விவசாயிகளுக்கு அளித்துள்ள பல சலுகைகளையும் கருத்தில் கொண்டு அதன் விளைவுகளை ஆராய்ந்து மறு அறிக்கையை சமர்ப்பிக்கும்படி மேற்படி குழுவினை அரசு கேட்டுக் கொண்டுள்ளது. இறுதி அறிக்கை பெற்றபின் அதன் மீது முடிவெடுக்கப்படும். தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள மாவட்டத் தரத் தண்ணீர்த் தீர்வை வீதங்கள் முன்னாள் வருவாய் வாரியத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில்தான் அமைந்துள்ளன. இந்த தீர்வை விதித்தது பற்றிய கருத்துக்களோ, மறுப்புக்களோ தர விரும்பினால், தரலாம் என்று 7-8-19 அன்று அரசிதழிலும், மாவட்ட அரசிதழ்களிலும் அறிவிப்பு வெளியிடப்பட்டு இருக்கிறது. இதுபற்றி கருத்துக்கள் கேட்கப்பட்டு இருக்கின்றன. அது தொடர்பாக எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்தும் அறிக்கை கேட்கப்பட்டு உள்ளது. தென் ஆற்காடு திருச்சி, புதுக்கோட்டை மற்றும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து இப்போது கருத்துக்கள் வரப் பெற்றுள்ளன. மற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து அறிக்கைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. இவைகள் எல்லாம் வந்ததற்குப் பிறகு சிறப்பு ஆணையாளர், மற்றும் நில நிர்வாக ஆணையாளர்களிடமிருந்து முடிவாக அறிக்கை அரசுக்குக் கிடைக்கும். அதற்குப் பிறகுதான் அரசு முடிவு எடுக்கும்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : தலைவர் அவர்களே, பாசனம் பெறுகின்ற நிலங்கள் தவிர, மீதி இருக்கின்ற, [illegible] நீரால் பாசனம் பெறுகின்ற நிலங்களுக்கும் தண்டத் தீர்வை போடப்பட்டு இருக்கிறது. இதைத் தவிர்க்கின்ற வகையில் அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்து இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதுபற்றி தனிக் கேள்வி போட்டால் முழுமையான விவரத்தைத் தர இயலும். இந்தக் கருத்துக்களை முழு அளவிலே கேட்டதற்குப் பிறகு, எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து அறிக்கை வந்தபிறகு, இதுபற்றி சிறப்பு ஆணையாளர், மற்றும் நில நிர்வாக ஆணையாளர் ஆகியோர் ஆராய்ந்து அறிக்கை அரசுக்கு அனுப்பிய பின்னர், இதன்மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே இருக்கின்ற தண்ணீர் தீர்வையை உயர்த்தியது ஒரு புறம் இருக்க, அரசு தண்ணீருக்கு பாத்தியதை இல்லாத சிலர் அரசினுடைய நீர்த் தேக்கங்களில் இருந்து தண்ணீரை திருட்டுத் தனமாக எடுப்பதைக் கட்டுப்படுத்துவதற்காகத்தான் இந்த தண்டத் தீர்வை வசூலிக்கப்படுகின்றன. இதற்கான விதிமுறைகள் போர்ட் ஸ்டேண்டிங் ஆர்டரிலே இருந்தும் கூட, அதிலே முதல் தடவையாக இருந்த தண்ணீர் தீர்வை, 2 மடங்கு என்றும், 4 மடங்கு என்றும் 10 மடங்கு என்றும் கொண்டுபோக வேண்டிய நிலைமை இருக்கிறது. இதனால் ரெகுலர் ஆயக்கட்டுதாரர்கள் மிகவும் பாக்திக்கப்படுகிறார்கள். போர்ட் ஸ்டேண்டிங் ஆர்டரில் ஸ்பெசிபிக் புரவிஷன் இருந்தும், அவைகள் நடைமுறையில் கடைப்பிடிக்கப்படவில்லை. எனவே இந்த தண்டத் தீர்வையை வசூலிக்க கடுமையான, முறையான நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று, அரசு விதித்த விதிமுறைகளை மீறுகின்ற மனப்போக்கும் மனப்பாங்கும் ஆங்காங்கே இருக்கின்றது. எனவே அதைச் செம்மைப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தை அடிப்படையாக வைத்து, அதிலே பல்வேறு சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. ஒரு பக்கத்திலே நாம் வேளாண்மையைப் பெருக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். வேளாண்மையை நம்பி வாழ்கின்ற வேளாண் பெருங்குடி மக்களுக்கு உதவியாகவும், உறுதுணையாகவும் இருக்க வேண்டும் என்று கருதுகிறோம். அதே சமயத்தில் ஒரு முறைக்கு, ஒரு வகைக்கு உட்பட்டு அவர்கள் நடக்க வேண்டும் என்று திட்டவட்டமான, தெளிவான தன்மைகளும் இருக்கின்றன. ஆகவே ஆங்காங்கு பல்வேறு இடங்களில் பல்வேறு விதமான முறைகளில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப் போன்று, திருட்டுத்தனமாக எடுத்து, யாருக்குக் கிடைக்க வேண்டுமோ. அவர்களுக்கு கிடைக்காத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இவ்வகளை எல்லாம் முறைப்படுத்த வேண்டியிருக்கிறது.



இந்த முறைகளை மீறி நடப்பவர்கள் மீது கடுமையான தண்டனை விதிப்பதற்கான வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்று சிறப்பு ஆணையாளர் கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறார்கள்.

திரு. எஸ். என். இராமசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கையாக விளையக்கூடிய இடங்களைத் தவிர மோட்டார் வைத்து, விவசாயம் செய்யக்கூடிய நஞ்சைகளுக்கும், இதுபோன்ற தீர்வை வசூல் செய்கிறார்கள். இதைக் குறைத்து வசூல் செய்வதற்கு அரசு ஆணையிடுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இது அரசின் நீர்ப்பாசன திட்டங்களைப் பற்றியதும், அதிலேயிருந்து பயன் பெறுகின்றவர்களுக்கு விதிக்கப்படுகின்ற தீர்வையைப் பொறுத்தும் அமைந்து இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதைப் பற்றி, தனிக் கேள்வி போட்டால், அதனுடைய நிலைமை என்ன என்பதை தெரிவிக்க இயலும்.

## வெல்லிங்டன் நீர்த்தேக்க ஆயக்கட்டு நிலங்கள்.

*115*—(*வினா எண் 277) திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் வெல்லிங்டன் நீர்த்தேக்கத்தில் இருந்து பயன் பெறும் விவசாயிகள் தங்களுக்கு உயர்த்தப்பட்ட நிலவரியைக் குறைக்க அரசிடம் கோரிக்கை வைத்துள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ) : தென்னார்காடு மாவட்டம் வெல்லிங்டன் நீர்த்தேக்கத்தில் இருந்து பயன்பெறும் நிலங்களின் மீது உயர்த்தப்பட்ட தண்ணீர் வரியை குறைக்க வேண்டுமென்று மனுக்கள் நில நிர்வாக ஆணையருக்கு கொடுத்துள்ளனர். அம்மனு நில நிர்வாகத் துறையின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே வெல்லிங்டன் நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீரை விவசாயிகள் பயன்படுத்துவதைப்போல், பல்வேறு பகுதிகளிலேயும், தமிழ் நாட்டிலே நில வரி ஏறக்குறைய 60 கோடி ரூபாய்க்கு மேலாக நிலுவையில் இருப்பதாக அரசு தரப்பில் கூறப்படுகிறது. இந்த 60 கோடி ரூபாயை ஒட்டுமொத்தமாக வசூலிக்க, அதிகாரி

களுக்கு பயணப்படி போன்றவைகள் அதிகமாக செலவு ஆகின்றன. எனவே இந்த தொகை அனைத்தையும் ரத்து செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக எல்லாவற்றையும் வரி வஜா செய்து விட்டால், அரசை நடத்த வேண்டியவர்களாகவும் இருக்கிறோம். புயலாலும், வெள்ளத்தாலும், வறட்சியினாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு, ஒவ்வொரு மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் சில பல வழிமுறைகள் இருக்கின்றன. அதனை வைத்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அவ்வப்போது வரி தள்ளுபடி செய்வதும், வரி வசூலிப்பதும் இருந்து வருகிறது. தொழுதூர் வெல்லிங்டன் நீர்த் தேக்கத்தால் பயன் அடையும் நிலங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கின்ற வரித் தீர்வை, மற்றவற்றின் கணக்கைப் பார்க்கின்றபோது, ஓரளவுக்குத் தண்ணீர்த் தீர்வையைக் குறைத்து, தனி சிறு நீர்ப்பாசனத் திட்டங்களினால் பயனடையும் நிலங்களுக்கு விதிக்கப்படும் தண்ணீர் மேல் வரியைப் போல், இதற்கும் வசூலிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்திற்கு, ஏக்கருக்கு 25 ரூபாய் விதிக்கப்படுகிறதென்றால், இதற்கு 15 ரூபாய் தான் விதிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், இதுபற்றி சில குறைபாடுகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். பரிசீலனையில் இருந்து வருகின்றது.

திரு. மா. மணிமாறன் : கடந்த ஏழாண்டுக் காலமாக பாதிக்கப்பட்டதன் காரணமாக நில வரி வசூலை தள்ளி வைத்திருக்கிறார்கள். 30 சதவீதம் வட்டியைச் சேர்த்து மிகவும் கடுமையான முறையில் நில வரி பாக்கி இருக்கின்றது. பாக்கியை வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட காரணமாகத்தான் நில வரி வசூலை ஒத்தி வைத்திருக்கின்றோம். பாதிக்கப்பட்டது உண்மை என்று ஒத்துக்கொண்டதற்குப் பிறகு, விவசாயத்திற்கு லாபம் இல்லை என்று அரசு கருதுவதால் பாக்கி இருக்கின்ற நில வரி 60 கோடி ரூபாய்க்கு மேலாக இருப்பதை ரத்துச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆராய்ந்து பார்த்து சில பல முடிவுகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதைத் தான் முதலிலேயே சொன்னேன். பாதிக்கப்பட்டவர்களுக்கு வரி விதி விலக்கு அளிப்பதும், பாதிக்கப்படாமல் பாசன தண்ணீர் வசதியைப் பயன்படுத்துகிறவர்களுக்கு வரி விதிக்கின்ற உரிமையை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பெற்றிருக்கிறார்கள். அவர்களுடைய



தன்மையை ஆராய்ந்து அண்மையில் அரசு ஆணை பிறப்பிக்கின்ற வகையில், 1379 பசலி ஆண்டிலிருந்து வசூலிக்கப்பட வேண்டிய தண்ணீர் மேல் வரி, தண்ணீர் தீர்வையை 1386 ஆம் பசலி ஆண்டிலிருந்து வசூலிக்கப்படும் என்றும், 1386-ம் பசலி ஆண்டிலிருந்து செலுத்தப்பட வேண்டிய பாக்கித் தொகையையும், தற்போதுள்ள நிலுவைத் தொகையையும், 1388 ஆம் பசலி ஆண்டிலிருந்து வசூலிக்கலாம் என்றும், 1387 ஆம் பசலி ஆண்டிலிருந்து செலுத்தவேண்டிய பாக்கித் தொகையையும், 1389-ம் ஆண்டில் செலுத்த வேண்டிய பாக்கித் தொகையையும், 1389-ம் ஆண்டில் வசூலிக்கலாம் என்றும், 1975-76-இல் நீர்த் தேக்கத்திற்குச் செய்யப்பட்ட சீரமைப்பு திட்டப் பணிகளுக்குப் பின்னும், குறிப்பிட்ட நிலங்களுக்கு பாசனத்திற்கு நீர் கிடைக்கவில்லையெனில், அதற்கு தீர்வை தள்ளுபடி அளிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதையொட்டி, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆங்காங்கே நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

திரு. அ. பிரணவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் தாலுக்காவில் இந்த ஆண்டு கடுமையான வறட்சி ஏற்பட்டு, அங்குள்ள கிராம நல அதிகாரிகள் அத்தனை பேரும் ஒட்டு மொத்தமாக 12 பைசா தீர்வையைப் போட்டு வரி வஜா செய்யவேண்டுமென்று அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இருந்தாலும் கூட, இன்றும் தொடர்ந்து ரெவின்யூ வசூல் செய்யப்படுகிறது என்றும், அங்குள்ள கிராம அதிகாரிகளை எல்லாம் மாதத்திற்கு இவ்வளவு ரூபாய் வரி வசூல் செய்யவில்லையெனில் உங்களுடைய மாதச் சம்பளத்தை நிறுத்தி விடுவேன் என்று அதிகாரிகள் மிரட்டுவதும் தொடர்ந்து அங்கே நடைபெறுகிறது. இன்னும் அங்கே ஜமாபந்தி நிறைவேற்றப்படாமல் அதிகாரிகள் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். வரி வஜா செய்வதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரி வஜா செய்வது, வரிகளைத் தள்ளுபடி செய்வதற்கென்று சில பல வழிமுறைகள் எல்லாம் வைக்கப்பட்டிருக்கின்றன. அதனைப் பொறுத்து, வறட்சி சூழ்நிலை ஏற்பட்டதையொட்டி எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அரசு தாக்கீது அனுப்பி ஆங்காங்குள்ள நிலைமைகளை எடுத்துத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்றோம். இப்போது கேட்கப்பட்டு இருக்கிற கேள்வி தொழுதூர் நீர்த் தேக்கத்தைப் பற்றி இருப்பதால் அதுபற்றிய விளக்கக் குறிப்புக்கள்தான் என்னிடம் இருக்கின்றன. ராமநாதபுரம்

மாவட்டத்தில் உறுப்பினர் கூறுவது போன்று சூழ்நிலை இருக்கு
மானால், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அதனைப் பார்த்து,
தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அரசு நட
வடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் இருந்தால் அறிக்கை அனுப்ப
வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதையொட்டி
முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கருதுகிறேன்.
தனிக் கேள்வி போட்டால் அதனுடைய முழு விவரங்களும்,
என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது, என்ன செய்திருக்கிறார்கள்
என்பதை நான் கூறலாம்.

திரு. மா. கதிர்வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் தோல் சாப்புகளி
லிருந்து வெளிவரும் கழிவு நீர், மற்ற நீரோடு கலப்பதால்
வாணியம்பாடி, பேரணாம்பட்டு, குடியாத்தம், ராணிப்பேட்டை
போன்ற தொகுதியில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர்
பயிர்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. அவர்கள் விவசாயம்
செய்ய முடியாத சூழ்நிலையில் இன்றைய தினம் இருக்
கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆற்று ஓரங்களில்
உள்ள தொழிற்சாலைகள் இருப்பதால் அந்தக் கழிவு
நீரினால் பல ஏரிகள் பாதிக்கப்பட்டு அங்கே பயிரிட்ட பயிர்கள்
மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே, அங்கே இருக்
கின்ற அந்த விவசாய மக்களின் வாழ்வுக்கு வசதி செய்கின்ற
வகையில் அங்கே வரி வஜா செய்கின்ற ஒரு நிலையை அரசு
எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் கூறியபடி அரசு
ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்த எந்த இடங்களில் எந்த எந்த
அளவுக்கு பாதிக்கப்பட்டு இருக்கின்றன என்ற விவரங்களைக்
கேட்டு இருக்கின்றது. பாதிப்புகளில் பல அளவுகள் இருக்கின்றன.
ஆகையால் இந்த அளவின் அடிப்படையில் எவ்வளவு தள்ளுபடி
செய்யலாம் என்பதற்கு வழிமுறைகள் வகுத்துத் தரப்பட்டிருக்
கிறது. அந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று கூறப்பட்டிருக்
கிறது. மேற்கொண்டு அரசினுடைய ஆணை பெற வேண்டிய
சூழ்நிலை இருக்குமானால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்
அரசுக்கு எழுதி அனுப்பலாம் என்று சொல்லப்பட்டு இருக்கிறது.
ஆனால் வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்
என்ன குறிப்புகளை அரசுக்கு அனுப்பினார்கள் என்ற விவரக்
குறிப்புகள் இப்போது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி
போட்டால் அதுபற்றிய விவரங்களை, விளக்கங்களை நட
வடிக்கைகளை எடுத்துச் சொல்லலாம்.



திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலில்
ஆங்காங்கே இந்த வறட்சி நிலைமைகளை அதிகாரிகள் பார்த்து
கணக்கு எழுதி அந்த அடிப்படையில் தான் அதற்கு நிவாரணம்
என்று சொன்னார்கள். ஆனால் இப்போது மழை பொழிவது,
இந்த கோட்டையில் மழை பொழிந்தால் நமது ஆஸ்டலில் மழை
பொழிவது இல்லை. அதாவது ஒரு கிராமத்தில் மழை பொழிந்
தால் அடுத்த கிராமத்தில் மழை பொழிவது இல்லை. இப்படிப்
பட்ட நிலைமையில் எதை வைத்து கணக்கு எடுப்பது. 40 சத
விதம் விளைச்சல் என்று குறியீடு வைத்து இருக்கிறார்கள்.
மிகவும் பின்தங்கிய பகுதியில் அதாவது தோப்பம்பட்டி பிளாக்கு
போன்ற இடங்களில் தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் மிகவும்
கஷ்டப்படுகிறார்கள். இவர்களிடம் மிகவும் கடுமையான முறை
யில் கெடுபிடியோடு வரி வசூல் செய்யப்படுகிறது. ஜப்தி
செய்யப்படுகிறது. இதையெல்லாம் போக்க மறுபரிசீலனை
செய்து உடனடியாக இந்த வசூலை நிறுத்தி மக்களுக்கு பாது
காப்பு அளிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா
என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்
கள் கூறுவது போன்று மழை ஒரேயடியாக பொழிவதும் இல்லை
பரவலாக ஒரே சீராக பொழிவதும் இல்லை. அந்தக் கணக்கின்
அடிப்படையில் தான் சில பகுதிகளில் பொழிந்து வளம் ஆகிறது.
சில பகுதிகளில் வறட்சி ஏற்படுகிறது. சில சமயங்களில் சில பல
மாவட்டங்கள் பாதிக்கப்படும். சில சமயங்களில் சில பல
தாலுக்காக்கள் தான் பாதிக்கப்படும். அந்த கணக்கின் அடிப்
படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு ஏற்கனவே
வழிமுறை வழிமுறையாக சில நார்ம்ஸ் வைத்து இருக்கிறார்கள்.
அந்த நார்ம்ஸ்ன் படி நடவடிக்கை எடுக்கலாம் என்று சொல்லி
யிருக்கிறோம். அவற்றையும் மீறி சிலபல சூழ்நிலைகள் ஏற்படு
மானால் அரசுக்கு அதை எழுதி அனுப்பி அரசினுடைய ஆணை
பெற்று நடவடிக்கை எடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறோம்.
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று மதுரை
மாவட்டத்தினுடைய சூழ்நிலைகள் என்ன என்பது பற்றி இப்
போது என்னிடத்தில் விளக்கக் குறிப்புகள் இல்லை. ஆனால்
அது பற்றி நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று மாவட்ட
ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கி
றார்கள். அரசு மட்டத்தில் ஏதாவது நடவடிக்கை எடுக்க
வேண்டிய அவசியம் இருக்குமானால் அதை அரசு கவனிக்கும்
என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பி. ஆர். எஸ். கோல்ட் கோழி இனம்

116—(*வினா எண். 242) திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பி. ஆர். எஸ். கோல்ட் என்ற கோழி இனத்தை அறிமுகப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

ஒன்றியங்களில் கிராம தொழிலாளர்கள் நல அமைப்பாளர்கள்

117—(*வினா எண். 519) திரு க. சோலைராசு : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதிதாக அறிமுகப்படுத்தப்பெறும் '' கிராம தொழிலாளர் நல அமைப்பாளர் '' பதவிகள் எல்லா ஒன்றியங்களிலும் நியமிக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; இது மைய அரசு ஏற்படுத்தியுள்ள திட்டம். 1984-85-ல் இம் மாநிலத்தின் 71 வட்டாரங்களில் ஊரக அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர். 1985-86-ல் ஊரக அமைப்பாளர்களை நியமிப்பதற்காக மேலும் 100 வட்டாரங்களை தமிழகத்துக்கு ஒதுக்குமாறு மைய அரசிடம் கோரப்பட்டுள்ளது. மைய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

(முற்பகல் 9–20)

திரு. க. சோலைராசு : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அமைக்கப்பட இருக்கிற இந்த நல அமைப்பாளர்களுக்கு என்ன என்ன பணிகள் என்று வரையறுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, இன்றைக்கு அமைக்கப்பட இருக்கிற இந்த ஊரக அமைப்பாளர்களுக்கு நம்முடைய கிராமப்புறங்களில் இருக்கிற தொழிலாளர்களுக்கு, குடிமகன் என்ற முறையில் அவர்களுக்கு இருக்கிற உரிமைகள், கடமைகள் ஆகியவற்றில் பயிற்சி அளித்தல், தொழிற் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு போன்றவற்றை உருவாக்குவதற்கு அவர்களுக்கு உற்சாகம் அளித்தல் அவர்களுக்குத் தொழிலாளர் நலன், சமூக நலன், குடிவார நலன் ஆகியவற்றைப் பொறுத்த சட்டங்களைப் பற்றி அறிவு புகட்டல் ஆகிய பணிகள் தரப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். ரெங்கசாமி : தலைவர் அவர்களே, இந்த விஷயம் தொழிலாளர் சம்பந்தப்பட்ட விஷயமாக இருப்பதால் இந்த கிராம தொழிலாளர் நல அமைப்பாளர்கள் பதவிகள் ஏற்படுத்தும்போது தொழிற் சங்கம் அமைக்கும் ஏற்பாட்டைச் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, மைய அரசு இந்தத் திட்டத்தை எதற்காகக் கொண்டு வந்திருக்கிறது என்றால் கிராமப்புறங்களில் இருக்கிற மக்களுக்கு அண்மையில் மாநில அரசும் மைய அரசும் பல முற்போக்கான சட்டங்களைக் கொண்டுவந்திருக்கின்றன. அவைகளை உணர்ந்துகொள்கிற முறையிலே அவர்களுக்கு ஊக்கத்தை, எழுச்சியை, விழிப்புணர்ச்சியை உருவாக்குகின்ற பணிதான் முதற்பணியாக இருக்கும்.

திரு. இ. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராம தொழிலாளர் நல அமைப்பாளர்கள் எந்த அடிப்படையில் அமைக்கப்படுகிறார்ககள் ? ஒன்றியங்களில் அவர்கள் செயல்படுகிறபோது ஆணையர்களின் கீழ் செயல்படுவார்களா அல்லது தனியாகச் செயல்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் இரண்டு கேள்விகளுக்கு விடையளித்ததைப்போன்று கிராமப்புறங்களிலே உள்ள மக்களுக்கு நடைமுறையில் இருக்கிற சட்டங்களில் உள்ள அவர்களுடைய உரிமைகள்பற்றி அவர்கள் தெரித்து கொள்வதற்கான உணர்வுகளை ஊட்டுகின்ற முயற்சிதான் இது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### பழைய சீவரத்தில் பெரிய பால்பண்ணை

*118—(*வினா எண் 675)* திரு. க. நரசிம்மபல்லவன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெர்மன் நாட்டு உதவியுடன் பழையசீவரம் அருகில் பெரிய பால்பண்ணை திட்டம் நிறுவ அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இல்லை.

திரு. க. நரசிம்ம பல்லவன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே அந்தப் பகுதியிலே ஜெர்மன் நாட்டு உதவியோடு பால் பண்ணை அமைக்கும் திட்டத்தின் அடிப்படையில் சர்வே செய்யப்பட்டதாக அறிகிறேன். அமைச்சர் அவர்கள் இல்லை என்று குறிப்பிட்டார்கள். மாற்றுவழி மூலமாகவாவது அந்த இடத்திலே ஒரு பால் பண்ணைத் திட்டத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பக்கத்திலே பாலாறு போவதால் ஆற்றுப் படுகையிலே தண்ணீர் அதிகமாக இருக்கிறது. ஆகவே அதை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னது போல் அவர்களது தொகுதியைச் சேர்ந்த வாலாஜா வட்டத்தில் தனியார்கள் ஒரு முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள். போவேட் இந்தியா லிமிடெட் என்ற நிறுவனம் போவேட் என்ற பிரஞ்சு நாட்டு நிறுவனத்துடன் கூட்டுச் சேர்ந்து 40 கோடி ரூபாய் செலவிலே தமிழ்நாட்டிலே அதி நவீன பால் பண்ணை திட்டம் அமைக்கின்ற முயற்சியை போவேட் இந்தியா லிமி-டட்டின் ஏ. எஸ். பிந்தராகாலித் பிரதர்ஸ் என்ற சென்னையைச் சேர்ந்த நிறுவன தொழிலதிபர் திரு. அப்துல்காதர் ஆகியவர்கள் அந்த முயற்சியிலே ஈடுபடுகிறார்கள். அரசோடு அதைப்பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மேல் நாட்டிலிருந்து 40 கோடி ரூபாய்த் திட்டத்திலிருந்து 3 ஆயிரம் பர்ஷியன் பசுக்களை இறக்குமதி செய்து பால் உற்பத்தியை விரிவாக்கும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அது முயற்சி அளவிலே தான் இருக்கிறது. இது குறித்து அவர்கள் தமிழக அரசோடு கலந்தாலோசித்துக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே அதிகப்படியாக நாளொன்றுக்கு 8,800 லிட்டர் பால் உற்பத்தியாகிறது. அங்கிருந்து மதுரை மாவட்டத்



திற்கு அதைக் கொண்டுவந்து விற்பனை செய்கிறார்கள். மதுரை மாவட்டத்திலே கொடுக்கிற விலையானது கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள கூட்டுறவுச் சங்கங்களிலே வாங்குகிற விலையைவிடக் குறைவாக இருக்கிறது. அதோடு பாலை ஒழுங்காகக் கொண்டுவந்து சிறப்பாகச் சேர்ப்பதற்குரிய வாகன வசதிகளும் இல்லாமல் இருக்கிறது. ஆகவே கன்னியாகுமரி மாவட்டத்திலே மில்க் பவுடர் நிறுவனம் ஒன்றை ஆரம்பிக்க அரசிடம் திட்டம் உண்டா ? அப்படியானால் எப்பொழுது செயல்படுத்துவார்கள் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, அதுபற்றி என்னிடம் இப்போது தகவல் இல்லை. தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

### புதிய இரசாயன ஆலைகள் அமைத்தல்

*119—(*வினா எண் 31)* திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதிய ரசாயன ஆலைகளை பெருநகருக்கு அருகில் அமைக்காமல் ஒதுக்குப்புறமான இடங்களில் அமைக்க அரசு திட்டமிட்டு உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஆம் ; புதிய இரசாயன ஆலைகளை பெருநகருக்கு வெகு தொலைவில் அமைக்க திட்டமிட்டு உள்ளது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : தலைவர் அவர்களே, புதிய இரசாயன ஆலைகள் பெருநகருக்கு அருகே வைக்காமல் வெகு தூரத்தில் வைக்கப்பட இருக்கின்றன என்ற மகிழ்ச்சியான செய்தியை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இது எந்த அடிப்படையில் எவ்வளவு தூரத்தில் அமைக்கப்படும் ? அதேபோன்று நதிகள் இரசாயனத் தொழிற்சாலைகளினால் பாதிக்கப்படுகின்றன என்ற ஒரு கருத்தும் இப்போது வலியுறுத்தப்பட்டுவருவதால் அதற்காக இந்த அரசு என்ன நடவடிக்கைகளை எடுக்க இருக்கின்றது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, பெரு நகரங்கள் விஷவாயு போன்றவைகளால் பாதிக்கப்படாத நிலைமையில், நச்சு நீரினால் பாதிக்கப்படாத நிலைமையில்

பெரு நகரங்களுக்கு வெளியே அமைக்கப்படுகின்றன. உதாரணமாக சென்னையிலிருந்து தூரத்தில் இருக்கிற மணலியில் இரசாயனத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. ந. சிவஞானம் : தலைவர் அவர்களே, இதுபோன்ற தொழிற்சாலைகளை பின்தங்கிய மாவட்டங்களில் ஆரம்பிப்பதற்கு அரசுக்கு உத்தேசமுண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பது என்ன சூழ்நிலையில் செய்கிறார்கள் என்பதைப் பொறுத்ததே தவிர பெட்ரோலியப் பொருள்களை மணலியில் ஆரம்பித்தால் அதையொட்டிய உப பொருள்கள் வர ஏதுவாகயிருக்கும். எந்தத் தொழிலை ஆரம்பிக்கிறோம் என்பதையொட்டியே பின்தங்கிய மாவட்டமா அல்லது முன்னேறிய மாவட்டமா என்ற பிரச்னையே வருகிறது. பின்தங்கிய பகுதிகளில் ஏற்கனவே இரசாயனத் தொழிற்சாலைகள் இருக்கின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, புதிதாக ஆரம்பிக்கப்படுகிற தொழில்களை நகரப்புறங்களில் அல்லது நகர்ப்புறங்களுக்கு அருகில் அமைக்காமல் தொலை தூரத்தில் கிராமப்புறப் பகுதிகளில், பிற்படுத்தப்பட்ட பகுதிகளில் ஆரம்பிக்க வணிக வரிச் சலுகைகள், மின்சாரச் சலுகைகள் இவற்றை இன்னும் சிறிது அதிகப்படுத்திக் கொடுத்தால் தொழில்கள் பரவலாக அமையவும், நகரங்களில் உள்ள நெரிசலைக் குறைக்கவும் ஏதுவாகயிருக்கும். அது மாதிரியான சிறப்புத் திட்டங்கள் இப்போது பரிசீலனையில் இல்லை என்றாலும் இனிமேலாவது அவ்விதம் அமல்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, புதிதாகத் தொழில் தொடங்குபவர்களுக்கு பல்வேறு சலுகைகள் அளிக்கப்படுகின்றன என்பதை எல்லோரும் அறிவார்கள். ஆகவே கிராமப் புறங்களில் எங்கெங்கே நீர் வசதியிருக்கிறதோ, மின்சார வசதியிருக்கிறதோ அவற்றையெல்லாம் பொறுத்து இப்படிப்பட்ட இரசாயனத் தொழிற்சாலைகளை கிராமப் புறங்களில் அமைக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இரசாயன ஆலைகளை கிராமப்புறங்களில் அமைப்பதாகச் சொன்னதற்கு நன்றி. ஆனால் சமீபத்தில் இந்தியா முழுவதிலும் விஷவாயு கசிவு ஏற்படுகிற காரணத்தினால் மக்களுக்கு தொல்லை ஏற்படுகிற ஆபத்து ஏற்படுகிறது என்றதொரு நிலையை உணர்ந்து நகரத்தையொட்டியோ அல்லது கிராமப்புறங்களை



யொட்டியோ ஆரம்பிக்கப்பட்டாலும் இரசாயன ஆலைகள் 'ஃபூல் ப்ரூபாக' நல்ல பாதுகாப்பான முறையில் அமைய வேண்டும் என்ற முறையில் வலியுறுத்த சட்டத்தில் இடமில்லை என்றால் அதைத் திருத்தி கட்டாயமாக்குவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, தொழிற்சாலைகள் அமையும் இடம் பற்றிய கொள்கையைப் பொறுத்து மத்திய அரசு வகுத்துள்ள அந்தக் கொள்கையை வலியுறுத்திவருகிறார்கள். அவர்கள் வழியில்தான் இப்போது புதிதாக அமைக்கப்படுகிற இரசாயனத் தொழிற்சாலைகளுக்கு உரிமங்கள் வழங்கப்படுகின்றன.

திரு. சா. துரைசாமி : தலைவர் அவர்களே, புதிதாக அமைக்க இருக்கிற தொழிற்சாலைகள் கிராமப்புறங்கள், பொது மக்கள் வசிக்கிற பகுதிகள் ஆக இல்லாமல் அமைப்பதாகச் சொன்னார்கள். ஏற்கனவே பொது மக்கள் வசிக்கிற பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கின்ற தொழிற்சாலைகளின் இரசாயனத்தால் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்பட்டு பொது மக்களுக்கு பல்வேறு வியாதிகள் வந்துகொண்டிருக்கிற ஒரு சூழ்நிலையில் பணியாற்றிக்கொண்டிருக்கிற அந்தத் தொழிற்சாலைகளை வேறு இடங்களுக்கு மாற்றுகிற திட்டம் ஏதேனும் உண்டா ? அப்படி இல்லை என்றால் அந்தத் தொழிற்சாலை களுக்கான உரிமத்தை ரத்து செய்து புதிதாகத் தொழில் தொடங்க அனுமதிக்கிற திட்டம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தனிக் கேள்வி போடவும்.

### ஜெயங்கொண்டம் பகுதியில் காகிதத் தொழிற்சாலை.

120—(*வினா எண் 404) டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் பகுதியில் அதிக அளவில் பயிரிடப்படும் (Eucalintus) மரங்களை பயன்படுத்தும் வகையில் அங்கு ஒரு காகிதத் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

டாக்டர் ந. மாசிலாமணி : தலைவர் அவர்களே, இந்தப் பதிலுக்காக எனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது சம்பிரதாயமாகக் கேட்கப்பட்ட கேள்வி அல்ல.

பதிலும் சம்பிரதாயமாக இருந்துவிடக் கூடாது. எங்கெங்கே என்னென்ன மூலப் பொருள்கள் கிடைக்கின்றனவோ அங்கங்கே அதனையொட்டிய தொழிற்சாலைகள் அமைக்கப்பட வேண்டும் என்ற பண்டிட் நேரு அவர்களின் சிந்தனையின் அடிப்படையில் கேட்கப்பட்ட கேள்வி இது. திருச்சிராப்பள்ளி மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டமாகும். திருச்சிராப்பள்ளி என்று சொன்னவுடனே பொன்மலையும் திருவெறும்பூரும் என்று மட்டும் பார்த்துவிடக் கூடாது. ஜெயங்கொண்டம் இருக்கிறது, ஆண்டிமடம் இருக்கிறது, அரியலூர் இருக்கிறது, பெரம்பலூர் இருக்கிறது. வரகூர் இருக்கிறது துறையூர் இருக்கிறது. இவைகள் எல்லாம் மிகவும் பின்தங்கிய பகுதிகளாகும். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரசாங்கத்திற்குச் சொந்தமான வனத்துறையைச் சார்ந்த நிலங்களிலும் தனியாருக்குச் சொந்தமான நிலங்களிலும் யூகலிப்டஸ் என்று சொல்லப்படுகிற நீலகிரி தைல மரங்கள் கிட்டத்தட்ட 40,000 ஏக்கராக்களிலும், காஷூரீனா என்று சொல்லப்படுகிற சவுக்கு 25,000 ஏக்கராக்களிலும் மூங்கில் 5,000 ஏக்கராக்களிலும் பயிரிடப்படுகின்றன. இவையெல்லாம் காகிதத்தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு வேண்டிய மூலப்பொருள்கள். எனவே, அந்த இடத்திலே காகிதத் தொழிற்சாலையைக் கொண்டுவந்தால், அரசுக்கும் பயனுள்ளதாக இருக்கும்; மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும். எனவே, மூலக் கேள்விக்கான பதிலை அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளியில் புகளூர் இருக்கிறது. புகளூரில் ஒரு பெரிய காகிதத் தொழிற்சாலை ரூ. 230 கோடிசெலவில் உருவாக்கப்பட்டு, தற்போது அது அங்கே இயங்கிக் கொண்டிருக்கிறது 1985 பிப்ரவரி மாதம் வரையில், 10,000 டன் மூலப் பொருட்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு புகளூரில் செய்தித்தாள்கள் தயாரிக்கப்பட்டு, நாட்டுக்கு அளித்துக் கொண்டிருக்கிறது. ஜெயங்கொண்டம் பக்கத்தில் புகளூர் இருப்பதால் போய்ப்பார்க்கலாம். அதோடு, இருக்கின்ற மரங்களை வெட்டக் கூடாது என்பது மைய மாநில அரசுகளின் எண்ணமும், ஆணையுமாகும். இப்போது போதிய மரங்களும் கிடையாது. ஜெயங்கொண்டத்தில் 40,000 ஏக்கர்களில் மரங்கள் வளர்க்கப்பட்ட பின்பு, அங்கே புதிய காகித தொழிற்சாலை ஆரம்பிப்பது பற்றி ஆலோசிக்கலாம்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டத்தில் காகித தொழிற்சாலை வேண்டுமென்று கேட்பது போல் தஞ்சை மாவட்டத்தில்



கரும்புப் பண்ணைக் கழகத்தில் 4,000 ஏக்கர்களில் வைக்கோல் கிடைக்கிறது. இலட்சக்கணக்கான விவசாயிகளிடமிருந்து கிடைக்கும் வைக்கோலை வைத்தும், வடபாதிமங்கலத்தில் கரும்பு சக்கைகள் கிடைப்பதை வைத்தும், தஞ்சை மாவட்டத்தில் ஒரு காகிதத் தொழிற்சாலையை அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது புகளூரில் ஆரம்பிக்கப்பட்ட காகித ஆலை கரும்புச் சக்கையிலிருந்துதான் காகிதம் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டு, செயல்பட்டுக் கொண்டு வருகிறது. ஆகவே அது வெற்றிகரமாக நடைபெற்றதற்குப் பிறகு, மற்றொரு ஆலை கொண்டு வருவது பற்றி அரசு ஆலோசிக்கும்.

திரு கே. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் கிடைக்கின்ற மூங்கில்கள் அல்லது மரங்கள் ஆகியவற்றை வைத்துக் கொண்டு காகிதத் தொழிற்சாலை நிறுவ போதவில்லை என்ற நிலையில், காகிதத் தொழிற்சாலை போன்ற பெரிய தொழில்களில் மூலதனம் போடுவதில்லை என்ற முடிவுக்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அவ்வாறு மூலதனம் போடுதவற்கு அரசுக்கு உத்தேசம் இல்லை.

திரு மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே அதிகமாக ரப்பர் கிடைக்கும் மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம். ரப்பர் அதிகமாக கிடைக்கும் இந்த மாவட்டத்தில் ரப்பர் தொழிற்சாலை தொடங்குவதற்கு அரசுக்கு எண்ணம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

துவக்கப்பள்ளி கட்டிடங்கள்

121—(வினா எண் 172) திரு. செ. செம்மலை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழுதடைந்துள்ள நிலையில் உள்ள துவக்கப்பள்ளிக் கட்டிடங்களை பழுதுபார்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விரைவில் அந்தப் பணி மேற்கொள்ளப் படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) அந்தப் பணியை விரைவாக மேற்கொள்ளத்தக்க
நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. செ செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தப் பணி கல்வித் துறை மூலம் மேற்கொள்ளப்பட
இருக்கிறதா அல்லது ஊராட்சி ஒன்றிய பள்ளிக் கட்டிடங்கள்
இப்போது ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் இருப்பதால்
உள்ளாட்சித் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட இருக்கிறதா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர்
அவர்களே, அரசு நிதியிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகை
ஒதுக்கப்பட்டு, பள்ளிக்கூட கட்டிடங்களில் பழுது இருந்தால்
அது பழுது பார்க்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு 90,000
ரூபாய் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இந்த விவரம் தான் இதிலே
குறிப்பிடப்பட்டிருக்கிறது. கல்வித் துறையே இந்தக் காரியங்களை
நேரடியாகச் செய்வதில்லை.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தன்னு டைய பதி
லில் 90,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்கள்.
தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளின் எண்ணிக்கையைப் பார்க்
கின்றபொழுது இந்த 90,000 ரூபாய் என்பது மிகமிகக்
குறைவான தொகையாகும். எனவே, அந்தத் தொகையை
அதிகப்படுத்தி, கூடுமானவரையில் எல்லாப் பள்ளிகளுக்கும்,
வானமே கூரையாக இருக்கின்ற நிலைமைகளை மாற்றி
யமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் , மாண்புமிகு தலை
வர் அவர்களே, போதுமானது அல்ல என்பதை நான் ஒத்துக்
கொள்கிறேன். அதிகப்படுத்த முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு தலைவரவர்களே,
எங்கள் காமராஜர் மாவட்டத்திலே உள்ள பள்ளிக்கூடங்கள்
அனைத்தும், ஏறத்தாழ 90 சதவீத பள்ளிக்கூடங்கள் பரா
மரிப்பு செய்ய வேண்டிய நிலையில் உள்ளன. குறிப்பாக
விருதுநகர் தொகுதியில் உள்ள ஆமத்தூர் என்ற இடத்தில்,
உள்ள பள்ளிக்கூடத்தில், சென்ற சட்டமன்றத் தேர்தல்



136397
சென்னை 600 008.

நடந்த பொழுது. இரண்டு தினங்களுக்கு முன்பு
களை மாற்றி வாக்குச் சாவடிகளை அமைத்தார்கள்.
அந்த கட்டிடம் இடிகின்ற தறுவாயில் உள்ளது. கல்விக்
கண் கொடுத்த காமராஜர் பிறந்த மாவட்டத்தை முதலாவ
தாக வைத்துக்கொண்டு அந்தப் பராமரிப்பு வேலைகளைச்
செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலை
வர் அவர்களே, பழுதான பள்ளிக்கூடங்களைப் பார்த்து வரிசைப்
படுத்தி இந்தப் பணத்தை அவர்கள் செலவு செய்வதற்கு
முயற்சிப்பார்கள். மேற்கொண்டும் ஏதாவது தொகை
ஒதுக்க முடியுமா என்பதைத் பொறுத்து அரசு பரிசீலிக்கும்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மிகவும் மோசமான நிலைமையில் உள்ள ஊராட்சி
ஒன்றிய பள்ளிக்கூடக் கட்டிடங்களை உடனடியாகப் பழுது
பார்க்க வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே,
ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து பழுது பார்ப்பதற்கு
கல்வித் துறை உள்ளாட்சித் துறையின் உதவியை உடனடியாக
நாடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலை
வர் அவர்களே, அதைப்பற்றிப் பேசிப் பார்க்கின்றோம்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, ஆரம்பப் பள்ளிக்கூடக் கட்டிடங்களைப் பழுது
பார்ப்பதற்காக ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்தும், கல்வி
நிதியிலிருந்தும் செலவு செய்யப்படுவதாக அறிகிறேன்.
அதைப்போல, உயர்நிலைப் பள்ளிக்கூட கட்டிடங்களும்
பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. பொது மராமத்து
இலாக்கா அந்தப் பணிகளை மேற்கொள்கிறது. அதை
அவர்கள் மேற்கொள்ளுகின்றபொழுது போதுமான நிதி
வசதி இல்லை என்று சொல்கிறார்கள். அதற்கு அரசாங்
கம் போதுமான நிதியை வழங்க வேண்டும். தர்மபுரி
மாவட்டத்தில், குறிப்பாக என்னுடைய மொரப்பூர் தொகுதி
யில் பல பள்ளிக்கூடங்கள் கூரைக் கட்டிடங்களாக இயங்கிக்
கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட கட்டிடங்களைப் பழுது
பார்ப்பதற்கும், புதிய கட்டிடங்களைக் கட்டுவதற்கும் கல்வி
மானியத்திலே குறைவாக நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாக அறிகி
றேன். ஆகவே, தர்மபுரி மாவட்டம் போன்ற பிற்பட்ட பகுதி
களில் குறிப்பாக என் தொகுதியில் உயர்நிலைப் பள்ளி ஏற்
பட்டு பத்தாண்டுகள் ஆகியும்கூட பலயிடங்களில் கட்டிடங்கள்
இல்லாமல் இயங்கிக்கொண்டு இருக்கின்றன. அந்தப் பள்ளிக்
கூடங்களுக்கு கட்டிடங்களைக் கட்டிக்கொடுப்பதற்கு அரசாங்கம்
நிதி ஒதுக்கீடு செய்து நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளுக்குப் புதிய கட்டிடங்கள் கட்டுவது பற்றியும், இருக்கின்ற கட்டிடங்களைப் பழுது பார்ப்பது பற்றியும் அரசு பரிசீலனை செய்யும்.

திரு. கு. பாலாஜி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் புதிய பள்ளிக்கூடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டன. சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டில் அதிக நிதி ஒதுக்கீட்டை மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லப்படுவதால் இந்தப் பள்ளிக்கூடங்களைப் பழுது பார்க்கின்ற பணியை தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் செயல்படுத்துவதற்கு அரசு முன்வருமா ஏன்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்தத் துறையே இதைப்பற்றிக் கவனிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்திலே உள்ள பல துவக்கப்பள்ளிகளுக்கு சென்ற இரண்டு வருஷ காலமாக ஓலை வேயாமல் இருப்பதன் காரணமாக, மிகவும் பழுதடைந்திருப்பதால் இப்படிப்பட்ட ஓலைக் கட்டிடங்களை ஐந்து வருஷ காலத்திற்குள்ளோ அல்லது ஆறு வருஷ காலத்திற்குள்ளோ மாற்றியமைப்பதற்கு பேஸ்டு ப்ரோகிராம் ஒன்றைத் தீட்டி, அவைகளை ஆஸ்பெஸ்டாஸ் கூரைகள் கொண்டதாகவோ அல்லது மற்ற கூரைகள் கொண்டதாகவோ மாற்றியமைப்பதற்கான ஒரு திட்டத்தை வகுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மூன்றாண்டுத் திட்டத்தை நாம் தீட்டி கட்டிடமே இல்லாத இடங்களில் ஒரு நிரந்தரக் கட்டிடம் அல்லது அனைத்துப் பள்ளிக்கூடங்களுக்கும் நிரந்தரக் கட்டிடம் என்ற ஒரு தீவிரத் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். அதற்குமேல் தேவையிருக்கிறது என்பதை நாங்கள் ஏற்றுக்கொண்டுதான் இப்பொழுது அதற்கான வழிமுறைகளைப் பற்றி பரிசீலித்து வருகிறோம். பள்ளிக்கூடங்களுக்குக் கட்டிடங்கள் கட்டுவது என்பது இப்பொழுது தீவிரமான பரிசீலனையில் மத்திய—மாநில அரசுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கின்றன. கல்வித்தரம் உயர்வதற்கு இப்படிப்பட்ட கட்டிடங்கள் கட்டுவது என்பது முக்கியமானதாகக் கருதப்படுகிறது.





திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் உள்ள துவக்கப்பள்ளிக் கட்டிடங்களையெல்லாம் இரவு நேரங்களில் அந்தப் பகுதியில் உள்ள கிராமப்புற மக்கள் ஊர்ச்சாவடிகளாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். எப்பொழுதும் அந்தப் பள்ளிக்கூடங்களின் கதவுகள் திறந்தவண்ணமே இருக்கின்றன. கதவுகளை அவர்களே உடைத்துக்கொண்டுபோய் உள்ளே சென்று படுக்கிறார்கள். இதைத் தடுத்து நிறுத்துவதற்கு பியூன் அல்லது காவலர்களை நியமிப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—40)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் இருக்கிற பள்ளிக்[illegible]கள் அங்கே இருக்கிற மக்களுக்கு தங்களுடைய கு[illegible]கள் படிக்கிற பள்ளிக்கூடம் என்ற நினைவு வருகிற வ[illegible]ம், உணர்வு வருகிற வரைக்கும் நாம் எத்தனை கா[illegible]கள் போட்டாலும் கடைசியில் காவலர்களும் ஒத்துப் போ[illegible]ன்ற நிலைமைதான் வருமே தவிர, காவல் காக்கும் நிலைமைகள் நிச்சயமாக வராது. ஆகவே, மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வேண்டும். அதை ஏற்படுத்துகின்ற பணியை இப்படிப்பட்ட உறுப்பினர்கள் செய்தால் கொஞ்சம் நன்றாக இருக்கும். நம்முடைய குழந்தைகள் படிக்கின்ற பள்ளிக்கூடமாக இருந்தாலும், நம்முடைய பிள்ளைகள் சாப்பிடுகின்ற இடமாக இருந்தாலும் அது எல்லோருக்கும் பொதுவானது என்கின்ற உணர்வு சமுதாயத்தில் இல்லையென்றால், அந்தச் சமுதாயம் ஒரு முன்னேறுகின்ற சமுதாயமாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. நாம் சமுதாய முன்னேற்றத்திற்காகப் பாடுபடுகின்ற நிலையில் குறைந்தது அரசால் தரப்படுகிற இத்தகைய சொத்துக்களையாவது பாதுகாக்கின்ற குறைந்தபட்ச சமுதாய விழிப்புணர்ச்சி ஏற்படுத்தியாக வேண்டும். எத்தனை காவலர்களைப் போட்டாலும் அது சாத்தியப்படாது. எங்களுக்கு வருகின்ற பல்வேறு புகார்கள் காவலர்களே இவர்களோடு சேர்ந்துகொள்கிறார்கள் என்பதுதான்.

திரு. ம. ஆபிரகாம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது கல்வி ஆண்டு துவங்கிவிட்டது பள்ளிகளில் சேருகின்ற ஏழை, எளிய பிள்ளைகள் கட்டிட நிதி தர முடியாமல், பள்ளியினுடைய படிக்கட்டைக்கூட மிதிக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. அதிலும் நம்முடைய தமிழக முதல்வருடைய சத்துணவைச் சாப்பிடுகின்ற ஏழைப்பிள்ளைகள் உயர்நிலைப் பள்ளிகளுடைய படிக்கட்டுகளில் ஏறமுடியாத, அந்தப் பக்கத்திலே வர முடியாத சூழ்நிலை இருக்கிறது. கட்டிடங்கள் இல்லாத காரணத்தால் தான் கட்டிட நிதி வசூல் செய்கிறார்கள்

அதை அரசுக்கு தெரிந்துதான் வசூல் செய்கிறார்களா? அப்படி இல்லையானால் மாண்புமிகு கல்வி அமைச்சர் அதைத் தடுத்து நிறுத்த ஆணையிடுவாரா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கட்டிட நிதி வசூலிக்கச் சொல்லி நாம் யாருக்கும் அனுமதி தரவில்லை. அதுவும் குறிப்பாக நன்கொடை வசூலிப்பது என்பது மாணவர்கள் சேருகின்ற அந்தப் பருவத்திலே இருக்கக்கூடாது. அதற்குப் பின்னாலே டிசம்பர் மாதம், ஜனவரி மாதம் வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஒரு வழிகாட்டுதலை நாம் அவர்களுக்குத் தந்திருக்கிறோம். குறிப்பாக, குறிப்பிட்ட பள்ளிகளிலே சேர்க்க வேண்டுமென்று வருகின்ற பொழுதுதான் இத்தகைய பிரச்சினைகளே உருவாகின்றன. அரசுப் பள்ளிகள், கார்ப்பரேஷன் பள்ளிகள் எல்லாம் இருக்கின்றன. அங்கே எல்லாம் மாணவர்களைத் தாராளமாகச் சேர்த்துக் கொள்வார்கள்.

அது மட்டுமல்ல, குறிப்பிட்ட இந்த பள்ளிகளிலே பணம் கேட்கின்றார்கள் என்ற நிலைமையை நம் கவனத்திற்கு கொண்டு வந்தால், நாம் விசாரிப்பதற்கும் அந்தப் புகார்களைச் சொன்னவர்கள் சாட்சி சொல்வதற்கும் வழி ஏற்பட நாம் ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியும். புகார்கள் பொதுவாக சொல்லப்படுகின்றனவே தவிர, நாங்கள் விசாரிக்கச் செல்கின்ற நேரத்தில் யாரும் இவ்வளவு தான் கேட்டார்கள், இவ்வளவு ரூபாய் கேட்டார்கள் என்னிடத்திலே கேட்டார்கள் என்று சொல்வதில்லை அதனால்தான் இந்தப் பிரச்சனை நம்மையும் மீறியிருப்பதாக நாங்கள் கருதுகிறோம். குறிப்பிட்ட ஒரு சம்பவத்தை வைத்து எங்களுக்குப் புகார் செய்தால் நாம் அதன் மீது நடவடிக்கை எடுக்க முயற்சி எடுக்கலாம். இல்லையென்றால் அதற்கு வேறு பரிகாரங்களை நாம் காணலாம்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் பொறுப்பேற்றதற்குப் பிறகு தான் கிராமப்புறங்களிலே இருக்கிற பள்ளிகளுக்கு எல்லாம் நிரந்தரக் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் ஏற்கனவே இருக்கிற பள்ளிக் கூடங்கள் பழுதடைந்து இருக்கின்றன. அத்தகைய பள்ளிக் கூடங்களைச் சீர்படுத்துகின்ற பணி ஊராட்சி ஒன்றியங்களிடமும் இல்லாமல், கல்வித் துறையிடமும் இல்லாமல், அவர்கள் சென்று கேட்கின்ற நேரத்திலே புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டவுடன் நாங்கள் கல்வித் துறையிடம்



ஒப்படைத்து விட்டோம். என்று சொல்கிறார்கள் ஆகவே அந்தக் கட்டிடங்களைச் செப்பனிடுகின்ற பணி கல்வித் துறையிடமோ அல்லது ஊராட்சி ஒன்றியங்களிடமோ ஒப்படைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அது குறித்து அரசு பரிசீலனை செய்து தக்க முடிவு எடுக்கும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, மிடில் ஸ்கூல்களை உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றுகின்றபொழுது அது அரசுப் பள்ளியாக இருந்தாலும் சரி, தனியார் பள்ளியாக இருந்தாலும் சரி, தங்களுடைய வளர்ச்சிக்கென்று, இம்ப்ரூவ்மெண்டுக்கென்று ரூ. 12,000 வசூலித்து அந்தப் பணத்தைப் பெற்ற பிறகு தான் புதிய கட்டிடங்கள் கட்டுவதோ, அல்லது விஞ்ஞானக் கூடங்கள் கட்டிக் கொடுப்பதோ, கிராண்டுகள் சாங்க்ஷன் ஆவதோ நடக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. கல்வியின் தரம் வளரவேண்டுமென்கின்ற எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிற அரசு இவ்வாறு பெற்று அந்தப் பணிகளைச் செய்கின்ற பள்ளிகள் அதனைப் பெறாமல் தடுத்து நிறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இது ஏற்கனவே நீண்ட நாட்களாக இருந்து வருகிற நடைமுறை. குறிப்பாக அந்தந்தப் பகுதி மக்களிடம் கல்வி மீது அக்கறை ஏற்படுத்துவதற்காக இந்தப் பணத்தை வாங்குகிறோம். அதை வாங்காமல் இருப்பதற்கான எண்ணம் ஏதும் இல்லை.

பள்ளிகளில் தொழிற் கல்வித் திட்டம்

122—(*வினா எண். 192)—திரு. மா. சின்னராசு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளிகளில் தொழில் கல்வித்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறதா ?

(ஆ) எத்தனைப் பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது ?

(இ) என்ன தொழில் பாடங்கள் நடத்தப்படுகின்றன ?

[1985 ஜூன் 5

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ), (ஆ), மற்றும்
(இ) : 969 மேல் நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12 வகுப்பு
களில் தொழிற் பாடங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.
அத்தகைய தொழிற் பாடங்களின் எண்ணிக்கை சுமார் 60
ஆகும்.

இவை போக வாழ்க்கைக் கல்விக்கான முதலமைச்சர் திட்
டத்தின் முன்னோடி நடவடிக்கையாக சுமார் 750 உயர்நிலை/
மேல் நிலை பள்ளிகளில் 8–10 வகுப்புகளில் அந்தந்த பள்ளிகளில்
உள்ள வசதிகளையும் பள்ளி மாணவர்கள் விருப்பத்தையும்
அனுசரித்து தொழிற் பாடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.
இவ்வாறு நடத்தப்பட்டு வரும் தொழிற்பாடங்களின் எண்ணிக்கை
130–க்கும் அதிகமாகும்.

திரு. மா. சின்னராசு : தலைவரவர்களே, படிக்கின்ற
மாணவர்களின் வாழ்க்கைக்கு உதவுகிற இந்தத் தொழிற் கல்வித்
திட்டத்தின் கீழ் தொழிற் கல்வி பயிற்சிப் பெறுகின்ற மாணவர்
கள் வேலை வாய்ப்பு பெறுகின்ற அளவுக்கு அவர்களுக்கு அளிக்கப்
படுகின்ற சான்றிதழில் இந்தப் பயிற்சியைப் பெற்றிருக்கிறார்,
ஆகையால் இந்த வேலைக்கு அவர் தகுதி பெற்றிருக்கிறார்
என்று ஐ.டி.ஐ. சான்றிதழ் போல் அவர்களுக்கும் பள்ளி இறுதி
தேர்வு பெற்று வருகிறபோது சான்றிதழ் வழங்கி, அவர்கள்
வேலை வாய்ப்பு பெறுகின்ற வகையில் அரசு வழி வகைச்
செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே,
அவையெல்லாம் இனிமேல்தான் பரிசீலிக்கப்பட வேண்டும்.

திரு. மா. சின்னராசு : தலைவரவர்களே, தொழிற்கல்வித்
திட்டத்தில் வகுக்கப்பட்டிருக்கிற பல பாடத் திட்டங்களை
பயிற்சியோடு அளிக்க பள்ளிகளில் போதிய பயிற்சி நிலையங்கள்
இல்லை. 'ஒர்க் ஷாப்' போன்ற பயிற்சிகளைச் சொல்லிக்
கொடுக்க ஆசிரியர்கள் இல்லை. இந்தக் குறைபாடுகளை
நீக்க தேவையான படிப்புக்கு ஏற்ற தொழிற் கூடங்களைத்
தேர்ந்தெடுத்து, அந்தந்த வட்டாரத்தில் இருக்கிற 2, 3 அல்லது
4 பள்ளிகளைச் சேர்த்து அங்கே பயிற்சி அளிக்க அரசு முன்
வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே,
இப்போதேகூட பக்கத்தில் இருக்கிற தொழிற்சாலைகளைப்
பயன்படுத்திக் கொள்ள பள்ளிகளுக்கு நாம் மிகுந்த அளவு சுதந்
திரத்தைத் தந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்
களுடைய யோசனையை அரசு பரிசீலிக்கும்.



1985 ஜூன் 5]

திரு. மு. இராமநாதன் : தலைவரவர்களே, மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் சில விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள்.
கோவை மாநகராட்சியின் நிர்வாகத்தில் இருக்கிற வானகரம்
மேல் நிலைப் பள்ளியில் நெசவுப் பிரிவு இருக்கிறது. செம்
பட்டியில் இருக்கிற பள்ளியில் தையல் பிரிவு இருக்கிறது. இன்
னொரு பள்ளியில் கார்பென்டரி செக்ஷன் இருக்கின்றன. நெசவுப்
பிரிவு இருக்கிற பள்ளியில் பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்
புள்ள சாதனங்கள் இருந்தும் 'வீவிங் மாஸ்டர்' இல்லாத கார
ணத்தால் அவை சரியான முறையில் பராமரிக்கப்படாமல்,
மாணவர்களுக்கும் பயன்படாமல் வீணாக இருக்கின்றன. நானே
நேரடியாகப் போய் பார்த்திருக்கிறேன். தையல் பிரிவு இருக்கிற
பள்ளியில் அதற்கு போதுமான அறை இல்லை. அதனால்
பயிற்சி அளிக்கின்ற மெஷின் மாணவர்களுக்குப் பயன்படவில்லை.
இப்படிப்பட்ட நிலைமைகள் மாற்றப்பட வேண்டும். எதிர்
காலத்திலே நம்முடைய சமுதாயத்திற்கு அவை முறையாகப்
பயன்பட வேண்டும். இந்த நிலைமைகளை அரசு கவனித்து
பெயரளவில் தொழிற் கல்வி என்று இல்லாமல் உண்மையான
தொழிற் கல்வி அளித்து, மாணவர்கள் பயன்பட தேவையான
நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே,
அங்கே இருக்கின்ற வசதிகளைப் பயன்படுத்தாமல் இருந்தால்
அங்கே இருக்கிற தலைமை ஆசிரியருடைய ஆர்வம் இல்லா
மையை அது காட்டுகிறது. அங்கே இருக்கிற தனி அதிகாரி
யிடத்திலே இதைச் சொன்னாலே அவர்கள் பார்த்துக் கொள்
வார்கள். நண்பர் இராமநாதன் அவர்கள் அந்த மாநகராட்சி
தனி அதிகாரியிடம் சொல்லி, அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

### ஜெயங்கொண்டம் தொகுதியில் தொழிற் கல்விக் கூடம்

123—(*வினா எண். 399)—டாக்டர் ந. மாசிலாமணி : மாண்பு
மிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் ஒரு தொழில் (poly technic)
கல்விக்கூடம் அமைக்கும் உத்தேசம் ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை

டாக்டர் ந. மாசிலாமணி : தலைவரவர்களே, இப்படி
தொகுதி வளர்ச்சிக்கு சம்பந்தப்பட்ட கேள்விகளைக் கேட்கும்
போது 'இல்லை' 'இல்லை,' என்று பதில் சொல்வது கேள்வி
கேட்கின்ற ஆசையையே விட்டுவிடச் செய்கிறது ; வாழ்க்கையே

வெறுத்துவிடுகிறது. ஆகவே இந்த அரசு இனிமேலாவது இல்லை
என்ற பதிலை இல்லாமல் ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். திருச்சி மாவட்டம் கல்வியின் தரத்தில் முதன்மை
பெற்று விளங்குகின்ற மாவட்டங்களில் ஒன்று. இந்த மாவட்டத்
தில் திருவரம்பூரில் ஒரு ஐ.டி.ஐ. இருக்கிறது.

(முற்பகல் 9-50)

அரியலூர் கல்வி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு
ஐ.டி.ஐ. இருக்கின்றது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைப்
பொறுத்தவரையில் பெண்களுக்கென்று தனிப்பட் ஐ.டி.ஐ.
கிடையாது. எனவே ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதிக்
கும் ஆண்டிமடம் சட்டமன்றத் தொகுதிக்கும் உட்பட்ட பகுதி
களில் தொடக்கப்பள்ளிகள் 325 இருக்கின்றன. உயர்நிலைப்
பள்ளிகள் 25 இருக்கின்றன. மேல்நிலைப்பள்ளிகள் 10 இருக்
கின்றன. ஆகமொத்தம் 360-க்கு மேற்பட்ட பள்ளிகள் இருக்
கின்றன. 55,000 மாணவர்கள் பள்ளிக் கல்வி பயிலுகிறார்கள்.
கிராம மக்கள் ஏழ்மையில் உழலுகிறார்கள். இது ஏழைகளின்
அரசு என்று சொல்லப்படுகின்றது. அதன்படி நல்லால திட்டங்
களைக் கொண்டு வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைச் சுருக்க
மாகக் கேட்க வேண்டும்.

**டாக்டர் ந. மாசிலாமணி** : பேரவைத் தலைவர் அவர்களே,
சுமார் 40 உறுப்பினர்களின் தனிப்பட்ட பிரச்சினைக்காக
நாம் இரண்டு மணி நேரத்தை வீணாக்கியிருக்கிறோம். ஆனால்
நான் சுமார் 4 இலட்சம் மக்களுடைய பிரச்சினையை எடுத்துச்
சொல்லிக்கொண்டிருக்கிறேன். எனவே எனக்கு ஒரு நிமிடம்
கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கேள்வியி
னுடைய பதிலை அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்
வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : பேரவைத் தலைவர்
அவர்களே, இல்லை என்ற பதிலைச் சொல்லவேண்டும் என்று
எங்களுக்கு எந்தவிதமான ஆசையும் இல்லை. இருக்கின்றது
என்று சொல்வதற்காகத்தான் முயற்சிகளைச் செய்து கொண்டு
இங்கே அமைச்சர்களாக உட்கார்ந்துகொண்டிருக்கிறோம்.
ஆனால் உண்மையைச் சொல்ல வேண்டும் என்ற நியதி இருக்
கின்றது. சட்டசபையில் இல்லை என்று சொல்லவேண்டிய
பதிலை ஆம் என்று சொல்ல முடியாது. எங்களுக்கு இருக்கின்ற
நிதியாதாரங்களைப் பொறுத்து முயற்சிகளை மேற்கொள்ள
வேண்டியிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன
தவறு செய்கிறார்கள் என்றால் ஐ.டி.ஐ. சம்பந்தப்பட்ட அமைச்
சரிடம் கேட்கவேண்டிய கேள்வியை என்னிடத்திலே கேட்டுக்
கொண்டிருக்கின்றார்கள். நானும் பாலிடெக்னிக் என்று நினைத்துக்





கொண்டு பதில் சொல்லிக்கொண்டிருக்கிறேன். பாலிடெக்னிக்கு
களைப் பொறுத்த வரையில் அரசு எந்த இடத்திலும் ஆரம்பிக்
கின்ற உத்தேசம் இப்போது இல்லை. எனவே ஜெயங்கொண்டம்
தொகுதியில் மட்டுமல்ல, நான் பிரதிநிதித்துவம் வகிக்கும்
தொண்டாமுத்தூர் தொகுதியிலும் அந்த உத்தேசம் இல்லை.
இப்படிப்பட்ட நிலையில் இல்லை என்ற பதிலைத்தான் சொல்ல
வேண்டி இருக்கிறது. வேறு எந்தவிதமான பதிலையும் சொல்ல
இயலாது. எனவே உறுப்பினர் அவர்கள் தவறாக எடுத்துக்
கொள்ளக்கூடாது. அரசின் பொறுப்பிலே இருப்பவர்கள் எப்படி
சொல்லவேண்டுமோ அப்படித்தான் சொல்ல முடியும். நானாக
இருந்தாலும் காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் அல்லது வேறு
கட்சியாக இருந்தாலும் இப்படித்தான் சொல்ல முடியும்.

**டாக்டர் ந. மாசிலாமணி** : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அமைச்சர் அவர்கள் வருத்தப்படுவதற்காக நான்
இதைச் சொல்லவில்லை. என்னுடைய தொகுதி வளரவேண்டும்
என்ற ஆதங்கத்தில்தான் அதை நான் குறிப்பிட்டேன். அதற்
காக எனது வருத்தத்தை தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால்
அரசு நினைத்தால் எதையும் செய்துவிடலாம். If there is will
there is a way மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. எனவே அரசு
செய்யவேண்டும் என்று நினைத்துவிட்டால் நிச்சயமாக செய்து
விடலாம். எனவே மீண்டும் நான் கேட்டுக்கொள்வது என்னவென்
றால் இதனை மறுபரிசீலனை செய்து எனது பகுதிக்கு ஒரு
தொழில் மையம் உண்டாக்கித்தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஏதாவது நடக்க
வேண்டும் என்றால் என்னிடத்திலே கேட்டால்கூட நான் அதற்
கான யோசனைகளைச் சொல்வேன். எனவே அரசுக்கு உத்
தேசம் இல்லை. ஆனால் தனிப்பட்டவர்கள் ஆரம்பிக்கின்ற
நிலைக்கு வந்தால் அனுமதி தந்துகொண்டிருக்கிறோம். அப்படி
ஏதாவது முயற்சி மேற்கொண்டால் கல்வி அமைச்சர் என்ற
முறையில் அதற்குத் தகுந்த உதவி செய்யத் தயாராக இருக்
கிறேன்.

## துவக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு மலிவு விலையில் உணவுப் பொருள்கள்

124 —(*வினா எண். 577)— **திரு. ஆர். கோவிந்தசாமி** :
மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு
விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் துவக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு, காவலர்
துறையினருக்கு அளிக்கப்படுவதுபோல குறைந்த விலையில்
உணவுப் பொருள்களை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

[1985 ஜூன் 5

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படி ஒரு திட்டம் இல்லை.

திரு. ஆர். கோவிந்தசாமி : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஒன்றிலிருந்து 5-வது வகுப்புவரை கல்வி பயிற்றுவிக்கின்ற ஆசிரியப் பெருமக்கள் குறைந்த வருவாயில் இருக்கிறார்கள். எனவே அவர்களுக்கும் காவலர்களுக்குக் கொடுப்பது போல் குறைந்த விலையில் உணவுத் தானியங்களை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, ஏழை எளிய மாணவர்களுக்கு இன்றைக்கு நம்முடைய சர்க்கார் பல நல்ல காரியங்களைச் செய்து கொண்டு வருகிறது. அதேபோல் அந்த ஏழை எளிய ஆசிரியர்கள் 60, 40 பிள்ளைகளை வகுப்பிலே வைத்துக்கொண்டு அவதிப்படுகிறார்கள். சாதாரணமாக ஒரு குடும்பத்திலே நான்கைந்து குழந்தைகள் இருந்தாலே நாம் எவ்வளவு அவதிப்படுகிறோம் என்பது தெரியும். ஆனால் அவர்கள் 50, 60 குழந்தைகளை வைத்துக்கொண்டு அவதிப்படுகிறார்கள். மேலும் அவர்கள் வறுமையில் இருக்கிறார்கள். எனவே குறைந்த விலையில் உணவுத் தானியங்களை அவர்களுக்கு வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். வடஆற்காடு குடியாத்தத்தில் திருவள்ளுவர் பள்ளியில் ஐந்தாம் வகுப்பிலிருந்து ஆறாம் வகுப்பிற்குச் செல்ல வேண்டும் என்றால் 100-லிருந்து 200 ரூபாய் கொடுத்தால்தான் முடியும் என்ற நிலைமை இருக்கின்றது. அப்படித் தராதவர்களை வாசல்படியில்கூட சேர்ப்பதில்லை. அதுமட்டும் அல்ல. அங்கே டி.சி. கொடுக்க வேண்டும் என்று சொன்னாலும் 100 ரூபாய் கேட்கிறார்கள். (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ஆர். கோவிந்தசாமி : ஆகவே, அதைக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்தக் குறிப்பிட்ட பள்ளியினுடைய விவரத்தை தருவார்களேயானால் அதுபற்றி நான் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன். எழுதி என்னிடத்திலே தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது இங்கே கேட்டிருக்கிற மூலக் கேள்வி ஆசிரியர்களுக்கு, காவலர்களுக்கு தருவதைப் போல மலிவு விலையில் உணவுப் பொருள்கள் வழங்கப்படுமா என்பதுதான் அந்தக் கேள்வியைக் கேட்டு விட்டு, வேறு ஒரு பொருள் சம்பந்தமான துணைக் கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.



1985 ஜூன் 5]

உணவுப் பொருள் சம்பந்தமாக, காவலர்களுக்குத்தான்
இப்பொழுது தந்து கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்களுக்கு
இப்போது அப்படித் தருகிற உத்தேசம் இல்லை. ஆசிரியர்
களைப்பற்றிச் சொல்கிறபோது ஏழை, ஏழை என்று சொல்ல
வேண்டிய அவசியம் இல்லை. ஆசிரியர்களை ஏழை என்று
சொல்ல ஆரம்பிப்போமேயானால், மற்ற ஏழைகளைப் பற்றி
சரியான இலக்கணம் நமக்குத் தெரியவில்லை என்ற நிலைமை
ஏற்பட்டு விடும். ஆகவே, ஏழைகள் என்பது வேறு, ஆசிரியர்கள்
என்பது வேறு. ஆசிரியர்கள் இன்றைக்கு ஏழைகளாக இல்லை.
அப்படி கொஞ்சம் நஞ்சம் ஏழைகளாக இருந்தாலும் கூட,
இப்போது பே-கமிஷனிலே, அவர்களைச் சற்று மேலே கை
தூக்கி விடுவது என்று சொல்வார்களே, அப்படி கை தூக்கி
விட்டிருக்கிறோம். ஒரு கிராமத்தில் அதுவும் மேல்நிலைப்
பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்கள் ஆயிரம் ரூபாய்க்கு மேல்
மாதச் சம்பளம் வாங்குகிறார்கள். அப்படிப்பட்ட ஆசிரி
யர்கள் அந்தக் கிராமத்திலே 15, 20 பேர் என்ற கணக்கில்கூட
இருப்பதால் அந்தக் கிராமத்தினுடைய பொருளாதாரத்தையே
உயர்த்துகிற அளவுக்கு ஆசிரியர்களுடைய நிலைமை உயர்ந்து
கொண்டிருக்கிறது.

திரு. மு. பாண்டுரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சில நாட்களுக்கு முன்பு ஆசிரியர்கள் எல்லாம்
மாற்றப்பட்டிருக்கிறார்கள். எந்த அடிப்படையில் இப்படி
துவக்கப்பள்ளி ஆசிரியர்களையும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களை
யும், டி.யி.ஓ., சி.யி.ஓ. போன்றவர்கள் மாற்றுகிறார்கள் என்பது
தெரியவில்லை. அவ்வாறு மாற்றம் செய்ய குறிப்பிட்ட அடிப்
படை விதிகளை வகுக்க அரசு முற்படுமா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர்
அவர்களே, மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாத கேள்வி என்றா
லும் நான் உறுப்பினருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புவது.
ஆசிரியர்களே எங்களை மாற்ற வேண்டும் என்று கேட்கிறார்கள்,
அப்படிக் கேட்கிற ஆசிரியர்களை மாற்றும்போது, கேட்காத
சிலபேர்களும் மாற்றப்படலாம்.

### சுயநிதி உதவி திட்டத்தின்கீழ் பாலிடெக்னிக்குகள்

125—(*வினா எண். 591)—திரு. க. பாரமலை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1984-85 ஆம் ஆண்டில் சுயநிதி உதவி (Self Financing) திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள பாலிடெக்னிக்குகள் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) அதில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த யாருக்காவது அனுமதி வழங்கப்பட்டுள்ளதா ?

[1985 ஜூன் 5

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) தமிழகத்தில் 1984-85-ம் ஆண்டில் சுயநிதி உதவி (Self Financing) திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள பாலிடெக்னிக்குகள் 58. இதில் 51 பாலிடெக்னிக்குகள் தற்போது இயங்கி வருகின்றன. மீதமுள்ள 7 பாலிடெக்னிக்குகள் 1985-86 கல்வியாண்டில் செயல்படத் துவங்கும்.

(ஆ) சாதி, மத பேதம் பாராமல் அரசு அனுமதி வழங்கியுள்ளது. எனவே, இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாலிடெக்னிக்குகளை சாதி மத பேதம் இல்லாமல் வழங்குவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நான் கேட்டுக் கொள்வது, பொதுவாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் — ஒவ்வொரு இடங்களிலே ஒவ்வொரு சாதியைச் சார்ந்தவர்கள் — பல பாலிடெக்னிக்குகளை மட்டும் அல்ல காலேஜ்களைக் கூட நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்படி அரசு வைத்துக் கொண்டிருக்கிற தாராள விதியைப் பயன்படுத்தி தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் சில இடங்களில் பாலிடெக்னிக்குகளை ஆரம்பிக்க முன் வருகிறார்கள். குறிப்பாக தென்னாற்காடு மாவட்டத்தில் விருத்தாசலம், காமராஜ் மாவட்டதில் நரிக்குடி, மதுரை மாவட்டத்தில் கோட்டூர் ஆகிய இடங்களில் இருந்து இந்த பாலிடெக்னிக்குகளை ஆரம்பிப்பதற்குரிய தகுதிகளையெல்லாம் நிறைவேற்றி வைத்துக் கொண்டு காத்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த நடப்பு ஆண்டிலாவது அனுமதி வழங்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பாலிடெக்னிக்குகளை ஆரம்பித்தால் மிகுந்த பணச் செலவு ஏற்படும். குறைந்தது 1¼ கோடி அல்லது 1½ கோடி ரூபாய் கட்டிடங்களுக்கும் தளவாடங்களுகுக்கும் தேவைப்படும். 25 ஏக்கருக்கு மேல் இடம் தேவைப்படும். என்டோவ்மெண்ட் ஆக முதல் ஆண்டு 4 லட்சமும், அடுத்த இரண்டு இரண்டு லட்சமாக 3 ஆண்டுகளுக்கு மேல் கட்ட வேண்டி வரும். சர்க்கார் ஒரு காசும் தராது. அனுமதிக்கப்படுகிற மாணவர்களில் 50 சதவீதம் மார்க் அடிப்படையில் மற்றும் ஜாதி விகிதாச்சார அடிப்படையில்தான் சேர்க்க வேண்டும். மீதியுள்ள 50 சதவீதம் தான் மேனேஜ்மெண்ட்டாரின் இஷ்டப்படி சேர்க்க முடியும். இந்த நிபந்தனைகளுக்கு எல்லாம் உட்பட்டு வருகிறவர்களுக்குத்தான் நாம் இப்போது அனுமதி வழங்கிக் கொண்டிருக்கிறோம்.



1985 ஜூன் 5]

தாழ்த்தப்பட்டவர்கள் அப்படி இந்த நிபந்தனைகளுக்கெல்லாம் உட்பட்டு வருவார்களேயானால் அவர்களுக்கு தருவதில் அரசுக்கு எந்தவிதமான சிரமமும் இல்லை. ஆனால் நான் சொல்கிற ஆலோசனை என்னவென்றால், எல்லா துறைகளிலும் 18 சதவீதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று சலுகை தருகிறபோது, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் இவ்வளவு பணத்தை ஒரு நிறுவனத்திலே போய் முடக்க வேண்டுமா? செலவிட வேண்டுமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. க. பாரமலை : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் ஆலோசனைக்கு நன்றி, பொதுவாக இந்தப் புதிய பாலிடெக்னிக்குகள், என்ஜினியரிங் கல்லூரிகள் துவக்கியதாலே இந்த ஆண்டு மிக அதிகமான அளவிலே தாழ்த்தப்பட்ட மாணவர்கள் அந்த கல்லூரிகளில் சேர்கிற வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இந்தத் துறையிலே ஒரு புதிய நடவடிக்கையை மேற்கொள்ள இருக்கிறார்கள். தொடர்ந்து மேலும் என்ஜினியரிங் கல்லூரிகள் போன்றவை துவக்குவதற்கு கூட இது அடிப்படையாக அமையுமென்ற காரணத்தாலே, இந்த முயற்சியிலே அவர்களுக்கும் ஈடுபாடு இருக்கிறது என்பதை வைத்து, அவர்களை ஊக்கப்படுத்துகிற வகையிலே செய்ய வேண்டும். ட்ரஸ்ட் பண்ட் என்பது நான்கு லட்சம் என்று சொன்னார்கள். மற்ற இடங்கள் , கட்டிடங்கள் போன்றவைகளுக்கு நான் விதிவிலக்கு வேண்டுமென்று கேட்கவில்லை. இந்த நிதி போடுவதிலே அவர்களுக்கு கொஞ்சம் சலுகை காட்டி, அவர்களை ஊக்கப்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அந்த நிபந்தனைகளை தளர்த்த உத்தேசமில்லை. வேண்டுமானால் நிபந்தனைகளை மேலும் தீவிரப்படுத்துகிற நிலைமைதான் நாட்டிலே இருக்கிறது. அவற்றை தளர்த்துவதற்கு உத்தேசமில்லை. தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தாலும், யாராக இருந்தாலும் தொடர்ந்து அந்தப் பாலிடெக்னிக்குகள் நடைபெற வேண்டுமென்ற எண்ணத்தோடு நாம் நிபந்தனைகளை வைத்திருக்கிறோம். அதிலே நாம் யாருக்கும் தளர்த்துவதற்கு உத்தேசம் கிடையாது. ஆகவே இந்த சிரமங்களை எல்லாம் வைத்துதான் நான் சொல்கிறேன். தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு, ஆதிதிராவிட மாணவர்களுக்கு எல்லா பாலிடெக்னிக்குகளிலும், எல்லா என்ஜினியரிங் கல்லூரிகளிலும் கிடைக்க வேண்டிய

சலுகைகளை் கிடைப்பதற்கான முயற்சியை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. அதிலே எங்காவது தவறு செய்வார்களானால் நிபந்தனையை மீறியதாக கருதி நடவடிக்கை எடுக்கவும் நாம் தயாராக இருக்கிறோம். ஆகவே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பணத்தைத் திரட்டி அவர்களுக்கு முழுமையும் பயன்படுகிற ஒரு காரியத்திலே செய்தாலும் கூட பரவாயில்லை. இது பொதுக் காரியத்திற்காக செலவாகிற பணம். பாலிடெக்னிக்குகள் அவர்கள் ஆரம்பித்தாலும் மற்ற ஜாதிக்காரர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற அந்த நிலைமை இருக்கிறது. அவைகளை சேர்ந்து பார்க்கிறபோது ஆரம்பிப்பது என்பது அவ்வளவு சரியாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஆரம்பிக்க முன்வருவார்களேயானால், அனுமதி தருவதற்கு இந்த அரசிற்கு ஆட்சேபணை இல்லை.

திரு. பொன் முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, சுயநிதியுதவி திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட தொழில் கல்வி நிலையங்கள் எல்லாம் அவசர கோலத்திலே ஆரம்பிக்கப்பட்டிருக்கிற காரணத்தாலே, போதிய இடவசதி இல்லாமல், சரியான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாமல், முறையான கல்வியை மாணவர்களுக்கு வழங்க இயலாமல் இன்றைக்கு தத்தத்தளித்துக் கொண்டிருக்கின்றன. அந்தக் கல்வி நிலையங்களை அடையாளம் கண்டு அரசு நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு வழங்கியிருக்கிற அனுமதியை ரத்து செய்ய முன்வருமா என் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது ஏதோ அங்கொன்றும், இங்கொன்றும் உண்மையாக இருக்கலாமே தவிர, பொதுவான முறையிலே உண்மை இல்லை. காரணம் இப்போது ஆரம்பிக்கப்பட்ட பாலிடெக்னிக்குகளில் முதலிடம் பெறுகிற மாணவர்களும் வந்திருக்கிறார்கள். நல்ல முறையில் தேர்ந்துள்ள மாணவர்களும் வந்திருக்கிறார்கள். ரொம்பவும் மோசமாகி போன பாலிடெக்னிக்குகளும் இருக்கின்றன. ஆனால் இந்த நிபந்தனைகள் அடிப்படையில் நாம் இப்போது அதிகாரிகளை வைத்து ஒவ்வொரு பாலிடெக்னிக்கையும் பார்வையிடச் செய்து, நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத பாலிடெக்னிக்குகள் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டிருக்கிறோம். அந்த முறையை நாம் பின்பற்றி வருகிறோம். ஆகவே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு சொல்லிக்கொள்வது, இந்த நிபந்தனைகளை பின்பற்றுவதில் நாம் கடுமையாக இருப்போம் என்பதை நான் வலியுறுத்திச் சொல்கிறேன். பொதுவாக இந்த சுய நிதியுதவி திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாலிடெக்னிக்குகளில் எல்லாம் பெரும்பாலானவை நாம் பார்த்த அளவிலே கட்டிடங்கள் உருவாகி இருக்கின்றன. அவை நல்ல வசதியோடு இருக்கின்றன. திண்டுக்கல்லுக்கு கூட சமீபத்தில் போய் இருந்





தேன். அங்கேயிருக்கிற ஒரு பாலிடெக்னிக்கில் இன்னும் கட்டிடங்கள் கட்டவில்லை என்றாலும், இப்போது தரப்பட்டிருக்கிற கட்டிடம் நல்ல கட்டிடமாக இருக்கிறது. இடமும் நல்ல முறையிலே இருக்கிறது. கட்டிடம் கட்டுகிற முயற்சியை அவர்கள் மேற்கொண்டு இருக்கிறார்கள். சென்ற வாரத்தில் நானே போய் ஒரு கட்டிட திறப்பு விழா கூட செய்து விட்டு வந்தேன். 40 லட்சம், 50 லட்சம் என்று பெரிய அளவில் முதலீடு செய்திருக்கிறார்கள். அப்படி செய்ய முடியாமல் இருக்கிறவர்கள் நிச்சயமாக அந்த அனுமதியை அவர்கள் இழப்பார்கள்.

திரு. எஸ். நாராயணன் : தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் 2, 3 பாலிடெக்னிக்குகள் ஆண்களுக்காகவே அமைக்கப்பட்டவையாக இருக்கின்றன. நெல்லை மாவட்டத்தில் பெண்கள் தொழிற் கல்வி கற்பதற்கு வசதி வாய்ப்புகள் இல்லை. மதுரை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அங்கே கவர்ன்மெண்டு பாலிடெக்னிக் இருக்கிறது. பழனியில் அறநிலையத்துறை பாலிடெக்னிக் பெண்களுக்காக அமைக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றது. அதே போல் நெல்லை மாவட்டத்தில் பெண்களுக்கென்று அரசு அக்கறையோடு தனிச்சலுகை அதாவது 'எக்சம்பஷன்' கொடுத்து ஒரு பாலிடெக்னிக் ஏற்படுத்தி நடத்த திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசால் ஆரம்பிக்கப்பட்ட பாலிடெக்னிக், பெண்களுக்கான பாலிடெக்னிக் எட்டயபுரத்திலே தான். பாரதியாருடைய நினைவாக அங்கே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த நிகழ்ச்சியில் பங்கு கொள்ளவில்லையோ என்னவோ தெரியவில்லை. அவர்கள் மறந்திருப்பார்கள். அதற்குச் சிறப்பான கட்டிடங்கள் கட்டப்பட்டு, அது நடை பெற்று வருகிறது. நாங்கள் வந்ததற்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட ஒரே ஒரு பாலி

அது மாத்திரம் அல்லாமல், இப்போது புதிதாக திறக்கப்படுகிற பாலிடெக்னிக்குகளுக்கு நாம் சொல்லுகின்ற யோசனைகள் எல்லாம், பெண்களையும் அதிலே சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதுதான். ஆண்களுக்கு என்று நாம் தனியாக இப்போது அனுமதி தருவதில்லை. எந்த பாலிடெக்னிக்குகளுக்கு நாம் உத்தரவு தந்தாலும், அதிலே பெண்களும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று உத்தரவு போட்டு இருக்கிறோம். தற்போது நிறைய பெண்கள் படித்துக் கொண்டு இருக்கிறார்கள். பெண்களுக்காக பாலிடெக்னிக்குகள் ஆரம்பிக்க வேண்டுமென்று யாராவது முன் வருவார்களானால், அதற்கு நாம் நல்ல ஆதரவை தந்து வருகிறோம்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கையில்
சுயநிதி உதவித் திட்டத்தின் கீழ் சில நிபந்தனைகளுக்கு உட்
பட்டு, தனியார் பாலிடெக்னிக்குகள் தொடங்க அனுமதிக்கப்படு
வதாக கூறினார்கள். அந்த நிபந்தனைகளில், மேனேஜ்மெண்ட்
டுக்கு, நிர்வாகத்தினருக்கு ஒதுக்கப்பட்ட 50 சதவீதம் இடங்
களானது விலைக்கு விற்கப்படுகிறது என்பது தெரியும். அதன்
விலைக்கும் ஏதேனும் உச்சவரம்பு நிபந்தனைகளில் அடங்கி
யுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்
களே இது பற்றி மத்திய அரசும், யு.ஜி.சி.யும், ஆல் இந்தியா
டெக்னிக்கல் கவுன்சிலும் பரிசிலித்து வருகிறார்கள். அவர்கள்
ஏதாவது ஒரு திட்டத்தை தருகிறபோது, அதை இந்த அரசு
பரிசிலிக்கும்.

### சோழன் போக்குவரத்துக் கழகம்.

*126—(*வினா எண். 550)*—திரு. கி. வெங்கடாசலம் : மாண்பு
மிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு
விடையளிப்பாரா—

சோழன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப்பிரித்து,
திருச்சியை தலைமையகமாகக் கொண்டு இயங்கவிருக்கும் தீரன்
சின்னமலை போக்குவரத்துக் கழகம் எப்பொழுது முதல் தனித்து
இயங்க உள்ளது ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம்,
திருச்சியை தலைமையிடமாகக் கொண்டு 1—4—85 முதல்
தனிப் போக்குவரத்துக் கழகமாக இயங்கி வருகிறது.

திரு. கி. வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, நான்
இந்தக் கேள்வியைக் கேட்ட நேரம் தீரன் சின்னமலை போக்கு
வரத்துக் கழகம் தனியாக இயங்காத நிலையிலே இருந்த நேரம்.
இருந்தாலும் தற்போது இந்த வினாவை எடுத்துக் கொண்டதற்
காக நான் போக்குவரத்துக் அமைச்சர் அவர்களுக்கு நன்றி
சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். சோழன் போக்கு
வரத்துக் கழகம் இயங்கி வந்த காலத்தில் லால்குடியிலிருந்த
கிளை எந்தக் காரணத்தைக் கொண்டு மூடப்பட்டது ? என்பது
தெரியவில்லை. மீண்டும் அந்தக் கிளையை திறக்கும் உத்தேசம்
உள்ளதா ? தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் பிரிக்கப்
பட்டதற்குப் பின்னர், ஸ்பேர் பார்ட்ஸ், ஸ்பேர் பஸ் போன்ற
வைகள் எல்லாம் சோழன் போக்குவரத்துக் கழகத்திலே இருந்து
முறையாக, தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்திற்கு





கொடுக்காத காரணத்தால், தீரன் சின்னமலை போக்குவரத்துக்
கழகம் சரியாக இயங்க முடியாத சூழ்நிலையில் இருக்கிறது.
இது அரசுக்குத் தெரியுமா ? அப்படி தெரியும் என்றால், என்ன
நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்கள் என்பதை அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட
நேரம் தான் இந்தப் போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்கப்பட்
டிருக்கிறது என்பதிலே எனக்கு மகிழ்ச்சி, அங்கே உள்ள சில
சிக்கல்களைச் சொன்னார்கள். புதிதாக ஒரு நிறுவனம் அமைக்
கின்றபோது, சில சிக்கல்கள் வருவது என்பது தவிர்க்க முடியாத
ஒன்று. அந்தச் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக சோழன் போக்கு
வரத்துக் கழகத்தோடு பேசப்பட்டது. என்னென்ன தேவைகள்
வேண்டுமோ, அவைகளை எல்லாம் கொடுப்பதற்கு தொடர்ந்து
நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம். லால்குடியிலே
டிப்போ பற்றிச் சொன்னார்கள். ஏன் மூடப்பட்டது என்பதற்
கான காரணம் எனக்கு இப்போது தெரியாது. அதைக் கேட்டு,
ஒரு வேளை அவசியம் இருந்தால் புதிதாக அமைப்பதிலே எந்த
விதமான தடையும் இல்லை.

திரு. கே. பாலாஜி : பேரவைத் தலைவர் அவர்களே,
பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தை இரண்
டாகப் பிரித்து, வட ஆற்காடு மாவட்டத்திற்கு பட்டுக்கோட்டை
அழகிரி போக்குவரத்துக் கழகம் என்றும், செங்கற்பட்டு மாவட்
டத்திற்கு பாரதியார் போக்குவரத்துக் கழகம் என்று பிரித்து
84-லே துவக்கப்பட இருந்தது, தற்போது நிறுத்தி வைக்கப்
பட்டிருக்கிறது. அது எப்போது செயல்படும் என்பதையும்
பாரதியார் போக்குவரத்துக் கழகத்தினுடைய தலைமையிடம்
காஞ்சிபுரத்திலே அமைக்க வேண்டும் என்பதையும் அமைச்சர்
அவர்கள் செய்வார்களா ? என்பதை நான் அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்று, அப்படி
ஒரு யோசனை 84-லே இருந்ததாகத் எனக்குத் தெரிய
வில்லை. ஆனால் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம்,
பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் இரண்டும்
ஒன்றாக சேர்ந்து இதிலே இரண்டு வழித்தடங்களும் பின்னிப்
பிணைந்து இருக்கிற காரணத்தால், தனித்தனியாக மாற்றி
அமைக்க வேண்டும் என்ற ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.
எதிர் காலத்திலே பட்டுக்கோட்டை அழகிரி- போக்குவரத்துக்
கழகம் சிறப்பான வளர்ச்சி அடைந்த பின்பு, இரண்டாகப்
பிரித்து நடவடிக்கை எடுக்க முடியுமே தவிர, உடனடியாக
செய்வதற்கு வாய்ப்பு இல்லை என்று கருதுகிறேன்.

திரு. ஆதிமூலம் என்கிற இல்லை காந்தி : பேரவைத் தலைவர் அவர்களே, தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் துவக்கியதிலிருந்து ஏற்கனவே சென்று கொண்டிருந்த வழித் தடங்களிலிருந்து பேருந்துகள் நிறுத்தப்பட்ட காரணத்தால், இப்போது அந்த வழித் தடங்களில் புதிய பேருந்துகள் விடுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா ? என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10.)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய போக்குவரத்துக் கழகங்கள் தொடங்கினால் நிறைய பேருந்துகள் கூடுதலாக விடப்பட்டு இருக்கும். பேருந்துகள் அங்கே நிறுத்தப்பட்டது என்ற தகவல் எனக்கு வரவில்லை. அப்படி ஏதாவது தகவல் இருந்து மாண்புமிகு உறுப்பினர் கொடுப்பார்களானால் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

**போக்குவரத்துத் துறையிலிருந்து போக்குவரத்துக் கழகங்களுக்குச் சென்றுள்ள பணியாளர்கள்.**

127—(*வினா எண். 691)—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையிலிருந்து விருப்பத்தின் பேரில் போக்குவரத்துக் கழகப் பணிகளுக்கு மாற்றுதல் பெற்றுச் சென்றவர்களுக்கு, அதனால் கிடைக்கும் பயன்கள் அனைத்தும் இறுதி செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) இல்லையெனில், தாமதத்திற்கான காரணம் யாது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) முன்னாள் அரசு போக்குவரத்துத் துறையில் பணி புரிந்து, பின் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்ற ஒப்புதல் அளித்துள்ள 15,376 தொழிலாளர்களில், இதுவரை மொத்தம் 1,450 தொழிலாளர்களுக்கு அரசுப் பணித் தீர்வு நற்பயன்கள் அரசு ஆணை 284, நிதித்துறை, தேதி 31—3—1980-ன் படி தீர்வு செய்யப்பட்டுள்ளது. மற்றும் 200 தொழிலாளர்களுக்கு பணிக் தீர்வு ஒப்புதல் அளிக்கப்பட்டு மாநிலக் கணக்காயருக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

(ஆ) மேற்கூறிய அரசு ஆணைக்கு ஒப்புதல் அளித்து அரசுப் பணிக்காலப் பணித்தீரவு கோரும் தொழிலாளர்களுக்கு எவ்வித தாமதமும் இன்றி பணித் தீர்வு நற்பயன் ஒப்புதல் அளிக்கப்பட்டு வருகிறது.





திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே 1974 ஆம் வருடத்தில் போக்குவரத்துக் கழகங்கள் அமைத்த அன்று அரசு ஊழியர்களாக இருந்த போக்குவரத்துத் தொழிலாளர்களை கழக தொழிலாளர்களாக மாற்றிய நேரத்தில் 378 என்ற ஒரு ஜி.ஓ.வின் அடிப்படையில் தான் ஒப்புதல் வாங்கப்பட்டது என்ற காரணத்தினால் அந்த ஒப்புதலின் அடிப்படையில் அவர்களுடைய பர்மனன்ட் பேனிபிட் செட்டில்மென்ட் செய்ய வேண்டும் என்று உயர்நீதி மன்றமும், உச்ச நீதிமன்றமும் தீர்ப்புக் கொடுத்ததற்குப் பிறகும் அந்த முறையில் அவர்களுடைய அக்கவுன்ட்ஸ் செட்டில்மெண்ட் செய்யாமல் ஜி.ஓ. 284-ன்படி செட்டில்மெண்ட் செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுவது சரியா ? ஏற்கனவே இந்த அவையில் இது சம்பந்தமாக ஒரு கேள்விக்கு பதில் சொல்லக்கூடிய நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜி.ஓ. 378-ன் அடிப்படையில் செட்டில்மெண்டு செய்வதற்கு சம்பந்தப்பட்டவர்களின் கூட்டத்தைக் கூட்டி முடிவு எடுக்கலாம் என்று சொல்லப்பட்டது. அதன் அடிப்படையில் ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? உயர்நீதி மன்றத்தின், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் ஜி.ஓ. 378-ன்படி அந்த தொழிலாளர்களின் கணக்கை முடிப்பதற்கு என்ன நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே எப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதைப் பற்றி தான் சொன்னேனே தவிர எதிர்காலத்தில் எப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் சொல்லவில்லை. அதுபற்றி கூட்டம் கூட்ட வேண்டும் என்று நான் ஏற்கனவே சொல்லியிருந்தேன். இன்றைக்கு அந்தக் கூட்டத்தை வைத்து இருக்கிறோம். அதிலே இவைகளைப் பற்றி விவாதிக்க இருக்கிறோம். நாளைய தினம் ஒரு முடிவான முடிவை இதில் என்னால் சொல்ல முடியும். ஆனால் சுருக்கமாக சொல்ல வேண்டுமானால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையை கேட்டபோது அவர்கள் சொன்னார்கள் தொழிலாளர்களுக்கு எது சாதகமாக இருக்கிறதோ அதை செய்ய வேண்டும் என்ற உணர்வை அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். எனவே, அந்த அடிப்படையில் அந்த உணர்வினை மனதில் வைத்துக் இன்று முடிவு எடுக்கப்படும். நாளைய தினம் ஒரு முடிவான பதில் இதற்கு கிடைக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முடிவு எடுக்கும்போது ஏற்கனவே 284 ஜி.ஓ.க்கு ஒப்புதல் கொடுத்து அதன் அடிப்படையில் செட்டில்மெண்டு செய்யப்பட்டால் தொழிலாளர்களுக்கு பல்வேறு பாதிப்புகள் ஏற்படுமானால் அவர்களுக்கும் அந்த ஜி.ஓ. 374-ன்படி செட்டில்மெண்டு, செய்யப்பட்டால் அதன்படி உள்ள மீதிப் பணத்தை கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தான் பேசி முடிவு எடுக்க இருக்கிறோம். நாளைய தினம் அதை அறிவிக்க முடியும் என்று நான் கருதுகிறேன். எனவே, அந்த அடிப்படையில் ஏற்கனவே ஒப்புதல் தந்த தொழிலாளர்களுக்கு நிச்சயமாக பாதுகாப்பு உண்டு என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையிலிருந்து போக்குவரத்துக் கழகத்திற்கு மாறும் தொழிலாளர்களுக்கு உதவும் அரசு சோழன் போக்குவரத்திலிருந்து தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் பிரிந்த போது அந்தக் கழகத்திற்குச் செல்ல விருப்பம் தெரிவித்த தொழிலாளர்கள் இன்று சோழனுக்கு வர விரும்பிய தொழிலாளர்கள் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்திலும், தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்திற்கு வர விரும்பிய தொழிலாளர்கள் சோழன் போக்குவரத்துக் கழகத்திலும் மாட்டிக் கொண்டு அகதிகளைப் போல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுடைய விஷயத்தை அனுதாபத்தோடு கவனித்து தீரனிலிருந்து சோழனுக்கு வர விரும்பியவர்களையும், சோழனிலிருந்து தீரனுக்கு செல்ல விரும்புகிறவர்களுக்கும் உதவுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், போக்குவரத்துக் கழகங்கள் பிரிக்கும்போது யார், யார் எங்கே போக விரும்புகிறார்களோ. அந்த இடத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கிறோம். சில இடங்களில் போதிய அளவுக்கு இடம் இல்லை என்று சொன்னால் அந்த இடத்தை நிரப்புவதில் சீனியாரிட்டி என்ற அடிப்படையில் நாங்கள் நிரப்பிக் கொண்டு இருக்கிறோம். எனவே, தொழிலாளர்கள் நிச்சயமா எப்படியாவது ஒரு நாளைக்கு அங்கே போய் பணியாற்றுகிற வாய்ப்பைப் பெறுவார்கள்.



### திண்டுக்கல்லில் குடிசை மாற்றுப் பணிகள்.

128—(*வினா எண். 531) திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் திண்டுக்கல்லில் குடிசை மாற்று வாரியம் மூலம் வீடு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் பகுதியில் கக்கன் நகர், செல்லாண்டி அம்மன் கோயில் தெரு, அகின்ஸ் மேரி பகுதி, சோலைஹால் பின்பகுதி, தெற்குத் தெரு, முனிசிபல் காலனி, போன்ற இடங்களில் எல்லாம் குடிசைகள் அதிகமாக இருந்து மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இப்போது அதை அண்ணா மாவட்டமாக அறிவித்து இருக்கிற இந்த நிலையில் சுகாதார கேடுகள் இருக்கிறபடியாலும் மேலும் மிக தேவையான அவசியமான முறையில் இருப்பதாலும் இந்த குடிசைகளை மாற்றி அந்த இடங்களில் குடிசை மாற்று வாரியம் மூலம் கட்டிடங்களை எழுப்பிக் கொடுக்குமா என்பதும் அதை மறுபரிசீலனைச் செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அண்ணா மாவட்டத்தின் தலைநகரமாக இருக்கின்ற காரணத்தால், விரைவில் அதுபற்றி பரிசிலனை செய்யப்படும்.

### மாநில ஆதிதிராவிடர் நல ஆலோசனைக் குழு.

129—(*வினா எண். 589) திரு. கு. பாரமலை : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆதி திராவிடர் நலத்துறையின் கீழ் மாநில ஆதி திராவிடர் நல ஆலோசனைக் குழு அமைக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ஏ. அருணாசலம் : ஆம். மாநில ஆதிதிராவிடர் நல ஆலோசனைக் குழுவில் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களை நியமனம் செய்வதற்காக தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலோசனைக் குழு 3 மாதம் அல்லது 4 மாதத்திற்கு ஒரு தடவை கூடி, இன்றைக்கு ஆதிதிராவிடர் நலத்துறை அமல்படுத்துகின்ற திட்டங்கள் எல்லாம், இந்த ஆலோசனைக் குழுவினால் அரசுக்கு அனுப்பப்பட்டது என்பதை அரசுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்தக் குழுவில் ஆதிதிராவிட நலத்துறை மட்டுமல்லாது. பல்வேறு துறையின் தலைவர்கள் இருக்கின்ற காரணத்தால், பல்வேறு துறைகளின் மூலமாக இந்தத் துறையினால் செயல்படுத்தப்படுகின்ற திட்டங்களைக் கண்காணிக்கின்ற குழுவாக இருக்கின்றது. கடந்த 5 ஆண்டுகளாக இக்குழு செயல்படவில்லை என்பதை அமைச்சரது கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். விரைவாக நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நடப்பு சட்ட மன்றக் கூட்டத்தின் முடிவுக்குள்ளேயாவது அறிவிப்பார்களா ? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநில அளவில் அமைப்பதற்கான இக்குழுவில் மாவட்ட ஆட்சியரிடமும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் உறுப்பினர்களைச் சேர்ப்பதற்காக கேட்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 50 பேர் கொண்ட குழு மாநில அளவிலே அமைக்கப்பட இருக்கின்றது. அது கூடிய சீக்கிரமே அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நல ஆலோசனைக் குழு, பல ஆண்டுகளாக அமைக்கப்படாமல் இதற்கு முன் இருந்த அமைச்சர் அவர்களும் இதே போல் விரைவிலே அமைக்கப்படும் என்று சொல்லி வந்து அமைக்காமலேயே போய் விட்டார்கள். இப்போது அமைச்சர் அமைக்க இருப்பதாகச் சொல்கிறார்கள். இந்த ஆலோசனைக் குழு மூலமாக எந்தவிதமான பயனும் ஏற்படாது என்ற காரணத்தால் பல மாநிலங்களில், கர்நாடகா, வட மாநிலங்களிலே ஸ்டண்டிங் கமிட்டி இதற்காக தனியாக அமைக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஸ்டண்டிங் கமிட்டி மூலம் இந்தக் குழு அமைக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கிணங்க, அதேமாதிரி ஸ்டண்டிங் கமிட்டி போடுகின்ற நிலை



மையில் இல்லை. இருந்தாலும், மாநில அளவில் கிட்டத்தட்ட முதலிலே 1978 நவம்பரிலேயும், 1979, 1980 ஆம் ஆண்டு வரையில் நடைபெற்று வந்தது. திரும்ப மாவட்ட ஆட்சியர்களிடம் கேட்கப்பட்டு இருக்கின்ற காரணத்தால், அங்கே தாமதம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், கூடிய விரைவில் இதைக் கட்டாயம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. க. பாரமலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் கேட்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். சென்ற சட்டமன்றக் கூட்டத்திலே கூட, அதாவது 1980--84ம் ஆண்டில் நடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே மாண்புமிகு அமைச்சர் விஜயசாரதி அவர்கள் அறிக்கை எல்லாம் பெற்று, சுற்றறிக்கையில் இருக்கிறது. இந்தக் கூட்டத் தொடர் முடிவுக்குள்ளேயே அறிவிப்பேன் என்று சொன்னார்கள். அவர்கள் துரதிர்ஷ்டவசமாக இப்போது இந்த அவையில் இல்லை. தாங்கள் பொறுப்பேற்றிருக்கிறீர்கள். ஆகவே, மீண்டும் ஆட்சித் தலைவர்களிடம் கேட்டுப் பெறுவதிலே தாமதம் இருப்பதைத் தவிர்ப்பதற்காக விரைவில் நடவடிக்கை எடுத்து, இந்த சட்டமன்றக் கூட்டத்திலேயே அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அதை அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 5 மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து இன்று வரையில் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான குறிப்புக்கள் வரவில்லை. அது வந்த பிறகு கட்டாயம் உடனடியாக அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

### தீர்ப்பரப்பு கால்வாய்

130—*வினா எண். 70 திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தீர்ப்பரப்பு வலது கரை கால்வாய் சிதறால் வரை வெட்டப்படுவது நீட்டப்பட வேண்டுமென்று வேண்டுகோள் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதா ?

(ஆ) பேறை மாறப்பாடி என்ற இடங்களுக்கு இதை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) இல்லை.

(ஆ) தற்போது இயலாது.

(முற்பகல் 10-20)

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, தீர்ப்பரப்பு வலதுகரைக் கால்வாய் பழைய திருவிதாங்கூர் கொச்சி ராஜ்ஜியத்திலே கன்னியாகுமரி மாவட்டம் இருந்த நேரத்திலே ஆய்வு செய்யப்பட்டு அதிலே ஒரு பகுதி முடிக்கப்பட்டது. அந்த நேரத்திலே மாறப்பாடி என்ற இடத்திலே கிளைக் கால்வாய் மூலமாக அதை விஸ்தரிப்பதற்காக ஆய்வு செய்யப்பட்டதாக துறையிலிருந்து ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டது. அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகள் நீர்ப்பாசனத்திற்கு வேறு வழியில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதால் அந்த ஆய்வின் தொடர்ச்சியாக இந்த வேலையைச் செய்து முடிக்க உடனடியாக அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: துணைத் தலைவர் அவர்களே, இந்த பேறை, மாறப்பாடி ஆகிய இரண்டு பகுதிகளுக்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவதற்காக ஏற்கனவே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார்கள். இருக்கக்கூடிய திட்டத்தின் அடிப்படையில் வரக்கூடிய தண்ணீர் வரத்தின் வாயிலாக கிடைக்கக்கூடிய பயன் எவ்வளவு தூரத்திற்கு அமைந்திருக்கிறது என்பதைப் பார்த்து அந்தப் பயன் குறைவாக இருந்து தண்ணீர் மிகுதியாக இருக்குமானால் அந்தத் தண்ணீரை நீட்டிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதையும் அதற்காக இரண்டு ஆண்டுகளுக்கு உரிய தண்ணீர் வரத்து பரிசீலிக்கப்பட்டு அதற்குரிய முடிவுகள் எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, பேறை பகுதியைப் பொறுத்த அளவில் சொல்லவில்லை. மாறப்பாடிக்கு அதை விஸ்தரிப்பதற்கு ஏற்கெனவே ஆய்வு செய்யப்பட்டது. பேறை என்ற பகுதி அந்தக் கால்வாயில் தொடர்ச்சியாக பின்னாலே இருக்கிற பகுதி. அந்தப் பகுதியிலே 100 ஏக்கர் நிலம் நீர்ப்பாசன வசதிகள் இல்லாமல் இருப்பதால் கிளைக் கால்வாய் மூலமாக நீர்ப்பாசன வசதி பெறுவதற்கு வாய்ப்பு இருப்பதால் அதையும் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: துணைத் தலைவர் அவர்களே, கிளைக் கால்வாய் வெட்டவேண்டுமென்று சொன்னால்கூட, தேவையான அளவுக்குத் தண்ணீர் இருந்தால்தான்



வெட்ட முடியும். இல்லாவிட்டால் கிளைக் கால்வாய் வெட்டி எந்தவிதப் பயனும் இருக்காது. ஆகவே, எந்த அளவுக்குத் தண்ணீர் இருக்கிறது என்பதைப் பார்ப்பதற்காக அந்த ஆய்விலே தான் துறை தற்போது ஈடுபட்டிருக்கிறது.

டாக்டர் தே. குமாரதாஸ்: துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் சித்தாறுபட்டணங்கால் என்ற திட்டத்தின் கீழ் வெட்டப்பட்ட கால்வாயில், முதலாவது வெட்டப்பட்டபோது சில பகுதிகளிலே வெட்ட கூடாது என்று அந்தந்தப் பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததன் காரணமாக சேனல் வெட்டப்படாமல் இருந்தது. இப்போது அந்தச் சேனல் வெட்டப்பட்டதால் ஏற்பட்டுள்ள நன்மைகளை மக்கள் பார்த்துவிட்டு, இன்றைக்கு அந்தப் பகுதிகளிலேயும் இந்தச் சேனல் வெட்டப்பட வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நானும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அவைகளைக் கொடுத்திருக்கிறேன். ஆகவே, மறுபரிசீலனை செய்து அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிகளிலேயும் சேனல்களை வெட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரிமாவட்டத்தைப் பொறுத்தமட்டிலும் இருக்கக்கூடிய கால்வாய்களை நவீனப்படுத்தவும் தேவையான அளவு பாசனத்திற்கு நீர் கொடுக்கக்கூடிய முறையிலே சீர் செய்வதற்கும் 34 கோடி ரூபாய் அளவில் திட்டம் ஒன்றை அரசு பரிசீலித்து வருகிறது. இதைத் தவிர வேறு விவரங்கள் என்னிடத்திலே இல்லை.

வேறு விவரங்கள் வேண்டுமானால் தனிக் கேள்வி போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

### வெலிங்டன் நீர்த் தேக்கம்

131—(*) வினா எண். 309—திரு. செ. தங்கராசு: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மங்களூர் தொகுதியில் உள்ள வெலிங்டன் நீர்த் தேக்கத்தை தூர்வாரி ஆழப்படுத்தவும் அகலப்படுத்தவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அத்திட்டம் எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) மங்களூர் தொகுதியில் உள்ள வெலிங்டன் நீர்த்தேக்கத்தை தூர்வாரி ஆழப்படுத்தவும் அகலப்படுத்தவும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்போது நிலுவையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. தங்கராசு : துணைத் தலைவர் அவர்களே, வெலிங்டன் நீர்த்தேக்கம் சுமார் 100 ஆண்டுக்காலத்திற்கு முன்பு வெட்டப்பட்டது. தற்போது ஏரியில் தூர்படிந்து நீர் கொள்ளளவு குறைந்திருக்கிறது. அதன் காரணமாக பாசனத்திற்குத் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு சம்பந்தப்பட்ட விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். புரட்சித் தலைவர் அரசு, விவசாயிகளுடைய அரசு. உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசின் திட்டம் உதவவேண்டும் என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. கிட்டத்தட்ட 36 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி உள்ள அந்தத் திட்டத்தை தாயுள்ளத்தோடு புரட்சித் தலைவர் அரசு பரிசீலனை செய்ய வேண்டும். புதிதாக ஏரிகளை உருவாக்குவதற்குப் பதிலாக இம்மாதிரியான ஏரிகளைச் சீர்செய்து ஏன் விவசாயிகளுக்கு உதவக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : துணைத் தலைவர் அவர்களே, ஏரிகளைப் பொறுத்தமட்டிலும் பல ஏரிகள் இன்றைக்கு தூர்வாரக்கூடிய நிலையில் இருக்கின்றன என்றாலும் தூர்வாருவதற்கான நடவடிக்கைகளை அவ்வப்போது இந்தத் துறை மேற்கொண்டுதான் வருகிறது. அது நீங்கலாக புதிய, பழைய முறைகளின் அடிப்படையில் அமைந்துள்ள அந்த ஏரிகளில் வருகின்ற தண்ணீர் அல்லது சேமித்து வைக்கப்படும் தண்ணீர் தற்போது உள்ள ஆயக்கட்டுகளுக்கு எப்படியெல்லாம் பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பார்த்தும், அது நீங்கலாக இதர வெள்ளக்காலங்களில் அல்லது மழைக் காலங்களில் காட்டு ஓடைகளைத் தடுத்து ஆங்காங்கே நீர்த்தேக்கங்களைக் கட்டுகிறோமே தவிர, இருக்கின்ற நீர்நிலைகளைப் பாதுகாக்கத் தவறிவிட்டது என்று சொல்வது சரியல்ல. இருந்தாலும் தகுந்த முயற்சிகளை மேற்கொள்ளும்.

திரு. செ. தங்கராசு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, **

* *    * *    * *

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



திரு. க. அன்பழகன் : துணை சபாநாயகர் அவர்களே, தாங்கள் இந்தச் சட்டமன்றத்தில், கேள்வி நேரத்தில் ஏற்கனவே இருந்த அரசின்மீது ஒரு பரவலான குற்றச்சாட்டைச் சாட்டி அதன் மூலமாகக் கேள்வி எழுப்ப அனுமதி இல்லை என்பதை ஏற்கனவே ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். தாங்கள்தான் கேள்விகளைக் கவனிக்கின்ற பொறுப்பிலே இருக்கிறீர்கள். ஒரு பெரிய குற்றச்சாட்டைச் சொல்லி, அதற்கு ஆதாரம் இருக்கிறதோ இல்லையோ, ஆனால் ஒரு தவறான எண்ணம் ஏற்படும்வகையில் ஏற்கனவே நடந்த ஆட்சியின் மீது சொல்லிவிட்டு கேள்வியைக் கேட்க அனுமதித்து இருக்கிறீர்கள். அது நியாயம்தானா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : குற்றச்சாட்டு இல்லாமல் கேள்வியாக கேட்க வேண்டும். குற்றச்சாட்டாகச் சொன்ன பகுதிகளை நீக்கிவிட்டு புதிதாக உறுப்பினரவர்கள் கேள்வி கேட்க வேண்டும். கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு வேண்டாம். எனவே, அந்தப் பகுதி நீக்கப்பட்டு விட்டது.

திரு. செ. தங்கராசு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்தப் பகுதி விவசாயிகள் எனக்கு அளித்த தகவலின் அடிப்படையில், உண்மையின் அடிப்படையில் கேட்டுவிட்டேன். தவறாக இருந்தால்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தப் பகுதியை நீக்கியாகிவிட்டது. குற்றச்சாட்டு இல்லாமல் கேள்வியாகக் கேட்க வேண்டும்.

திரு. செ. தங்கராசு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்த வெலிங்டன் நீர்த்தேக்கத்தை இந்த நிதியாண்டிலேயாவது தூர்வாரி ஆழப்படுத்துவதற்கு அமைச்சரவர்கள் முயற்சிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, வெலிங்டன் நீர்த்தேக்கத்தைப் பொறுத்த வரையிலும், ஏரி வரத்து வாய்க்கால் தூரை அகற்றல், ஏரி தூர் வாருதல், எதிர் வாயில் திட்டு சமப்படுத்தப்படுதல், நீர்த்தேக்கக் கரைகளைப் பலப்படுத்துதல், அடைப்பு வாயிலுக்குக் கதவுகளை மாற்றுதல் போன்ற பணிகளுக்காக 1973—74 ஆம் ஆண்டு 14,85,000 ரூபாய் செலவில் திட்டம் தீட்டப்பட்டது. ஆனால் அந்தத் திட்டம் 1976—77-இல்தான் துவங்கப்பட்டு, முடிக்கப்பட்டது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். என்றாலும், எப்பொழுது அந்தத் திட்டம் போடப்பட்டது என்பது தெரியுமே ஒழிய, அந்தத் திட்டம் 1976—77-இல் ஏன் முடிக்கப்பட்டது என்பதும், உரிய

காலத்தில் முடிக்கப்பட்டதா என்பது குறித்தும் சொல்லக் கூடிய விவரங்கள் தற்பொழுது என்னிடத்தில் இல்லை. இருந்தாலும் தற்பொழுது அந்த வெலிங்டன் ஏரியைப் பொறுத்த வரையில் இந்த நான்கு பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன என்பதை இப்பொழுது சொல்ல முடியும். இந்த வேலைகள் சீராக இருக்கின்றன.

திரு. மா. கதிர்வேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் தமிழகம் முழுவதும் உள்ள நீர்ப்பாசனத்திற்குரிய ஏரிகளில் மதகுகள் பழுதடைந்த நிலையில், ஒரு போக, இருபோக சாகுபடி செய்யும் இந்தக் காலகட்டத்தில், வறட்சி போன்ற சூழ்நிலைகள் ஏற்படுகின்ற காலகட்டத்தில் பயன்படுத்துவதற்கான தண்ணீரைத் தேக்கி வைத்துக்கொள்ளப் பயன்படுகின்ற ஏரிகளின் மதகுகளைச் சீர் செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, பழுதடைந்த மதகுகளை அவ்வப்பொழுது அரசு சீர் செய்துதான் வருகிறது.

(முற்பகல் 10-30)

திரு. கே. பாலாஜி:: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இப்பொழுது கூறுகின்ற நேரத்திலே, புதிதாக ஏரிகளைத் தமிழகத்திலே உருவாக்கிக் கொண்டு வருகிறோம் என்று சொன்னார்கள். அப்படி ஏற்படுத்தப்படுகின்ற ஏரிகள் ஒவ்வொன்றையும் ரூ. 20 இலட்சத்திற்கு மேலாக, கிட்டத்தட்ட ரூ. 1 கோடி அளவில் ஏற்படுத்துகிறார்கள். அந்தப் பணத்தை, பழைய ஏரிகளை ஆழப்படுத்த, அவற்றைப் பராமரிக்கச் செல விடுவார்களானால் நீர்ப்பாசன நிலங்கள் அதனால் பயன்பெறும் என்பதை எடுத்துக் கூறி, அதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய.விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ,யா சை மு. யூசு ப்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பழைய ஏரிகளையும் தூர் வாருவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாக வேண்டும். அதே நேரத்தில், நாட்டிலுள்ள அமைப்பின்படி புதிய திட்டங்களை அவ்வப்போது மேற்கொள்ள வேண்டியது நியாயமானதாக இருக்கும் என்பதை மாண்புமிகு.உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். அந்த அடிப்படையில்தான் பழையஏரிகளைப் பழுதுபார்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதே நேரத்தில் புதிய திட்டங்களையும் இந்தத் துறை உருவாக்கிக் கொண்டு வருகிறது.



திரு. அ. பிரணவநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க கிருதமால் நதி திட்டம் 1975 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு இப்பொழுது அது அப்படியே நிறுத்தப்பட்டிருக்கிறது. அதனுடைய துணைத் திட்டமாக மலட்டாறு திட்டமும் 1974 ஆம் ஆண்டு ரூ. 2 கோடிக்கான அரசாணை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்தத் திட்டமும் இன்று முடக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கு இந்த அரசுக்கு எண்ணம் இருக்கிறதா என்பதை அமைச்சரிடத்திலே கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது என்னிடத்திலே விவரங்கள் இல்லை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடட்டும்.

திரு. எல்ல. இராசமாணிக்கம்.: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய .தொகுதியில் பொதுப் பணித் துறையைச் சேர்ந்த எல்லா ஏரிகளிலும் தண்ணீர் வற்றிவிட்ட நிலையில் திடீரென்று ஒரு வார காலமாக குடிசைகள் முளைத்துக் கொண்டே இருப்பதை அரசு ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏரிகளைப் பொறுத்த மட்டிலும் குடிசைகளைப் போட ஆக்கிரமிப்பு செய்தாலும், அல்லது பயிர் செய்வதற்கு நிலங்களை ஆக்கிரமிப்பு செய்தாலும், உரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதே முறையிலே இந்தத் துறையைச் சேர்ந்த அலுவலர்கள் அறிவுறுத்தப்படுவார்கள்.

திரு. சா. துரைசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றத் தொடரிலேயே சொல்லப்பட்டது வேளச்சேரி ஏரியை பழுதுபார்க்கின்ற திட்டம் அமுல்படுத்தப்படும் என்று. இன்னும் அந்தத் திட்டத்திற்கான வேலைகள் துவக்கப்படவில்லை. அல்லது டெண்டர்.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக் கேள்வியோடு தொடர்புடையதாக துணைக் கேள்வி கேளுங்கள்.

திரு. எஸ். என். இராமசாமி : .மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மணிமுத்தாறு கால்வாய் இரண்டு பிரிவாகச் சென்று கொண்டிருக்கிறது. அதில் மூன்றாவது பிரிவைச் சேர்ந்த மூலக்கரைப் பட்டிக்கும் பழங்குளத்திற்கும்

இடையே உள்ள சுமார் 10 மைல் உள்ள கால்வாயை ஆழப் படுத்தி, அகலப்படுத்தித் தருவதற்கு இந்த அரசிடம் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : துணைக் கேள்வியை மூலக் கேள்விக்குத் தொடர்புடையதாகக் கேட்க வேண்டும். மங்களூர் தொகுதியில் உள்ள நீர்த்தேக்கம் பற்றி மூலக் கேள்வி இருக்கும்போது, மணிமுத்தாறு பற்றி கேட்டால், அமைச்சர் பதில் சொல்வதற்கு வாய்ப்பு இருக்காது.

சோத்துப்பாறை நீர்த்தேக்கத் திட்டம்.

132—*வினா எண் 415 திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் சோத்துப்பாறை நீர்த்தேக்கத் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி தந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மத்திய மாநில அரசு பங்கு என்ன ? எத்தனை ஏக்கர் பாசன வசதி கிடைக்கும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) சோத்துப்பாறை நீர்த்தேக்க திட்டத்திற்காக வேண்டிய வன நிலங்களை எடுத்துக்கொள்ள மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(ஆ) மத்திய அரசு பங்கு எதுவும் இல்லை. இத்திட்டத்தின் மூலம் 2,892 ஏக்கர் நிலங்கள் பயனடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் சோத்துப்பாறை நீர்த் தேக்கத் திட்டத்திற்கு எத்தனை ஹெக்டேர் நிலங்களை எடுக்க அரசு உத்தேசித்துள்ளது ? மத்திய சர்க்கார் சுமார் 4½ ஹெக்டேர் நிலம்—வன இலாகாவிற்குச் சொந்தமான நிலத்தை—கொடுக்க மறுப்பதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மையா ? அதைப் பெறுவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிவதோடு, அனுமதிக்கப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு வன இலாகாவிடமிருந்து அனுமதி பெறுவதில் காலதாமதம் ஏற்படுகிறதே அதைத் தடுக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன ? எத்தனை திட்டங்கள் இதன் காரணமாக நிலுவையில் உள்ளன் என்பதை அறிய விரும்புகிறேன்,





மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினைப் பொறுத்தமட்டிலும் நம்முடைய அரசு இந்தத் திட்டங்களை மேற்கொள்வதற்கு 18.57 ஹெக்டேர் நிலம் வனத் துறையிடமிருந்து கையகப்படுத்த வேண்டுமென்ற நிலையில் இருந்தது அதற்கு வனத்துறை மத்திய அரசு அனுமதியோடு 14.55 ஏக்கர் நிலத்தை மட்டும் எடுத்துக் கொள்ள ஒப்புதல் வழங்கியது. நீர்த் தேக்கம் கட்டுவதற்கு மேலும் 4.02 ஏக்கர் நிலம் தேவை என்று இந்தத் துறை தெரிவித்ததை மத்திய அரசு ஒப்புக்கொள்ளவில்லை. ஆகவேதான் 4.02 ஏக்கர் நிலத்தை, மத்திய அரசு வனத்துறையிலிருந்து தர வேண்டிய அந்த நிலத்தை, தரவில்லை என்பதையும் அதன் காரணமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பணச் செலவு அதிகமாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதர விவரங்கள் தற்போது என்னிடம் இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : துணைத் தலைவரவர்களே, மேற்படி அணைக் கட்ட எத்தனை இலட்சம் ரூபாய் செல்வு பிடிக்கும் ? தமிழ் நாட்டில் இதைப்போன்று பல அணைகள் கட்ட திட்டமிடப்பட்டு, பி.சி. ரேஷியோ சரியில்லை என்ற காரணத்தால் கைவிடப்பட்டிருக்கின்றன. ஆகவே, பின்தங்கிய பகுதிகளில் கட்டப்படுகின்ற இப்படிப்பட்ட அணைக்கட்டுகளுக்கு பி.சி. ரேஷியோ என்ற கணக்கைப் பார்க்காமல் இந்த அணையைக் கட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: துணைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் 1982 ஆம் ஆண்டு 791 இலட்சம் ரூபாய் செலவில் மதுரை மாவட்டம் பெரியகுளம் வட்டத்தில் உருவாக்கப்பட அரசு ஒப்புதல் வழங்கியது. பி.சி. ரேஷியோவைப் பொறுத்தவரையில் அதனால் பாதிக்கப்பட்ட திட்டங்கள் எத்தனை, அரசால் கைவிடப்பட்ட திட்டங்கள் எத்தனை என்ற விவரங்களை நான் சொல்ல இயலாத நிலையில் இருக்கிறேன். அதற்கு தனிக் கேள்வி போடவும்.

திரு. வே. இரா. ஜெயராமன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த பி.சி. ரேஷியோ'', 'அன்-எக்னாமிக்', அன்-ரெமூனரேட்டிவ்' என்ற முறையில் பல திட்டங்கள் அரசால் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்

சர் அவர்கள் தெரிவித்தார்கள். அத்தகைய திட்டங்களை புதிதாக இருக்கக்கூடிய 'ஆர்.எல்.இ.ஜி.பி.' திட்டத்தின் கீழ் கொண்டுவந்து, 'பெனிபிட் காஸ்ட் ரேஷியோ' வைப் பார்க்கமல் செயல்படுத்தும் புதிய கொள்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : துணைத் தலைவரவர்களே, பயன்பாட்டு செலவு விகிதத்தைப் பொறுத்தமட்டில் இப்போது கணக்கிடும் முறையிலிருந்து ஒரு சிறு மாற்றத்தைத் தந்து, அது எப்படி செயல்படுகிறது என்ற ஆய்வில் இந்தத் துறை பரீட்சார்த்தமாக ஈடுபட்டிருக்கிறது. இதுவரையில் இந்த பயன்பாட்டு செலவு விகிதத்தை, அதற்கு வரையறை செய்யப்பட்டுள்ள 'நார்ம்ஸ்' படி, வருவாய்த்துறை கணக்கிட்டு வந்தது. ஆனால் தற்போது வேளாண்மைத் துறையில் உருவாக்கப்பட்ட பல்வேறு மறுமலர்ச்சிகாரணமாக, வீரிய வித்துகள் போன்ற பல்வேறு புதிய முயற்சிகள் வாயிலாக இந்த பயன்பாட்டு செலவு விகிதத்தை மாற்றக்கூடிய அளவுக்கு சூழ்நிலை உருவாகி இருக்கிறது. ஆகவே இந்த புதிய முறைகளினால் பெனிபிட் காஸ்ட் ரேஷியோவை வருவாய்த் துறை கணக்கிடுவதற்குப் பதிலாக இந்தப் பணியை வேளாண்மைத் துறையிடம் ஒப்படைக்கலாம் என்ற முயற்சியில் இந்தத் துறை ஈடுபட்டிருக்கிறது. இந்த முயற்சி வெற்றியடைந்தால் பெனிபிட் காஸ்ட் ரேஷியோவில் மிகப்பெரும் மாற்றம் ஏற்படும். அதன் வாயிலாக பல திட்டங்கள் ஒத்தி வைக்கப்படுகின்ற நிலைமை இல்லாமல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. அ. பாலுசாமி : தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில் சிறுமலை நீர்த்தேக்கத் திட்டம் என்று ஒரு திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஆய்வு செய்து, அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளதாக அங்கே இருக்கிற பொறியாளர்கள் கூறுகிறார்கள் அந்தத் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதா ? அந்தத் திட்டத்தை இந்த நிதியாண்டிலேயே எடுத்து, நிறைவேற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, பாறையைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்போது மலைக்கு வந்துவிட்டார்கள். தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.



## மோர்தானா அணைக்கட்டுத் திட்டம்.

133—*வினா எண் 573—திரு. ஆர். கோவிந்தசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்ளுகுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், குடியாத்தம் தாலூகா, மோர்தானா அணைக்கட்டு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. : யூசுப் : (அ) மற்றும் (ஆ) வட ஆற்காடு மாவட்டம், குடியாத்தம் கிராமத்தின் அருகில் மோர்தானா நீர்த்தேக்கத் திட்டத்தின் நீர் இயல் ஆய்வு தலைமைப் பொறியாளரால் (ஆய்வு) மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருப்திகரமான நீரியல் அளவுகள் கிடைத்தால் இத்திட்டத்தை பரிசீலனைக்கு அரசு எடுத்து கொள்ளும்.

திரு. ஆர். கோவிந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மோர்தானா நீர்த்தேக்கத் திட்டம் வட ஆற்காடு மாவட்டத்திலே 1954-லே ஆரம்பிக்கப்பட்டு ஆய்வுகள் எல்லாம் நடைபெற்றது. பின்னர் பெரிய திட்டங்களை எடுத்துக் கொள்ளலாம் என்று கருதியதால் இந்தத் திட்டத்தை மாண்புமிகு தலைவர் காமாராஜ் அவர்கள் காலத்தில் நிறுத்திவிட்டார்கள். ஆனால் இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் நான்கு சட்டமன்றத் தொதிகளுக்குப் பாசன வசதி கிடைக்கும். பேரணாம்பட்டு, அணைக்கட்டு, காட்பாடி, குடியாத்தம் ஆகிய நான்கு சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும். அதுமட்டுமல்ல. அடி நீர் ஊற்றும் கிடைக்கும் என்று அங்கே ஆய்வு நடத்தியவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எனவே இதனை உடனடியாக அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று மிகவும் பணிவோடு கேட்டுக் கொண்டு இதனை நிறைவேற்ற வேண்டும் என்று அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எப்போது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது என்பது எனக்குத் தெரியாது. ஏனென்றால் ஆய்வு அறிக்கை 1973 ஆம் ஆண்டு பெறப்பட்டிருக்கின்றது. அவ்வாறு ஆய்வறிக்கை பெறப்பட்ட நேரத்தில் பாலாற்றில் நீர்வரத்து குறைவு என்பதால் அதாவது பாலாறு அணையில் உபரி நீர் குறைவு என்ற கருத்தின் அடிப்படையில்

இந்தத் திட்டத்திற்கு அன்றைய அரசு அனுமதி வழங்க மறுத்து இருக்கின்றது. இப்போது புதிதாக அந்தத் திட்டத்திற்கு மறுபடியும் உயிர் கொடுக்க முடியுமா என்றுதான் புதிய நீர்நிலை ஆய்வுகளைக் கணக்கிடுவதற்காக இந்த அரசு உத்தரவிட்டிருக்கின்றது. அந்த அடிப்படையில் ஏற்கெனவே 7 ஆண்டுக் காலத்திற்கான புள்ளி விவரங்கள் இருக்கின்றன. இன்னும் மூன்றாண்டு காலத்திற்கான புள்ளி விவரங்கள் கிடைத்தால் அந்தப் படுகையில் தண்ணீர் அளவைச் சரியாகத் தெரிந்துகொள்ள முடியும். அந்த ஆய்வின் அடிப்படையில் உரிய முயற்சிகளை மேற்கொண்டு இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த இருக்கிறோம்.

ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு இந்தத் திட்டத்தால் பயன்கிடைக்கும் என்று சொன்னதைப் பொறுத்த வரையில் அவர்கள் தவறாகக் கருதிக் கொண்டு இருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். 9,021 ஏக்கர் நிலம் இந்தத் திட்டத்தால் பாசன உறுதியைப் பெறும். 1,127 ஏக்கர் நிலங்களுக்குப் பற்றாக்குறை நீங்கும் என்று தான் இங்கே புள்ளி விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன.

திரு. ஆர். கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. ஆந்திர பகுதியிலிருந்து வரக்கூடிய கவுண்ட மகாநதியின் குறுக்கே தான் இதனைக் கட்ட வேண்டும். எனவே தயவுசெய்து அதைப் பரிசீலிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் கவுண்ட மகாநதியின் குறுக்கேதான் கட்டப்பட வேண்டும். அதாவது மோர்தானா நீர்த் தேக்கத் திட்டம் அவ்வாறு தான் அமைய வேண்டும் என்பதை அரசு நன்றாகத் தெரிந்து வைத்திருக்கின்றது. பல ஆறுகளை பாலாற்றோடு இணைத்து பாலாறு பேசின் ரூல்ஸ் என்று தனியாக ரூல்ஸ் இருக்கின்றன. அந்த வகையில் பாலாற்றுப் படுகையைப் பொறுத்த வரையில் தனியான ஒரு திட்டத்தின் அடிப்படையில்தான் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையில் தான் பாலாற்றோடு இணைத்து இந்தத் திட்டம் பற்றிப் பேசப்படுகின்றது என்பதையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. சு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் பரிசீலனையில் உள்ளது என்பது தவறான தகவல். ஏற்கெனவே, அன்றைக்கு இருந்த முதல் அமைச்சரால் இத்திட்டத்திற்காக கால்கோள் விழா நடத்தப்பட்டது. அவ்வாறு கால்கோள் விழா நடத்தப்பட்டு அடிக்கல்





போடப்பட்டிருக்கின்றது. அதன் பின்னால் தான் இந்தத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டிருக்கின்றது. அந்தக் காரணத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே 1973 ஆம் ஆண்டு தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அரசுக்கு இந்தத் திட்டத்தை அனுப்பி பாலாறு படுகையில் தண்ணீர் குறைவாக இருப்பதாலும், பாலாறு அணையில் உபரி நீர் குறைந்திருப்பதாலும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த இயலவில்லை என்ற அந்த அடிப்படையில் அன்றைய அரசு இந்தத் திட்டத்தை மேற்கொள்ளவில்லை என்பதையும் அப்படிப்பட்ட சூழ்நிலையில் எப்படி கால்கோள்விழா நடத்தினார்கள் என்ற விவரத்தை நான் தெரிய முடியாத நிலையில் இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### தஞ்சை மாவட்டத்தில் விவசாயக் கடன் வசூல்

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கிறது. தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டி தாலுக்காவில் விவசாயிகள் மீது கெடுபிடியான கடன் வசூல் நடவடிக்கை எடுக்கப்பட்டு ஜப்தி செய்யப்பட்டு துன்புறுத்தப்படுவதாகத் தந்தி வந்து கொண்டு இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கான அறிவிப்புகளை உரிய முறையில் கொடுங்கள். எடுத்துக்கொள்ளலாம்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### மூர் மார்க்கெட் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் அ. ரகுமான்கான், பொ. உத்திராபதி, பொன் முத்துராமலிங்கம், அ. பிரணவநாதன், சு. பாலன், அ செல்வராசன், ஜெ. ஹேமசந்திரன், கோ. வீரய்யன், எம், செல்லமுத்து, கு. ரமணி,

ப. பொன்னுரங்கம், மா. மணிமாறன், ஆ. நடராசன், எஸ். வேணுகோபால், சு. சிவராஜ் மற்றும் க. அன்பழகன் ஆகியோர் ''மூர் மார்க்கெட் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

***திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவையின் தலைவர் அவர்களே, கடந்த 31 ஆம் தேதி இரவு சென்னை மாநகரத்தினுடைய வரலாற்றில் மிக மிக வருந்தத்தக்க துக்ககரமான ஒரு நிகழ்ச்சியாக, ஏறத்தாழ 85 ஆண்டுக் காலமாக சென்னை நகரத்திற்கே ஒரு சிறப்பினை தந்து வந்த, பயன்மிக்க, பொது மக்களுடைய நலனைப் பாதுகாத்து வந்த மூர் மார்க்கெட் என்னும், மூர் அங்காடி இரவு 10-30 மணி அளவிலே நெருப்புப் பிடிக்கத் தொடங்கி மறுநாள் காலை 7 மணி அல்லது 8 மணி வரையிலே எரிந்து முழுவதும் பாழ்பட்டு, சாம்பல் ஆகிவிட்டது.

மூர் மார்க்கெட் என்பது ஒரு வரலாற்றுச் சின்னமாக சென்னை மாநகரத்திலே அமைந்த ஒன்று. ஏறத்தாழ ஆயிரத்திற்கும் மேற்பட்ட, ஏன், 1200-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் நடத்தக்கூடிய கடைகள்; அவர்களின் குடும்பங்கள் அந்த மூர் மார்க்கெட்டையே அடிப்படையாக வைத்துபிழைப்பை நடத்தி வந்தனர். பெரிய வியாபாரிகளிலேயிருந்து சின்ன வியாபாரிகள் வரையில்—10 லட்சம் 15 லட்சம் முதலீடு செய்து வியாபாரம் நடத்திய வியாபாரியிலிருந்து ஆயிரம் இரண்டாயிரம் தினசரி வைத்து முதலீடு செய்து வியாபாரம் செய்கிறவர்கள் வரையில்—எல்லாமாகச் சேர்ந்து ஒரு மிகப் பெரிய வியாபார அமைப்பு நிலையமாக அந்த இடம் நிலவி வந்தது. 31 ஆம் தேதி இரவு ஒரு தொழிலாளருடைய கடையில் (குறுக்கீடு).

தேதியை நான் என்னுடைய நினைவிலேயிருந்து சொல்கிற காரணத்தால் சற்றுத் தவறுதலாக இருந்தால் மன்னித்துக் கொள்ள வேண்டுகிறேன். அன்று இரவு 10-30 மணியளவில் ஒருவருடைய கடையிலிருந்து தீப்பிடித்ததாகச் சொல்லப்பட்டு, உடனடியாக அங்குத் தீப்பிடித்த விவரம் அங்குள்ள வியாபாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் தெரிந்து, அந்தச் செய்தி காவல் துறைக்கும், தீயணைப்புத் துறையைச் சார்ந்தவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டு, 1/2 மணி நேரம் அளவில் அல்லது ஒரு மணி நேரத்திற்குள்ளாக, தீயணைப்பு பிரிவைச் சார்ந்தவர்களும், காவல் துறையைச் சார்ந்தவர்களும் அங்கே வரக்கூடிய நிலைமை ஏற்பட்டு, அவர்கள் அந்த கடையிலே பிடித்த தீயை தீவிரமாக அணைக்கின்ற முயற்சி எடுப்பது எந்தக் காரணத்





தினாலோ சற்று தாமதமாக ஆக்கப்பட்டதனாலே—அதிலும் தீப்பிடிப்பது என்பது ஒரு கடையிலே பிடித்த தீ பக்கத்து கடையிலே பரவியது என்று வழக்கமாக சொல்கிற நிலைமைக்கு மாறாக, மூர் மார்க்கெட்டிலே வெவ்வேறு மூலைகளிலேயும் தீப்பிடித்ததாக அங்கிருந்த வியாபாரிகள் சொல்கிறார்கள்.

ஒரு கடையிலே தீப்பிடித்து, அது தொடர்ந்து அடுத்த கடையிலே பரவி அதற்குப் பக்கத்திலே இருந்த பண்டங்களில் தீப்பிடித்து பக்கத்திலே இருக்கின்ற, கடைக்குப் பரவியது என்று சொல்கின்ற நிலைமைக்கு மாறாக—12 மணி 1 மணி வரையில் அந்தத் தீ முழுவதுமாக அணைக்கப்படாத நிலையிலேயே, மூர் மார்க்கெட்டில் கடைகள் உள்ள பகுதியில் மேற்கிலோ அல்லது தெற்குப் புறத்திலே தீ பிடித்தது என்றால், அது அப்படியே அந்த வாக்கிலேயே பரவி இன்னொரு கடையிலே தீப்பிடித்தது என்று சொல்ல முடியாத வகையில், வேறு ஒரு புறத்தில் அதற்குப் பின்னர்—வடக்குப் பகுதியிலோ வேறு பகுதியிலோ தீப்பிடித்தது என்று பல இடத்தைக் காட்டுகிறார்கள் வியாபாரிகள். அப்படி 3, 4 இடங்களில் தீப்பிடிக்கத் தொடங்கி, அதற்குப் பின்னர் காவல் துறையையும், தீயணைப்பு துறையையும் அங்கிருந்த வியாபாரிகள் போய் கேட்டுக் கொண்டு, அவர்களும் வந்து அவர்களால் முடிந்த அளவு ஒத்துழைப்புக் கொடுத்து தீயணைக்கச் செய்தார்கள் என்றாலும், முழு ஒத்துழைப்புக் கொடுப்பதற்கு மனம் இல்லையோ, வாய்ப்பு வசதி இல்லையோ, இருந்தாலும், கொடுப்பதற்கு மனம் இல்லாமலோ, அல்லது மனம் இருந்தாலும் அந்த மனம் தடுக்கப்பட்டோ, மூர் மார்க்கெட் மொத்தமாக எரிவதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-50)

மூர் மார்க்கெட் ஏறத்தாழ இரவு 12 மணி, 1 மணியளவில் அதனுடைய ஒரு பகுதி அணைக்கப்பட்டு, மிச்சப்பகுதி தீப்பிடிக்காமல் காப்பாற்றப்பட்டிருக்குமானால், அந்த மூர்மார்க்கெட் அந்த இடத்திலிருந்து அகற்றப்பட்டு வேறொரு இடத்தில் கட்டித்தரப்பட்டாலும் கூட, ஏறத்தாழ 10, 15 கோடி ரூபாய் பொருள் இழப்பு என்று இன்றைய தினம் கணக்கு எடுக்கிற நமக்கு ஒரு 5 கோடி அல்லது 3 கோடி இழப்பாக இருந்து, ஒரு 8 கோடி அல்லது 10 கோடி மிச்சமாகி, அந்த இழப்பு பொதுமக்களை முழு அளவிற்குப் பாதிக்காத அளவிற்கு நிலைமையை ஏற்படுத்தி இருக்கக்கூடும். அல்லது பாதி அழிவு தடுக்கப்பட வாய்ப்பு ஏற்பட்டிருக்கக்கூடும். ஆனால் எதிர்பாராத வகையில் மொத்தமாக அழிந்துள்ளது. இன்னும் சொல்லப்போனால் காவல் துறையைச் சார்ந்தவர்கள் தங்களுடைய கடமையைச் செய்வதிலே அவர்களுக்கு சில

கஷ்டங்கள் இருக்கின்றன என்பது நாம் அறிந்த உண்மை. ஏனென்றால், பொது மக்கள் வேடிக்கை பார்க்க வருகிறவர்களுடன் அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அங்கே இருக்கிற பொருள்களை அள்ளிக்கொண்டு போக வருகிறவர்கள், அவர்களும் இந்த சமுதாயத்திலே உண்டு. வியாபாரிகளா, வியாபாரிகளுக்கு வேண்டியவர்களா, அன்னியர்களா என்று தெரியாமல் சில இடங்களில் தீப்பிடித்ததை அணைக்கச் சென்றவர்களையும் சேர்த்து அதற்கு சம்பந்தப்பட்டவர்களையும் சேர்த்து காவல் துறை தடுக்க நேரிட்டு இருக்கிறது. அது எதிர்பாராமல் ஏற்படக்கூடிய சூழ்நிலையின் விளைவு. ஆனால் தீயணைப்புத் துறையைச் சார்ந்தவர்கள் தங்களுடைய முழு சக்தியையும் பயன்படுத்தினார்களா என்பது மிகப் பெரிய கேள்விக் குறியாக இன்றைக்கு இருக்கிறது. ஏனென்றால், அங்கே வந்திருந்த மிக நவீனமான 100 அடி 200 அடிக்கு மேலேயிருந்து தீயை அணைப்பதற்காக, தீயணைப்புத் துறைக்கு அண்மை காலத்தில் கிடைத்திருக்கிற நவீனமான வாகனம் அங்கே கொண்டு வரப்பட்டு, பயன்படுத்தப்படாமல் சற்று தொலைவில் கொண்டு போய் நிறுத்தப்பட்டு விட்டது என்று அத்தனை பேரும் சொல்கிறார்கள். அது வேண்டுமென்று கொண்டு செல்லப்படவில்லை என்றால் அது நிரூபிக்கப்பட வேண்டும். ஏனென்றால் தண்ணீர் கிடைக்கவில்லை என்றோ, இன்னும் சொன்னால், பக்கத்திலே இருக்கிற கூவத்திலிருந்து தண்ணீர் எடுத்தால் அந்தத் தண்ணீர் சேறாக இருக்கிறது என்ற காரணத்தால் தீயணைப்புத் துறை சரியாக பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்படும். அந்தக் கருவிகள் பயன்படாது நின்றது என்றோ அங்கேயிருந்து தண்ணீர் எடுக்க இயலவில்லை என்றோ காரணம் சொல்லக் கூடும். ஆனால் தீயணைப்பு படையைச் சார்ந்த 10, 12 வண்டிகள் வந்திருந்தும் கூட முழு அளவிற்கு அவைகளை பயன்படுத்த முடியாத நிலைமையில் சென்ட்ரல் ஸ்டேஷன் சார்பாக, மதிய ரெயில்வே நிலையத்தின் சார்பாக மூர்மார்க்கெட்டிற்கு வடக்குப் பகுதியில் கட்டப்பட்டிருக்கிற ஒரு புதிய கட்டிடம் பாதிக்கப்படக் கூடாது என்ற ஒரே ஒரு காரணத்திற்காகவே 4, 5 வண்டிகள் அங்கேயே நிறுத்தப்பட்டன என்று கூறுகின்றனர். அங்கேயுள்ள அதிகாரிகள் உடனடியாக நெருப்பு பிடித்த பகுதியிலே அவைகளை பயன்படுத்த அனுமதிக்காமல், தங்கள் கட்டடத்திற்குப் பாதுகாப்பாக, அங்கேயே நிறுத்தி வைத்து விட்டார்கள் என்று அங்கேயுள்ள வியாபாரிகள், மிக வேதனையோடு வருத்தத்தோடு சொல்கிறார்கள். தீயணைப்புப் படையைச் சார்ந்தவர்களுக்கு மூர்மார்க்கெட் எரியவேண்டுமென்ற நோக்கம் இருக்குமென்று நான் தவறாகச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் அவர்களுக்குப் பிறப்பிக்கப்பட்ட ஆணையோ வற்புறுத்தலோ அவர்கள் தங்கள் கடமையை முழு அளவிற்குச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது காரணமாக



ஒரு பெரிய இழப்பு ஏற்பட்டுள்ளதால், இனி அந்த இடத்திலே மூர்மார்க்கெட்டை முன்போல பார்க்க முடியாது என்பதுடன் அந்த வியாபாரிகள் முன்போல் வாழ்வு பெறமுடியாது என்பதும் வேதனையளிக்கிறது. அவர்களுக்கு இன்னும் ஒரு மூன்று மாதகாலத்தில், ஆறு மாத காலத்தில் அரசாங்கம் முன்வந்து அவர்களுக்காக வேறு இடத்தில் லில்லி பாண்ட் என்று சொல்லப்படுகிற அல்லிக்குளத்தின் பகுதியில் ஏற்கனவே இந்த அரசு ஒரு முறை ஏற்றுக்கொண்ட முடிவின் அடிப்படையில், அந்த இடத்தில் கடைகள் கட்டித் தந்தாலும் கூட, இடையில் எவ்வளவு காலம் ஆகுமோ, இடையில் அவ்வளவு காலமும் ஒரு நாளைக்கு 50 ரூபாயோ, 100 ரூபாயோ சம்பாதித்து குடும்பத்தை நடத்தி வந்தவர்கள், ஏறத்தாழ 2000, 3000 குடும்பங்கள் அந்த இடைக்காலத்தில் எப்படிப்பட்ட வேதனையில் அவர்கள் உழல்வார்கள் என்பது எண்ணப்படவேண்டும். வியாபாரிகளாக இருந்த காரணத்தால் பிச்சையெடுக்கவும் மனம் வராது. உதவி கேட்கிற இடத்திலே அவர்கள் நாகரீகமாக கேட்கிறபோது முழு அளவிற்கும் கிடைக்காது. நம்முடைய அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் சென்று பார்த்தார்கள் என்றால், 2000 ரூபாய் உதவி தரவேண்டுமென்று அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்றால், அந்த 2000 ரூபாய் என்பது நிர்க்கதியான நிலையில் உள்ளவர்களுக்கு ஒரு இரண்டு மூன்று வாரத்திற்கு அவர்கள் தங்கள் குடும்பத்தை நடத்த, பாதுகாக்க பயன்படுமே தவிர. தினந்தோறும் தொழில் செய்தவர்கள் பெற்றுவந்த லாபம் இல்லாத காரணத்தால், 50 ரூபாய் அல்லது 100 ரூபாய் என்று சம்பாதிக்க முடியாத காரணத்தால் அவ்வளவு பேருக்கும் ஏற்பட்டிருக்கிற இடர்பாடுகள் என்பது அவர்களால் தாங்க முடியாத ஒன்று. எனவே, அத்தனை பேரையும் பாதுகாக்கிற அளவிற்கு நம்முடைய அரசாங்கத்திலுடைய தீயணைப்புத் துறையைச் சார்ந்தவர்களும், காவல் துறையைச் சார்ந்தவர்களும் தங்களுடைய கடமையை முழு அளவிற்கு செய்வதற்கு வாய்ப்பு வசதி இருந்ததா? முழு அளவிற்கு செய்தார்களா? அல்லது செய்யவிடாமல் தடுக்கப்பட்டார்களா? இன்னும் சொல்லப்போனால் அங்கே தீ வெவ்வேறு இடத்திலிருந்து பரவியது என்று கூறப்படுவதால் ஏதாவது ஒரு உள்நோக்கத்தினால் அல்லது ஒரு வஞ்சக திட்டத்தினால் அப்படிப்பட்டதொரு நிலைமை ஏற்பட்டதா? மூர்மார்க்கெட்டை அந்த இடத்தை விட்டு அப்புறப்படுத்தியாக வேண்டுமென்று நான்கைந்து ஆண்டுகளாக கேட்டுக்கொண்டவர்களும், ஏறத்தாழ அந்தப் பகுதியை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவிருந்த நிலைமையில் அந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருந்த காரணத்தால் இந்த விபத்து ஏற்பட்டது என்பது வரவேற்கக்கூடிய விபத்தாகி விட்டதா? இவைகளை எல்லாம் பரிசீலிக்க வேண்டிய கட்டாயமான நிலைமை ஏற்பட்டு இருக்கிறது.

[திரு. க. அன்பழகன்] [1985 ஜூன் 5

அதுமட்டுமல்லாமல், மூர் மார்க்கெட்டிலே கட்டப்படி மாநகராட்சி மன்றத்திலிருந்து வாடகைக்காக ஆண்டு ஆண்டுக் காலமாக வாடகைக்கு இருக்கக்கூடிய வாடகைதாரர்கள் ஒரு சாரார், பெரிய வியாபாரிகள். அவர்களிடமிருந்து உள் வாடகைக்கு பல ஆண்டுகளாக அந்த இடங்களைப் பெற்று, தொழில் நடத்துபவர்கள் மற்றொரு சாரார். இன்னும் சொல்லப் போனால், அதற்கு அப்பாற்பட்டு, பக்கத்திலே உள்ள சிறு சிறு கடைகளாக, தனித்தனி பலகைகளைப் போட்டு கடைகளை வைத்து தொழில் நடத்துபவர்கள் இன்னொரு சாரார். ஆக இந்த மூன்று சாரார்கள், மூர் மார்க்கெட்டில் கடை வியாபாரிகளைப் போல் பிளாட்பார வியாபாரிகளைப் போல் வியாபாரம் செய்கின்றனர். மேலும் ஏழை ஆதி திராவிட மக்கள், அங்கே வியாபாரம் செய்கிறார்கள். பழ வியாபாரிகளோ, பூ வியாபாரிகளோ, அல்லது பழைய துணிமணிகளை விற்கக்கூடிய வியாபாரிகளாகவோ, பலர் இருக்கிறார்கள். மற்றவர்கள் வாங்கியிருக்கிற கடைகளைத் தாங்கள் உள் வாடகைக்கு எடுத்து, அதிலே தொழில் நடத்துபவர்கள் பலர் உள்ளனர். மொத்த வாடகைக்கு எடுத்தவர்கள் சிலர், எனவே அந்த வியாபாரிகளைப் பற்றி, எந்த வகையிலே அவர்களுக்கு எதிர்காலத்திலே இடம் ஒதுக்குவது என்பதைப் பற்றி அரசாங்கம் தீர்மானிக்கிறபோது, எல்லா வகைகளிலேயும் பாதிக்கப்பட்ட வியாபாரிகளுடைய சங்கத்தினுடைய பட்டியலை வாங்கி, எல்லாத் தரப்பு வியாபாரிகளுக்கும் உரிய முறையில் இடம் கிடைக்க, தொழில் நடத்த, ஆவன செய்ய வேண்டும் என நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், சென்னை நகரத்தினுடைய மத்தியப் பகுதியிலே எழிலூட்டக் கூடிய வகையில் விளங்கிக் கொண்டு இருந்த அந்த மூர் மார்க்கெட் கட்டிடத்திலிருந்து வியாபாரிகளை அப்புறப்படுத்தினாலும் கூட, கட்டிடம் பழைய அமைப்பே இருந்தால், சென்னை நகரத்திற்கு எழில் ஊட்டக் கூடியதாக, ஒரு உயர்ந்த சின்னமாக விளங்கக்கூடிய வகையில் அது இருக்கக்கூடிய வாய்ப்பு இருக்கும். மத்திய ரயில்வே நிர்வாகத்திற்குத் தேவையானால் கூட அந்தக் கட்டடத்தினுடைய அமைப்பு சிதைக்கப்படாமல், அப்படியே இருக்கக்கூடிய நிலைமை இருக்குமானால், நமக்கு எல்லாம் ஒரு பெருமையாகக்கூட அது இருக்கக்கூடும். அந்த வாய்ப்பு எல்லாம் இப்போது தவறியிருக்கிறது. இருந்தாலும் சென்னை மாநகரத்தினுடைய வரலாற்றைப் பற்றி குறிப்பு எழுதுகிற சிறந்த எழுத்தாளர்கள் கூட மூர் மார்க்கெட் கட்டட அமைப்பு அப்படியே இருக்குமாறு சீர்படுத்த வேண்டும் என்று கூட எழுதுகிறார்கள். முடியுமா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அந்தக் கட்டிடத்தை மறுபடியும் நிலைநாட்ட முடியும் என்றால் அது வரவேற்கத்தக்கது. அல்லது அது முடியாவிட்டாலும் கூட பாதிக்கப்பட்ட வியாபாரிகள் துயர் துடைப்பதில் எந்த விதத்திலேயும் குறை ஏற்படாத அளவிற்கு, வேதனைப்படாத அளவிற்கு அவர்களுக்கு



1985 ஜூன் 5] [திரு. க. அன்பழகன்]

மறுபடியும் நியாயமான இடங்கள் கிடைப்பதற்கு, கடைகள் கிடைப்பதற்கு, அவர்கள் தொழில் நடத்துவதற்கு வேண்டிய கடன்கள் கிடைப்பதற்கு, ஏற்பாடு செய்யவேண்டும். நாட்டிலே பரவலாக கடன் தருகிற ஆண்டாக இந்த ஆண்டு இருக்கிறபோது அந்த வியாபாரிகளுக்காவது முழு அளவில் கடன் கிடைப்பதற்கு இந்த அரசு பொறுப்பேற்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகத்தான் நான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறேன். அதை விவாதிப்பதற்காக அவையை ஒத்திவைப்பதை ஏற்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. [illegible] : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் உள்ள மூர் மார்க்கெட் என்பது சென்னையில் நீண்ட காலமாக இருந்து வருகிற, பிரசித்தி பெற்ற இடமாகும். அப்பேர்ப்பட்ட இடத்தை நீண்டகாலமாக ரயில்வே இலாக்கா அந்த இடத்தை தங்களுக்கு வேண்டும் என்று தொடர்ந்து கேட்டு, வற்புறுத்தி வந்தது எல்லாம் நம் அனைவருக்கும் தெரியும். அந்த இடத்தைக் கொடுப்பதற்குக் கூட இதற்கு முன்னாலே நமது அரசு பரிசீலனை செய்து வந்ததாக தகவல். ஆகவே இந்த நிலையில் திடீரென்று இரவில் ஒரு கடையில் தீப்பிடித்து தொடர்ந்துதான் எரிய வேண்டுமே தவிர, மூலைக்கு மூலை அந்த நெருப்பு துவங்கி சூழ்ந்து எரியக்கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, பொதுவாக அந்த தீ விபத்து ஒரு சந்தேகக் கண்ணோட்டத்தை உருவாக்கக்கூடிய நிலைமையில் உள்ளது. அந்த தீ விபத்தால் பாதிக்கப்படக்கூடிய நேரத்திலே, உண்மையிலேயே அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். தீ அணைப்பு இலாக்காவினரும், மற்ற இலாக்காக்களும் வேகமாக முனைந்திருந்தால், இந்த சேதாரத்தை ஓர் அளவுக்குத் தடுத்து இருக்க முடியும். முழுமையான சேதத்தைக் கூட தடுத்து இருக்க முடியும் என்று தான் பொது மக்களும், நம்மைப் போன்றவர்களும் எல்லாம் நினைக்க முடியும்.

(முற்பகல் 11–00)

ஆனால் எப்படியோ இந்த விபத்து நேர்ந்துவிட்டது. முடிந்து விட்டது. இன்றைக்கு ஆயிரக்கணக்கான வியாபாரிகள் பெரிய வியாபாரிகள் முதல் பிளாட்பாரத்தில் அன்றாடம் பிழைக்கக்கூடிய சிறிய வியாபாரம் செய்யக் கூடிய நபர்கள் வரை முழுமையாக பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அப்படி பாதிக்கப்பட்டு இருப்பது என்பது உண்மையிலேயே நமக்கு எல்லாம் மிக வருத்தத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட சேதாரத்தைப் பார்வையிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வியாபாரிகளை அழைத்துப் பேசி ஆறுதல் கூறி அவர்களுக்கு 2 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை கொடுப்பதாக அறிவித்து இருக்கிறார்கள். அதை நாம் வரவேற்போம். இருந்தாலும் இன்றைக்கு அந்த வியாபாரிகள் ஆயிரம் ரூபாய் முதல் ஐந்து லட்சம், 10 லட்சம் வரைக்கும் தீயினால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அரசாங்கம் மூலமாக, பாங்க் மூலமாக கடன் வாங்கி

வியாபாரிகள் போட்ட கடைகள் எல்லாம் இன்றைக்கு கடனுக்கு ஒரு பக்கம் ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள். தன்னுடைய சொந்த முதலும் வீணாய் ஆகியிருக்கிறது. அங்கு கட்டிடங்கள் எல்லாம் சேதமுற்றுக் காணப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் உடனடியாக நமது முதலமைச்சர் அவர்கள் இன்னொரு ஒரு உரிய விசாரணையைச் செய்து உண்மையைக் கண்டுபிடித்து அதற்கான தீவிர பரிசீலனையைச் செய்து நடைமுறைகளை எடுத்து வியாபாரிகளை எல்லாம் அழைத்து பேசி நடந்து முடிந்து விட்டது, இந்த இடத்தை ரயில்வேக்கு ஒதுக்கிடலாம் என்று ஒரு பரிசீலனைக்குப் பின்னால் ஒரு முடிவு எடுத்து ரயில்வேக்கு கொடுக்கலாம் என்று அறிவித்து இருந்தால் மிகவும் நல்லதாக அமைந்து இருக்கும். இப்போது எப்படி அமைந்து இருக்கிறது என்று சொன்னால் எரிகிற வீட்டில் [illegible] அள்ளி வந்தது போல் இன்றைக்கு உடனடியாக பொருள்களை இழந்தவர்கள், தீயினால் பாதிக்கப்பட்டவர்கள் குறிப்பாக மூர் மார்க்கெட்டில் ஒரு பழமை பாழாக்கப்பட்டிருக்கிற இந்த நிலையில் அவசர உணர்வோடு ரயில்வேக்கு ஒப்படைத்து விட்டோம் என்று சொல்லி நேரு ஸ்டேடியத்திற்கு பக்கத்தில் உள்ள அல்லிக்குளத்தை மிக வேகமாக ராணுவ நடவடிக்கை போல் அதைத் தீர்த்து இந்த பாதிக்கப்பட்டவர்களுக்கு மாற்று இடமாக கொடுப்பதாக அறிவித்து இன்றைக்கு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அப்படி கொடுக்கும் போது உடனடியாக அந்த பாதிக்கப்பட்ட வியாபாரிகள் அவர்கள் வைத்து இருக்கக்கூடிய லைசென்ஸ் அல்லது அதற்கான ஆதாரங்களைக் கொடுத்து பதிவு செய்ய வேண்டும் என்று சொல்லுகின்ற அந்த வேலையும் நடந்து கொண்டிருக்கிறது. ஆக முழுமையாக பாதிக்கப்பட்டு லைசென்ஸ் அல்லது அதற்கான ஆதாரங்கள் இல்லாத வியாபாரிகளுக்கு இப்போது இருக்கக்கூடிய அறிவிப்புப்படி பாதுகாப்பு கிடைக்காது போல் தோன்றுகிறது. இந்த நிலைகளை எல்லாம் பார்க்கும்போது ஏதோ எந்த வகையிலோ ஒரு வகையில் ஏதோ ஒரு திட்டம் போட்டு நடந்து விட்டதோ என்று சந்தேகப்படக் கூடிய அளவுக்கு இந்த நிகழ்ச்சி நடந்து இருக்கிறது. ஆகவே தமிழகத்தில் இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்து இருப்பது உண்மையில் எல்லோரும் கவலைப்படக் கூடிய அளவுக்கு ஏதோ ஒரு வகையில் நடந்து இருக்குமோ என்று சந்தேகப்படக்கூடிய அளவுக்கு இந்த நிகழ்ச்சி எதிர்பாராமல் ஆனாலும், எதிர்பார்த்து நடந்து இருக்கிறது. இந்த மாதிரி எதிர்காலத்தில் தமிழகத்தில் எங்கேயாவது ஒரு மூலை முடுக்கில் நடக்காமல் இருப்பதற்கும் நடந்த சம்பவங்களை மேலும் விரிவாக பேசி பாதிக்கப்பட்டவர்களுக்கு மேலும் எப்படி பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதைப் பற்றியும் விவாதிப்பதற்கும் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்கவேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திற்கு மட்டும் அல்ல, ஓரளவுக்கு தமிழகத்திற்கு அபிமானமாக இருந்த புகழ்பெற்ற மூர் மார்க்கெ...



அங்காடி இன்று பஸ்பமாக மாற்றப்பட்டு இருக்கிறது. இதைச் சொல்லக்கூடிய நேரத்தில் துரதிருஷ்டவசமாக சென்னை நகரத்தில் இது ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சி அல்ல என்று சுட்டிக்காட்ட நான் விரும்புகிறேன். ஒரு சில வருடங்களுக்கு முன்னால் சென்னை நகரத்தில் மிகப்பெரிய அபிமானமாக இருந்த எல்.ஐ.சி. இதே போன்று தீக்கு இரையாகியது. அதற்கு பிறகு ஸ்பென்ஸர் பில்டிங் இதே போன்று தீக்கு இரையாகியது. இது தானாகவே தீப் பிடிக்கப்பட்டதா? அல்ல அது ஒரு நாச வேலையா? என்ன என்பது இன்னும் மக்களுக்கு தெரியாத ஒரு ரகசியமாகவே இருந்து கொண்டிருக்கிறது. காவல் துறையோ அல்லது சம்பந்தப்பட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியவர்களோ என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்ன கண்டுபிடித்தார்கள் என்பது எல்லாம் நமக்குத் தெரியாது. அப்படி எல்.ஐ.சி. பில்டிங்கும் ஸ்பென்ஸர் பில்டிங்கும் புகழ்பெற்ற, ஓரளவுக்குச் சொல்லப்போனால் மாநிலத்திலேயே புகழ்பெற்ற கட்டிடங்கள் தீப் பிடிக்கப்பட்டுவிட்டதே என்ற சிந்தனையோடு இருக்கும்போது இப்போது மூர் அங்காடிக்கு தீ வைக்கப்பட்டிருக்கிறது.

மூர் அங்காடி தீ வைக்கப்பட்டிருக்கிறது அல்லது தீயிலே எரிந்திருக்கிறது என்பது ஒரு விவாதத்திற்குரிய பிரச்னையாக இருந்து கொண்டிருக்கிறது. இதற்கு வருவதற்கு முன்னால், ஒன்று நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால், இன்று இந்த அங்காடி எரிந்ததன் காரணமாக ஏறத்தாழ 2000 குடும்பங்கள் சிறிதும், பெரிதுமாக உள்ளவைகள், வசதி உள்ளவர்களும், ஏழைகளுமாக 2000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த அங்காடியிலே வியாபாரம் செய்து, தீப்பிடித்ததன் காரணமாக தீ விபத்து ஏற்பட்டதன் காரணமாக கடினமாக பாதிக்கப்பட்ட பல ஏழைக் குடும்பங்கள் உண்டு. இதில் நாம் பார்க்க வேண்டிய ஒன்று என்னவென்றால், தீ ஒரு இடத்திலே ஒரே நேரத்தில் ஏற்பட்டதல்ல. சைமல்டேனியஸாகவே, ஒரே நேரத்தில் பல இடங்களில் தீப் பிடித்திருக்கிறது என்று இன்றைக்கு பத்திரிகைகள் வாயிலாகவும், மற்ற தகவல்கள் மூலமாகவும் வந்து கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல. தீயணைப்புப் படையைப் பற்றிக் குற்றச்சாட்டுக்கள்கூட வந்திருக்கின்றன. அவர்கள் தீயை அணைப்பதில் காலதாமதத்தை ஏற்படுத்தினார்கள் என்று கூட சொல்லப்படுகிறது. இதற்கு மேலே என்ன பார்க்கிறோம் என்றால், இன்று அரசு ஒரு முடிவு எடுத்திருக்கிறது. அந்த இடத்தை ரயில்வே இலாக்காவுக்கு கொடுப்பது என்று ஏற்கனவே, ரயில்வே இலாக்கா அந்தஇடத்தை வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இருந்தார்கள். அந்த ரயில்வே இலாக்காவுக்கு இது கிடைப்பதற்காக யாரோ திட்டமிட்டு இப்படிப்பட்ட ஒரு நடவடிக்கை எடுத்தார்களா என்ற ஒரு சந்தேகம் இன்றைக்கு மக்களிடம் நிலவுகிறது. யாரையும் குற்றம் சாட்டுவதற்காக நான் சொல்லவில்லை.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1985 ஜூன் 5

அப்படிப்பட்ட ஒரு சம்பவமோ, ஆக்டிவிட்டியோ இருந்தால் மின்வாரி யத்து யாரோ செய்து இருக்கிறார்களா என்ற ஒரு சந்தேகம் இன்றைக்கு மக்களிடம் ஏற்பட்டிருக்கிறது. ஏற்கனவே எல்.ஐ.சி., ஸ்பென்சர் போன்ற பில்டிங்குகளும் சென்னை நகரத்தில் இப்படிப் பட்ட தீ விபத்துக்கு ஆளாக்கப்பட்ட நேரத்தில், மீண்டும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படுவதனாலே நிச்சயமாக அரசு இது சம்பந்தமாக நடவடிக்கைகளை கண்டிப்பான முறையில் எடுக்க வேண்டுமோ, அதுபற்றி ஆராய்ந்து, விவரங்களை மக்களுக்குக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அது மட்டுமல்ல, சென்னை நகரத்தின் அழகாக இருக்கக்கூடிய இப்படிப்பட்ட கட்டிடங்கள் மேற்கொண்டு தீ விபத்துக்கு இரையாகாத சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும்.

ஏற்கனவே, இந்த மூர் அங்காடி தீவிபத்துக்கு ஆளாக்கப்பட்ட தற்கு காரணம் என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்றால், ஏதோ ஒரு கடையில் டிரான்ஸ்பார்மருடைய ஸ்விட்சை ஆப் பண்ணாமல், ஆனிலேயே இருந்ததன் காரணமாக தீவிபத்துக்கு ஆளானது என்று சொல்கிறார்கள். நிச்சயமாக இது நம்புவதற்கு கஷ்டமாக இருக்கிறது. ஒரு கடையிலே அப்படி ஸ்விட்ச் ஆப் பண்ணாமல் போடப்பட்டு இருந்ததன் காரணமாக தீ விபத்து ஏற்படுமே யானால், உடனடியாக அது தெரிந்துகொள்வதற்கும், அணைப் பதற்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். ஆனால் இன்றைக்கு நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய தகவல், ஒரே நேரத்தில் பல பகுதிகளில் தீப் பிடித்து இருக்கிறது என்று. ஆகவே, டிரான்ஸ் பார்மர் ஸ்விட்சை ஆப் பண்ணாததனாலே இந்த விபத்து ஏற்பட்டது என்று சொல்வதை மக்கள் நம்பவில்லை என்று மட்டும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரையிலே, இப்படிப்பட்ட தீ விபத்துக்கள் சென்னை நகரத்தில் ஏற்பட்டு, நகரத்தின் விலை மதிக்கமுடியாத கட்டிடங்களுக்கு அப்படிப்பட்ட நிலை ஏற்படா மல் தடுக்கவேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. அதற்குத் தகுந்த அளவிலே பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அதேபோல், இன்னொரு விஷயத்தையும் சொல்ல விரும்பு கிறேன். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிதியி லிருந்து சில நிவாரணம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்று சில கடைகளைப் பொறுத்தவரையில் இன்சூர் பண்ணியிருக்கிறார் கள். இன்சூர் செய்யப்படாமல் பல கடைகள், ஏழைக்கடைகள் இருக்கின்றன.



1985 ஜூன் 5] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

(முற்பகல் 11–10)

அந்தக் கடைகள் எரிந்துவிட்டதன் காரணமாக அவர்கள் வாழ்க்கை முழுவதுமாக நாசமடைந்து சங்கடப்பட்டுக்கொண்டிருக் கிறார்கள். அவர்கள் மேலும் நல்லமுறையிலே வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்கு அவர்கள் வியாபாரத்தை நடத்திக் கொள்கிற முறையிலே பிரைம் மினிஸ்டர்'ஸ் ரிலீஃப் பண்டிலிருந்து ஏதேனும் நிதி வாங்க முடிந்தால், அல்லது மத்திய அரசை அணுகி ஏதேனும் நிதி வாங்க முடிந்தால், வாங்கி அந்த ஏழைகளைக் காப்பாற்றக்கூடிய முறையிலே நிவாரண நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இது ஒரு முக்கியமான பிரச்சினை, சென்னையில் இப்படி அடிக்கடி தீ விபத்துக்கள் நடந்துகொண்டிருக்கிற நிலை பற்றிய பிரச்சினையாக இருப்பதால் இதைப்பற்றி விவாதித்து நல்ல முடிவுகளை எடுத்து மேற்கொண்டு இப்படி நடக்காமல் இருப்ப தற்காக நடவடிக்கை எடுக்கும் முறையில் அவையின் இதர அலு வல்களை ஒத்திவைக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கி றேன்.

*திரு. எஸ். வேணுகோபால் : பேரவைத் துணைத் தலை வர் அவர்களே, இன்றைய தினம் சென்னை மட்டுமல்லாமல் தமிழகத்திலே மிகத் தலைசிறந்த இடமாகக் கருதப்படுகிற மூர் மார்க்கெட் எரிந்துவிட்டது என்பதைப்பற்றிய அவசரப் பிரச்சினையாக இதைக் கொண்டுவந்திருக்கிறோம்.

தமிழகத்திலே இருக்கிற எல்லா இடங்களையும் பார்க்கிற போது சென்னைக்கு வருகின்றவர்கள் மூர்மார்க்கெட்டிற்குப் போய் வந்த பிறகுதான் சென்னையை முழுமையாகச் சுற்றிப் பார்த்ததாக எண்ணி திருப்தியடைவார்கள். அந்த மூர்மார்க்கெட் எரிந்துவிட்டது என்பதை எண்ணிப் பார்க்கும்போது மிக வருத்தமாக இருந்தாலும், 1898 ஆம் ஆண்டு ஜார்ஜ் மூர் என்பவர் சென்னை நகரத் தலைவராக இருந்தபோது அது கட்டப்பட்டது என்று சொன்னால் 87 ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப்பட்ட சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கட்டடமாக இருந்தது இன்றைக்கு சாம்பலாகிவிட்டிருக்கிறது.

அது எரிந்தது பற்றி, எப்படி அதை எரியவைத்தார்கள் என் பதைப்பற்றி ஆருடங்களையும் வந்த செய்திகளையும் எனக்கு முன்னாலே பேசியவர்கள் எடுத்துச்சொன்னார்கள். ஏழை எளிய வர்கள் அங்கே துன்பத்திற்கும், துயரத்திற்கும் ஆளாக்கப் பட்டிருக்கிறார்கள், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அங்கே சென்று சுற்றிப்பார்த்து 857 பேர்களுக்கு ஏற்கெனவே நகர மன்றத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டு வாடகை கட்டுகிற வர்களுக்கு மட்டும் இரண்டாயிரம் ரூபாயும், கடைகளும்

தரப்படும் என்று அவர்களுக்கு மட்டும் முத்திரை குத்தப்பட்டிருக்கிறது, நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன், உள்ளே இருக்கிற வளாகத்திலேயும், சிறு வியாபாரிகள் அன்றாடம் பொருட்களை விற்கிறவர்கள் 125 பேர்களுக்கு மேலாக இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, கடை வைத்திருக்கிறவர்கள் வாடகைக்கு விட்டுவிட்டு, எதிரே கடை வைத்திருக்கிறவர்களும் உண்டு, கையிலே ரசீது கொடுக்காமல் வாடகை வாங்கியவர்களும் உண்டு, மிகச் சாதாரணமாக வியாபாரம் செய்யக்கூடியவர்களும் அங்கே இருந்திருக்கிறார்கள். இன்றைக்கு அவர்களுக்கு எல்லாம் ஏராளமான சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நிதியமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து நிதியுதவி செய்ய வேண்டும். அதுமட்டுமல்ல, எங்கே கடைகள் கட்டப்படுமோ அங்கே அவர்களுக்குக் கடைகள் கொடுக்கப்பட வேண்டும். அல்லிக்குளத்திலே கடைகள் கட்டப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். சென்னைக்கு வருகிறவர்களுக்கு அதைப் பார்த்தால்தான் சென்னையை முழுமையாகப் பார்த்த திருப்தி ஏற்படும் என்ற நிலைமை இருப்பதால், கட்டப்படுகிற கட்டடம் சரித்திரம் முக்கியத்துவம் வாய்ந்த அழகான கட்டடமாக இருக்க வேண்டும். டெல்லி மாநகரிலே பாலிகா பஜார் கட்டப்பட்டிருக்கிறது. அதைப்போன்று கட்டப்பட வேண்டும், உள்ளே கடைகள் ஏராளமாக இருக்கின்றன, மேலே கார் பார்க்கிங் பக்கத்திலே ரயில்வே ஸ்டேஷன் வேறு இருக்கிறது, ஆகவே வருகிறவர்கள் நல்லமுறையிலே காணுவதற்கு ஏற்ற முறையிலே கட்டப்பட வேண்டும். அது சென்னைக்கு ஒரு முத்தாய்ப்பாக இருக்க வேண்டும், அதுமட்டுமல்ல, வெளி வளாகத்திலேயும் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்பதைச் சொல்லாமல் இருக்க முடியாது, அந்த ஏழைகள் வடிக்கின்ற கண்ணீரைக் காண அரசியல் கட்சித் தலைவர்கள் எல்லாம் பார்த்ததைப் போல எங்கள் கட்சித் தலைவர் திரு. உ. சுப்பிரமணியம் அவர்களும் சென்று பார்த்தபோது அவர்கள் அழுது அழுது வடித்த கண்ணீரைப் பார்த்தபோது எங்களால் தாங்கமுடியவில்லை, கொடுக்கின்ற பணம் போதாமல் இருக்கலாம், ஆனால் உடனடியாக எங்களுக்கு இடம் வேண்டும், ஏனென்றால் எங்கள் வருமானம் பாதிக்கப்படுகிறது, அன்றாட வருமானம் பாதிக்கப்படுகிறது, எங்கள் குடும்பம் நாசமாகப்படுகின்றது. அன்றாடக் குடும்பச் செலவுகளைச் சமாளிக்க முடியவில்லை, எனவே இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆகவே, நான் அமைச்சரவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்வதெல்லாம், அந்த ஏழை எளிய மக்கள் விடுகின்ற கண்ணீரைத் துடைப்பதற்கு இந்த அரசு உதவி அளிக்க வேண்டும், உள்வளாகத்தில் வியாபாரம் செய்துவந்த சாதாரண கடைக்காரர்களுக்கும் கருணை காட்ட வேண்டும்; அவர்களுக்கும் இடம் ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, செய்த உதவிக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் பல பேருக்கு 2,000 ரூபாய்கொடுத்து உதவுவதற்கான நடவடிக்கையை



எடுத்திருக்கிறார்கள், அதைப் போல இவர்களுக்கும் ஏதாவது கொடுக்க வேண்டுமென்று சொல்லி, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இப்பிரச்னை குறித்து விவாதிக்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சென்னையிலே கடந்த 29-ம் தேதி இரவு ஏற்பட்ட மூர்மார்க்கெட் தீ விபத்தானது அனைவரும் வருந்தத்தக்க ஒன்றாகும். அங்கத்தினர் தெரிவித்துக்கொண்ட துயரத்தோடு அரசாங்கத்தின் சார்பில் என்னுடைய துயரத்தையும் நான் சேர்த்துக்கொள்கிறேன். அனைவரும் விரும்பத்தகாத, வேண்டத்தகாத, எதிர்பாராத ஒரு தீ விபத்து ஏற்பட்டுவிட்டது. தீ விபத்து தானாக ஏற்பட்டதா, அல்லது நாசவேலையா, யாராவது செய்தார்களா என்றெல்லாம் சந்தேகக் கண்ணோடு பார்க்க வேண்டுமென்று உறுப்பினர்கள் இங்கே தெரிவித்தார்கள். விபத்து எப்படி ஏற்பட்டது என்பதைப் பற்றிய ஆராய்ச்சி இன்னும் முடியவில்லை. அந்த ஆராய்ச்சி முடிந்து, அரசுக்கு முழுமையான தகவல் வந்தபிறகுதான், அரசின் சார்பில் அதிகாரபூர்வமாக வெளியிட முடியும். என்றாலும் ஒன்றை உறுதியாகக் கூற முடியும்.

இங்கே பேராசியர் அன்பழகன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் ஒரு கருத்தை, அவருக்கே உரித்தான பாணியில், திருப்பத் திரும்பச் சொன்னார்கள். தீயை அணைக்க மனம் இல்லாததாலோ அல்லது தடுத்ததாலோ என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அத்தகைய கொடிய நெஞ்சம் கொண்டவர்கள், வஞ்ச நெஞ்சம் கொண்டவர்கள் எவரும் இருக்க முடியாது என்றுதான் நான் நம்புகிறேன். அப்படி யாராவது இருந்தால் அவர்கள் மனித சமுதாயத்தில் வாழ்வதற்கே இலாயக்கற்றவர்கள் என்றுதான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்,

இப்படி ஒரு கொடிய சம்பவம் நடந்தது, மூர் மார்க்கெட்டை இரயில்வே இலாக்காவிற்குக் கொடுக்க வேண்டுமென்று திட்டமிட்டு ஏதோ சதி வேலை செய்து கொளுத்திவிட்டு இப்பொழுது அரசு, மத்திய அரசை எடுத்துக்கொள்ளச் சொல்வதுபோல் இருக்கிறது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது.

பேராசிரியர் அன்பழகன் அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். மூர் மார்க்கெட் ஒரு சிறந்த சின்னம்; அதை இரயில்வே இலாக்காவிற்குக் கொடுத்தாலும் இந்தக் கட்டடம் அப்படியே இருக்க வேண்டும், அப்படியே இருந்து இருந்தால்தான் பெருமையாக இருந்திருக்கும் என்று குறிப்பிட்டார்...

[திரு. ப. உ. சண்முகம்] [1985 ஜூன்

நான் ஒன்றை அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மூர்மார்க்கெட்டை இரயில்வே இலாக்காவிற்குச் சேர்த்தது இப்பொழுது அல்ல; திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த பொழுதே கேட்டார்கள். நான் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தபொழுது இதை இடிக்கக்கூடாது என்று அந்தக் கோப்பிலே எழுதினேன். ஆனால் இரயில்வே இலாக்காவிற்குக் கொடுப்பது என்ற முடிவு எப்பொழுதோ எடுக்கப்பட்ட முடிவாகும்.

இன்னொரு உண்மையையும் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இரயில்வே இலாக்காவிற்குக் கொடுப்பது என்பதை ஏற்கெனவே ஒப்புக்கொண்டு விலையெல்லாம் பேசி, ஏற்கனவே கிரயத்திற்கான முழுத் தொகையும் மாநில அரசுக்கு வழங்கப்பட்டு, மாநில அரசும் அந்தப் பணத்தில் மாநகராட்சிக்குக் கொடுக்க வேண்டிய தொகையைக் கொடுத்துவிட்டது. எனவே, இரயில்வே இலாக்காவிற்குக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு செய்யப்பட்ட நாசவேலை என்ற அந்த எண்ணத்தோடு எவரும் கூற வேண்டாமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

அப்படி, இரயில்வே இலாக்காவிற்கு இந்த இடத்தை ஒப்படைக்க வேண்டுமென்று முடிவு செய்த பின்னர், விலைக்கு விற்ற பின்னர், தீ விபத்து ஏற்பட்ட பின்னர்தான் கொடுக்கப்படுகிறது என்று சொல்வது தேவையற்றது, இரயில்வே இலாக்காவினர் விரிவாகக் கட்டுவதற்காக விலைக்கு வாங்கி இருக்கிறார்கள் ; கொடுத்தாகிவிட்டது ஆகவே, இப்பொழுது கொடுத்தது அல்ல, ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று. கொடுத்து, பணமும் வாங்கப்பட்டாகிவிட்டது. நாச வேலைக்குப் பிறகுதான்—நாசவேலை, நாசவேலை என்று குறிப்பிட்ட காரணத்தால் அந்த வார்த்தையைச் சொல்கிறேன்—ஏற்பட்ட நிலை என்பது அல்ல என்பதை நான் வற்புறுத்தித் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் சொன்னார்கள், 2,000-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று புள்ளி விவரம் இருப்பதாகச் சொன்னார்கள். சிறுசிறு கடை வைத்திருந்தவர்கள், சிறு சிறு வியாபாரிகள் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். ஆனால் அரசுக்கு வந்த தகவலின்படி கடை வைத்திருப்பவர்கள், ஆக்கிரமிப்பு செய்திருப்பவர்கள் என்று இரண்டாகப் பிரித்து எவ்வளவு பேர் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மூர்மார்க்கெட்டில் இருந்த நிலையான கடைக்காரர்கள்—உரிமம், லைசென்ஸ் பெற்றவர்கள் 527 பேர்.



1985 ஜூன் 5] [திரு. ப. உ. சண்முகம்]

(முற்பகல் 11-20)

ஆக்கிரமிப்பு, அன்னாதரைஸ்ட், அரசாங்கத்தின் அனுமதி இல்லாமல் கடை வைத்திருந்தவர்கள் 330 பேர்கள் என்று அரசு கணக்கெடுத்திருக்கிறது, அப்பொழுது கணக்கெடுத்திருக்கிறது.

தீ விபத்து ஏற்பட்ட அன்று காலையிலேயே அந்த இடத்திற்கு தலைமைச் செயலாளர் சென்றிருந்தார், நானும் சென்றிருந்தேன், மாண்புமிகு அமைச்சர் கே. ஏ. கே. அவர்களும் சென்றிருந்தார். இதைக் கேள்விப்பட்டவுடனேயே கோவையிலேயிருந்த முதல்வர் அவர்கள் தனது சுற்றுப்பயணத்தை ரத்து செய்துவிட்டு உடனடியாக இங்கே வந்து, எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்து, அரசு அதிகாரிகளோடு கலந்து பேசி, உடனடியாக என்ன நிவாரணம் அளிக்க முடியும் என்பதைக் கலந்து பேசி முடிவெடுத்திருக்கிறார் கள். அந்த முடிவுகள் பத்திரிகைகளிலே வெளியாகியிருக்கின் றன. பாதிக்கப்பட்ட கடைகளுக்குக்கெல்லாம் ஒரு கடைக்கு ரூ. 2,000 கொடுப்பதென்றும் அல்லிக் குளத்தில் அவர்களுக்கு தற்காலிகமாகக் கடை வைப்பதற்கு எவ்வளவு விரைவாகக் கடை களைக் கட்டிக் கொடுக்க முடியுமோ—தற்காலிகமாக—அவ்வளவு விரைவாக கட்டிக் கொடுப்பது என்றும், ரெயில்வே இலாக்கா விலிருந்து இதற்காக வாங்கிய தொகையை வைத்துக் கொண்டு, அவர்களுக்கு வேறு கடைகளை, அல்லிக் குளத்தின் இன்னொரு பக்கத்திலேயே நிரந்தரக் கடைகளாகக் கட்டுவது என்றும் முடி வெடுத்து, அதற்குண்டான வேலைகள் எல்லாம் துரிதமாக நடந்து வருகின்றன என்பதை இந்தப் பேரவைக்கு நான் தெரிவித் துக் கொள்கிறேன். நேற்று கூட அதைப்பற்றி தலைமைச் செய லாளர், மற்ற அதிகாரிகளோடு நான் விவாதித்தேன். வேலைகள் துரிதமாக நடந்து கொண்டிருக்கின்றன. எந்தவித காலதாமத மும் இல்லாமல், எவ்வளவு விரைவாகச்செய்ய முடியுமோ, அவ்வ வளவு விரைவாகச் செய்து முடிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தீ அணைப்புப் படையினர் தீயை அணைப்பதற்குப் பதிலாக புதிதாக கட்டப்பட்டிருக்கிற, ரெயில்வே கட்டிடத்திற்குச் சொந்தமான கட்டிடத்தின் ஓரத்தில் தீ அணைப்பு வண்டிகளைப் போய் நிறுத்தி வைத்திருந்தார்கள் என்று இங்கு கூறப்பட்டது. நான் அன்று காலையிலேயே அங்கே சுற்றிப் பார்த்துக் கொண் டிருந்தேன். அப்படி ஒன்றும் அங்கு இயந்திரங்கள் நிறுத்திவைக்கப் படவில்லையென்பதை நான் நேராகக் கண்டறிந்தேன். பார்த்தது உண்மை, அப்படி கிடையாது.

அங்கே இருக்கிறவர்கள் என்னைச் சுற்றி அழைத்துக்கொண்டு காண்பித்தபோது, என்னை ஓரிடத்தில் நிறுத்தி, ஒரு சிறு பங்க் கடையைக் காட்டி—அப்பொழுது அவர்கள் சொன்னதைச் சொல் கிறேன்—இதிலிருந்துதான் ஷார்ட் சர்க்யூட்டால் விபத்து ஏற்

பட்டது என்று என்னிடத்தில் கடைக்காரர்கள் சுற்றிக் காட்டிக் கொண்டு வந்தார்கள். மற்ற இடங்களையெல்லாம் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்தேன்.

சேதமுள்ள கடைக்காரர்கள் போக, மீதியிருக்கிற கடைக் காரர்கள் அங்கே உள்ளே போவதைத் தடுத்தார்கள்; தீயை அணைக்க வந்த பொதுமக்களையும் தடுத்தார்கள், கடைக்காரர் களையும் தடுத்தார்கள், அவர்களும் தீயை அணைக்கவில்லை யென்ற குற்றச்சாட்டு இங்கே கூறப்பட்டது. அது உண்மையல்ல. உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டாகும். சில பேர்கள், கடைக்காரர்கள் என்று சொல்லி, சில கடைகளை உடைத்து விட்டிருக்கிறார்கள். அப்படி உடைக்கப்பட்டு சில கடைகள் சூறையாடப்பட்ட செய்தியும் என்னிடத்திலே அப்பொழுது சொல லப்பட்டது. அப்படி தவறானவர்கள் யாரேனும் வந்து எடுத்துக் கொண்டு போய் விடக்கூடாது என்று நான் காவல் துறையினருக்கு அங்கேயே சொல்லிவிட்டு வந்தேன். கடைக்காரர்கள், லைசன்ஸ் வைத்திருக்கிறவர்கள் என்று பக்கத்துக் கடைக்காரர்கள் அடை யாளம் காட்டினாலொழிய கடையைத் திறக்க அனுமதிக்காதீர் கள்; அடையாளம் காட்டினால்தான் பிறகு அவர்கள் இருக்கிற சாமான்களை எடுத்துச் செல்ல அனுமதியுங்கள் என்று தெரிவித்து விட்டு வந்தேன்.

தீயணைக்கும் படையினர், நான் சென்றிருந்தபொழுது, தங்களால் ஆன எல்லா முயற்சிகளையும் செய்து கொண்டிருந் தார்கள் என்று பார்த்த உண்மையைத்தான் சொல்கிறேனே தவிர, தீ அணைக்கும் படையினர் ஏதோ தவறு செய்து விட்டார் கள், அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு சொல்வதாகத் தயவுசெய்து கருதக்கூடாது.

ஒரு பெரிய தீ விபத்து நடக்கிற நேரத்தில் இப்படிப் புகார்கள் வருவது சாதாரணமாகும். பாதிக்கப்பட்டவர்கள் இங்கே அணை யுங்கள், அங்கே அணையுங்கள் என்று கூப்பிடுவதும் அவர்கள் எங்கே அணைப்பது என்று முடிவெடுத்துக்கொண்டிருக்கும்போது, வேரிடத்திற்கு இழுப்பதும் அங்கே நடக்கின்ற சாதாரண சம்பவம், எங்காவது தீப்பிடித்தால் நாம் பார்க்கின்ற ஒன்றாகும்.

இன்னொரு தகவல் தரப்பட்டது, ஓரிடத்தில் தீ எரியவில்லை, பல இடங்களில் தீபற்றி எரிந்து கொண்டிருந்தது. ஆகவே, இது நாச வேலையாக இருக்குமோ என்று சொன்னார்கள். நாசவேலை யாக இருப்பதற்கு நியாயம் இல்லை. ஏன் என்று கேட்டால், ஒருவேளை இதைத் தனியாருக்கு விற்று விட்டிருந்தால், தனியார் அதை எப்படி ஆக்கிரமிப்பது என்று வழிமுறை தெரியாமல், ஒழித்துவிட்டு அதன்பிறகு ஆக்கிரமிக்கலாம் என்று கருதி தனியார் செய்திருப்பார்களானால் அது பெரிய நாச வேலையாகி இருந்திருக்கக்கூடும். ஆனால், இது அப்படி அல்ல. ரெயில்வக



இலாகாவிற்குக் கொடுக்கப்பட்டது—மத்திய அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டது; தனியார் யாரும் பாதிக்கப்படவில்லை. ஒரு அரசாங்கம் இன்னொரு அரசாங்கத்திற்குக் கொடுத்ததே தவிர, தனியார் பாதிக்கப்படவில்லை. சிறிதும் நாச வேலைக்கு இடம் இல்லை என்பதை நான் மிக்கக் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் தீயால் எரியாமல் போயிருந்தால் கூட, அந்த இடத்தை 6 மாதத்திற்குள்ளோ, அல்லது ஓராண்டுக்குள்ளோ, மத்திய அரசாங்கத்திற்கு ஒப்படைத்தே தீர வேண்டும். காரணம், பணம் வாங்கியாகிவிட்டது. கட்டிட வேலைகளுக்கான பிளான், வரை படங்கள் எல்லாம் வரைந்து கொண்டிருக்கிறார்கள். அந்த வேலை நடந்து கொண்டிருக்கும்போதுதான் இது நடந்ததே தவிர, இதிலே ஒன்றும் நாச வேலை இருப்பதாக அரசு கருதவில்லை, நான் கருதவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும் அங்கத்தினர்கள் சொன்ன கருத்தை அரசு முழுமையாக ஆராயும், விசாரிக்கும் என்று நான் உறுதியளிக்கிறேன். உடனடியாக அளிக்கப்படுகிற நிவாரணம் 2,000 ரூபாய். தற்காலிகமாகக் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கிற கடைக்காரக்களுக்கு நிரந்தரக் கட்டிடங்கள் கட்டிக் கொடுத்து இடம் மாறச்செய்யவும் அரசு முடிவு எடுத்திருக்கிறது. இப்படி அரசு எல்லா நடவடிக்கைகளும் எடுத்திருக்கிற காரணத்தால் அவையை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : மாண்புமிகு உள் ளாட்சித்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால் இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## 4. அறிவிப்பு

### பேரவை அலுவல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

**4–6–1985 ஆம் தேதியன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்துள்ள முடிவின்படி சட்டமன்றப் பேரவையின் அலுவல்கள் பற்றிய திருத்திய நிகழ்ச்சி நிரலின் விவரம்.**

| | |
|---|---|
| 6—6—1985 (வியாழக்கிழமை) | மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. |
| | 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம். |
| | 39—சாலைகளும் பாலங்களும். |

| | |
|---|---|
| | 40 சாலைப் போக்குவரத்துப் பணிகளும்—கப்பல் போக்குவரத்தும்.<br>54 சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.<br>55 சாலைப் போக்குவரத்துப்பணிகள்—கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. |
| 7—6—1985 .. (வெள்ளிக்கிழமை) .. | ஏற்கனவே அறிவித்த மானியக் கோரிக்கைகளுக்குப் பதிலாக அரசினர் சட்டமுன் வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும். |
| 8—6—1985 .. (சனிக்கிழமை).<br>9—6—1985 (ஞாயிற்றுக்கிழமை) | } விடுமுறை. |
| 10—6—1985 .. (திங்கட்கிழமை) .. | மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும் — தொடர்ச்சி.<br>18 மருத்துவம்.<br>19 பொதுச் சுகாதாரம். |
| 11—6—1985 .. (செவ்வாய்க்கிழமை) .. | 1 நிலவரித் துறை<br>11 மாவட்ட நிர்வாகம்.<br>41 இயற்கை சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு.<br>42 ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும்.<br>43 பல்வகை.<br>46 இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்<br>58 பல்வகை மூலதனச் செலவு.<br>59 மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும். |
| 12—6—1985 .. (புதன்கிழமை) .. | 28 சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் |



| | |
|---|---|
| 13—6—1985 .. (வியாழக்கிழமை) .. | மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.<br>12 தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து—சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்.<br>25 சின்கோனா.<br>45 காட்டு வளத் துறை.<br>47 செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்.<br>56 காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு. |
| 14—6—1985 .. (வெள்ளிக்கிழமை) .. | 24 தொழில்கள்.<br>51 தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. |
| 15—6—1985 .. (சனிக்கிழமை) ..<br>16—6—1985 (ஞாயிற்றுக்கிழமை) | } விடுமுறை. |
| 17—6—1985 .. (திங்கட்கிழமை) .. | மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.<br>35 நுகர் பொருள் வழங்கல். |
| 18—6—1985 .. (செவ்வாய்க்கிழமை) (இரண்டு அமைச்சர்கள்) .. | 26 கைத்தறியும், நெசவுத் தொழிலும்.<br>27 கதர்த் தொழில். |
| 19—6—1985 .. (புதன்கிழமை) .. | 29 தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும். |
| 20—6—1985 (வியாழக்கிழமை) .. | ரம்சான்—விடுமுறை. |
| 21—6—1985 (வெள்ளிக்கிழமை). .. | பேரவைக் கூட்டம் இல்லை. |
| 22—6—1985 .. (சனிக்கிழமை)<br>23—6—1985 (ஞாயிற்றுக்கிழமை) .. | } விடுமுறை. |

| | |
|---|---|
| 24—6—1985 (திங்கட்கிழமை) .. | ... மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.<br>4 பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம். |
| 25—6—1985 .. (செவ்வாய்க்கிழமை) ..<br>26—6—1985 (புதன்கிழமை) .. | மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.<br>15 காவல் துறை.<br>16 தீயணைப்புப் பணிகள். |
| 27—6—1985 (வியாழக்கிழமை) .. | 36 பாசனம்.<br>37 பொதுப்பணிகள்-கட்டிடங்கள்.<br>38 பொதுப் பணிகள் — பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும்.<br>52 பாசனம் குறித்த மூலதனச் செலவு.<br>53 பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செல. |
| 28—6—1985 (வெள்ளிக்கிழமை) ... | 23 கூட்டுறவு. |
| 29—6—1985 (சனிக்கிழமை)<br>30—6—1985 (ஞாயிற்றுக்கிழமை) | விடுமுறை. |
| 2—7—1985 (திங்கட்கிழமை) | மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.<br>30 சமூக நலன்.<br>44 எழுது பொருள் அச்சுத் துறை. |
| 2—7—1985 (செவ்வாய்க்கிழமை) ... | 48 ஊரகத் தொழில்கள்.<br>57 ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. |
| 3—7—1985 (புதன்கிழமை) ..<br>4—7—1985 (வியாழக்கிழமை) .. | 2 மாநில ஆயத் தீர்வைத் துறை.<br>9 மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். |





| | |
|---|---|
| 5—7—1985 (வெள்ளிக்கிழமை) | ..முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்.<br>6 பத்திரப் பதிவு.<br>10 பால் வழங்கு திட்டங்கள்.<br>22 கால்நடை வளர்ப்பு. |
| 6—7—1985 (சனிக்கிழமை)<br>7—7—1985 (ஞாயிற்றுக்கிழமை) | விடுமுறை. |
| 8—7—1985 (திங்கட்கிழமை) | ..மானியக் கோரிக்கைகள் மீது மீது விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.<br>13 நீதி நிர்வாகம்.<br>14 சிறைச் சாலைகள். |
| 9—7—1985 (செவ்வாய்க்கிழமை) | ..33 வீட்டு வசதி.<br>34 நகர்ப் பகுதி வளர்ச்.சி. |
| 10—7—1985 (புதன்கிழமை) | ..31 பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன். |
| 11—7—1985 (வியாழக்கிழமை) | ..21 மீனளம்.<br>32 பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன். |
| 12—7—1985 (வெள்ளிக்கிழமை) | ..7 மாநிலச் சட்டமன்றம்.<br>8 தேர்தல்கள்.<br>1985–86-ஆம் ஆண்டின் மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்தல். |
| 13—7—1985 (சனிக்கிழமை) ..<br>14—7—1985 (ஞாயிற்றுக்கிழமை) .. | விடுமுறை. |
| 15—7—1985 (திங்கட்கிழமை) | ..1985–86--ஆம் ஆண்டின் மானிய கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு—ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும். |
| 16—7—1985 (செவ்வாய்க்கிழமை) ..<br>17—7—1985 (புதன்கிழமை). .. | 1985–86 ஆம் ஆண்டிற்கான தமிழ் நாடு மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கை மீது விவாதம். |

பேரவை வழக்கம்போல் காலை 9–00 மணிக்கு கூடும்.

## 5 அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1985.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்டிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவரவர்களே, 1985ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்டமுன்வடிவை அமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்கிறார்கள். இதை நான் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன். காரணம் சட்டமாக்குவதற்கு முன்பாக இதில் உள்ள குறைபாடுகள் சீர்செய்யப்பட வேண்டும்.

இப்போதுள்ள நடைமுறைப்படி ஏலம் மூலம், டெண்டர் மூலம் சாராயத்தை விற்பனைச் செய்வதற்கு, சில்லரை விற்பனை செய்வதற்கு கடைகளுக்கு அனுமதி வழங்குகிற முறை இருக்கிறது. ஆனால் இப்போது இங்கே அறிமுகம் செய்திருக்கக்கூடிய இந்தச் சட்டத்தின் மூலம் இந்த நிலையை மாற்றி, இனிமேல் தனியார் யாருக்கும் லைசென்ஸ் கிடையாது என்ற நிலை வருகிறது.

(முற்பகல் 11-30)

அரசாங்கமே இந்தச் சாராயத்தைச் சில்லரையாக விற்பனை செய்வதற்கான கடைகளை திறந்து ஸ்டேட் மார்க்கெட்டிங் கார்ப்பரேஷன் மூலமாக அதாவது அரசாங்கத்தினுடைய ஊழியர்கள் மூலமாகவோ, அல்லது ஏஜெண்டுகளை நியமிப்பதன் மூலமாகவோ, அந்த வியாபாரத்தை நடத்தப் போகிறது. அதற்காகத்தான் அனுமதி வேண்டுமென்று கேட்கின்ற முறையிலே தான் இந்தச் சட்ட முன்வடிவு இங்கே கொண்டு வரப்படுகிறது.

முதலிலே நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் இந்த அரசாங்கத்தினுடைய முதலமைச்சர் அவர்களின் கொள்கைக்கே விரோதமாக இது இருக்கின்றது. வருகின்ற செப்டம்பர் 15ஆம் தேதியிலிருந்து அதாவது அண்ணா பிறந்த நாளிலிருந்து மதுவிலக்கை அமுல் நடத்தப்போகிறோம் என்று அவர்கள் அறிவித்திருக்கிறார்கள், அவ்வாறு அறிவித்து தேர்தல் காலத்தில் வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டு, தாயின் மீது சத்தியமாகச் சொல்கிறேன்





என்றெல்லாம் சொல்லிவிட்டு, மதுவிலக்கு அரக்கனை ஒழிக்கப் போகிறேன் என்று சொல்லிவிட்டு, குடித்தவர்கள் கைது செய்யப்படுவார்கள், அவர்களை ஜாமீனில் எடுக்க யாரேனும் வந்தால் அவ்வாறு ஜாமீனில் எடுக்க வந்தவர்களையும் கைது செய்து உள்ளே போடவேண்டும் என்று சொல்லிவிட்டு, கடைசியில் அரசாங்கமே கார்ப்பரேஷன் மூலமாக சில்லரைச் சாராய விற்பனையை நடத்தப் போகிறது என்று சட்டம் கொண்டு வருவது அடிப்படை கொள்கைக்கே விரோதமானதல்லவா? கொடுத்த வாக்குறுதிகளை மீறுவதாகாதா என்று கொள்கை ரீதியாக முதலிலே இதைக் கண்டிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இந்த முடிவிற்கு வருவதற்கான காரணத்தைப் பற்றி ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸ் என்பதில் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் என்ன சொல்லியிருக்கிறீர்கள் என்று சொன்னால், ஏலத்தின் மூலமாகக் கடைகளை எடுக்கின்றபோது நான்கைந்து பேர் சேர்ந்துகொண்டு கூடுதல் தொகைக்கு எடுக்காமல் குறைந்த தொகைக்கு எடுக்கின்ற சூழ்நிலை இருப்பதன் காரணத்தால் அரசாங்கத்தின் வருமானம் குறைகிறது, அதாவது லாஸ் ஆஃப் ரெவின்யூ என்ற அடிப்படையில் அரசாங்கத்திற்கு வருமான இழப்பு ஏற்படுகின்றது. அதைச் சரி செய்வதற்காகத்தான் அரசாங்கத்திற்குச் சொந்தமான கார்ப்பரேஷன் மூலமாக அந்தக் கார்ப்பரேஷனின் ஊழியர்கள் அல்லது, நியமிக்கப்படுகின்ற ஏஜெண்டுகள் மூலமாக கடைகளை நடத்துவது அதிகமான வருமானத்தை அரசாங்கத்திற்குத் தரும், ஆகவேதான் இதைக் கொண்டு வருகிறோம் என்ற அற்புதமான காரணத்தைச் சொல்லியிருக்கிறீர்கள்.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சாராயக் கடைகளை அரசாங்கமே கார்ப்பரேஷன் மூலம் நடத்தப் போகிறது என்று அதில் ஒரு பிரிவில் சொல்லியிருக்கிறீர்கள், இந்த கார்ப்பரேஷன் அதாவது அரசாங்கம் யாரை ஏஜெண்டாக நியமிக்கிறதோ அவ்வாறு நியமிக்கப்படுகின்ற ஏஜெண்டுகள் தான் தமிழ்நாடு முழுவதும் சாராயக் கடைகளை நடத்தி, சில்லரையாக விற்பனை செய்யலாம் என்று கொண்டு வருகிறீர்கள். ஆனால் இதற்கு முன்பாக யார் வேண்டுமானாலும் ஏலம் எடுக்கலாம், கூடுதலான தொகைக்குக் கூட ஏலம் எடுக்கலாம் என்று இருந்தது. ஆனால் இப்போது நிலைமை என்னவென்று கேட்டால் யாரை ஏஜெண்டாக நியமிக்கிறீர்களோ, அவர்கள்தான்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அறிமுக நிலையில் சுருக்கமாகப் பேசுங்கள் ; விரிவாகப் பேச வேண்டியதில்லை,

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது மசோதா நிலையில் இருக்கின்றது. இது பின்னர் சட்ட வடிவம் ஆகின்றபோது சில முக்கியமான தவறு களைத் திருத்திக் கொள்ளவும் வேண்டும். Eihter it may be technical or not—that may be different ஏஜெண்ட் என்று சொன்னால் யார் என்பது இதில் வரையறை செய்யப்பட வில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : திருத்தவேண்டும் என்றால் அதற்கு வேறு வழி இருக்கிறது. நீங்கள் அமென்ட்-மென்ட் கொடுக்கலாம், மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்போது விவரமாகப் பேசலாம், இப்போது நேர மில்லை, மேலும் இரண்டு மூன்று மசோதாக்கள் இருக்கின்றன,

திரு. அ.ரகுமான்கான்: பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, **ஏஜெண்ட் என்ற வார்த்தையைப் பொறுத்த வரையில் சரியாக டிஃபைன் பண்ண வேண்டும், அதுபற்றி சரியாக டிஃபைன் செய்யப்படாத நிலைமை இருக்கின்றது.

இன்னொரு கருத்தையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன், இதிலே மிஸ்யூஸ் ஆஃப் பவர்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கன்சிடரேஷன் ஸ்டேஜிலே விவரமாகப் பேசிக்கொள்ளலாம். அப்போது டெக்னிக்கலாக என்னென்ன பிரச்சினை என்பதை எல்லாம் பேசிக்கொள்ளலாம். இப்போது சுருக்கமாகப் பேசி முடித்து விடுங்கள்,

திரு. அ. ரகுமான்கான் : பார்லிமெண்டிலே கூட ஒரு பில் இன்ட்ரட்யூஸ் செய்யப்படுகின்றபோது அதை அப்போஸ் பண்ணிப் பேசுகின்றபோது விளக்கங்கள் கூறப்படுகின்றன, நாம் கடந்த 7 வருடங்களாகச் சட்ட மன்றத்திலே இருக்கிறோம்,

இதே பில் வந்தபோது இன்ரடொக்ஷன் ஸ்டேஜிலே எதிர்ப்பு தெரிவிக்கிற வகையில், டெக்கினிக்கலாகவும், மெரிட்ஸ் ஸாகவும் கூட தெரிவிப்பதற்கு நீங்கள் அனுமதித்திருக்கிறீர்கள். இன்றைக்கு இந்த பில்லிலே நான் ஒருவன் தான் இதைப் பற்றி பேசவிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள், நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்லுகிற போது, அவர்

** மாண்புமிகு .பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பபெற்றது.



பதில் சொல்லலாம். இல்லை என்று சொன்னால், விரிவான ஆய்வுக்கு இதை எடுத்துக் கொள்ளும்போது பதில் சொல்கிறேன் என்று அவர் சொல்லிவிடலாம்......(மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது ஒரு தவறான முன் மாதிரியாக ஆகிவிடும். (குறுக்கீடு) அவையின் நேரத்தை வீணாக்க முடியாது ; அறிமுக நிலையில் எதிர்க்கும் போது, அதற்கான காரணத்தை சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : நீங்கள் சொல்கிற விதத்தில் தான் நான் பேசவேண்டும் என்றால் அது முடியாது. உங்களு டைய கண்ணோட்டத்தில் என்னால் எதுவும் சொல்ல முடியாது......................

*திரு. க. அன்பழகன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர் களே, ஒரு மசோதாவை இந்தச் சட்டமன்றத்திலே கொண்டு வந்து நடைமுறைப் படுத்துகிறபோது, அதன் உள்ளே, வருகிற விதிகளிலே ஏதாவது அமெண்ட்மென்ட் தருவதன் மூலமாக மாற்றம் தருவதன் மூலமாக, அதன் உள் பிரச்சினைகளை இங்கே விவாதிக்கலாம் என்று தாங்கள் இங்கே தெரிவித்திருக் கிறீர்கள். மாற்றமே தர முடியாமல், மொத்தமாகவே கண்டிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறபோது, சில விவரங்களைச்சொல்ல வேண்டிய அவசியம் வரும். மொத்தமாகக் கண்டிக்கிறபோது கூட, இந்த மசோதாவினுடைய நோக்கமே தவறு என்று சொல்லு கிறபோது, அந்த மசோதாவின் உள்ளே வருகிற கருத்து இடம் பெற்றாலும்கூட, அந்த விதி அல்லது அந்தக் கருத்தினுடைய அடிப் படையிலேதான் பேசுவதாக கருதக் கூடாது. இந்த மசோதா வின் உள்ளே ஏஜெண்ட் என்ற வார்த்தை வருமேயானால் இந்த மசோதாவைக் கொண்டு வரக்கூடிய நேரத்தில், ஏஜெண்ட் என் பது அபிஷியல் ஏஜெண்டா, அன்-அபிஷியல் ஏஜெண்டா அல்லது ஏற்கெனவே இருந்த முறைப்படி ஏஜெண்டா என்று இப்படிப் பட்ட நோக்கத்திலே உள்ள கருத்தைச் சொல்ல வேண்டிய அவ சியம் வருகிறபோது, இந்த முறையில் தான் கருத்துக்களைச் சொல்ல வேண்டிய நிலை வரும். அதற்குத் தாங்கள், அந்த விதிகளுக்கு உள் இருந்துதான் கருத்துக்களைச் சொல்ல வேண்டு மென்றால், முழு எதிர்ப்பினுடைய நோக்கத்தை வலியுறுத்த முடியாத ஒரு நிலைமை ஏற்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கன்சிடரேஷன் டைம்லே எவ்வளவு வேண்டுமானாலும் விளக்கங்கள் தரலாம். அதிலே தவறு இல்லை. இன்டிரடொக்ஷன் ஸ்டேஜ்லே அப்-போஸ் பண்ணும் போது, இவ்வளவு விவரங்கள் தேவை இல்லை என்றேன். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள், பல முறை பல உறுப்பினர்கள் அப்படி அப்போஸ் பண்ணி நிறைய பேசியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள்,

சிலர், ''நான் இதை அப்போஸ் பண்ணுகிறேன்.'' என்று மட்டும் சொல்லி விட்டுக் கூட உட்கார்ந்திருக்கிறார்கள் இதே அவையிலே. அதனால்தான் நான் சொன்னேன், கன்சிடரேஷன் ஸ்டேஜ்லே விரிவாக நீங்கள் பேசலாம். (குறுக்கீடு) உங்களைப் பற்றிச் சொல்லவில்லை. வேறு பலர் அப்படி பேசியிருக்கிறார்கள் என்று சொன்னேன். அதனால்தான் இப்போது காலத்தின் அவசியத்தை கருதி கன்சிடரேஷன் ஸ்டேஜ் வரும்போது எவ்வளவு வேண்டுமானாலும் பேசிக் கொள்ளுங்கள், இப்பொழுது முடித்துக் கொள்ளுங்கள் என்று சொல்கிறேன்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமெண்ட்மென்ட் கொடுத்தால்தான் கன்சிடரேஷன் நேரத்திலே ஒவ்வொரு கிளாஸ்க்குள்ளேயும் சொல்லக் கூடிய வாய்ப்பு வரும். மொத்தமாக எதிர்க்கிறபோது, அதாவது அந்த அமெண்ட்மெண்ட் கொடுக்கிறவர்கள் மொத்தமாக எதிர்க்க வேண்டிய அவசியம் வருகிற நேரத்தில் அமெண்ட்மென்ட் கொடுக்காமல் இருக்க நேரிடலாம். கொடுக்க வேண்டிய அவசியம் வராமல் போகலாம். ஏனென்றால் கொடுக்கும் போது, ஒன்றை இல்லை என்றால் இன்னொன்றை ஒத்துக் கொள்வதாக அர்த்தம் வரும். ஆகவே, மொத்தமாக சட்டத்தினுடைய நோக்கமே தவறு என்று சொன்னால் உள்ளிருக்கும் விதியையும் சொல்ல வேண்டி வரும். தங்களுடைய விருப்பத்திற்காக சுருக்கமாக வேண்டுமானால் பேசச் சொல்லலாமே தவிர, .......... (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : என்னுடைய விருப்பத்திற்காக என்று அல்ல. அவையினுடைய நேரம் வீணாகக் கூடாது. அமெண்ட்மெண்ட் கொடுக்காதவர்களையும் பில்லிலே பேச அனுமதிக்கிறோம். அமெண்ட்மெண்ட் கொடுத்து விட்டுத்தான் கன்சிடரேஷனிலே பேசவேண்டுமென்று சொல்வது இல்லை. ஆகவே அப்பொழுது பேசிக் கொள்ளலாம்.......

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இன்டிரடியூஸ் பண்ணியிருக்கக் கூடிய இந்த பில்லிலே நான் அப்போஸ் பண்ணுவதற்கான முக்கியமான காரணமே அரசாங்கத்திற்கு வருமானம் வரவேண்டும். அது வேறு விவகாரம், நான் ஒத்துக் கொள்கிறேன். இதிலே இன்னொரு முக்கியமான விஷயம் என்ன என்று கேட்டால் டெண்டருக்குக்பதிலாக, ஏலத்திற்குப் பதிலாக சில்லரையாக சாராயத்தை விற்பனை செய்கிற சாராயக் கடைகளை தமிழ்நாடு முழுவதும் நடத்துவதற்கு யாரை அனுமதிக்கிறீர்கள் என்று கேட்டால்—ஏஜெண்டுகளை என்று போட்டிருக்கிறீர்கள். அதாவது நீங்கள்



நியமிக்கிற ஏஜெண்டுகளை வைத்து நடத்துவதற்கு வாய்ப்பு இருக்
கிறபோது, அதிலே மிஸ் யூஸ் ஆப் பவர் அதிகார துஷ்பிரயோகத்
திற்கு இடமிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பின
ருடைய உரிமைகளைத் தடுக்கவில்லை. சீக்கிரமாக முடியுங்
கள்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத்
தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்
கள். நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, ஏஜெண்ட் என்று
சொன்னால், யார் ஏஜெண்ட் அந்த ஏஜெண்டிற்கு என்ன
இலக்கணம்? ஏஜெண்ட் என்று சொல்லி, யாருக்கு வேண்டுமானா
லும் சாராயக் கடைகளை தருவதற்கான வாய்ப்பை நீங்கள்
இதில் தருகிறீர்கள் என்று சொன்னால் ஏன் மறுப்பு? எந்தெந்த
விதிகள் இருந்தால் அல்லது அவர்களுக்கு எந்த எந்த தகுதிகள்
இருந்தால் நீங்கள் கொடுக்கப் போகிறீர்கள்? இன்னும் சொல்லப்
போனால் நீங்கள் பார்த்து யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்க
லாம். ஏனென்றால் விதிகள் வரையறுக்கப்படவில்லை.
ஏஜெண்ட் என்றால் யார் என்று சொல்லப்படவில்லை.

எனவே அமைச்சர் பார்த்து தனக்கு வேண்டியவருக்கு, ஒரு
வருக்கு கொடுப்பதாக முடிவுக்கு வந்தால் அதைத் தடுப்பதற்கு
இந்தச் சட்டத்திலே ஏதாவது பிரிவு இருக்கிறதா? கிடையாது **

(முற்பகல் 11-40)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே,
இன்ட்ரொடக்ஷன் ஸ்டேஜில் டெக்னிக்கல் பிளா, லீகல்ஃ பிளா
இருந்தால் தான் சுட்டிக்காட்டுவது மரபு ;அது ஏற்றுக்கொண்ட
நடைமுறை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் * * * *
என்று கூறியதை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று
வேண்டுகிறேன். உறுப்பினர் கன்சிடரேஷன் ஸ்டேஜில் எல்லா
வற்றையும் பேசவேண்டுமென்று விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதற்காகத்
தான் சொன்னேன். ஆய்வு நிலையில் இவற்றையெல்லாம் பேச
லாம் என்று .....(குறுக்கீடு).

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேசுவது என்றால்
எதை வேண்டுமானாலும் பேசலாம், ஆய்வு நிலையில் நான் இறுதி
பதிலைக்கொடுக்க வேண்டிய அளவிற்கு உறுப்பினர் இப்போது

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.

பேசுகிறார்கள். ஏழாம் தேதி ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் படுகிறது. அப்போது உறுப்பினர் எல்லாவற்றையும் பேசட்டும், பதில் பெறட்டும்.

திரு. அ. ரகுமான்கான் : ** ** (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் பேசுவதை தடுக்கிறேன் என்றல்ல; நீங்கள் தவறாக புரிந்து கொண்டு விட்டீர்கள், நீங்கள் பேசுவதை ஆய்வு நிலையில் பேசுங்கள். இப்போது வேண்டாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இந்த சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்த அனுமதி கோரிஇருக்கிறார்கள், அனுமதி கொடுக்கவேண்டாமென்பது உறுப்பினர் அவர்களின் எண்ணம். ஏஜெண்ட் என்பது சரியாக விளக்கப்படவில்லை. ஆகவே இதை நாங்கள் எதிர்க்கிறோம் என்ற அளவிற்கு சொல்லலாம். டிடெய்ல்ஸ் வேண்டுமென்றால் கன்சிடரேஷன் வரும்போது சொல்லலாம். அப்பொழுது தக்க பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தருவார்கள். அதற்கு பிறகு விரிவாகவும், விளக்கமாகவும் கிளாஸ்-பை-கிளாஸ் நிலை வருகிறபோது பேசலாம். அப்போது பேசவேண்டியவைகளை இப்போது பேச வேண்டிய அவசியமில்லை என்பதால் தான் சுருக்கமாகச் சொல்லுங்கள் என்று துணைத் தலைவர் அவர்கள் தெரிவித்தார்கள். ஏன் எதிர்க்கிறோம், என்ன காரணத்திற்காக எதிர்க்கிறோம் என்று மட்டும் சொல்லுங்கள். அதில் ஒன்றும் தவறில்லை.

திரு அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, இதை திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பாக நாங்கள் எதிர்ப்பதற்கு முக்கியமான காரணம் ** ** என்பதன் மூலமாக தவறாக அதிகாரம் பயன்பட்டு விடக் கூடாது.

இன்னொரு காரணமும் சொல்லப்பட்டிருக்கிறது. அரசாங்கத்திற்கு வருமானம் அதிகம் வரவேண்டுமென்பது நோக்கம் என்று சொல்கிறார்கள். நான் உங்கள் மூலமாக இந்த அவையின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். இன்றைக்கு அரசாங்கத்திற்கு வரவேண்டிய கிஸ்தி ஏறத்தாழ 30, 40 கோடி ரூபாய் அளவிற்கு வரவில்லை. அவை

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



கள் வசூலிக்கப்படவில்லை. நான் கேட்க விரும்புகிறேன். ஒரு புறத்தில் இன்றைக்கு சென்னையில் பல பேர் ** இருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் 30, 40 கோடி ரூபாய் அளவிற்கு அரசாங்கம் வசூலிக்கவில்லை. அவர்கள் கிஸ்தி கட்டவில்லை. ஒரு சாதாரண விவசாயி கட்டணத்தை கட்டவில்லை என்றால் ஜப்தி செய்யப்படுகிறது....................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்ட்ரொடக்ஷன் ஸ்டேஜில் பில்லை அப்போஸ் பண்ணுவது வேறு, பில் ஆய்விற்கு வரும்போது அதை அப்போஸ் செய்து பேசுவது என்பது வேறு. அந்த வித்தியாசத்தை நீங்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். பில் கன்சிடரேஷனுக்கு வரும்போது உங்களுக்குப்பேச சந்தர்ப்பம் கொடுக்கிறோம். அப்போது நீங்கள் விரிவாகப் பேசலாம். இப்போது விரிவாக பேசுவது சரியாக இருக்காது. (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான் கான் அவர்கள் பேசிய பேச்சின் சில பகுதிகளை நீக்கவேண்டுமென்று உங்கள் மூலமாக கேட்டுக் கொள்கிறேன். அப்படி பதில் சொல்வது என்று சொன்னால், இந்தத் தரப்பிலிருந்து பதில் சொன்னால் ** ** ரகுமான்கான் அவர்கள் என்று பேசினால், பதில் சொன்னால் ஏற்றுக் கொள்ளலாமா? என்று பேசினால், பதில் சொன்னால் ஏற்றுக் கொள்ளலாமா? அவையிலே இருக்கலாமா? இருக்கக்கூடாது. (குறுக்கீடு). தமிழ் கற்ற சண்முகம் தான் சொல்கிறேன். ரகுமான்கான் அவர்கள் ** ** என்று பேசுகிற பேச்சை ஏற்றுக் கொள்பவர்கள் இந்த அவையிலே இருக்கலாமா? இருக்க கூடாது. (குறுக்கீடு) நான் பேசிய பேச்சையும் எடுக்க வேண்டும். அதையும் எடுக்க வேண்டும். முறையற்ற வாதங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : தமிழ்நாட்டில் ** ** என்று சொன்னேன். அதில் என்ன தவறு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அந்த அளவிற்கு உயர்ந்த தமிழை நான் படிக்கவில்லை என்றாலும் (குறுக்கீடு) நான் பேசியதை நீங்கள் அப்படி நினைக்கக் கூடாது. (குறுக்கீடு). அப்படி பேசச் சொல்லட்டுமா? * (கூச்சல், குழப்பம்) அப்படி சொன்னால் உடனே உங்களுக்கு என்ன வந்தது? (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜூன்;

ங்கே போய் முடியும் என்பதை உறுப்பினர்கள் உணருதல் வேண்டும். ஆகவே அவர்கள் எதிர்ப்பை மட்டும் தெரிவியுங்கள். பிறகு ஆய்வுக்கு என்று வரும்போது, அவரவர் களுடைய கருத்துக்களை, அவரவர்கள் என்ன எண்ணு கிறார்களோ, இது எப்படி இருக்கவேண்டும் என்று எண்ணு கிறார்களோ, அப்படிக் கருத்துக்களைச் சொல்லலாம். இப்படி இருப்பதால் நான் இதை எதிர்க்கிறேன் என்று சொல்லவேண்டுமே தவிர, இப்படி இருந்து இருக்கவேண்டும் என்று சொல்வது எல்லாம் கன்சிடரேசன் ஸ்டேஜிலேதான் வரும். இப்போது வராது.

திரு. இ. மனோகரன் : தலைவர் அவர்களே, திரும்பவும் உங்களைக் கேட்கிறேன். ** ** என்று சொன்னால் . . . . . . . . . . . . .

(முற்பகல் 11-50)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது முறை அல்ல.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** ** இருக்கட்டும், ** ** இருக்கட்டும் இரண்டுமே இருக்கட்டும். (கூச்சல்—குழப்பம்).

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஏன் இவ்வளவு வேகமாக இந்த சட்ட முன்வடிவை எதிர்த்துக் கொண்டு இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. இங்கே கொண்டு வந்து இருக்கிற சட்டமுன்வடிவு திராவிட முன் னேற்றக் கழக ஆட்சி காலத்திலே திரு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்த போது ஐ. எம். எப. எல். கடைகளுக்கு லைசன்ஸ்கள் எல்லாம் கொடுக்கப்பட்டது. இப்போது அது சாராயகடைக்கு விரிவாக்கப்பட்டு இருக்கிறது. எனவே திராவிட முன்னேற்றக் கழகம் பின்பற்றிய நடைமுறையைத் தான் இப்போது விரிவாக்கப்பட்டு இருக்கிறதே தவிர, இந்த ஆட்சி வந்து புதியதாக கொண்டு வரவில்லை. ஏற்கனவே தி. மு. க. ஆட்சியில் இப்படி எல்லாம் நடைமுறைப்படுத்தி னார்கள். லைசன்ஸ்களை ஐ. எம். எப். எல். கடைகளுக்கு எல்லாம் தி. மு. க. ஆட்சியில் திரு. கருணாநிதி காலத்தில் கொடுத்து இருந்தார்கள். (கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடு).

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1985 ஜூன் 5]

*திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமுன்வடிவின் மீது திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் முதலில் பேசிக்கொண்டு இருந்தபோது சொல்லப்பட்ட கருத்து பொது நோக்கம் உடையது. அதில் யாரையும் தனிப்பட்ட முறையில் குற்றம் சாட்டுகிற நிலைமை வரவில்லை. ஏன் குற்றம் சாட்டுகிற நிலைமை வரவில்லை என்றால் . . . . . (கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேச அனுமதி இல்லாமல் இல்லை. அதை ஒரு புரசிஜர்படி பேசினால் நல்லது. அப்படி பேசாததால் தான் பிரச்சினை வருகிறது. எல்லோரும் உட் காருங்கள், (கூச்சல்-குழப்பம்) அனைவரும் அவரவர் இடத்தில் உட்காருங்கள்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவாதத்தில் பேசுகிறபோது ஒரு அரசினிடத்தி லிருந்து குத்தகை எடுத்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் பாக்கி வைத்து இருப்பதும் அதனால் அரசாங்கத் திற்கு பாக்கி நிலுவை இருப்பதும் வழக்கம். இது இன்றைக்கு அல்ல, என்றைக்கும் இருக்கக்கூடிய ஒரு பிரச்சினை. இதைச் சொல்லுகிறபோது பொது நோக்கத்தில் சொல்லப்பட்ட ஒரு வார்த்தை தனிப்பட்ட ஒருவரை சொன்னதாக வைத்து அதற்கு பின்னால் அந்த சொல்லை வைத்துக் கொண்டே இங்கே வாதம் வேறு பக்கத்தில் திருப்பப்பட்டது. சொன்ன தில் உள் நோக்கம் இருக்கிறது என்று சொன்னாலும் பெரிய குற்றச்சாட்டு அல்ல. அரசாங்கம் நிலுவையை வசூலிக்க எடுத்துக்கொண்ட நடவடிக்கை நீதிமன்றத்தில் போய் தடைப் பட்டு நிற்கிறது. அப்படி பாக்கி இருக்கிறபோது நீங்கள் வேறு முறையில் அரசாங்க வருமானத்தைப் பெருக்குவதற்கு ஏஜெண்ட் முறையை கொண்டு வருவதிலே குறை ஏற்படு வதற்கு இடம் இருக்கிறது என்பதற்காக வந்த வாதம் அது. எனவே இங்கே நடைபெற்ற வாதம் முழுவதையும் நீங்கள் பார்க்கிறபோது முதல் பகுதியில் வருகிறபோது யாரையும் தனிப்பட்ட முறையில் அது குறிப்பதாக அமையவில்லை. பிற்பகுதியில் இந்தச் சொல்லை சொன்னக் காரணத்தால் அது வேறு விதமாக இங்கே விளக்கப்பட்டது. அந்தச் சொல் திரிக்கப்பட்ட காரணத்தால் அது வேறு பொருள் தரக்கூடிய நிலைமை பின்னால் ஏற்பட்டது. இருந்தாலும் ஒரு தனிப்பட்ட அன்பழகன் என்று வைத்துக்கொண்டாலும் கூட அரசாங்கத்திற்கு அவர் செலுத்தவேண்டிய பாக்கித் தொகை.

தொகை, கட்டணம் அல்லது வரியை செலுத்தவில்லை என்று சொன்னால் அது குறையே தவிர அதை சொல்வது பெரிய குற்றச்சாட்டு அல்ல. அது ஒன்றும் களங்கம் என்று நான் கருதமாட்டேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெயரைச் சொல்லி நிலுவை இருக்கிறது என்று சொல்லியிருந்தால் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் சொன்னது ஒருவேளை பொருத்தமாக இருந்து இருக்கும். ஆனால் மாண்புமிகு நாவலர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் சிலேடையாக அவையில் இல்லாத ஒருவரைப் பற்றிச் சொல்லும்போது சிலேடையாக மீண்டும் திருப்பி பதில் விட்டால் அதை தாங்குகிற சக்தியாவது இருக்க வேண்டும். இல்லாமல் அப்படி வீணாகப் பேசக் கூடாது.

திரு. க. அன்பழகன் : அந்த சக்தியைப் பெறுவதற்கு நாங்கள் முயற்சிப்போம். நான் எடுத்துச் சொல்வது வாதத்திற்காக அல்ல. விவாதத்தில் ஒரு சொல்லுக்கு எந்தக் கட்டத்தில் தவறான பொருள் வந்துவிட்டது என்பதை உணர்ந்து, அந்தக் கட்டத்திலே இருந்துதான் அந்தச் சொல்லை நீங்கள் சபாநாயகராக இருக்கிற காரணத்தாலே நீக்க வேண்டுமே தவிர, வேறு அல்ல. சொல்லப்பட்டது, ** ** என்ற கருத்திலே பேசப்பட்டது. அதிலே கருத்துத் தவறு வருமானால், அந்த இடத்தைத் தாங்கள் நீக்கிக் கொள்வதைப்பற்றி வேறுபாடு கூட இல்லை. ஆனால் அதைக் காரணமாக வைத்து நகிமுடைய அமைச்சர் அவர்கள், ** ** என்றால் ** ** என்று சொல்லலாமா என்று கேட்டார்கள். ** ** என்பது கூட பொதுச் சொல்தான். மரியாதைக்கு சொல்கிற போது அது ஒருவருக்குச் சொந்தமானது. தொழில் என்று வரும்போது பலருக்குச் சொந்தமானது. அதனாலே கூட எங்களுக்கு வருத்தம் இல்லை. இன்னும் சொல்லப்போனால், இந்தச் சொல்லைச் சொல்வதினுடைய நோக்கம் சட்டத்தினாலே ஏற்படக் கூடிய விளைவு யாருக்கோ, எப்படியோ, சாதகமாக மாறி விடக்கூடும். சாதகமாக ஆக்கப்படுவதற்கு அந்த மசோதா பயன்படக்கூடும் என்பதற்காகத்தான் திரு. ரகுமான்கான் இவ்வளவையும் எடுத்துச் சொன்னாரே தவிர, இதை வைத்துக் கொண்டு வேறு விதமான கருத்துக்களுக்கு அவைத் தலைவர் அவர்களும் துணைத் தலைவர் அவர்களும் இடம் தரக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

* மமாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பற்றது.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏஜெண்ட்ஸ் என்பதை யார் என்று அதற்கு வரையறை இல்லை என்று பேசுவது ஒன்று. ஆனால் ஏஜெண்ட்ஸ் என்பது ** ** என்று அந்தச் சட்டத்திலே இருக்கிறதா ** ** என்று . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் தொழிலை எல்லோரும் பார்க்கிறார்கள். இதற்கு மட்டும் கட்சியே கிடையாது. இதிலே மட்டும் எல்லோருக்கும் நல்ல கூட்டு இருக்கிறது. அது எனக்குத் தெரியும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆக, ஏஜெண்ட்ஸ் என்பதற்கு வரையறை இல்லை. ஆகவே, அதிகாரம் தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னால் அதோடு சரி, ஆனால் அதற்கு மேலே என்ன சொல்கிறார் என்றால், ** ** கொடுப்பதற்கு ஏற்பாடு நடக்கிறது. என்றார். தலைவரவர்களே, தாங்களே அறிவீர்கள், தமிழகமும் அறியும். உண்மையிலேயே, இந்தக் கடைகளை ஏலம் எடுத்தது ** யார் நடத்துகிறார்கள்? குறிப்பாக, தி.மு.க. வினர் இல்லையா? இன்னும் சொல்லப் போனால், பல பேருடைய பெயரிலே போடுகிறார்கள். இதனாலே தான் சொன்னேன். அந்த வரையறையோடு நிறுத்தியிருந்தால் பிரச்சினை இல்லை. ** என்று சொல்கிற போது, இதிலே ஒரு குத்தல் இருந்தது. அதனால் சாராய உற்பத்தி செய்யக் கூடிய ** ** என்று சொல்லலாமா என்று சொன்னேன்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தாங்கள் இங்கே குறிப்பிட்டுச் சொல்கிறபோது, ** ** என்று சொன்னீர்கள். ஆகவே, நான் கூற விரும்புவது, ** வேண்டியவர்கள் இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடம் புள்ளி விவரமே இருக்கிறது. இதிலே மட்டும் கட்சி வேறுபாடே இல்லாமல் பல பேருக்கு வக்கீலாகவே வாதாடியிருக்கிறேன்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சபாநாயகர் வக்கீலாக சில நேரத்திலே இருப்பது அவருடைய கடமையாக இருக்கலாம். அதிலே மாறுபாடு கிடையாது. நான் சொல்வது, எந்த இடத்திலே திரிபான கருத்து வருகிறதோ, அந்த இடத்திலே அந்தச் சொல்லை நீக்க தங்களுக்கு உரிமை உண்டு. பின்னால் வந்த திரிபான கருத்துக்கு

** மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

[திரு. க. அன்பழகன்] [1985 ஜூன் 5

முன்னால் வந்த தொடரை நீக்குவது அவ்வளவு முறை அல்ல. பின்னாலேதான் அந்தக் கருத்து உருவாக்கப்பட்டதே தவிர முதலிலே வரவில்லை என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** ** என்ற பெயர் வந்ததையும், நீங்கள் சொன்னீர்களே, ** ** என்ற பெயர் வந்ததையும், இரண்டையுமே அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதே போல், ** ** என்று கொண்டு வருகிறோம் என்று மசோதாவிலே இருக்கிறதா? அது எப்படி நியாயம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதையும் நீக்கிவிடுகிறேன்.

திரு. கு. ரமணி : ** ** என்றார்கள், எங்கள் கட்சியெல்லாம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி அதுவும் நீக்கப்படுகிறது. திரு. ரகுமான்கான், இதுவரை பேசியது போதும். முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, அக்டோபர் மாதம் 15 ஆம் தேதி வரைக்கும் பழையபடியும், இந்த கிஸ்தி கட்டாமல், அரசாங்கத்தை ஏமாற்றிக் கொண்டு இருக்கக்கூடிய சில ** .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுதான் கன்சிடரேஷனிலே பேசுங்கள் என்கிறேன். முடிக்கும்போதுதான் பிரச்சினையே வருகிறது. எனவே, அதை விட்டுவிடுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, இரண்டே நிமிடத்தில் முடித்து விடுகிறேன். நான் அந்தப் பாயிண்ட்டுக்குப் போகவில்லை. அதை கன்சிடரேஷனிலே பேசிக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

நம்முடைய அமைச்சர் திரு. பண்ருட்டி. இராமச்சந்திரன் அவர்கள் எடுத்துக் கூறியதைப்போல் ஏஜண்ட்கள் என்று சொன்னால் வரையறை செய்யும் முறையிலே யார் என்று எடுத்துச் சொல்லுங்கள், சரியாக இருக்கும் என்று சொன்னார்கள் ....

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1985 ஜூன் 5]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அது எல்லாம் ரூல்ஸ்மேக்கிங் பவரிலே வரும். சட்ட முன்வடிவு கன்சிடரேஷன் ஸ்டேஜ்க்கு வரும்போது விளக்கமாகச் சொல்லலாம் என்று மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : ரூல்ஸிலே வந்தாலும்கூட தனியாக ஏலத்திலோ டெண்டரிலோ இல்லாமல் கார்ப்பரேஷன் நியமிக்கக்கூடிய ஏஜண்ட்கள் மூலமாக விற்பனை செய்யக்கூடிய நிலைமை ஏற்படும். வேண்டியவர்களுக்குக் கொடுப்பார்களோ என்ற எண்ணம் ஏற்படும். வேண்டியவர்கள் கொள்ளை அடிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுமோ என்ற எண்ணம் ஏற்படுகிற நிலை ஏற்படும். ஆகவே நான் இதை எதிர்க்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, இந்த மதுவிலக்கு திருத்தச் சட்ட முன்வடிவை நான் ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறேன். எங்களுடைய ஜனதாக் கட்சி 1-7-1981 ஆம் தேதியன்று மதுவிலக்கை தளர்த்துவதாகச் சொன்னபோது மாநிலம் முழுவதும் கறுப்பு பேட்ஜ் அணிந்து மௌன ஊர்வலம் நடத்தினோம், அதிலிருந்து தொடர்ந்து மதுவிலக்கை கண்டிப்பாக அமல் நடத்த வேண்டுமென்று சொல்லிக் கொண்டு வந்திருக்கிறோம். 15-9-1985 ஆம் தேதியிலிருந்து மதுவிலக்கு அமல் செய்யப்படுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். ஆகவே இந்த சட்ட முன்வடிவு அதை மீறுகிறது. இந்த சட்ட முன்வடிவு கொண்டு வந்திருப்பது முதலிலே அந்த வாக்குறுதியை மீறியதாக இருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, ஜனதாக் கட்சியினுடைய உறுப்பினர் அவர்கள் அரசுக்கு ஆலோசனை சொல்கிறார்கள். இதை முதலிலே கர்நாடக மாநிலத்திலே அமல்படுத்திவிட்டு அந்த யோசனையை இங்கே சொன்னால் பொருத்தமாக இருக்கும்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : கர்நாடக மாநிலத்திலே உள்ள எதிர்க்கட்சி அந்த வேலையைச் செய்யும் என்று நம்புகிறேன். அங்கே இருக்கிற முதல்வர் அவர்களுக்கு நாங்களும் எழுதத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் சொல்வது நீங்கள் கொடுத்த வாக்குறுதியைப் பற்றி. கர்நாடக முதலமைச்சர் வாக்குறுதி கொடுக்கவில்லை. 15-9-85 அன்று முதல் மதுவிலக்கு அமல் நடத்தப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள்

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : இந்த சட்டமன்றத்திலே முதலமைச்சர் சார்பிலோ அல்லது எந்த அமைச்சரின் சார்பிலோ யாரும் அப்படிப்பட்ட வாக்குறுதியைச் சொல்லவில்லை.

திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்: முதலமைச்சர் அவர்கள் எலக்ஷன் மேனிபேஸ்டோவிலே சொல்லியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அந்த முறையிலே சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் நீங்கள் உங்கள் மெஜாரிட்டி பலத்தால் இதை சட்டமாக நிறைவேற்றப் போகிறீர்கள். எங்களுக்குத் தெரியும். சாராயத்தை எப்படி விற்பது என்பதுபற்றி சட்ட முன்வடிவை இப்போது நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். நாங்கள் விற்பனை நிறுத்துங்கள் என்று சொல்கிறோம். ஏஜண்ட்கள் மூலமாக விற்போம் என்று சொல்கிறீர்கள், இதை நாங்கள் எதிர்ப்பது மட்டுமல்ல. நீங்கள் வாக்குறுதி கொடுத்தபடி, 15–9–1985 வரை விற்றுவிட்டு அதற்குப் பிறகு மொத்த மதுவிலக்கை அமல் நடத்த வேண்டுமென்று ஜனதாக் கட்சியின் சார்பாக நான் கேட்டுக்கொண்டு இந்த சட்ட முன்வடிவை எதிர்க்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு, 1985.

(இ) ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1985.

(ஈ) ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1985.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உள்ளாட்சி சம்பந்தப்பட்ட 3 சட்ட முன்வடிவுகளையும் ஒன்றாகச் சேர்த்து விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம்.





மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு *அறிமுகம் செய்யப்பெற்று ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு* அறிமுகம் செய்யப்பெற்று ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்."

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு* அறிமுகம் செய்யப்பெற்று ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

திரு. ம. ஆபிரகாம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவை நான் எதிர்க்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்டத்தை நாங்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பாக எதிர்க்கிறோம். ஆனால், தேர்தல் நாள் 9–9–1985 என்று தெரிவித்திருப்பதற்காக அரசுக்கு நன்றி கூறுகிறேன். ஆனால், 9–9–1985-ல் இந்தத் தேர்தல் நடக்குமா என்பது தெரியவில்லை. ஏனென்றால், அந்த அளவிற்குச் சட்டத்தில் ஓட்டைகள் இருக்கின்றன.

---

*1985-ஆம் ஆண்டு மே 29-ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. மா. சுந்தரதாஸ்] [1985 ஜுன் 5

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு அமைச்சரவர்கள் 15 சதவீதம் பெண்களுக்கும், 19 சதவீதம் அரிசன மக்களுக்கும் என்று ஒதுக்கியிருக்கிறார்கள். அது சரிதான் என்று நமது ஹைகோர்ட் தீர்ப்பளித்தது. பிறகு இப்பொழுது உச்ச நீதிமன்றத்தில் அந்த வழக்கு இருக்கிறது. எக்ஸ்படைட் பெட்டிஷன் போட்டு உச்ச நீதிமன்றத்தில் அந்த வழக்கைத் தீர்த்துவிட்டு தேர்தல் நாளை அறிவித்திருந்தால் நிச்சயமாக இந்தத் தேர்தல் குறிப்பிட்ட நாளில் நடக்கும். ஆனால் அதை முடிக்காமல் வேறு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்து நடத்துவோம் என்று சொல்வது சரியாக இருக்காது. காரணம், நீதிமன்றத்தில்கூட, மூன்று பேர் கொண்ட பெஞ்சு கூறுகின்ற பொழுதுகூட அரிசனங்களுக்கும், பெண்களுக்கும் ஒதுக்கியது சரிதான், ஆனால் இடங்கள்தான் சரி அல்ல என்றுதான் தீர்ப்பளித்திருக்கிறார்கள். ஆனால், 9—9—1985-இல் இந்தத் தேர்தலை நடத்துவோம் என்று சொல்கிறீர்கள். அப்படி நடத்த வேண்டுமென்பதுதான் எங்கள் ஆசை. அப்படி நடத்துவதற்கு நீங்கள் முன்வந்திருப்பதற்காக நாங்கள் அதை வரவேற்கிறோம். ஆனால் அதற்கு மேலும் இந்தச் சட்டத்தை நீட்டித்துக்கொண்டே போய் இங்கே உள்ள ஆணையாளர்களுக்கும், தனி அதிகாரிகளுக்கும் அதிகாரத்தைக் கொடுத்து அந்தக் கிராமங்களும், நகராட்சிகளும் வீணாகக்கூடாது என்பதுதான் காங்கிரஸ் கட்சியின் கருத்து.

ஆகவே, உச்ச நீதிமன்றத்தில் உள்ள வழக்கை 9—9—1985க்குள் முடித்து, பொது முக்கியத்துவம் உள்ள காரியம் ஆகையால், அந்த வழக்கை உடனடியாகத் தீர்ப்பதற்குத் தமிழக அரசு முன்வந்து, அந்த வழக்கைத் தீர்த்துவிட்டால் எந்தவொரு ஸ்டேக்கும் ஆட்படாமல் அரசு நல்ல முறையில் தேர்தலை நடத்த முடியும். இன்னும் இரண்டு மூன்று மாதங்கள் காலம் இருப்பதால் உடனடியாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கை முடித்து தேர்தலை நடத்த வேண்டும். இனிமேலும் இந்த அரசு இந்தச் சட்டத்தைத் திருத்தக் கூடாது. 9—9—1985இல் தேர்தலை நடத்த வேண்டுமென்று சொல்லி, நான் என் கருத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் தனி அதிகாரிகளின் பதவிக் காலம் நீட்டிப்பு குறித்த இந்தத் திருத்தச் சட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதி புதிய தலைவர்கள், புதிய உறுப்பினர்கள் பதவி ஏற்கின்ற காரணத்தால் அந்த அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிக்கும் சட்டமாக இது வருகிறது. இதற்கு மேலும் இந்தச் சட்டத்தை நீட்டிக்காமல், உடனடி



1985 ஜுன் 5] [திரு எம். செல்லமுத்து]

யாகத் தேர்தல்களை நடத்துவதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். செப்டம்பர் மாதம் தேர்தல் நடந்து தலைவர்கள், உறுப்பினர்களெல்லாம் பதவி ஏற்பார்கள் என்று இந்தச் சட்டத் திருத்தம் கூறுகிறது. ஆனால், 1983-ல் தேர்தல் அறிவிக்கப்பட்டு, நாமினேஷன் எல்லாம் கொடுக்கப்பட்ட பிறகுகூட தேர்தல் நடைபெறாத சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டதை எல்லாம் நாம் அறிவோம். எனவே, இப்பொழுது தேர்தலை அறிவித்து இருந்தாலும், எப்படியாவது இந்தத் தேர்தலை நடத்தி, உள்ளாட்சி மன்றங்களுக்கு உரிய அமைப்புகளை உருவாக்குகின்ற காரியத்தைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே அரிசன மக்களுக்கும், பெண்களுக்கும், கொடுக்கப்பட்ட விகிதாச்சாரம் பற்றி சுப்ரீம் கோர்ட்டில் உள்ள வழக்கை விரைவில் முடிவு செய்யும் நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

உறுப்பினர்கள் தலைவர்கள் பதவி ஏற்கும் காலம் வரையில் ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்கள் இன்றைக்கு மிகப் பெரிய சீர்கேட்டை அடைந்திருப்பதைப்பற்றி அமைச்சரவர்கள் விரைவில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும். குடிநீர் வசதி, சாலை வசதி போன்ற வசதிகள் இன்றி இருக்கக்கூடிய சூழ்நிலையில், இன்றைக்குக் கிராமங்களில் எங்கு பார்த்தாலும் குடிநீர் வசதி பாழ்பட்டுக் கிடப்பதைப் பார்க்கிறோம்.

(பிற்பகல் 12—10)

போட்டிருக்கக்கூடிய அந்த பம்புகள் இன்றைக்குச் சீர் செய்ய முடியாத நிலைமையில் இருக்கக்கூடிய சூழ்நிலையைப் பார்க்கிறோம். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரிப்பேர் செய்யக்கூடிய ஒருவர்தான் இருக்கிறார். 30, 40 பஞ்சாயத்துக்கள் இருக்கக்கூடிய இடங்களில் போடக்கூடிய பைப்புகள் எல்லாம் கெட்டுப் போனால், அவை சீர் செய்யப்படாமல் பல நாட்கள் பாழடைந்திருக்கக்கூடிய சூழ்நிலையைப் பார்க்கிறோம்.

அதேபோல தன்னிறைவுத் திட்டமானாலும் சரி, ஊராட்சி ஒன்றிய வேலையானாலும் சரி, போடப்பட்டிருக்கிற சாலைகள் பாழ்பட்டிருக்கிற சூழ்நிலையில் அதை நிர்வகிக்கக்கூடிய அளவுக்கு பஞ்சாயத்திலும் ஒன்றியத்திலும் பணம் இல்லாமல் போட்ட சாலைகள் எல்லாம் வீணாகி விட்டன. எனவே, அந்தச் சாலைகளை நிரந்தரமாகச் செப்பனிடுவதற்கும் அல்லது ஊராட்சி ஒன்றியங்கள், பஞ்சாயத்துக்கள் பதவி ஏற்கும் கால வரையிலாவது விசேஷ நிதி ஒதுக்கி அந்தச் சாலைகளைச் செப்பனிடக்கூடிய காரியத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல, ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் கீழ் இன்றைக்குக்
கிராமப்புறங்களிலே வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறவர்
களுக்குக் கடன் கொடுக்கின்ற திட்டம் செயல்பட்டு வருகிறது.
அந்தத் திட்டத்தை ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி ஒன்றிய
ஆணையாளர்கள் மூலம் அமுல் நடத்தும்போது, கிராமநல
அலுவலர்கள் கடன்தாரர்களைத் தேர்ந்தெடுப்பதில் பலவிதமான
முறை கேடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நாங்கள்
தஞ்சை மாவட்ட வளர்ச்சிமன்றக் கூட்டத்திலே, எடுத்துக் கூறி
யதுபோல், வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களைக் கை
தூக்குவதற்குக் கடன் கொடுப்பதை ஆட்சேபிக்கவில்லை.
ஆனால், ஒவ்வொரு கிராமத்திலும் வறுமைக் கோட்டுக்குக் கீழே
ஏராளமான எண்ணிக்கை உடையவர்கள் இருக்கக்கூடிய நேரத்
தில், அங்கே தேர்ந்தெடுக்கக்கூடிய நிலையில் உள்ள ஊர்நல
அலுவலர்களுக்கு அல்லது அதிகாரிகளுக்கு அல்லது புரோக்கர்
களுக்கு வேண்டியவர்களுக்குத்தான் அந்தக் கடன் போய்ச் சேரு
கிறது. அதே போல் நகரத்தில் இருப்பவர்கள் கிராமத்தின்
பெயரைப் போட்டு கடன் பெரும் சூழ்நிலை உருவாகிறது. அது
மட்டுமல்ல, அரசாங்கம் கொடுக்கும் மானியத்தைப் பெற்றுக்
கொண்டு, கடனை வங்கிகளில் டெப்பாசிட் செய்து, அரசாங்க
மானியங்கள் பெறக்கூடிய சூழ்நிலைகள்தான் இருக்கின்றனவே
தவிர, அந்தக் கடன்கள் பலன் பெற வேண்டிய மக்களுக்குப்
போய்ச் சேரவில்லை. எனவே, கடன் பெறத் தகுதி உடையவர்
கள் அனைவரிடமுமே மனுக்கள் பெற்று, குலுக்குச் சீட்டு மூலம்
கடன்காரர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குக் கடன்
கொடுக்கும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அந்த முறையில்
இந்த ஏற்பாடு செய்ய வேண்டும். இப்பொழுது இருக்கக்கூடிய
பஞ்சாயத்து ஊராட்சி ஒன்றியங்களில் எல்லாம், பிரதிநிதிகள்
பதவியேற்றாலும்கூட இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமையில்,
அதிகாரங்கள் மிகமிகக் குறைவு. 50 அடிக்கு மேலே உள்ளவற்
றிற்குப் பைப் போட்டு தண்ணீர் எடுக்கக் கூடிய அதிகாரமும்,
ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கக்கூடிய கட்டிடங்களைப் பரா
மரிக்கும் வேலையும், அவ்வப்பொழுது அரசாங்கம் என்ன வேலை
கொடுக்கிறதோ, அதைச் செய்யக்கூடியவையாகத்தான் ஒன்றி
யங்கள் இருக்கின்றனவே தவிர வேறு அல்ல. அவற்றிற்கெல்லாம்
அதிக அதிகாரங்கள் தந்து, கிராம சுய ராஜ்யத்தை உருவாக்கும்
வகையில் ஏற்பாடு செய்யவேண்டுமென்று [illegible]றேன்.

பஞ்சாயத்து ஒன்றியங்கள் [illegible]
முழுவதும் பாழ்பட்டிருக்கக்கூடிய [illegible]ங்கள்
டங்களைச் சீர் செய்வதற்குப் [illegible]
இல்லையென்று சொல்கிறார்கள். [illegible]
[illegible] கொட்டகைகளா[illegible]
செய்ய பணம் இல்லாத சூழ்நிலை[illegible]
பஞ்சாயத்துக் கட்டிடங்களைச் சீர் [illegible]
உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்[illegible]





மின் விளக்குகள் என்று சொல்கிறபொழுது, மின் விளக்குகள்
போட்டால் அவை எல்லாம் அவிந்து விடக்கூடிய சூழ்நிலை இருக்
கிறது. பஞ்சாயத்து யூனியன்களைக் கேட்டால், நாங்கள்
அவற்றை நிர்வகிக்கக் கூடிய பொறுப்பில் இல்லை. மின் வாரியத்
திடம்தான் அந்தப் பொறுப்பு இருக்கிறது என்று சொல்கிறார்கள்.
மின் வாரியத்திடம் கேட்டால், பணம் கொடுத்தால்தான் நிர்
வகிக்க முடியும் என்று சொல்கிறார்கள். வளர்ச்சிமன்றக் கூட்டத்
திலே கேட்டால், பணம் கட்டினாலும், கட்டாவிட்டாலும் மின்
விளக்குகளை எரிய விட வேண்டுமென்று சொல்கிறார்கள்.
ஆனால், நடைமுறையில் இன்றைக்கு எல்லா கிராமங்களிலும்
மின் விளக்கு வசதிகள் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. எனவே,
பஞ்சாயத்துத் தேர்தலை எப்படியாவது நடத்தியே முடிக்கவேண்
டிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு
நன்றி கூறி முடிக்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை
அமைச்சர் அவர்களால் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய
இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து நான் சில கருத்துக்களை
ஆட்சிக் கட்சியின் சார்பாகச் சொல்ல முன்வருகிறேன். ஊராட்சித்
தேர்தல்கள் நடைபெறுமா, நடைபெறாதா ? அது காலாவதி
யாகிவிட்டதா ? கவனம் அற்றுப் போய் விட்டதா ? என்றெல்
லாம் பல்வேறு ஹேஷ்யங்கள் நாட்டிலே உருவாகிக் கொண்டிருக்
கிறபொழுது. உள்ளாட்சித் துறை அமைச்சராக வந்தவுடன்,
முதன் முதலாக எடுத்துச் சொன்ன வார்த்தைகள், உள்ளாட்சித்
தேர்தல்கள் வருகிற பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த
நாளைக்கு முன்பாக நடந்து முடிந்து அன்றைய தினம் பதவி
ஏற்பார்கள் என்றதுதான். அப்படிச் சொல்லி, பதவியை ஏற்று
இந்தப் பொறுப்புக்கு வந்திருக்கிற இந்த நேரத்திலே, இது
வரையில் இருக்கிற அதிகாரிகளுக்குச் சற்றுக் கூடுதலாக பதவிக்
காலத்தைக் கூட்டிக் கொடுக்கக்கூடிய முறையில் இந்தச் சட்ட
முன்வடிவை உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு
வந்திருக்கிறார்கள்.

பொதுவாகவே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைச்
சொல்லுகிறபோது, திராவிடப் பாரம்பரியம் முதன் முதலாக
நகரசபைத் தலைவராக வந்தது என்று சொல்வார்கள். அவர்கள்
ஒரு நகராட்சியின் தலைவராக இருக்கும்போது, திருவண்ணா
மலையிலே பொறுப்பிலே இருக்கும்போது திறமையான நகர
சபைத் தலைவராக ஒருவரை வைத்திருக்கிறோம் என்று
பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த நாடு பூராவும் சொல்லி,
பாராட்டக்கூடிய வகையிலே அறிமுகமானார்கள். அந்தத்
தொடர் இன்றைய தினம் நல்ல முறையில் நடக்கக்கூடிய வகை
யில் இந்த அமைச்சரவை வந்தபிறகு வரவேற்கக்கூடிய முறை
யில், பாராட்டக்கூடிய முறையில் இருக்கிறது என்பதை நான்
தெரிவித்துக்கொள்கிறேன்.

இருக்கிற சிக்கல்களை எல்லாம் எண்ணிப்பார்த்து, உள்ளாட்சி தேர்தலை நடத்த முடியாத சூழ்நிலையை சூழ்ச்சிக்காரர்கள் உருவாக்குகிறார்கள் என்பதை உணர்ந்து, எந்த எந்த அடிப்படையிலே அவர்கள் ஈடுபடுகிறார்கள் என்பதை ஆராய்ந்து பார்த்து, இங்கே இல்லாமல் எங்கெங்கோ போய் எதையோ சொல்கிறார்கள், இந்த சட்டமன்றத்திலே ஒன்றும், நீதிமன்றத்திலே ஒன்றும் மக்கள் மன்றத்திலே ஒன்றும் பேசுகிறார்கள் - எப்படியும் தேர்தலை நடத்தியாக வேண்டும் ; சூழ்ச்சிக்காரர்களின் செயல்களை முறியடிக்க வேண்டும் ; மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டுவந்தே தீர வேண்டும் என்ற அடிப்படையில் இந்தத் தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் தேதியை அறிவித்து, அதுவரையில் அலுவலர்கள் பதவிக் காலத்தை நீடிப்புச் செய்ய இந்தச் சட்டமுன்வடிவை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள்.

உண்மையிலேயே இங்கே பேசும்போது கம்யூனிஸ்ட் கட்சித் தோழர் ஒரு கருத்தைச் சொன்னார்கள், கிராம சேவக்குகளைப் பற்றி. கிராம சேவக்குகளை வைத்து தன்னிறைவுத் திட்டம், தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்காக அவர்களை அந்த நேரத்தில் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள அரசு பல்வேறு வகைகளில் முயற்சி செய்து, நிறைவேற்றி வந்திருக்கிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு உருவாவதற்கு முன்பாக உள்ளாட்சித் துறையினுடைய ஆஸ்தி, சொத்து மதிப்பீடு எவ்வளவு என்று பார்க்கும்போது சுமார் 42.5 கோடி ரூபாய். ஆனால் இன்றைய தினம் உள்ளாட்சித் தேர்தல் நடக்காமல் இருந்தாலும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் வராமல் இருந்தாலும் கூட வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் அவர்களுடைய நடவடிக்கைகளின் அடிப்படையில், உள்ளாட்சித் துறையினுடைய சொத்து மதிப்பு 250 கோடி ரூபாய்க்குமேல் வந்திருக்கிறது. அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து, தன்னுடைய சொத்தாக இந்த அளவுக்கு வளர்த்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆனாலும், கிராம சேவக்குகளைப் பயன்படுத்தி நடைமுறைப் படுத்திய திட்டங்கள் பல்வேறு வகையிலே, அனுபவத்தின் அடிப் 'படையிலே, சரியாக செம்மையாக இல்லை என்பதை அறிந்ததால், அதிலே தவறு இருக்கிறது என்று அரசாங்கத்திற்குத் தகவல் கிடைத்த காரணத்தால், இப்போது இருக்கிற பல்வேறு திட்டங் களை, கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டங்களை கிராமத்தில் இருக்கிற படித்தவர்களும் அங்கே இருக்கிற ஆயக்கட்டுதாரர் களும், அந்தந்த ஊரில் இருக்கிறவர்களும் அங்கே இருக்கிற நடைமுறைகளுக்கு ஏற்ப, செய்ய வேண்டுமென்ற சட்டத்தை



மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பிறப்பித்திருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியும் கிடைத்திருக்கிறது. அந்த அடிப்படையில் இப்போது எந்தத் தவறும் நடக்காத அளவுக்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தல் நடக்க வேண்டுமென்று சொல்லும்போது, இங்கே இருக்கிற உறுப்பினர்கள் பேசும்போது சில கருத்துக்களைச் சொன்னார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஃபார்வேர்டு, பாக்வேர்டு, ஷெட்யூல்டு, ஷெட்யூல்டு ட்ரைப் என்று வேலை வாய்ப்பில் என்ன என்ன திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்துகிறார்களோ அந்த அடிப்படையில் இந்த உள்ளாட்சி மன்றங்களிலும் அவர்கள் இடம் பெற வேண்டுமென்று ஒரு முடிவை எடுத்தார்கள். உள்ளாட்சி மன்றங்களிலே பெண்கள் வந்தாக வேண்டும். அரிசனங்கள் தலைவர்களாக வந்தாக வேண்டும், மலைவாழ் மக்கள் பொறுப்பு ஏற்க வந்தாக வேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் பல்வேறு திட்டங்களைக் கொண்டுவந்து அறிமுகப்படுத்தினார்கள். ஆனால், அவற்றை எல்லாம் வரவேற்பதைப் போல வரவேற்று அவற்றை வரவிடாமல் இருப்பதற்கு எங்கெங்கோ சென்று, ஓரளவுக்கு தங்களுடைய விருப்பத்தை நிறைவேற்றிக் 'கொண் டார்கள், வெற்றிபெற்றுவிட்டார்கள்.

ஆனாலும், இந்த அரசை நடத்துகின்ற வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் நல்ல முறையில் திட்டமிட்டு, செயல் படுகிறபோது, அதற்கு முட்டுக் கட்டையாக, மக்கள் விரோத சக்திகளாக அரசியல் கட்சிகள் இருக்குமானால் அதை முறியடிக்க வேண்டும், புதிய ஊக்கத்தை ஏற்படுத்த வேண்டும், தேர்தலிலே நின்று சர்வ சாதாரணமாக உறுப்பினர்கள் யார் வேண்டுமானாலும் வெற்றி பெற்று வரலாம் என்ற நிலைமையை உருவாக்கி, வெற்றி பெற்று வந்த பிறகு உள்ளாட்சி மன்றத்திலே இந்த அளவுக்கு பெண்கள், தாழ்த்தப்பட்டவர்கள், மலைவாழ் மக்கள் இருக்க வேண்டும் என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். குறிப்பிட்ட அளவுக்கு அவர்கள் பிரதிநிதித்துவம் பெறவில்லை என்றால், மேலும் தேவை இருக்கும் போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் - அதிலேயும் ஒரு கட்சி நுழைந்துவிடக் கூடாது, உள்ளாட்சித் துறை நிர்வாகம் நல்ல முறையில் இருக்க வேண்டும் என்பதற்காக - சிலரை நியமனம் செய்ய வழிவகை செய்யப்பட்ட சட்டத்தை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இங்கே கொண்டு வந்திருக்கிறது.

(பிற்பகல் 12-20)

ஆகவே, அந்த அடிப்படையில்தான் இப்படி எல்லாம் பல்
வேறு வகைகளில், எந்தெந்த வகையில் உள்ளாட்சித் தேர்தலை
நடத்தியாக வேண்டும், அதே நேரத்தில் யார், யார் உள்ளாட்சித்
தேர்தலில் நின்று பொறுப்புக்கு வந்து இந்த நாட்டை ஆளவேண்
டும் என்று நாம் எண்ணுகிறோமோ அவர்கள் வருவதற்கு சட்
டத்தின் மூலமாகத் தடை இருந்தாலும் எப்படியாவது கொண்டு
வந்துவிட வேண்டும் என்ற அடிப்படையில் பல்வேறு திட்டங்
களையும், சட்ட முன்வடிவுகளையும் ஏற்கனவே இந்த அரசு
கொண்டு வந்திருப்பதை இந்த நாட்டு மக்கள் பாராட்டுகிறார்
கள் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன். தேர்தலைப் பொறுத்தவரையில்
இங்கே பலமுறை பேசுகிறபோதெல்லாம் உள்ளாட்சித் தேர்
தலை நடத்தாமல் இருக்க பயம் காரணமா, பதவி போய்விடும்
என்ற காரணமா, வரமாட்டோம் என்ற அச்சம் காரணமா
என்றெல்லாம் கூட பேசினார்கள். ஆனால் எங்களைப் பொறுத்த
வரையில் எப்போதும் எந்த நன்மைக்கும் அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் முன்னோடி
யாக இருந்திருக்கிறதே தவிர தீமைக்கு முன்னோடியாக இருந்
தது இல்லை. இந்த உள்ளாட்சித் தேர்தல் நடைபெறுவது ஒத்தி
வைக்கப்பட்டதற்கு முன்னோட்டமாக இருந்தது கூட, முன்
னறிவிப்பு கொடுத்தது கூட திராவிட முன்னேற்றக் கழக
அரசாங்கம்தான். அந்த அளவுக்கு அதை நீக்கிக் கொடுத்த
பெருமை ஏற்கனவே இந்த நாட்டை ஆண்ட திராவிட முன்
னேற்றக் கழகத்திற்கு உண்டு. அப்படிப்பட்ட நிலையில் அது
தொடர்கதையாக இருக்கக்கூடாது. தேர்தலை நடத்த வேண்டும்
என்கிறபோது பல்வேறு சந்தர்ப்ப சூழ்நிலைகள், சட்டங்கள்,
குறைபாடுகள் பல ஏற்பட்டு அதன் காரணத்தால் இதுவரை
யிலும் தேர்தல் நடக்க முடியாமல் செய்துவிட்டது. ஆனாலும்
கூட நடத்தியாக வேண்டும் என்ற காலகட்டத்திற்கு வந்தபோது
இதுபோன்ற ஒரு நல்ல காலகட்டத்தை நிர்ணயித்து அதற்கு
வேண்டிய வாய்ப்புக்களை உருவாக்கி அதுவரையிலும் ஆட்சி
செய்வதற்கு, நிர்வாகம் நடப்பதற்கு, மேலும் நல்ல பணிகளை
கிராமங்களிலே தொய்வின்றி நடத்துவதற்காக அங்கே இருக்
கின்ற அதிகாரிகளை நீட்டித்து அவர்கள் சில காலம் இருக்க
வேண்டும் என்பதற்காகக் கொண்டுவந்திருக்கக்கூடிய இந்த
திட்டத்தை நான் வரவேற்கிறேன்.

ஆனால் இப்படி எது கொண்டுவந்தாலும் குற்றம் சொல்
வார்கள் இதன்மீதும் குற்றம் சொல்வார்கள், காரணம் தன்
னால் முடியாத நிலைக்கு வந்தவுடன் எதற்கும் ஆளாவார்கள்.
தமிழிலே ஒரு கருத்து உண்டு. சங்கு வெண்தாமரைக்கு தந்தை
தாய் ரவி, தண்ணீர், அந்தத்தைக்கொய்து விட்டால் அழுகச்



செய்து அந்நீர் கொல்லும், துங்கவன் கரையில் போட்டால் சூரியன் காய்ந்து கொல்வான், தங்களின் நிலைமை கெட்டால் இவ்விதம் தயங்குவாரோ என்று சொல்வார்கள். அதுபோன்று சூரியனும் காய்ந்து கொன்று, தண்ணீரிலே கிள்ளிப்போட்டு விட்டால் அது அழுகிவிடும். அப்படி தந்தையும், தாயுமே அதை அழித்து விடக்கூடிய நிலைக்கு ஆளாக்கப்பட்டுவிடுவது போல் பல அரசியல் கட்சிகளின் நிலைமை உருவாக்கப்பட்டு விட்ட காரணத்தால் அச்சத்தின் காரணமாக பல்வேறு உணர்வுகளை வெளிப்படுத்துகிறார்களே தவிர வேறல்ல என்பதை நாம் உணர்வோம். அந்த அடிப்படையில் மக்கள் எதிர்பார்க்கின்ற ஜனநாயகம் நீடிக்கக்கூடிய வகையில் இந்தத் தேர்தலை நடத்துவதற்கு முன்பாக நிர்வாகத்தில் இருக்கக்கூடியவர்களை நீட்டிக்கக்கூடிய இந்தச் சட்ட முன்வடிவை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

* திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் 3½ மாத காலத்திற்கு தனி அதிகாரிகளுடைய பொறுப்புக்களை நீட்டிப்பதற்காக இங்கே ஒரு சட்டமுன்வடிவை கொண்டு வந்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தேர்தல் அறிவிக்கப்பட்டபடி நடத்தப்பட வேண்டும் என்பதில் மிக உறுதியாக இருப்பவர்கள் நாங்கள். ஆனால் கடந்த 8 ஆண்டு காலமாக இதைப்போல பலமுறை தனி அதிகாரிகளின் பதவிக்காலத்தை நீட்டித்து இருக்கின்ற அரசாங்கத்தின் சார்பில் பேசும்போது நம்முடைய மாண்புமிகு டாக்டர் சமரசம் அவர்கள் மிக வேகமாக திராவிட முன்னேற்றக் கழகம்தான் இப்படிப்பட்ட ஒரு நீட்டிப்பிற்கான காரியத்தை செய்தது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். 1970 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசு உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தியது. அதற்குப் பின்னால் 6 ஆண்டுகள் கழித்து அரசாங்கம் நீக்கப்பட்டது. ஆனால் கடந்த 8 ஆண்டுகாலமாக உங்களுடைய அரசாங்கம் பலமுறை, ஒரு தேர்தலை முடித்து, இரண்டாவது தேர்தலை முடிக்கவேண்டிய சூழ்நிலை இருந்த போதிலும் நீங்கள் 8 ஆண்டுகாலமாக நீட்டித்துவிட்டு, இப்போது திராவிட முன்னேற்றக் கழகம்தான் நீட்டித்தது, எனவே நாங்களும் அதைச் செய்கிறோம் என்று சொல்வது நியாயமான காரியமாக இருக்க முடியாது. அதுமட்டுமல்ல. உள்ளாட்சித் தேர்தல்களை நடத்துவதைப் பொறுத்தவரையில் திராவிட முன்னேற்றக் கழகமோ அல்லது எதிர்க்கட்சிகளோ எந்தநேரத்திலும் தடை செய்தது கிடையாது. ஆளுகின்ற கட்சி தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்புகளைக் கொடுத்ததற்குப் பின்னால் வழக்கு மன்றங்களில் பல வழக்குகள் தொடுக்கப்பட்டதன் காரணத்தால் தேர்தலை நிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்

பட்டது. எனவே அது வழக்கு மன்றங்களால்தான் ஏற்பட்டது. அதற்கு எதிர்க்கட்சிகள் பொறுப்பல்ல. அதையும் மீறி இப்போது நடத்தப்போகிற முறையில் அப்போதே நடத்தியிருக்கலாம். உங்களால் ஒரு சட்டத்தைக் கொண்டுவர முடிந்தது. ஆனால் அந்தச் சட்டத்தை நிலைநிறுத்த முடியாத ஒரு கையாலாகாத் தனத்தினால்தான் அந்த முறையிலே தேர்தலை நடத்த முடியாமல் அதாவது எந்த முறையிலே தேர்தலை நடத்த வேண்டும் என்று நீங்கள் கருதினீர்களோ அந்த முறையில் நடத்த முடியாமல் இந்த அரசாங்கம் பழைய முறைக்கே சென்றிருப்பது உள்ளபடியே கண்டிக்கத்தக்கது.

எனவே எங்களைப் பொறுத்த வரையில் நாங்கள் உள்ளாட்சி மன்றத் தேர்தலை நடத்துவதை எதிர்ப்பவர்கள். இல்லை. அதிலே யார் வெற்றி பெறுவார்கள், யார் தோல்வி அடைவார்கள் என்பது பற்றிய நிலைமை குறித்தும் அக்கறை இல்லை. இன்றையதினம் ஒரு கிராமத்திலே அதுவும் சின்னஞ்சிறு கிராமத்திலே மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து தருவதற்கு ஆள் இல்லாமல் இருக்கிறது. தேர்ந்து எடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் கிராமங்களிலே இல்லாத காரணத்தினாலே கிராமங்கள் மட்டும் அல்ல, நகரங்கள் எல்லாமும் கூட நரகமாக மாறி இருக்கிற நிலைமையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். எனவே, இந்த நிலைமையை மாற்றித் தீர வேண்டுமென்றால், ஊராட்சிகளிலே, ஊராட்சி மன்றங்களிலே தேர்தல்கள் நடத்தப்பட்டாகவேண்டும். அதிலே ஒரு மூன்று மாத காலம் நீட்டிப்புச் செய்வதை ஒரு பெரிய நீட்டிப்பாக நாங்கள் கருதவில்லை என்றாலும், இந்த நீட்டிப்பு பின்னாலும் வரக் கூடாது. அந்த நிலைமை ஏற்படக் கூடாது. அரசாங்கம் அவசரச் சட்டங்கள் மூலம் மேலும் இந்தக் காலத்தை நீட்டிப்புச் செய்யும் என்றால் அது தவறாக முடியும் என்பதைச் சுட்டிக் காட்டி, மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்கிற வகையிலும், ஜனநாயகத்தை காக்கும் வகையிலும் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை எதிர்த்து நான் அமர்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. நடராசன் அவர்கள் பேசுகிறபோது இந்த ஆட்சிதான் தேர்தலை நடத்தாதது போலப் பேசினார்கள். 1977 ஆம் ஆண்டு இந்த ஆட்சி மன்றத்திலே நாம் வந்தோம். ஆனால் தனி அதிகாரிகளின் கால நீட்டிப்பு 76 ஆம் ஆண்டுக்கு முன்னதாகவே வந்துவிட்ட ஒன்று. ஊராட்சி, உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்தாமல் திராவிட முன்னேற்றக் கழகம் தான், முதலிலே கால நீட்டிப்புச் செய்தது. அதன் தொடர்பாகத்தான் இத்தகைய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, 1977லிருந்து 1982 வரையில் நாங்கள் ஆட்சியில் இருந்திருக்க வேண்டும். ஆனால் இரண்டரை ஆண்டுகளுக்





குள்ளாக, பல்வேறு சதிகள் நடைபெற்று ஊராட்சி மன்றங்களின் தேர்தலைக் கொண்டு வருவதற்கு முன்பாக ஆட்சியையே கலைக்கக் கூடிய நிலைமையை உருவாக்கி, சட்ட மன்றத்தையே கலைத்து விட்டார்கள். அந்தக் காரணத்தால் அந்த நேரத்தில் அது நீட்டிக்கப்பட்டது. அதற்குப் பிறகு நாங்கள் வந்தபோதும் வாக்காளருடைய வயது நிர்ணயம், பெண்களுக்கு இடஒதுக்கீடு, வாக்காளர் பட்டியலை திருத்துதல் போன்ற பல்வேறு திருத்தங்களைச் செய்வதற்காக 6 மாத காலம் நீட்டிப்புச் செய்யப்பட்டது. (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இவையெல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டரிலே வராது. (குறுக்கீடு) காரணங்களை எல்லாம் சொல்லி முடித்து விட்டீர்கள். போதும். அடுத்து திரு. பொ. உத்திராபதி.

* திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய தனி அலுவலர்கள் காலத்தை செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதி வரை நீட்டிக்கின்ற இந்த மசோதாவை நான் ஆதரித்துப் பேசத்தான் விரும்புகிறேன். காரணம் எப்படியும் தேர்தல் நடத்தப்பட்டு விடும் என்றுதான். ஆனால் காங்கிரஸ் கட்சியிலே பேசுகிற போது, அவர்களே சற்று சந்தேகமாக பேசியதால் உடனே எனக்கும் மேலும் சந்தேகம் வருகிறது. அந்தத் தேர்தலில் எந்தக் கட்சி வெற்றி பெறும், யார் ஜெயிப்பார்கள் என்பதற்கு இப்போது கணக்கே வேண்டாம். யாரும் அதைப்பற்றி கவலைப்படவும் இல்லை. ஊராட்சிகளில் தேர்தல்கள் வர வேண்டும். சாலையிலே பைப்புகள் கெட்டு விட்டால், வாஷர் வேலை செய்யவில்லை என்றால், மக்கள் போய் கேட்பதற்கு ஒரு பிரதிநிதி இருக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினரைத் தேடி வரக்கூடிய நிலை உள்ளது. அதேபோல ஊராட்சி மன்ற பெருந் தலைவர் ஒருவர் வர வேண்டும். இப்படி உள்ளாட்சிகளில் தேர்ந்து எடுக்கப்பட்ட அமைப்பு வந்து விட்டால் நாம் இப்போது இங்கே கேட்கிறோமே பலவித ஊழல் புகார்கள் அவைகள் எல்லாம் தடுக்கப்படும். ஒதுக்கப்படுகிற பணமெல்லாம் முறையாகப் போய் கிராமங்களுக்குச் சேருவதில்லை, அவைகள் வகையாக செலவழிக்கப்படுவதில்லை 'என்று சொல்கிறோமே, அவைகள் எல்லாம் தடுக்கப்பட்டு, கண்காணிக்கப்படும். அந்தக் கண்ணோட்டத்திலேதான் இந்த தேர்தல்களை நடத்த வேண்டும் என்று நீண்ட நாட்களாக நாம் பேசி வந்தோம்.

இப்போது உறுதியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. செப்டம்பர் 15 ஆம் நாள், அண்ணா பிறந்த தினத்தின் போது அவர்கள் பதவிப் பிரமாணம் எடுப்பார்கள் என்று நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். அதைக் கண்டிப்பாக நடத்த வேண்டும்

(திரு பொ. உத்திராபதி) [1985 ஜூன் 5

என்பதுதான் எங்களுடைய ஆசை. ஆனால் இந்த 3 மாத காலத்தில் எவ்வளவோ பிரச்னைகள் . மேட்டூரிலே 12 ஆம் தேதி தண்ணீர் திறந்து விடுவார்கள். அப்போது ஆற்றிலே தண்ணீர் வரும், தஞ்சாவூர் மாவட்டத்திற்கும் மற்ற இடங்களுக்கும். இப்போது இல்லை, எங்கேயும் தண்ணீர் இல்லை. தண்ணீர் பஞ்சம் இருக்கிறது. தண்ணீர் பற்றாக் குறை ஏற்பட்டதோடு மட்டுமல்லாமல் கை பம்புகளும் கெட்டு விட்டன. அந்தக் கைபம்புகளுக்கு வேண்டிய சில சாமான்களை வாங்க வேண்டும் என்று சொன்னால், முன்பு எல்லாம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் மூலம் தான் வாங்க வேண்டும். இப்போது ஊராட்சி ஒன்றிய டி.டி.ஓ. மூலமாக வாங்குகிறார்கள். மன்னார்குடியில் அப்படி டி.டி.ஓ. மூலமாக வாங்கியதில் பல பிரச்னைகள் வந்தன.

ஆகவே, அன்றாடம் கை பம்புகள் கெட்டு விட்டால் அன்றாடம் அவைகளை சரி பண்ணி மக்களுடைய தண்ணீர் பிரச்னையை தீர்ப்பதற்கு இந்த 2, 3 மாத காலத்திற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல லோன் கொடுக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்களில் மூலமாக லோன் கொடுப்பதை வரவேற்கிறோம். அதைத்தான் நாங்களும் கேட்டுக் கொண்டிருந்தோம். ஆனால், அதிலே சின்ன தவறுதல்கள் ஏற்படுவதாகச் சொல்லுகிறார்கள். அங்கேயிருக்கின்ற கிராம நல ஊழியர் ஒரு லிஸ்ட் தயார் பண்ணுகிறார்கள்.

(பிற்பகல் 12-30)

இப்படி பல்வேறுவிதமான லிஸ்ட்டுகளை கொடுத்து, என்னுடைய சார்பில் நான் ஒரு லிஸ்ட்டை கொடுத்து, ஊராட்சி ஒன்றிய ஆணையரை வற்புறுத்துகின்றபோது அதிலே தடங்கல் ஏற்படுகிறது. அதை டி. டி. சி. கூட்டத்திலே மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் கூட இருந்து வருகிற மனுக்களைப் பெற்று, அதில் தகுதிபெற்ற மனுக்களை எடுத்து, பத்து உழவு மாடுகள் கொடுக்கவேண்டுமென்றால், 50 மனுக்கள் வந்திருக்கிறதென்றால், குலுக்குச் சீட்டு மாதிரி போட்டு பத்து பேர்களுக்கு கொடுத்துவிட்டால் பிரச்சினை இல்லாமல் போய்விடுமென்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு சொன்னோம். அவர்களும் அதை மேலே தெரிவித்து அமல் படுத்துகிறேன் என்று சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் கொடுக்கின்ற கடன்கள், சலுகைகள் போன்றவைகளுக்கு இந்தக் குலுக்குச் சீட்டு மூலமாக கொடுத்தால் ஆளும் கட்சிக்குப் கெட்ட பெயர் கிடையாது; அதிகாரிகளுக்கும் நெருக்கடி கிடையாது; எதிர்க்கட்சிகளுக்கும் தொந்தரவு இல்லாமல்



1985 ஜூன் 5] (திரு பொ. உத்திராபதி)

போகின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் இதை நிறைவேற்றி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக குடிதண்ணீர். திருத்துறைப்பூண்டி யூனியனில் கட்டிமேடு என்ற ஊர் இருக்கிறது. அங்கே முஸ்லீம் மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். மோட்டார் கெட்டு போய் விட்டது என்று எடுத்து போய் 5 வருடம் ஆகிவிட்டது. அவர்களை கேட்டால் ஊராட்சி ஒன்றியத்திலே ஒப்படைத்து விட்டோம், அவர்கள் தான் சீர் பண்ணவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இவர்களைக் கேட்டால் பஞ்சாயத்திலே பணம் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே பணம் இல்லாமல் 5 வருடமாக மோட்டார் சீர் செய்யாமல் வைத்திருந்தால் அங்கே இருக்கின்ற மக்கள் எப்படி குடிதண்ணீர் பெற முடியும்? அப்படிப்பட்ட காரியங்களில் தடங்கல் இல்லாமல், ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து கடனாக கொடுத்து தண்ணீர் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆணையிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திலே தொண்டியம்காடு என்ற ஊர் இருக்கிறது. அது கடற்கரை பகுதி. பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கூட அங்கே போய் வந்திருக்கின்றார்கள். 5,000 ஜனங்கள் அங்கே வாழ்கின்றார்கள். அங்கே தண்ணீர் கிடையாது. அதற்கு கருப்நாதர்கும்திலிருந்து 5 கிலோ மீட்டர் தூரம் பைப் எல்லாம் போட்டு விட்டார்கள். மேல்நிலைத் தொட்டி கட்டியாகிவிட்டது. இதெல்லாம் முடித்து 4 வருடமாகிவிட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வந்தால் இந்த நிலைமைகள் இருக்காது என்று சுருக்கமாக முடித்து விடுங்கள்.

திரு. பொ. உத்திராபதி: தண்ணீர் கிடைக்க வேண்டும் என்பதுதான் பிரச்சினை. குடிதண்ணீர் வழங்குகிற காரியங்களில் கேட்கும் போது ஊராட்சி ஒன்றியம் நிதி இல்லையென்று சொல்லுகிறார்கள். அந்த நிலை இல்லாமல் ஜனங்களுக்கு குடி தண்ணீர் கொடுப்பதில், சட்டவிதிகள் எல்லாம் குறுக்கிடாமல், குடிநீர் வாரியமாக இருந்தாலும், ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைக்கப்பட்ட மேல்நிலைத் தொட்டியாக இருந்தாலும், குறிப்பாக இந்த இரண்டு மாத காலத்தில் எந்த வித தயக்கமும் காட்டக் கூடாது. குடி தண்ணீர் பிரச்னையை தீர்ப்பதற்கு வழிவகை செய்யவேண்டும்.

அதேபோல மின்சாரம். எரிந்தாலும் சரி, எரியாவிட்டாலும் சரி அவர்களுக்கு பணம் கட்ட வேண்டியிருக்கிறது. ஒரு பல்பிற்கு மூன்று ரூபாய் என்று சொல்கிறார்கள். 100 பல்புகள் இருந்தால் 300 ரூபாய் வருகிறது. 10 பல்புகள் தான் எரிகின்றன. 90

பல்புகள் எரியாமல் இருக்கின்றன. மின்சார இலாக்காவிற்கு பணம் கட்டுகிறபோது நகராட்சி ஒன்றியங்களுக்கு பணம் இல்லாமல் போகிறது. ஆகவே, மின் விளக்குகள் எரிவதற்கும், குடிப்பதற்கு தண்ணீர் கிடைப்பதற்கும், கடன் கொடுக்கிற விஷயங்களில் குலுக்குச் சீட்டு மூலமாக கொடுப்பதற்கும் இந்த இடைப்பட்ட காலத்தில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஹைகோர்ட்டிலே போய் ஸ்டே வாங்குவதற்கு பலபேர் முயற்சி எடுத்தாலும், அதையெல்லாம் தடுத்து நிறுத்தி, அதையெல்லாம் முறியடித்து தேர்தலை ஜனநாயக முறையில் நடத்துவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் பஞ்சாயத்து, நகராட்சி தனி அதிகாரிகள் மசோதாவின் சட்டதிருத்தத்தை ஆதரித்து நான் சார்ந்துள்ள இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பாக சில கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆரம்ப காலத்தில் உள்ளாட்சித் தேர்தலை கண்டிப்பாக நடத்த வேண்டுமென்று கோரிக்கையை வலியுறுத்தி, அதன் பேரில் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் செப்டம்பர் திங்கள் கண்டிப்பாக தேர்தல் நடத்தப்படும் என்ற உறுதியைத் தந்து, அதற்கான சட்டமுன்வடிவை எல்லாம் இந்த அவையிலே கொண்டு வந்து நிறைவேற்றி இருக்கிறார்கள். பாக்கியுள்ள சட்டமுன்வடிவுகளை இப்போது கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இல்லாத நகராட்சி, ஊராட்சிகளுக்காக தமிழக அரசு பல்வேறு நிவாரண நிதிகளாகவும், தண்ணிறைவுத் திட்ட நிதியாகவும் பல இலட்சக்கணக்கான ரூபாய்களை அளித்து இருக்கிறது. சில நகராட்சிகளிலேயும், பஞ்சாயத்துக்களிலேயும் ஒதுக்கப்பட்ட நிதிகள் எல்லாம் தவறான வழியிலே செலவழிக்கப்பட்டு முறைகேடுகள் நடந்து இருக்கின்றன. இதுபற்றிய குறிப்புக்கள் சில அரசுக்கு வந்து அரசும் நடவடிக்கை எடுத்திருக்கின்றது. மேலும் உள்ளாட்சித் தேர்தல் நடத்துவது குறித்து, நாம் தேதியை நிர்ணயம் செய்துவிட்டதால், தவறு செய்த அதிகாரிகள் எல்லாம் அவர்கள் செய்த தவறிலிருந்து தப்பிப்பதற்காக அந்தக் கோப்புகளை எல்லாம் திருத்துவதற்கான ஒரு காரியங்களிலே ஈடுபட்டு இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆதலால், அரசு அதற்கான தக்க நடவடிக்கைகள் எடுத்து, அந்தக் கோப்புகளை





எல்லாம் திருத்தம் செய்யாமல் இருப்பதற்கு வேண்டிய தக்க நடவடிக்கைகளை வழிவகைகளை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்த உள்ளாட்சித் தேர்தல் நடத்தாததினால் மாநிலம் முழுவதும் எத்தகைய தவறான முறைகேடுகள் நடந் திருக்கின்றன என்பதைப் பற்றி எல்லா உறுப்பினர்களும் எடுத்துச் சொல்லி, அதன் வாயிலாக அரசுக்கும் எடுத்துச் சொல்லப்பட் டிருக்கின்றது. தொடர்ந்தும் இந்த முறைகேடுகள் நடந்து கொண்டு இருக்கின்றன. இதைப் பற்றி தகவல்களும் அரசுக்கு வந்து இருக்கிறது. எனவே, இதையெல்லாம் கவனத்திலே எடுத்துக் கொண்டு, நான் சொல்லியிருக்கின்ற கருத்தின் மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, அந்தத் தவறுகள் நடைபெறாமல் இருக்க வேண்டிய வழிவகைகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இங்கே பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

* திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கின்ற இந்த மூன்று சட்ட முன்வடிவுகளையும் வரவேற்று, ஒரு சில கருத்துக்களை இந்த மாமன்றத்திலே நான் எடுத்து வைக்க விரும்புகிறேன். இந்த சட்ட முன்வடிவுகளை பொறுத்தவரையிலே இவைகள் எல்லாம் எதிர்க்கப்படவேண்டிய ஒன்று என்று எனக்குத் தெரியவில்லை. இந்தக் கால அவகாசத்தை நீட்டித்துக் கொடுப்பதற்காக, முறையாக, தேவையான காலத்தில் கொண்டுவரப்பட்ட சட்டமுன் வடிவாகத்தான் இதை நாங்கள் கருதுகிறோம், ஏற்றுக் கொண் டிருக்கிறோம். ஆனால், இதற்கு உள்நோக்கம் கற்பித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள் பேசி னார்கள். கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் இதை * * மற்ற எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் இதற்கு உள்நோக்கம் கற் பிக்கின்றபோது, ஆளும் கட்சியில் இருப்பவர்கள் அதற்குப் பதில் சொல்லக்கூடிய நிலைக்குத் தள்ளப்படுகிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவின் மீது பேசிய மாண்புமிகு உறுப் பினர் நடராஜன் அவர்கள், ஆளும் தரப்பிலே உறுப்பினராக இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் சமரசம் அவர்கள் பேசு கிறபோது கூறிய ஒரு கருத்துக்கு மறுப்பு தெரிவிக்கின்றபோது, நாங்கள் ஆட்சியிலே இருக்கின்றபோதுதான் ஒத்திப் போட் டோம் என்றால், நீங்கள் அதை நடத்தி இருக்கக் கூடாது என்று அவர்களுடைய ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்கள் (குறுக்கீடு).

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. பொ. உத்திராபதி : துணைத் தலைவர் அவர்கள், கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் * * * * என்று சொன்னதை நீக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த வார்த்தை அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது.

திரு. செ. செம்மலை : உறுப்பினர் நடராஜன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அது அவர்களுக்குத் தெரியும். புரட்சித்தலைவர் அவர்கள் இந்தத் தேர்தலை உடனடியாக பிரதிநிதித்துவ அடிப்படையிலே யார் யாருக்கு உரிமைகள் வழங்கப்படவேண்டுமோ அவர்களுக்கு வழங்கி, அந்த அடிப்படையிலே சட்ட திருத்தங்கள் எல்லாம் கொண்டு வந்து, தேர்தலுக்கு தயாரான நிலைமையிலே அது எப்படி தடங்கல் செய்யப்பட்டது, யார் யாரால், அது தடுத்து நிறுத்தப்பட்டது என்பது எல்லாம் இந்த நாட்டுக்குத் தெரியும். அந்த விவரங்களுக்குள்ளே நான் போகவில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் நடராஜன் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வது, புரட்சித் தலைவர் அவர்கள், பஞ்சாயத்து, மற்றும் ஒன்றிய, நகராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு இன்றைக்கும் தயாராக இருக்கிறார்கள். அப்படித் தயாராக இருப்பதோடு மட்டுமல்லாமல் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து, செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் தேதி எல்லாம் கூட நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. நான் மாண்புமிகு உறுப்பினர் நடராஜன் அவர்களைப் பார்த்துக் கேட்டுக் கொள்கிறேன், பக்கத்திலே இருக்கின்ற பாண்டிச்சேரி மாநிலத்திலே 1968-லே தேர்தல் நடந்தது. அதற்குப் பின்னால் பஞ்சாயத்து தேர்தல் நடத்தப்படவில்லை.

(பிற்பகல் 12—40)

ஆனால் மாண்புமிகு உறுப்பினர் நடராசன் அவர்கள் கட்சி 2 முறை ஆட்சி பொறுப்புக்கு வந்தது. ஆனால் அங்கே அவர்கள் தேர்தலை நடத்துவதற்கு முயற்சிகளையாவது எடுத்துக் கொண்டார்களா என்று பார்த்தால் அப்படிப்பட்ட முயற்சிகளில் கூட அவர்கள் ஈடுபடவில்லை என்ற பதில் தான் நமக்கு கிடைக்கிறது. ஆகவே, உங்களைப் பார்த்து ஜனநாயகத்திற்கு விரோதிகள் அல்லது ஜனநாயகப் படுகொலைக்குச் சொந்தக்காரர்கள் என்று நாங்கள்......

திரு. மு. இராமநாதன் : தி.மு.க. ஆட்சி தேர்தலை நடத்துவதற்கு முயற்சிக்கவில்லை என்று சொல்கிறார். அது தவறு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் நடராசன் அவர்கள் என்ன சொன்னார் என்றால் நாங்கள் அதாவது தி.மு.க. இருந்தபோது கலைத்தோம்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.



அதன்பிறகு ஆளும் கட்சியான அ.இ.அ.தி.மு.க. தேர்தலை நடத்த முயற்சிக்கவில்லை என்று சொன்னார். அதே போன்ற நிலையைத் தான் பாண்டிச்சேரியில் 1968-ல் கலைத்தார்கள் பிறகு தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு அங்கே தேர்தலை தி.மு.க. நடத்தவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் செம்மலை அவர்கள் சொல்கிறார். இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் எதுவும் இல்லை.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராமநாதன் அவர்களுக்கு இது எல்லாம் நன்கு தெரியும். இருந்தாலும் ஏதாவது சமாதானத்தைச் சொல்லி தன்னுடைய கட்சியை, கட்சியின் நடவடிக்கைகளை பாதுகாக்கவேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறார்களே தவிர வேறு அல்ல. அவர்கள் எல்லாம் விவரம் தெரிந்தவர்கள் என்றுதான் நான் கருதிக்கொண்டு இருக்கிறேன். நான் சொல்ல விரும்புவது பாண்டிச்சேரி மாநிலத்தில் நீங்கள் தேர்தலை நடத்தவில்லை என்று நான் சொல்கிறேன். நடத்த முயற்சித்தீர்களோ முயற்சிக்கவில்லையோ அது எனக்குத் தெரியாது. உங்கள் ஆட்சிக் காலத்தில் நடத்தவில்லை, அதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. அதேபோல் இன்னொரு உதாரணத்தைக் கூட என்னால் சொல்லமுடியும். இன்றைக்கு மேற்கு வங்கத்தில் இடது கம்யூனிஸ்டு ஆண்டுகொண்டு இருக்கிறார்கள். கல்கத்தா கார்ப்பரேஷனுக்கு 1972-ல் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த திரு. சித்தார்த்த சங்கர் ரே அவர்கள் அந்த கார்ப்பரேஷனை கலைத்து பிறகு இன்று வரை அங்கே தேர்தல் நடைபெறவில்லை. காரணங்கள் இருக்கலாம். (குறுக்கீடு) அதற்குள் நான் போக விரும்பவில்லை. எனவே இன்றைக்கு நான் இந்த மன்றத்தில் வைக்க விரும்புவது புரட்சித் தலைவர் அவர்கள் தேர்தலை வைத்து ஜனநாயகத்தைக் காப்பாற்றவேண்டும், ஜனநாயகப்படி தேர்தலை நடத்தி அந்த பிரதிநிதிகளை அந்த பதவியில் அமர செய்யவேண்டும் என்பதற்காக அந்த தேர்தலை நடத்துவதற்கு இவ்வளவு முஸ்திப்போடு நடவடிக்கைகள் எடுத்து இருப்பதை நீங்கள் தயவுசெய்து......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கல்கத்தா கார்ப்பரேஷனுக்கு வரும் 30 ஆம் தேதி தேர்தல் நடக்க இருக்கிறது. (குறுக்கீடு) அவர் மாநகராட்சி பற்றி பேசுகிறார்.

திரு. செ. செம்மலை : 1972-லிருந்து இன்று வரை தேர்தலை நடத்தவில்லை. அதைத்தான் நான் சொல்கிறேன் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 1972-லிருந்து நடத்தவில்லை. இப்போது நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். 30 ஆம் தேதி தேர்தல் அறிவித்து இருக்கிறார்கள்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, வருகிற 30 ஆம் தேதி தேர்தல் நடத்த இருப்
பதுபற்றி நானும் செய்தித்தாளின் மூலம் அறிந்து இருக்கிறேன்.
நான் சொல்ல வந்தது, அந்த இடைப்பட்ட காலத்தில் அங்கே
தேர்தல் நடத்தப்படவில்லை. எனவே இன்றைக்கு மாண்புமிகு
புரட்சித்தலைவர் அவர்கள் நாள் நிர்ணயம் செய்து தேர்தலை
உடனடியாக நடத்தி ஜனநாயகத்தைக் காப்பாற்றவேண்டும்
என்ற அந்த முடிவுக்கு வந்து இருப்பதை மாண்புமிகு உறுப்
பினர்கள் அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் வரவேற்
பார்கள் என்று நான் கருதுகிறேன். இந்த சட்டமுன்வடிவைப்
பற்றி பேசுகிறபோது நம்முடைய மாண்புமிகு மரியாதைக்
குரிய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் மேலான
கவனத்திற்கு 2 கருத்துக்களை நான் வைக்கலாம் என்று
கருதுகிறேன். ஒன்று, இப்போது முதன் முறையாக புரட்சித்
தலைவர் அவர்கள் ஆட்சியில் 18 வயது வந்தவர்களுக்கு வாக்கு
உரிமை என்ற ஒரு நிலைமையை உருவாக்க இருக்
கிறோம். முதன் முறையாக தமிழகத்தில் தான் நாம் இந்தத்
திட்டத்தை இந்த நடைமுறையை கொண்டு வந்து இருக்கிறோம்.
இது முதன் முறையாக 18 வயது வந்தவர்கள் பற்றிய வாக்காளர்
சேர்ப்பு 1984-ல் எடுக்கப்பட்டது. அதற்கு பிறகு அரசாங்
கத்தால் எடுக்கப்படவில்லை. இருந்தாலும் இந்தத் தேர்தல்
அறிவித்த பிறகு சென்ற மாதம் 31 ஆம் தேதி வரை 15
நாட்களுக்கு அவகாசம் கொடுத்து புதியதாக வாக்காளர்கள்
சேர்ந்து கொள்ளலாம் என்று அறிவிப்பு வந்தது. ஆனால்
கிராமத்தில் இருக்கிற 18 வயது வந்தவர்கள் ஏழ்மை நிலையில்,
கீழ் நிலையில் இருப்பவர்கள் அல்லது இந்த விவரங்கள் தெரியாத
வர்கள் அந்த 15 நாட்கள் குறுகிய காலத்தில் தங்கள் வாக்
குரிமையை பயன்படுத்துகிற வகையில் தங்களுடைய பெயர்
களை பதிவு செய்ய முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. அலுவல
கத்தில் அதற்கு முறையான விண்ணப்ப பாரங்கள் வந்து
சேருவதற்கு ஒரு வார காலம் எடுத்துக்கொண்டார்கள். எனவே
நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுவது,
தேர்தல் என்ற இந்த அறிவிப்பு வந்த இந்த நேரத்தில் புதியதாக
அந்த வாக்காளர்களை சேர்க்கின்ற அந்தப் பணியை குறைந்த
பட்சம் மேலும் 10 நாட்கள் அல்லது 15 நாட்கள் கால அவகாசம்
கொடுப்பீர்களானால் எந்த நோக்கத்தோடு யாருக்கு வாக்
குரிமை இருக்கவேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்கள் விரும்பினார்களோ அந்த எண்ணம் ஈடேறும்.
அப்படிப்பட்ட ஒரு கால அவகாசத்தை தேவையான அளவுக்கு
அதிகமான நாட்கள் கொடுக்க முடியவில்லை என்று சொன்னாலும்
இந்த தேர்தல் காலத்தை நிர்ணயித்த பிறகு ஒரு குறிப்பிட்ட
கால அளவு ஒரு வாரமோ அல்லது 10 நாட்களோ கொடுப்பதற்கு
வாய்ப்பு தந்தால் நல்லது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
அதை பரிசீலித்து அந்த கால அவகாசத்தை நீட்டித்து தருமாறு
வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.



 (திரு. செ. செம்மலை)

இன்னொரு கருத்தையும் நான் இந்த மன்றத்திலே வலி
யுறுத்திக் கூற விரும்புகிறேன். நாடாளுமன்ற பொதுத் தேர்தல்
வந்தாலும் சரி, சட்டமன்றமாக இருந்தாலும், ஊராட்சித்
தேர்தலாக இருந்தாலும், வாக்காளர்களைச் சேர்க்கின்ற
பணிகளை ஆசிரியர்களுக்கு நாம் ஒப்படைத்துக் கொண்டு
வருகிறோம். அப்படி ஆசிரியர்கள் அந்தப் பொறுப்பு ஏற்கிற
போது, சில நேரத்தில் தவறுகளைச் செய்து விடுகிறார்கள்;
அல்லது விருப்பு வெறுப்புக்களுக்கு அவர்கள் ஆளாகி, நியாய
மான முறையிலே பணியாற்ற முடியாத ஒரு சூழ்நிலை இருந்து
வருகிறது. அதனால் உண்மையான வாக்குரிமை புறக்கணிக்கப்
படுகிறது என்று கூட எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்
பினர்களிடம் பொதுமக்கள் குற்றச்சாட்டுகளைச் சொல்லிக்
கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சரவர்
களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புவது, அப்படி
வாக்காளர்களைச் சேர்க்கிற பணியை வேறு எந்த வகையிலாவது
மாற்றி அமைத்தால் நல்லது என்று சொல்லி, இனிமேல்
வர இருக்கிற தேர்தல்களுக்கு வாக்காளர்கள் சேர்க்கிற
பணிகளுக்கு உள்ள முறையை மாற்றி அமைக்கவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, எங்களுடைய மாவட்டத்தில் ஓமலூர் ஊராட்சி
ஒன்றியம், அதிகமான பஞ்சாயத்துக்களை உள்ளடக்கியது.
35 பஞ்சாயத்துக்கள் என்றாலும், ஒவ்வொரு பஞ்சாயத்தும்
பெரிதாக இருக்கிறது. இப்போது கூட மாண்புமிகு அமைச்
சரின் முயற்சியாலே 5 ஊராட்சி ஒன்றியங்கள் இரண்டாகப்
பிரிக்கப்பட்ட ஒரு செய்தியைப் பார்த்தேன். அதே போல்,
சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஓமலூர் ஊராட்சி ஒன்றி
யத்தைப் பொறுத்த வரையில், 35 பஞ்சாயத்துக்களை
உள்ளடக்கியதாகவும், மிகப் பெரிய பரப்பளவையும், அதிக
ஜனத் தொகையையும் கொண்ட பஞ்சாயத்தாக இருக்கிறது.
அரசாங்கம் நிதி ஒதுக்குகிறபோது, ஒன்றியத்திற்குத் தான்
ஒதுக்குகிறது. 15 பஞ்சாயத்துக்களைக் கொண்ட ஒன்றியத்
திற்கு என்ன ஒதுக்கப்படுகிறதோ, அதே அளவு நிதிதான்,
35 பஞ்சாயத்துக்களைக் கொண்ட ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்
திற்கும் ஒதுக்கப்படுகிறது. ஆகவே பணிகள் அதிக அளவில்
நடைபெறமுடியாமல், முன்னேற்றப் பணிகள் நிறைய அளவில்
செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. புரட்சித் தலைவர்
அவர்கள் ஆட்சியைப் பொறுத்த வரையில், நிர்வாகத்தை சீர்
படுத்தி, செம்மைப்படுத்தி, மாவட்டங்களை எல்லாம் சிறிய
மாவட்டங்கள் ஆக்கி ஒன்றியங்களை எல்லாம் இரண்டாகப்
பிரித்து, நிர்வாக வசதிக்காக திட்டங்கள் தயாரித்து, திட்டப்படி
பணிகள் மக்களுக்குப் போய்ச் சேரவேண்டும் என்ற
அடிப்படையிலே நிர்வாகச் சீர்திருத்தம் செய்கிற நேரத்தில்,
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கனவே 5 பஞ்சாயத்துக்
களை இரண்டாகப் பிரிக்க உத்தரவு பிறப்பித்ததைப் போல்

வரும் தேர்தலுக்கு முன்னால், வாய்ப்பு இருக்குமானால், ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து, பிரித்ததற்குப் பிறகு அந்தத் தேர்தலை நடத்துவதற்குள்ள வழிமுறைகளை ஆராய வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மூன்று சட்ட முன் வடிவுகளையும் நான் வரவேற்று வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி வணக்கம்.

* திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட முன்வடிவின் மீது பேச அனுமதித்ததற்கு நான் நன்றி தெரிவித்துக்கொண்டு என் பேச்சைத் துவக்குகிறேன். 15-9-1985-ந் தேதி வரை தான் இந்த தனி அதிகாரிகளின் பதவியை நீட்டிக்கவேண்டும் என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்ட திலிருந்து, உள்ளபடியே தேர்தலை நடத்துவதற்கு அவர் தயாராக இருக்கிறார் என்ற காரணத்தால் இந்த திருத்தத்தை வரவேற்கிறோம்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், காங்கிரஸ் நகராட்சி மன்றத் தலைவர்கள் இருந்த காலத்திலேயே, திருவண்ணா மலையில் தி.மு.க. சார்பாக நகராட்சி தலைவராக இருந்தவர். அவருக்கு நகராட்சியிலே இருக்கிற கஷ்டங்கள் எல்லாம் தெரி யும். அதே மாதிரி, விருதுநகரிலே நண்பர் வி.வி.ஆர். போன்றவர்கள் நகராட்சித் தலைவர்களாக இருந்த காலம் உண்டு. 1944 அல்லது 1943 என்று நினைக்கிறேன். தமிழ் நாட்டிலேயே முதலாவதாக சிமெண்ட் ரோடு போட்ட பெருமை, விருதுநகருக்கு உண்டு. இன்று அந்த விருதுநகர், பெருந்தலைவர் காமராஜர் பிறந்த விருதுநகர் மிகப் பின் தங்கிய நிலையில் நகராட்சி இருப்பதை ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். மிகப் பின் தங்கிய நிலையிலே எந்தவிதமான மக்களுடைய தேவை களும், கவனித்து நடவடிக்கை எடுக்கமுடியாமல் நகராட்சி இருக்கிறது. அந்த நகராட்சியிலே ஓரே ஒரு லாரி தான் இருக்கிறது. குப்பைகளை, கழிவுகளை அள்ளி எடுத்துச் செல்வதற்கு நகராட்சி வருமானமும், சம்பளப் பட்டுவாடா வுக்கே சரியாகப் போய்விடுகிறது. இந்த நேரத்திலே சம்ப் டாங்க் கட்டப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 12-50)

அதற்காக 73 இலட்சம் ரூபாய் அரசுக்குக் கடன் கொடுக்க வேண்டியிருக்கிறது. நகராட்சி அதற்கு வட்டியைக்கூட செலுத்தமுடியாத நிலையில் இருக்கிறது. அரசு அதை மானிய மாகக் கருதி, அதைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று கேட் டுக் கொள்கிறேன்.





வட்டி கட்டமுடியாத அந்த நகராட்சி மேலும் பல உதவிகளை, தேவைகளை அரசுக்குச் சொல்லி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக பல திட்டங்களை அனுப்பி யிருக்கிறது. 10 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் அளவில் குடி நீர்த் திட்டத்தை அனுப்பியிருக்கிறார்கள். அதைப்போன்று பல சுகாதாரத் திட்டங்கள் சாலைத் திட்டங்கள் போடப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கின்றன. அதையெல்லாம் நல்ல முறையில் கவனித்து அமைச்சர் அவர்கள் அவைகளை சாங் ஷன் செய்வதற்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சி மன்றங்களுக்காவது கட்சி சார்பாக தேர்தலை நடத்தவேண்டுமென்பது குறிக்கோள். அகில இந்திய காங் கிரஸ் கட்சித் தலைவர் திரு. கருப்பையா மூப்பனார் அவர்கள் கூட இந்த தேர்தல் அறிவிப்பு வெளிவந்ததற்குப் பிறகு கூட்டு உண்டு என்று சொல்லியிருக்கின்றார் அப்படி கூட்டு இருந்தால் தான் சின்னம் இருப்பது தெரியும். ஆகவே நகராட்சி களுக்காவது கட்சி சார்பாக தேர்தல் நடத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஊராட்சி ஒன்றியத்திற்கு ஓரே ஒரு பிட்டர் என்ற நிலை இருக்கிறது. ஒரு ஒன்றியத்திலே 90 அடி பம்பு கள் இருக்கின்றன என்றால் ஒரு பிட்டர் எப்படி ரிப்பேர் செய்யமுடியும் என்று தெரியவில்லை. நான் சென்ற வாரம் என்னுடைய பகுதிக்குச் சுற்றுப்பயணம் செய்தபோது அங்கே இருக்கிற அடிபம்புகளில் 75 சதவீத ரிப்பேராகியிருக்கிறது. சொன்னால் உடனுக்குடன் ரிப்பேர் செய்கிறார்கள். ஆனால் ஒரு பிட்டர் மட்டும் இருப்பதால் செய்யமுடியவில்லை ; சட்டம் அப்படி இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதைத் தளர்த்த வேண்டும்.

அடுத்து குடிநீர் வடிகால் வாரியத்தால் அமைக்கப்பட்ட நீரேற்று நிலையங்களில் பல இன்றைக்கு சரியாக செயல்படவில்லை. காரணம் அவைகளை மெயின்டெயின் செய்வதற்குப் பணம் ஒதுக்கவில்லை என்று அறிகிறேன். அவைகளை ரிப்போ செய்யவேண்டுமென்றால் பணம் ஒதுக்கினால்தானே முடியும். அதனால் குழாய்களிலே ஓட்டைகள் ஏற்பட்டு இருக்கிறது. 5 ஹார்ஸ் பவருக்கு 3 ஹார்ஸ்பவர் போட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட பல குறைபாடுகள் இருக்கின்றன. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இல்லை, தனி அதிகாரிகள்தான் இருக்கிறார்கள். ஆகவே குடிநீர், சுகாதாரம், சாலை வசதி போன்ற இந்தத் திட்டங்களை நிறை வேற்றுவதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றிகூறி முடிக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த 3 மசோதாக்களும் ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்கள் ஆகியவற்றின் தனி அதிகாரிகளுடைய கால வரம்பை நீட்டிப்பதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. தேர்தல் நடத்துவதாக ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு 9–9–85 அன்று தேர்தல் என்று அறிவிக்கப்பட்டு நிச்சயமாகத்தேர்தல் நடத்துவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதற்காகத்தான் இந்தத் தனி அதிகாரிகளுடைய கால வரம்பை 15–9–1985 வரையில் நீட்டிக்கவேண்டுமென்ற முறையிலே இவைகள் கொண்டுவரப்பட்டிருக்கின்றனவே தவிர வேறல்ல.

இந்த மசோதாக்கள் கொண்டுவரப்பட்டதன் நோக்கமே தனி அதிகாரிகள் காலம் 11–6–85 அன்று முடிவு அடைகிறது. அந்தக் காரணத்தினால் 3½ மாத காலத்திற்கு அதை நீட்டிக்கவேண்டுமென்ற முறையிலே இந்த மசோதாக்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

ஆனால் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் மானியத்திலே பேச வேண்டிய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். நான் 12 ஆம் தேதி நடக்க இருக்கிற மானியத்திலே அவையெல்லாவற்றிற்கும் சேர்த்து பதில் சொல்கிறேன்.

ஏற்கனவே எந்த எந்தத் தேதிகளில் தேர்தல் பணிகள் நடைபெறும் என்று அறிவித்து இருக்கிறோம். 9–9–85 அன்று தேர்தல் நாள் என்பதிலே மாற்றம் இல்லையென்றாலும் வேறு சில நாட்களிலே மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த மாறுதல்களை நான் அவைக்கு அறிவிக்க விரும்புகிறேன். எலக்ஷனுக்கு நோட்டீஸ் கொடுக்கின்ற தேதி ஏற்கனவே 12–8–85 என்று அறிவிக்கப்பட்டிருந்தது, அதைக் கொஞ்சம் முன்கூட்டி வைத்து 2–8–85 என்று ஆக்கியிருக்கிறோம். அதைப்போல வேட்பு மனுக்கள் வாங்குகிற நாட்கள் 17–8–85, 19–8–85, 20–8–85 என்று அறிவிக்கப்பட்டிருந்தது, 8–8–1985, 9–8–1985, 12–8–1985 என்று கொஞ்சம் முன்கூட்டியே அதை வைத்திருக்கிறோம்.

வேட்பு மனுக்களைப் பரிசீலனை செய்யும் நாள் 21–8–85 என்று இருந்ததை, இனிமேல் 13–8–85 என்று கொஞ்சம் ஒரு வார காலம்—எட்டு நாட்களுக்கு முன்பாக வைக்கின்றோம்.

வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுகிற நாள் 24–8–85 என்று ஏற்கனவே நான் அறிவித்திருந்தேன். அதை 16–8–85 ஆக முன்கூட்டியே வைக்கின்றோம்.





இறுதிப் பட்டியல் வெளியிடுகின்ற நாள் 24–8–85 என்று அறிவித்து இருந்ததை 16–8–85 என்று முன்கூட்டியே அதாவது எட்டு நாள் முன்கூட்டியே வைக்கின்றோம்.

இதற்குக் காரணம், வாக்குச் சீட்டுகளை அச்சடிப்பதற்கு அவகாசம் தேவை என்ற காரணத்தால் இந்த வேட்பு மனுக்கள் வாங்குகின்ற நாட்களையெல்லாம் கொஞ்சம் முன்கூட்டியே வைக்க வேண்டி வந்திருக்கிறது. அதனால்தான் இந்த நாட்களை முன்கூட்டி வைத்திருக்கின்றேன். ஆனால் தேர்தல் நாள் 9–9–85 அன்றுதான்.

தேர்தல் முடிந்த பிறகு வாக்கு எண்ணுகின்ற நாள் 10–9–85. அதில் எந்த மாற்றமும் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் பேசுகின்றபொழுது ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். வாக்காளர் பட்டியல் 30 ஆம் தேதியோடு முடிவடைந்துவிடுகிறது ; மேற்கொண்டு சேர்க்க வேண்டுமென்றால் தனிப்பட்டவர்கள் யாராவது எழுதிக் கொடுக்கலாம் என்றுதான் ஏற்கனவே விதியிருந்தது; அந்த நாளைக் கொஞ்சம் நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த வாக்காளர்களைச் சேர்க்கின்ற இறுதி நாளாக 12–6–85 வரையில் நீட்டித்துக் கொடுக்கிறது அரசு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்குமேல் காலத்தை நீட்டித்துக் கொடுக்க முடியாது.

12–6–85 ஆம் தேதிக்குள், 1–1–85 அன்று 18 வயது பூர்த்தி அடைந்தவர்கள் வாக்காளர்களாகச் சேரலாம். ஏற்கனவே நாடாளுமன்றத்திற்கும் சட்டமன்றத்திற்கும் இருந்த வாக்காளர் பட்டியலுக்கும் இப்பொழுது இருக்கின்ற இந்தப் பட்டியலுக்கும் சிறு வேற்றுமைகள் இருந்தாலும் இருக்கக் கூடும். இந்தப் பட்டியல்படிதான் வாக்குச்சீட்டு கொடுப்பார்களே தவிர, கிராமங்களிலோ அல்லது நகரங்களிலோ இருக்கின்ற சிலபேர் நான் சட்டமன்றத்திற்கும் நாடாளுமன்றத்திற்கும் வாக்களித்திருக்கிறேன், எனக்கு எப்படி இல்லாமற் போகலாம் என்று தயவு செய்து நினைக்கக் கூடாது. தங்கள் பெயர் இருக்கிறதா இல்லையா என்பதை அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களிலே, நகராட்சிகளிலே சென்று சரிபார்த்துக் கொள்ள வேண்டியது அவரவர்களுடைய கடமை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்தந்த அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் தங்கள் கட்சிகளின் மூலம் தங்கள் தொண்டர்களுக்குத் தெரிவித்து, அந்தந்த வாக்காளர் பட்டியலை ஒப்பிட்டுப் பார்த்து, விடப்பட்டிருந்தால்கூட அவைகளை 12–6–85-க்குள் எழுதிக்

கொடுத்தால் அங்கு இணைத்துக் கொள்வார்கள் என்று நான்
உறுதி அளிக்கிறேன். எனவே, வாக்காளர்களைச் சேர்க்
கின்ற நாள் 12—6—85 வரையில் காலம் நீட்டித்துக் கொடுக்
கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மசோதா, தேர்தல் நடத்துவது என்று உறுதியோடு
இருக்கின்ற காரணத்தால்தான், செப்டம்பர் 15 ஆம் தேதி
வரையில் தனி அதிகாரிகளுடைய காலத்தை நீட்டித்து அரசு
கேட்டிருக்கிறதே தவிர வேறு அல்ல என்று தெரிவித்து,
இந்த மூன்று மசோதாக்களையும் நிறைவேற்றித் தருமாறு
தங்கள் மூலம் பேரவையைக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன், நன்றி,
வணக்கம்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இப்பொழுது இந்தச் சட்ட
முன்வடிவை அறிமுகப்படுத்தி ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள்.
12—6—85-க்குள் வாக்காளர் பட்டியலைச் சரிபார்த்து, ஒரு
வேளை நாடாளுமன்றத் தேர்தலிலேயும், சட்டமன்றத் தேர்
தலிலேயும் வாக்களித்திருந்தாலும்கூட இந்தப் பட்டியலில்
புதிதாகப் பூர்த்தி செய்யப்பட்டு வெளியிடப்படுகின்ற பட்டி
யலில் பெயர் இல்லை என்றால் அதைச் சரிபார்க்க வேண்டு
மென்று சொன்னார்கள். அரசாங்கத்தினுடைய
அதிகாரிகள் ஓரளவு விடுபடாமல் தகுதியுடைய வாக்காளர்
களுடைய பெயர்களை எடுத்திருப்பார்கள் என்று நாங்கள் நம்பு
கிறோம். அதிலே ஏதாவது விடுபடுமேயானால் கட்சிகளின்
சார்பாக, எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்கள் தங்கள் கட்சி
களுக்குக் கருத்தைத் தெரிவித்து, ஊராட்சி ஒன்றியங்களில்
இருக்கக் கூடிய வாக்காளர் பட்டியலைச் சரி பார்த்து விடுபட்டுப்
போன வாக்காளர்களைச் சேர்க்க வேண்டுமென்று அமைச்சரவர்
கள் அறிவித்திருப்பதற்கு நன்றி.

அதைப் போல அரசாங்க அதிகாரிகள் இந்த அறிவித்த பட்டி
யலை இறுதியாக்கும்பொழுது அதில் குறைபாடு வராத அள
விற்கு அதை நிறைவான பட்டியலாக ஆக்குவதற்கான முயற்சி
களை அமைச்சரவர்களும், அரசும் எடுத்துக் கொள்ள வேண்டு
மென்று பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நல்
லெண்ணத்தோடுதான் நீட்டிப்பு கொடுத்திருக்கிறோம் ; நல்
லெண்ணத்தோடுதான் அதையும் நான் வெளியிட்டிருக்
கிறேன். அரசு இதைப் பரிசீலித்துப் பார்க்கும் என்று உத்தர
வாதம் அளிக்கிறேன். இருந்தாலும் கூட இப்பொழுது இருக்
கின்ற வாக்காளர் பட்டியல் ஏற்கனவே ஆரம்ப ஆசிரியர்களை





வைத்துத் தயாரிக்கப்பட்ட பட்டியல் ஆகும். அந்தச் சட்டத்
தின் விதிகளின்படி தயாரிக்கப்பட்ட பட்டியல் நாடாளு
மன்றப் பட்டியல், இந்தச் சட்ட விதிகளின்படி தயாரிக்கப்
பட்டிருக்கின்ற பட்டியல் இந்தப் பட்டியல் ஆகும். இதற்கும்
அதற்கும் சம்பந்தம் இல்லை. இருந்தாலும் விடப்பட்டிருக்கக்
கூடாது ; விடப்பட்டிருந்தாலும் அது சேர்த்துக் கொள்ளப்
படும். அரசும் முயற்சிக்கும் ; அனைத்துக் கட்சிகளையும்
நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன், பெயர்கள் விடுபடா
மல் இருப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளுங்கள் ; அந்தந்தக்
கட்சித் தலைவர்கள் தங்கள் தொண்டர்களுக்குச் சொல்லி,
ஊராட்சி ஒன்றியங்களிலே சரிபார்த்து, நகராட்சிகளிலே சரி
பார்த்து சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்
கொண்டு அமைகிறேன்.

(பிற்பகல் 1-00)

ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்)
இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1985.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை
முன்னுள்ள கேள்வி :

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்
றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச்
சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்று ஆய்வுக்கு எடுத்துக்
கொள்ளப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறை
வேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு
எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை
வேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை
யின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை
மொழிகிறேன் :

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்
றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச்
சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட
முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவு 1985

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்று ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்ட முன்வடிவு 1985

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்று ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றன.



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (6-6-1985) காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.03 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ). சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

199. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1983–84 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (வருவாய் வரவினங்கள்) (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது. (ஆங்கிலம்)

200. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 1980–81 ஆம் ஆண்டிற்கான கணக்குகளும், தணிக்கை அறிக்கையும் (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 24 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

(எதுவுமில்லை)

இணைப்பு.

(1-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 114-க்கான விடையைக் காண்க.)

விவர அறிக்கை

(அ) மற்றும் (ஆ) : தமிழகத்திலுள்ள அரசு நீர் நிலைகளிலிருந்து 1865 ஆம ஆண்டு தமிழக பாசனவரி விதிப்பு சட்டத்தின் கீழ், சிறப்பு விதிமுறைகள் வரையறுக்கப்படாத புஞ்சை நிலங்களுக்கு நிலைப்படுத்தப்பட்ட தண்ணீர் தீர்வை வீதங்கள் தற்போது கீழ்க்கண்டவாறு விதிக்கப்பட்டு வருகின்றன.

| பயிர் விவரம். | தீர்வை ஏக்கர் ஒன்றுக்கு. | |
|---|---|---|
| | முதல் வகுப்பு பாசன ஆதாரம். | இரண்டாம் வகுப்பு பாசன ஆதாரம். |
| | ரூ. பை. | ரூ. பை. |
| (1) | (2) | (3) |
| (அ) ஆறு மாதத்திற்கு மேல் நிலத்தில் உள்ள பயிர்கள். | 6.00 | 4.50 |



(ஆ) மற்ற பயிர்கள்—

| வரிசை எண்ணும் முதல் போகமும். | இரண்டாம் போகம். | முதல் வகுப்பு பாசன ஆதாரம். | | | இரண்டாம் வகுப்பு பாசன ஆதாரம். | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | முதல் போகம். | இரண்டாம் போகம். | மொத்தம். | முதல் போகம். | இரண்டாம் போகம். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. |
| 1. நன்செய் .. | நன்செய் .. | 4.00 | 2.00 | 6.00 | 3.00 | 1.50 | 4.50 |
| 2. நன்செய் .. | முறையாகப் பாசனம் பெறப்பட்ட புன்செய். | 4.00 | 1.50 | 5.50 | 3.00 | 1.13 | 4.13 |
| 3. நன்செய் .. | எப்போதாவது பாசனம் பெறும் புன்செய். | 4.00 | 1.00 | 5.00 | 3.00 | 0.75 | 3.75 |
| 4. முறையாகப் பாசனம் பெறப்பட்ட புன்செய். | நன்செய் .. | 3.00 | 2.50 | 5.50 | 2.25 | 1.88 | 4.13 |
| 5. முறையாகப் பாசனம் பெறப்பட்ட புன்செய். | முறையாகப் பாசனம் பெறப்பட்ட புன்செய். | 3.00 | 2.00 | 5.00 | 2.25 | 1.50 | 3.75 |

| வரிசை எண்ணும் முதல் போகமும். | இரண்டாம் போகம். | முதல் வகுப்பு பாசன ஆதாரம். | | | இரண்டாம் வகுப்பு பாசன ஆதாரம். | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | முதல் போகம். | இரண்டாம் போகம். | மொத்தம். | முதல் போகம். | இரண்டாம் போகம். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. |
| 6. முறையாகப் பாசனம் பெறப்பட்ட புன்செய். | எப்போதாவது பாசனம் பெறும் புன்செய். | 3.00 | 1.50 | 4.50 | 2.25 | 1.13 | 3.38 |
| 7. எப்போதாவது பாசனம் பெறும் புன்செய். | நன்செய் .. | 2.00 | 3.00 | 5.00 | 1.50 | 2.25 | 3.75 |
| 8. எப்போதாவது பாசனம் பெறும் புன்செய். | முறையாகப் பாசனம் பெறும் புன்செய். | 2.00 | 2.50 | 4.50 | 1.50 | 1.88 | 3.38 |
| 9. எப்போதாவது பாசனம் பெறும் புன்செய். | எப்போதாவது பாசனம் பெறும் புன்செய். | 2.00 | 2.00 | 4.00 | 1.50 | 1.50 | 3.00 |



(இ) மூன்றாம் பருவம்—

| (1) | முதல் வகுப்பு பாசன ஆதாரம். (2) | இரண்டாம் வகுப்பு பாசன ஆதாரம். (3) |
|---|---|---|
| | ரூ. பை. | ரூ. பை. |
| (1) நன்செய் நிலமாக இருந்தால் .. | 2.00 | 1.50 |
| (2) புன்செய் நிலமாக இருந்தால் முறையாகப் பாசனம் அல்லது எப்போதாகிலும் பாசனம் பெறும் நிலமாக இருந்தால். | 1.00 | 0.75 |

மாவட்டங்களில் ஒவ்வொரு பாசன திட்ட வேலைக்கும் தனித்தனியே தண்ணீர் தீர்வை விதித்து ஆணையிடும் துறையினை தவிர்க்கவும், மேற்குறித்த பாசனம் பெறும் புன்செய் நிலங்களின் பரப்பளவு குறைவாக உள்ளதாலும், நில நிர்வாக ஆணையரின் பரிந்துரையை ஏற்று புன்செய் நிலங்களுக்கான மாவட்ட தண்ணீர் தீர்வை விதங்களை கீழ்க்கண்டவாறு திருத்தியமைப்பதற்கு அரசு உத்தேசித்துள்ளது. ஆனால் இது தொடர்பாக பொது மக்களின் மறுப்புகள்/கருத்துகள் எல்லா மாவட்ட ஆட்சியர்களிடமிருந்தும் பெறப்பட்டு அவைகளை பரிசீலனை செய்த பின்னரே அதிகப்படியான தண்ணீர் தீர்வை விதிப்பது குறித்து அரசு முடிவெடுக்கும்.

| பயிர் விவரம். | தீர்வை ஏக்கர் ஒன்றுக்கு. பலவகைப் பட்ட பாசன ஆதாரங்களின் கீழ் பயன்பெறும் நிலங்களுக்கான வரி வீதம். |
|---|---|
| | ரூபாய். |
| 1. நீண்ட காலப் பயிர்கள்— | முதல் வகுப்பு. |
| (அ) ஆறு மாதங்களுக்கு மேல் நிலத்தில் உள்ள பயிர்கள். | 24 |
| (ஆ) பத்து மாதங்களுக்கு மேல் நிலத்தில் உள்ள பயிர்கள். | 28 |

பயிர் விவரம்—

| (1) | 2-வது வகுப்பு. (2) | 3-வது வகுப்பு. (3) | 4-வது வகுப்பு. (4) | 5-வது வகுப்பு. (5) |
|---|---|---|---|---|
| | ரூபாய். | ரூபாய். | ரூபாய். | ரூபாய். |
| (அ) ஆறு மாதங்களுக்கு மேல் நிலத்தில் உள்ள பயிர்கள். | 21 | 15 | 12 | 9 |



(ஆ) மற்ற பயிர்கள்.

| (1) | 1-வது வகுப்பு. (2) | 2-வது வகுப்பு. (3) | 3-வது வகுப்பு. (4) | 4-வது வகுப்பு. (5) | 5-வது வகுப்பு. (6) |
|---|---|---|---|---|---|
| | ரூபாய். | ரூபாய். | ரூபாய். | ரூபாய். | ரூபாய். |
| முதல் போகம் .. .. .. .. | 16 | 14 | 10 | 8 | 6 |
| இரண்டாம் போகம் .. .. .. | 8 | 7 | 5 | 4 | .. |
| மூன்றாம் போகம் .. .. .. | 4 | .. | .. | .. | .. |

136397